வெளியீடு 14-9-1989 Issued 14-9-1989

1225

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
தமிழ்நாடு : வணக்காப்பகம்
23 செப்
எழும்பூர், சென்னை-600008.

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### செயலக வெளியீடு

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
### OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 28, 1989—தொகுதி 13—எண் 3
Friday, the 28th April, 1989—Volume 13-No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

1225

Tamilnadu Legislative
Assembly Debates.
Official report.

V13. No.3. 28 April 1988. 1989.

144-29

| | | பக்கங்கள். |
|---|---|---|
| திரு. பி. எச். பாண்டியன் | .. .. | 463—471 |
| திரு. இரா. மோகன் | .. .. | 471—481 |
| திரு. எம். அப்துல் லத்தீப் | .. .. | 481— 489 |
| திரு. குமரி அனந்தன் | .. .. | 489—503 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | .. .. | 504—525 |
| மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி | .. | 473, 525—551 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | .. .. | 558—559 |


144829

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989 ஏப்ரல் 28, வெள்ளிக்கிழமை,

சித்திரை 15, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர். மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்."

பயிரைக் காப்பாற்ற வேண்டுமாயின் அடர்த்து எழுந்து அழிவுக்கு வழிகோலும் களைதனைக் களைந்தெறிந்தாக வேண்டும். கொலைச் செயலினும் கொடுமை புரிகின்ற கொடியவர்களை அரசன் தண்டித்தல் களைதனை அகற்றுவதற்கு ஒப்பானதுதான்.

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 1. இரங்கல் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திருமதி இராஜாத்தி குஞ்சிதபாதம் அவர்கள் 27—4—1989 ஆம் நாள் அன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். திருமதி இராஜாத்தி குஞ்சிதபாதம் அவர்கள் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி பொதுத் தொகுதியிலிருந்தும் மற்றும் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலித் தொகுதியிலிருந்தும் இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலேயும், என் சார்பிலேயும் தெரிவித்துக்கொள்கிறேன். இயற்கை எய்தியவருக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித் துளி மவுனமாக எழுந்து நின்றனர்.)

## உள்ளடக்கம்

**28—4—1989**


பக்கங்கள்

1. இரங்கல் குறிப்பு—

முன்னாள் உறுப்பினர் மறைவு .. .. 425

2. பேரவைக்கு அளிக்கப்பெறும் மனுக்கள்—

குடிநீர் வடிகால் வாரியத் தொழிலாளர் கோரிக்கைகள் குறித்து அச்சங்க மாநில ஒருங்கிணைந்த குழுவின் மனுவைப் பேரவைக்கு அளித்தல் .. .. 426

3. சட்ட முன்வடிவுகள்—

(அ) இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989 .. 426

(ஆ) வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம்) மற்றும் தனி அலுவலர்கள் நியமனத்தைச் செல்லத்தக்கதாக்குதல் சட்ட முன்வடிவு, 1989 .. .. 427

4. மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. 427—557

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை .. ..

(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை ..

(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்

} தொடர்ச்சி

*திரு. ரெ. பிச்சைமுத்து .. .. 427—431

திரு. மு. க. ஸ்டாலின் .. .. 431—437

திரு. பொன். விஜயராகவன் .. .. 437—446

*திரு. ஜெ. அசேன் .. .. 147—451

திரு. கோ. பூவராகன் .. .. 451—463

2. பேரவைக்கு அளிக்கப்பெறும் மனுக்கள்.

குடிநீர் வடிகால் வாரியத் தொழிலாளர் கோரிக்கைகள் குறித்து அச்சங்க மாநில ஒருங்கிணைந்த குழுவின் மனுவைப் பேரவைக்கு அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 276-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ரமணி அவர்கள் தற்போது பேரவைக்கு ஒரு மனுவை அளிப்பார்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தொழிலாளர் சங்க மாநில ஒருங்கிணைந்த குழு கன்வீனர் திரு. பி. கே. கெம்புராஜ் மற்றும் திரு. ஏ. முகமது கவுஸ் ஆகியோர் கையொப்பமிட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களின் அடிப்படைக் கோரிக்கைகள் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருந்துவரும் ஐந்து முக்கியக் கோரிக்கைகள் அடங்கிய மனுவை நான் பேரவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ரமணி அவர்களால் தற்போது பேரவைக்கு அளிக்கப்பட்ட மனுவின் சுருக்கத்தை உறுப்பினர்களுக்குப் பேரவைச் செயலாளர் அனுப்பி வைப்பார்.

3. சட்ட முன்வடிவுகள்.

(அ) இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



(ஆ) வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம்) மற்றும் தனி அலுவலர்கள் நியமனத்தைச் செல்லத்தக்கதாக்குதல் சட்ட முன்வடிவு, 1989 :

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம்) மற்றும் தனி அலுவலர்கள் நியமனத்தை செல்லத்தக்கதாக்குதல் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை
(ஆ) கோரிக்கை எண். 15—காவல்துறை மற்றும்
(இ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்
} தொடர்ச்சி

*திரு. ரெ. பிச்சைமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, மாநில ஆயத் தீர்வைத் துறை ஆகியவை மீதான மானியக் கோரிக்கைகளின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். காவல் துறை என்பது கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு செயல்பட வேண்டிய ஒரு துறை. ஆனால் இன்று தமிழகத்தில் அந்த நிலைக்குப் புறம்பான காரியங்கள் நடப்பதாக தினசரி நாளிதழ்களில் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. இது அந்தத் துறைக்கு இழிவு ஏற்படுத்துகின்ற அளவுக்கு வந்துகொண்டிருக்கும் செய்திகள் ஆகும். அதாவது மக்களுடைய உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய அந்தத் துறையே அதற்கு நேர் மாறான முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒன்றை மட்டும் உதாரணத்திற்குக் கூற விரும்புகிறேன். குறிப்பாக பெரம்பலூர் தாலுக்காவிலே, திருச்சி மாவட்டம் அரியலூரிலே ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அது தொடர்ந்து நடந்த சம்பவம். ஒரு குறிப்பிட்ட நாளில் மூன்று சம்பவங்கள் நடைபெற்றன. ஒரு

[திரு. ரெ. பிச்சைமுத்து] [1989 ஏப்ரல் 28

பெண் மற்றும் ஒரு பெண், ஆக இரண்டு பெண்கள் ஒரே நாளில் கற்பழிக்கப்பட்டுள்ள செய்தி தமிழகம் பூராவிலும் உள்ள செய்தித் தாள்களில் வந்த செய்தியாகும். அதிலே தலையிட்ட நபர்கள் காவல் துறை அதிகாரியும், மக்களுக்காக வேண்டி வழக்காடுகின்ற பொறுப்பிலே இருக்கின்ற வழக்கறிஞரும் மற்றும் அவ்வூர் முக்கியஸ்தர்களும் ஆவார்கள். இப்படிப்பட்ட நிலை மீண்டும் மீண்டும் நடைபெற்றுக்கொண்டிருந்தால் மக்களுக்கு எப்படி காவல் துறை மீது நம்பிக்கை வரும்? மக்களுக்குத் துணை செய்வதற்கு மாறாக நடைபெறும் காவல் துறையினரின் இப்படிப்பட்ட செயல்பாடுகள் இனிமேல் தவிர்க்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட நிலைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். ஆனால் ஒன்றை மட்டும் கூறுகிறேன்.

இந்தியாவிலேயே சிறந்த காவல் துறை என்ற பெயர் பெற்றது தமிழகக் காவல் துறைதான். ஆனால் அப்படிப்பட்ட காவல் துறை இனிமேல் மேலும் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்பதற்காக என்னுடைய ஒன்றிரண்டு கோரிக்கைகளை இந்த அவை முன் வைக்கிறேன். குறிப்பாக ஒன்றைச் சொல்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்டைக்காடு என்னும் ஊரில் இன்றைக்கும் இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் மோதல்கள் ஏற்படுகின்றன. அதற்காக ஓர் உயர் நீதிபதியை அங்கே நியமித்தார்கள். அந்த நீதிபதி தலைமையிலே ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது. அந்தக் கமிஷன் சார்பில் ஒன்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 'மத சம்பந்தப்பட்ட இயக்கத்தை நடத்திக்கொண்டிருக்கின்ற இடங்களில் எந்த உயர் அதிகாரியும் கலந்துகொள்ளக் கூடாது' என்று அந்தக் கமிஷன் சார்பில் மிகவும் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இன்றைக்குச் சாதியின் பெயரால் என்ன என்ன நடைபெறுகிறது என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சாதியின் பெயரால் சங்கங்களை வைத்துக்கொண்டு செயல்படும் நிலையையும், அங்கே இன்னும் சிறப்பான முறையிலே அவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற நிலையையும் போன்று தமிழ்நாட்டிலே சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு வன்னியர் சங்கத்தைப் பற்றிச் சொல்லலாம். அதையும் சாதியின் பெயரால் ஏற்படுத்தப்படுகின்ற சங்கங்களின் கூட்டங்களில், உயர் அதிகாரிகள் கலந்துகொள்கின்ற நிலையையும் மாற்றியமைக்க வேண்டும். இதுதான் எங்களுடைய முக்கியமான கோரிக்கையாகும்.

அடுத்து, பெண் போலீசாருக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்து. அந்த அடிப்படையில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற இந்தத்தமிழ்நாடு அரசு அதையும் கவனிக்க வேண்டும். இப்படிப் பெண் போலீசார் அதிகமாக இருந்தால் பொதுமக்களிடம் எப்போதுமே அன்பாக



1989 ஏப்ரல் 28] [திரு. ரெ. பிச்சைமுத்து]

அணுகி, சட்டம் ஒழுங்கை கவனிக்க இயலும். ஆகவே, அதிக அளவில் பெண் போலீசாரை இந்த இயக்கத்தில் நியமித்தால் அதிகமாக நடைபெறுகின்ற கொலை மற்றும் பல்வேறு சம்பவங்கள் தொடராது. அதற்கு இந்த அரசு வழிவகை செய்ய வேண்டும்.

(முற்பகல் 9-10)

அடுத்து, காவல் துறையிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்குச் சரியான அளவில், போதுமான வசதிகள் அளிக்கப்படுவதில்லை. ஆனால் இங்கே, அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்கின்ற குறைபாட்டினை நிறைய உறுப்பினர்கள் பேசியதை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். அப்படிப் பேசுகின்ற ஒரு நிலைக்குக் காரணம் என்னவென்றால் அவர்களுக்குத் தேவையான, குறிப்பாக அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்கு அவர்களுடைய சம்பளம் கட்டுப்படி ஆகவில்லையா அல்லது அவர்களுடைய வசதிகளை மேலும் சொகுசாக அமைத்துக்கொள்ள லஞ்சம் வாங்குகிறார்களா என்று பார்த்தால், எதிலே உண்மை இருக்கிறது என்பது எங்களுக்குப் புரியவில்லை. அவர்களுக்கு மேலும் தேவையான வசதிகளைச் செய்து தர வேண்டும்.

அடுத்து, காவல் துறையில் ஒரு மோசமான நிலை இருந்து கொண்டிருக்கிறது. தமிழகம் முழுவதும் கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன தெரியுமா? இன்றைக்குத் தமிழகத்தில் கலால் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற அனைத்துக் காவலர்களும் நாள் ஒன்றுக்கு குறைந்தபட்சத் தொகை 10,000 ரூபாய்க்கு மேலாக வசூல் செய்கின்ற நிலைமை இருந்து கொண்ருக்கிறது. குறிப்பாக ஒவ்வொரு குடிமகனும் அந்தத் தொழிலிலிருந்து வேறு தொழிலுக்குச் செல்லலாம் என்று எண்ணினாலும்கூட, காவல் துறை அதற்கு உடந்தையாக இருந்து, அவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து, நீ காய்ச்சு, நீ விற்க வேண்டும் என்று கூறி, அவர்களை வற்புறுத்துவதால் இந்த மாதிரி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு, அந்தத் தொழிலின்பால் வெறுப்புத் தன்மை ஏற்பட்டு, அதிலிருந்து மாற விரும்பினாலும், காவல் துறையினர் விடுவதில்லை. என் கண் முன்னாலே கண்ட காட்சியைச் சொல்கிறேன். காய்ச்சுவதற்கும், விற்பதற்கும் அனுமதி அளிக்கின்ற இந்த அரசு குடிக்கின்றவனைக் கொடுமைப்படுத்தும் நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளால் காவல் துறையில் இருக்கும் சில அதிகாரிகள் செய்யும் தவறுகளின் காரணமாக, தூய்மையாக இருக்கவேண்டிய காவல் துறைக்குக் கெட்ட பெயர் ஏற்படுகிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1989 ஏப்ரல் 28

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடுமையான குற்றச்சாட்டைச் சாட்டினார்கள். காய்ச்சுவதற்கும், விற்பதற்கும் அனுமதி கொடுக்கும் அரசு, குடிப்பதற்கு ஏன் அனுமதிக்கவில்லை என்று கேட்டார்கள். காய்ச்சுவதற்கும், விற்பதற்கும் எந்தவித அனுமதியையும் அரசு கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரெ. பிச்சைமுத்து : தலைவரவர்களே, நான் அரசாங்கத்தைக் குறை சொல்லவில்லை. அரசு சார்பில் செயலாற்றும் காவலர்களைக் குறை சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அதைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய கருத்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூன்று மணித் துளிகளில் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. ரெ. பிச்சைமுத்து : தலைவரவர்களே, எனக்குக் கொஞ்சம் நேரத்தை நீட்டித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாருக்கும் நேரத்தை நீட்டித்துத் தர முடியாது. உரிய நேரத்தில் முடித்துக்கொள்ளாவிட்டால், அடுத்த உறுப்பினர் அழைக்கப்படுவார். கண்டிப்பாக எல்லோரும் இதைப் பின்பற்ற வேண்டும்.

திரு. ரெ. பிச்சைமுத்து : காவல் துறை சிறந்த முறையில் பணியாற்றி, சிறந்த பெயர் எடுக்க, காவல் துறையில் செயல்படும் உயர் மட்ட அதிகாரிகளுக்கு இந்த அரசு சிறப்பான விருதுகளை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீயணைப்புத் துறையைப் பொறுத்த வரையில் பெரம்பலூர் தாலுக்காவில், நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாள் முதல், இதுவரை குறைந்தது 300 வீடுகளாவது எரிந்திருக்கும். ஆனால் தீ அணைப்புப் படை சரியான முறையில் செயல்படுகிறதா என்றால் இல்லை. ஒரு நாளாவது வந்து, ஒரு வீட்டிலாவது தீயை அணைக்கவில்லை. அங்கே கேட்டால், எங்களுக்குச் சரியான முறையில் ஊர்திகள் இல்லை, தண்ணீர் வளம் இல்லை என்று கூறி, அந்த வீடுகள் சாம்பலாகும் நிலை அங்கே காணப்படுகிறது.

எனவே தீயணைப்புத் துறைக்காக செலவழிக்கின்ற தொகை குறைவாக இருப்பதால், அவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்யும் அளவுக்கு அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 28] [திரு. ரெ. பிச்சைமுத்து]

சேலத்தில் ஒரு சம்பவம் நடந்தது. அந்தச் சம்பவம், தெருக்கடை போட்டு, அந்தக் கடையில் பொருள்களை விற்கின்ற தொழிலாளி சரியான மாமூல் தரவில்லை என்று அந்தத் தொழிலாளியை அடித்து, துன்புறுத்தி, அவர்மீது வழக்குத் தொடரப்பட்டு, குறிப்பிட்ட தொழிலாளி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில் அவர்களுடைய தேவையைப் பூர்த்தி பண்ணும் அளவுக்கு இந்த இயக்கம் சரியாகச் செயல்பட வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

சென்னையைப் பொறுத்தவரை சட்டம், ஒழுங்கு, குற்றம் மற்றும் போக்குவரத்து போன்ற பணிகளில் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற உயர் அதிகாரியான திரு. பி. துரை, ஐ.பி.எஸ்., என்பவருக்கு இந்த அரசு சிறப்பான சரியான பரிசை வழங்கி அவருக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று கூறி, இந்த நேரத்தில் வாய்ப்பு அளித்த தமிழினக் காவலர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, தமிழினக் காவலர் இந்தக் காவலர்களுடைய நலனைக் கருதி அனைத்து சௌகரியங்களையும் செய்து கொடுக்க வேண்டும் என்றுகூறி, வாய்ப்புக்கு மீண்டும் நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கைமீது பேசுகிற வாய்ப்பினைப் பெற்றமைக்கு, முதலில் அவைத் தலைவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஸ்காட்லாண்டு யார்டு-க்கு ஈடாகப் பேசப்பட்டுவந்த தமிழகக் காவல் துறை, கடந்த ஆட்சியில் எந்த அளவுக்குப் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்பதனை இந்த நாடு தெளிவாக அறிந்திருக்கிறது. அ.தி.மு.க. அரசு, காவல் துறையிலே, கலால் என்று ஒரு அமைப்பை ஏற்படுத்தியது. கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டும் என்பதுதான் கலால் அமைப்பினுடைய அடிப்படை நோக்கமாக இருந்து வந்தது. நோக்கம் நல்லதாக இருப்பினும், எதிர்த்திசையிலே நடைபோட ஆரம்பித்து, எதிர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தியது இந்தக் கலால் பிரிவாகும்.

கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்குப் பதிலாக, அந்தக் கள்ளச் சாராயத் தொழிலுக்குக் கால்கோள் நடத்துகிற பிரிவாக இந்தக் கலால் பிரிவு செயல்பட்டிருக்கிறது. கலால் பிரிவினை நிர்வகிக்க, பல லட்ச ரூபாய்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதைச் செயல்படுத்துவதற்கு இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள், காவலர்கள் எல்லாம் நியமிக்கப்பட்டு, ஜீப், வேன், ஒயர்லெஸ் மற்றும் நவீன கருவிகள் பலவும் வழங்கப்பட்டிருக்[illegible]ற இப்படி மக்கள் தருகிற வரிப் பணத்தில் உருவாக்கப்பட்ட அந்தக்

[திரு. மு. க. ஸ்டாலின்] [1989 ஏப்ரல் 28

கலால் பிரிவு, கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு பதிலாக, கள்ளச் சாராயத்தை உருவாக்கி அந்தத் தொழிலை நடத்துகிறவர்களுக்கு ஒரு சமூக அந்தஸ்தை, சட்ட அங்கீகாரத்தை வழங்குகிற அளவுக்குப் பெருமையை இந்தக் கலால் பிரிவு பெற்றிருக்கிறது.

கிராமப் புறங்களிலே, சிறிய நகரங்களிலே காலங் காலமாக கௌரவமான தொழில் செய்து வாழ்ந்தவர்கள்கூட கள்ளச் சாராய வியாபாரத்தால் ஈர்க்கப்பட்டு, 'செய்யும் தொழிலே தெய்வம்' என்பார்களே, அதைப்போல் இதுவும் ஒரு தார்மீக மான தொழிலாக வடிவம் பெற்றது. மேலும் இது மிகவும் இலாபகரமாக உள்ள காரணத்தால் அதை விடவும் முடியாமல், வெளியேறவும் இயலாமல் திரிசங்கு சொர்க்கமாகத் தடுமாறிக் கொண்டிருக்கிற நிலை உருவாகவும் இந்தக் கலால் அமைப்பு காரணமாக இருப்பதாகவும் பரவலாகப் பேசப்படுகிறது.

சிறப்பு மிகுந்த காவல் துறைக்குக் களங்கமாக அமைந் திருக்கிற இந்தக் கலால் பிரிவு தேவைதானா என்பதை அரசி னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதை என்னுடைய கடமை யாகக் கருதுகிறேன்.

(முற்பகல் 9-20)

அதுமட்டுமல்ல, கடந்த ஆட்சியில், காவல் துறையில் முறை கேடுகள் ஏராளமாக நடைபெற்று இருந்தாலும், குறிப் பாகச் சிலவற்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதவி ஆய்வாளர்கள் தேர்வு ஆண்டுதோறும் நடைபெறுவதும், பயிற்சி பெற்றபின் அவர்கள் பணியாற்றுவதும் நடைமுறையில் இருந்து வந்த ஒன்று. உதவி ஆய்வாளர்களை தேர்ந்தெடுப்பதில் எந்தவித முறைகேடும் நடைபெறக் கூடாது என்ற அடிப்படையில் தி.மு.க. ஆட்சி நடைபெற்ற நேரத்தில், இவர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தைக் காவல் துறையிடமிருந்து சர்விஸ் கமிஷனுக்கு மாற்றப்பட்டது. ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் இந்த சப்-இன்ஸ்பெக்டர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான அதிகாரத் தைக் காவல்துறை அதிகாரிகளுக்கே தந்து, அதிலே ஏராளமான முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால் 1979 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரை சப்—இன்ஸ்பெக்டர்கள் தேர்வே நடை பெறவில்லை. பதவி உயர்வு என்ற பேரில் பல முறைகேடு களை நடத்தி அந்தக் காலி இடங்களை நிரப்பி இருக்கிறார் கள். இறுதியாக 1984 ஆம் ஆண்டு இந்தத் தேர்வுக்குச் சற்றே றக்குறைய 21,000 பேர்கள் விண்ணப்பம் செய்து இருந்தார்கள். அவர்களுக்காவது உடனே வேலை கிடைத்து இருக்கிறதா? இல்லை. 1984 ஆம் ஆண்டு உடல் அளவு சோதனை நடத்தப் பட்டு இருக்கிறது. 1985 ஆம் ஆண்டு எழுத்துத் தேர்வு



1989 ஏப்ரல் 28] [திரு. மு. க. ஸ்டாலின்]

நடத்தப்பட்டு இருக்கிறது. இன்னொரு வருடம் கழித்து 1986 ஆம் ஆண்டு நேர் காணல் பேட்டி நடைபெற்று இருக்கிறது. இன்னொரு வருடம் கழித்து 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிவுற்று இருக்கிறது. அதற்குப் பிறகாவது அந்த வேலைகள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றனவா? கிடையாது. 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டு இருக்கிறது. அப்படித் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் ஏராளமான தொகை லஞ்சம் கொடுத்து பதவி பெற்றவர்கள் ஆகும். நேற்றைய தினம் நம்முடைய மாண்புமிகு திரு. தென்னரசு அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னது போல ஒரு குறிப்பிட்ட கட்சியின் உறுப்பினர் கார்டு வைத்து இருப் பவர்களாகவும், பச்சை குத்தி இருப்பவர்களாகவும் இருந்தார் கள் என்று கூறப்படுகிறது. இது அரசினுடைய கவனத்திற்கு வந்து இருக்கிறதா? இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்று நான் இந்த அவையின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

அது மாத்திரமல்ல, 1976 ஆம் ஆண்டு இரகசியப் பிரிவு டி.ஐ.ஜி. ஆக ஒருவர் பொறுப்பேற்றார். 1980 ஆம் ஆண்டு கூடுதல் ஐ.ஜி. ஆகவும், 1982 ஆம் ஆண்டு ஐ.ஜி. ஆகவும், 1984 ஆம் ஆண்டு டி.ஜி.பி. ஆகவும் பதவி உயர்வு பெற்று இருக்கிறார். ஆனால் இந்த அதிகாரி இவ்வளவு பதவி உயர்வு களைப் பெற்ற போதிலும் கூட அவரிடமிருந்த துறையான இரகசியப் பிரிவுத் துறை வேறு யாரிடமும் மாற்றப்படாமல் ஒருவரே 10 ஆண்டுக் காலம் இப்படி பல்வேறு பொறுப்புக்களில் பணியாற்றி இருப்பது இந்த வரலாற்றிலேயே இல்லாத ஒரு சிறப்பாக அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட முறைகேடுகளை எல்லாம் இந்த அரசு இந்த அவைக்கும், நாட்டிற்கும் தெரிவிக்க வேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 1972–74 ஆம் ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பில் இருந்த நேரத்தில் 1,500 முதல் நிலைக் காவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். முறையோடு தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அனைவரும் பட்டதாரிகள், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்ற வர்கள் ஆவார்கள். இவர்கள் அனைவரும் அசிஸ்டென்ட் சப் இன்ஸ்பெக்டர்களுக்கான சிலபஸ் டிரெயினிங் பெற்றவர்கள். தி.மு.க. ஆட்சியில் நியமனம் செய்யப்பட்ட ஒரே காரணத் திற்காக இவர்கள் அனைவரும் பதவி உயர்வு பெறுவதில் புறக் கணிக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த முதல் நிலைக் காவலர் கள் இன்றைக்கும் அதே இடத்தில் இருந்து கொண்டிருக்கிறார் கள். ஆனால் இரண்டாம் நிலைக் காவலர்களாக இருந்தவர் கள் இப்போது சப்-இன்ஸ்பெக்டர்களாக மாற்றப்பட்டு இருக் கிறார்கள். எனவே 17 ஆண்டுக் காலமாகப் பாதிக்கப்பட்ட முதல் நிலைக் காவலர்களுக்குத் தகுந்த நிவாரணம் அளிக்க வேண்டுமென இந்த அரசை நான் மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[திரு. மு. க. ஸ்டாலின்] [1989 ஏப்ரல் 28

கடந்த ஆட்சியில் எத்தனையோ கொலை வழக்குகள். அவற்
றின் நிலை என்ன என்பது இதுவரையில் யாருக்கும் தெரியாது.
முறையாகப் புலனாய்வு செய்யப்பட்டு இருக்கிறதா? தஞ்சை
யில் வெங்கடாசலம், திருத்தணி லட்சுமி, திண்டுக்கல் மாலா,
திருவில்லிப்புத்தூர் வெற்றிச் செல்வன், இந்திரா நகர் பிரேமா,
நடிகை ஷோபா, புட்லூர் தண்டபாணி, மதுரை இளஞ்செழியன்,
இப்படிப் பட்டியல் நீண்டு கொண்டே போய்க் கொண்
டிருக்கிறது. கொலைகளை எல்லாம் தற்கொலை எனச் சொல்லி
மூடி மறைக்கப்பட்ட அந்த வழக்குகளை இந்த அரசு புலனாய்வு
செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளக்
கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து, இன்றைக்கும் நம்முடைய உள்ளத்தை உலுக்கிக்
கொண்டிருக்கும் நெருக்கடி காலக் கொடுமைகள். 1976 ஆம்
ஆண்டு நெருக்கடி நிலையை எதிர்த்த ஒரே காரணத்திற்காக
திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அன்றைக்குக் கலைக்கப்பட்டது
மாத்திரமல்ல, கழகத்தைச் சார்ந்த 500 பேர், மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள், அதே போல் அன்றைய
ஸ்தாபன காங்கிரஸ் கட்சியினுடைய முன்னோடிகள், திராவிடர்
கழகத்தைச் சார்ந்தவர்கள், பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்
கள், தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு சிறைச்சாலைகளில்
மிசாச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டார்
கள். ஆனால் நாங்கள் இருந்த சென்னை சிறைச்சாலையில் எப்
படிப்பட்ட கொடுமைகளெல்லாம் நடைபெற்றிருக்கின்றன
என்பது நான் சொல்லித்தான் இந்த அவை அறிந்து கொள்ள
வேண்டிய நிலையில் இல்லை என்பதை நான் தெளிவாக உணர்
கின்றேன்.

1976 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2 ஆம் தேதி சென்னை
சிறைச்சாலையில் இருக்கிற எங்களையெல்லாம் கொடுமைப்
படுத்துகின்ற துவக்க நாளில் அங்கிருக்கின்ற அதிகாரிகள்
சிறப்பான வகையில் ஒரு விழா எடுத்தார்கள். அந்த
விழாவிலே நாங்களெல்லாம் பெருமையோடு பங்கேற்
கிறோம். நீர்தான் சிட்டிபாபு, எம்.பியா? நீர்தான் ஆற்காடு
வீராசாமியா? நீர்தான் எம்.பியா? எம்.எல்.ஏ. வா? நீர்
தான் கருணாநிதியின் மகனா என்ற வார்த்தைகளை வாரி
வழங்கி நாங்களெல்லாம் தாக்கப்படுகின்ற அந்தக் காட்சி
அங்கே நடைபெறுகிறது. தாக்கப்படுகின்றபொழுது நானும்
தாக்கப்பட்டு கீழே விழுகிறேன். கீழே விழுந்து இருக்கிற
இடத்திலேயிருந்து சற்றேறக்குறைய 30, 35 அடிகளுக்கு
அப்பால், அன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய
கொள்கை பரப்புச் செயலாளர் பொறுப்பில் இருந்த, குறிப்
பாக அன்றைக்கு நாடாளுமன்றத்தினுடைய பொறுப்பில்
இருந்த, என்னுடைய ஆருயிர் அண்ணன் சிட்டிபாபு அவர்களைச்



1989 ஏப்ரல் 28] [திரு. மு. க. ஸ்டாலின்]

சுற்றி ஐந்தாறு அடியாட்கள் அடித்துக் கொண்டிருக்
கிறார்கள். நான் அடிபடுகிற காட்சியைப் பார்க்கிறார்.
நான் கீழே விழுந்து விடுகிற காட்சியைப் பார்த்து, அண்ணன்
சிட்டிபாபு துடிதுடித்துப் போய், அவரை அடிக்கிற அடியாட்
களை அப்படியே ஒரு பக்கத்திலே தள்ளிவிட்டு, என்னிடத்திலே
ஓடோடி வருகிறார். என்னை அடிக்கிற அடியாட்களிடத்தில்
கரமெடுத்துக் கும்பிட்டுக் கேட்கிறார், தயவு செய்து என்
னுடைய தம்பியை அடிக்காதீர்கள், அவன் தாங்க மாட்டான்,
தாங்குகின்ற பக்குவத்தையா அவன் பெற்றிருக்கின்றான், அல்லது
தாங்குகின்ற உடலமைப்பையா அவன் ஏற்றிருக்கின்றான், அவனை
நீங்கள் எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தி, காயப்படுத்தி,
அதன் மூலமாக அவனது உடலிலிருந்து இரத்தம் வழிய வேண்டு
மென்று எண்ணிக்கொண்டு இருக்கிறீர்களோ, அந்தக் கொடுமை
களை, தடியடிகளை, காயங்களை, இரத்தத்தை என் மீது
சுமத்துங்கள் என்று என்னை அடிக்கின்ற அடியாட்களிடத்திலே
கரமெடுத்துக் கும்பிட்ட காரணத்திற்காக, என் மீது காயங்கள்
ஏற்பட்டு விடக் கூடாது என்கின்ற நல்லெண்ணத்தோடு, அவர்
களைத் தடுத்த குற்றத்திற்காக, இரண்டு பேர் இரண்டு கை
களை, இரண்டு பேர் இரண்டு கால்களைப் பிடித்து, அப்படியே
கீழே படுக்க வைத்து, ஐந்தாறு அடியாட்கள் லாடம்
பதிந்திருந்த தங்களது செருப்புக் கால்களால், அண்ணன்
சிட்டிபாபுவினுடைய வயிற்றின் மீது ஏறி மிதிக்கிறார்கள்.
அப்படி மிதிக்கப்பட்ட காரணத்தால் அவருடைய வயிறு
பாதிக்கப்படுகிறது; பதம் பார்க்கப்படுகிறது. அந்த வயிற்றில்
இருக்கிற தொப்புள் ஒரு எலுமிச்சம் பழம் போன்ற வடிவத்
திற்கு மாறுகிறது. சீழ் பிடிக்கிறது. நாளாக நாளாக அது
முற்றிப்போய், அவர் மலம் கழிக்கிறார், மலம் வரவில்லை,
அதற்கு மாறாக இரத்தம் கொட்டுகிறது.

சிறையில் இருக்கின்ற நாங்களெல்லாம் அங்கிருக்கின்ற அதி
காரிகளின் கால்களைப் பிடித்து, கெஞ்சிக் கேட்டு, அவரை
வெளியிலே இருக்கிற அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி
வைக்கிறோம். அனுமதிக்கப்படுகிறார். அறுவை சிகிச்சை
நடைபெறுகிறது.

நாங்களெல்லாம் ஏக்கப் பெருமூச்சோடு காத்திருக்கிறோம்.
நான் உள்ளபடியே சொல்லுகிறேன், சென்னை சிறைச்சாலையைப்
பொறுத்தவரையில், அது எந்தக் கட்சியைச் சார்ந்தவர்
களாக இருந்தாலும், நாங்களெல்லாம் தந்தைப் பாசத்தை,
தாய்ப பாசத்தைப் பெறாமல், அறியாமல் இருந்தோம். ஆனால்
அண்ணன் சிட்டி அவர்கள் எங்களைக் கண்காணித்த நேரத்தில்,
சிறையில் பெற முடியாத தாய்ப் பாசத்தை, தந்தைப் பாசத்தை
அவர் மூலமாக நாங்கள் பெற்றோம்.

எனவே, அப்படிப்பட்ட அண்ணன் திரும்பி வர வேண்டும் என்று ஆவலோடு வழி மேல் விழி வைத்துக் காத்திருக்கிறோம். ஆனால், எங்களுக்குச் செய்தி கிடைக்கிறது, அண்ணன் சிட்டிபாபு மறைந்துவிட்டார் என்கிற செய்தி. செய்தி கேட்டு நாங்கள் கலங்கினோம், புலம்பினோம், கதறினோம். அந்த உருவத்தைக் காண வேண்டும், அந்த உடலுக்கு மாலையிட்டு, அந்த உடலைக் கட்டிப்பிடித்து, ஆசை தீர அழ வேண்டுமென்று எண்ணுகிறோம். ஆனால் அந்த வாய்ப்பு எங்களுக்குக் கிட்டவில்லை. காரணம் அன்றைக்கு மிசாக் கைதியாக சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறோம். அதனால் வாய்ப்பினை இழந்தோம்.

சில மாதங்களுக்குப் பிறகு தேர்தல் அறிவிக்கப்படுகிறது. நெருக்கடி நிலை தளர்த்தப்படுகிறது. மிசா ரத்துச் செய்யப் படுகிறது. விடுதலையாகி, வெளியிலே வருகிறோம். வந்த தற்குப் பின்னால் இங்கே அமர்ந்திருக்கிற, நம்முடைய அமைச்ச ராக இருக்கிற, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தி னுடைய பொருளாளர் அண்ணன் சாதிக் அவர்கள் தலைமையில், மார்க்சிஸ்ட், திராவிடர் கழகம், ஸ்தாபன காங்கிரசைச் சார்ந்த முன்னோடிகளெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு மனுவைக் கொடுக்கி றார்கள். அன்றைக்குக் கவர்னராக இருந்த மாண்புமிகு மேதகு பட்வாரி அவர்களைச் சந்தித்து ஒரு மனுவைத் தருகிறார்கள். சிறையிலே நடைபெற்றிருக்கிற கொடுமைகளை விசாரிக்க வேண்டு மென்று அந்த மனு தரப்படுகிறது. அந்த மனுவை ஏற்றுக் கொண்டு, விசாரணை நடத்தப்படுகிறது.

அந்த விசாரணைக்குப் பொறுப்பு ஏற்றவர் மாண்புமிகு நீதியரசர் இஸ்மாயில் அவர்கள். அவரும் அதைப் பொறுப்போடு விசாரித்து, அதற்குப் பிறகு அவருடைய அறிக்கையைத் தந்தி ருக்கிறார். அந்த அறிக்கை, புத்தகம் இதே அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-30)

அந்த அறிக்கையை, புத்தகத்தை வைத்து, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அன்றைய தினம் முதலமைச்ச ராக இருந்த நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்களிடத்திலே கேட்டார்கள். இதற்கு என்ன நடவடிக்கை இந்த ஆட்சி எடுக்கப் போகிறது என்று கேட்டார்கள். அன்றைக்கு நமது முதலமைச்சராக இருந்த எம். ஜி. ஆர். அவர்கள் தெளிவோடு எடுத்துச் சொன்னார். உரிய நேரத்தில், உரிய முறையில், உரிய அடிப்படையில் நிச்சய மாக நடவடிக்கை எடுக்கப்படுமென்ற உறுதிமொழியைச் சொன் னார். நான் கேட்கிறேன், இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்



பட்டிருக்கிறதா? எடுக்கப்பட்டிருக்கிறது, என்ன நடவடிக்கை என்றால், யார் அதற்குக் காரணமாக இருந்தாரோ அவரை இந்த விசாரணை நடைபெற்ற நேரத்தில் தற்காலிகமாக சஸ் பெண்ட் செய்து வைத்திருந்தார்கள். சஸ்பெண்ட் செய்து வைத்திருந்த அந்த உத்தரவை ரத்துச் செய்து, ''ரிவோக்'' செய்து, அவருக்கு அந்தப் பதவியை மாத்திரமல்ல, அதைவிட உயர் பதவியை அந்த ஆட்சி வழங்கியிருக்கிறது. எனவே, ஒரு மகுடம் சூட்டுகிற வகையில் ஒரு பொறுப்பை வழங்கி இருக்கிறார் கள். நான் பணிவோடு, தாழ்மையோடு கேட்கிறேன், இப்படிப் பட்ட கொடுமைகள் புரிந்திருக்கிற அதிகாரிகளுக்கு இப்படிப் பட்ட பதவிகளை எந்த அடிப்படையில் அன்றைக்கிருந்த ஆட்சி வழங்கியிருக்கிறது என்ற அந்தக் கேள்வியை நான் கேட்டுக் கொள்கிறேன். ''நியாயங்கள் எக்காலத்திலும் எக்காரணம் கொண்டும் காயப்படுத்தப்படக் கூடாது, அதைப் போலவே காயங்கள் எக்காலத்திலும், எக்காரணம் கொண்டும் நியாயப் படுத்தப்படக் கூடாது'', இது நம்மை ஆளாக்கிய ஒப்பற்ற தலைவர், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய பொன்மொழியாகும். இந்தப் பொன்மொழிக்கு ஏற்ப இன்றைக்கு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியாக இருக்கிற இந்த ஆட்சியை நான் மிகுந்த பணிவோடு, அடக்கத்தோடு கேட்டுக்கொள்ள விரும்புவது, இஸ்மாயில் கமிஷன் அறிக்கைக்கு ஏற்ப நீதியை, நேர்மையை நிலைநாட்டுகிற வகையில் உரியவர்கள் மீது உடனடியாக நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பை வழங்கியமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற காவல்துறை மானியக் கோரிக்கை மீதும், அதன் தொடர்பான மானியக் கோரிக்கைகள் மீதும் என்னுடைய கருத்துக்களை எடுத்துரைக்க விழைகிறேன்.

பொதுவாக தமிழகக் காவல் துறைக்குக் கடந்த காலங்களில் ஏற்பட்டிருந்த நல்ல பெயர் சிறிது சிறிதாகக் குறைந்து இன்றைக்கு சர்ச்சைக்குரிய பொருளாக மாறியிருப்பதை நான் இங்கே சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. ஒரு காலத்தில் இந்தியா வில் மிகச் சிறப்பான காவல் துறை என்று பெயர் எடுத்த நம் காவல் துறை இன்றைக்கு மெள்ள மெள்ள, தேய்ந்து போய் அந்தப் பெயர் இன்றைக்கு அதற்கு இல்லையென்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. சில காலத்திற்கு முன்னால் தினமணி பத்திரிகை, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை போன்ற பத்திரிகைகள் தொடர் கட்டுரைகளாக எழுதி வந்தன. தமிழ்நாட்டில் மதுவிலக்குப் பிரிவில் பணியாற்றி வந்த காவலர் கள் முறைகேடாக நடந்து கொள்கிறார்கள் என்பது மட்டுமல்ல, கள்ளச்சாராயம் தமிழ்நாட்டில் பெருக்கெடுத்துப் பாய்கிறது என்பது மட்டுமல்ல, ஏறத்தாழ 750 கோடி ரூபாய்க்கு மேல்

[திரு. பொன். விஜயராகவன்] [1989 ஏப்ரல் 28

கள்ளச் சாராயம் தமிழ மாநிலத்தில் பரிமாறப்படுகிறது, அதற்கு
உடந்தையாக காவல் துறை இருக்கிறது என்பதைப் பற்று டத்திரி
கைகள் எழுதின. நான் இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்வ
தெல்லாம், கீழே இருந்து மேல் வரையில், from Constable to I.G.
என்ற அளவிற்கு இருக்கக் கூடிய காவலர்கள் மீது புகார்கள்
கூறப்பட்டதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன். அந்தப் பத்திரிகைகளில் வந்த குறிப்புகளைப பார்க்கிற
போது கூட உடனடியாக இடம் மாறுதல் செய்வது என்பது
வாடிக்கையாகப் போய் விடுகிறது. ஒரு இடத்தில் காவலர்
தவறு செய்துவிட்டால் அல்லது ஒரு அதிகாரி தவறு செய்து
விட்டால் அவர்களை இன்னொரு இடத்திற்கு மாற்றுவதுதான்
இன்றைக்குக் காவல் துறையில் வழக்கமாகப் போய் இருக்கிறதே
தவிர வேறு எந்த நடவடிக்கையும் இருப்பதாகத் தெரியவில்லை.
இன்னும் சொல்லப் போனால், பத்திரிகைகளில் பட்டவர்த்தன
மாக எழுதியிருந்தார்கள். சில இடங்களில் இன்ஸ்பெக்டர்கள்
அதற்கு மேற்பட்ட அதிகாரிகள் லட்சம் லட்சமான அளவிற்குப்
பணம் சம்பாதிக்கக் கூடிய அளவிற்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது
என்று பத்திரிகைகளில் எழுதிய பின்னாலும் கூட—அதே பத்திரி
கைகளில் எழுதியிருக்கிறார்கள—அவர்களுக்கு மாறுதல் கொடுத்
திருக்கிறார்கள் என்று. நான் இந்த அரசாங்கத்தைப் பார்த்து
மிகப் பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம், ஒரு ஒட்டு
மொத்தமான விசாரணை, காவல் துறையில் தங்களுடைய வரு
வாய்க்கு அதிகப்படியாக, தங்களுடைய சுற்றத்தார், உறவினர்,
நண்பர்கள் மீது சொத்து வைத்திருக்கக் கூடிய எல்லோரையும்
கண்காணிக்கிற வகையில் பாரபட்சமற்ற விசாரணையை வைக்க
வேண்டும். இந்தத் தவறுகளுக்குக் காரணமாக இருந்த, காவல்
துறையில் இருக்கக் கூடிய, கீழேயிருந்து மேலே இருக்கிற அதிகாரி
கள் வரையில் அவர்கள் மீது ஒரு விசாரணை நடத்துவதற்கு
இந்த அரசாங்கம் முன் வருமா என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

இன்றைக்குப் பார்க்கிறோம், ஏராளமான வழக்குகள் தெளிவு
பெறுகின்றன என்று சொன்னாலும் கூட, அதற்கான கணக்கை
இங்கே கொடுத்திருக்கிறார்கள். கொள்ளையைப் பொறுத்தவரை
யில் 1987 ஆம் ஆண்டு 69 கொள்ளையில் 14 கொள்ளைதான்
கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. 81 கொலையில் 44 கொலை
கள்தான் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. 1988 ஆம் ஆண்டு
72 கொலைகளில் 37 கொலைகள்தான் கண்டுபிடிக்கப்பட்டு
இருக்கின்றன. கொள்ளையைப் பார்ப்போமானால் 52-ல் 14
தான் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. மிகச் சிறந்த காவல்
துறை என்று சொல்லக்கூடிய தமிழகக் காவல் துறை 70 அல்லது
80 சதவிகிதமாவது கண்டுபிடித்திருந்தால் கூடப் பரவாயில்லை.
மிக மோசமான அளவிற்கு வந்திருக்கிறது என்று சொன்னால்,
இதற்கு அடிப்படையான காரணங்களைக் கண்டுபிடிக்க
வேண்டிய ஒரு சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். மேலே இருக்கக்



1989 ஏப்ரல் 28] [திரு. பொன். விஜயராகவன்]

கூடிய அதிகாரிகள் ஒழுங்காக இருப்பார்களானால், கீழேயிருக்கக் கூடிய தவறுகள் குறைவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். என்ன காரணத்தாலோ தெரியவில்லை. அதற்கு அவ்வப்போது ஏற்படுகின்ற அரசாங்கங்கள் — எனக்கு முன்னாலே பேசும்போது கூட இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் கூட, அந்தந்த அரசாங்கங்களுக்கு அவர்கள் உறுதுணையாக இருந்து கொண்டு, சலுகைகளைப் பெற்றுக்கொள்வதும், அதற்குப் பின்னாலே அரசாங்கங்கள் வருகின்றபோது அதைச் சரியாக, ஒழுங்காகக் கவனித்து, நடவடிக்கைகள் எடுக்காமல் போவதினுடைய காரணத்தாலதான், இதுபோன்ற நிலைமைகள் ஏற்பட்டு இருக்கின்றன என்று சொன்னார்கள். நான் முதலமைச்சர் அவர்களை மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டினுடைய காவல் துறையில் கீழேயிருந்து மேலே வரையில் 'ஒவர் ஹாலிங்' செய்ய வேண்டிய நிலைமைக்கு இன்றைக்கு நாம் வந்து கொண்டிருக்கிறோம். கீழேயிருந்து மேலே வரையில், ஊழலினுடைய ஊற்றுக்கள் என்று சொல்வதானால், இன்றைக்கு தமிழகத்தினுடைய காவல் துறையை நாம் சொல்லாமல் இருக்க முடியாது. அந்த அளவிற்கு இன்றைக்கு மாறிக்கொண்டு இருக்கிறது.

கவர்னர் ஆட்சிக் காலத்தில் ஏராளமான பேர்களுக்குப் பிரமோசன் கொடுக்கின்றபோது கூட, பதவி உயர்வுகள் அளிக்கின்றபோது கூட முறைகேடான பதவி உயர்வுகள் அளிக்கப்பட்டு இருக்கின்றன என்று குறைபாடுகள் வருகின்றன. இந்த டிசிப்லிண்டு ஃபோர்ஸ், இந்த நாட்டினுடைய சட்டம்—ஒழுங்கைப் பாதுகாக்கக்கூடிய இந்த ஃபோர்ஸ் இன்றைக்கு 'டீ மாரலைஸ்' ஆகுமானால், அதிலே இருக்கக்கூடிய, மேலே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் நல்லபடியாகச் செயல்படுவதற்கு, நல்லபடியாகப் பணிபுரிவதற்கு அவர்களுக்கு உரிய மரியாதை இல்லை என்று சொல்லப்படுமானால், இந்த ஃபோர்ஸ் 'டீ மாரலைஸ்' ஆகுமானால் தமிழ்நாட்டினுடைய சட்டம்—ஒழுங்கை எப்படிப் பராமரிக்க முடியும் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இங்கே முதல்வர் அவர்கள் பேசுகின்றபோது கூடச் சொன்னார்கள். அரசியல்வாதிகளுக்கு எல்லாம் ஏற்கெனவே வீடு இருந்தாலும் கூட, அண்ணா நகரில் அவர்களுக்கு இன்னொரு பிளாட் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்ற குற்றச்சாட்டைக்கூடச் சொன்னார்கள். என்னிடம் மிக வருத்தத்தோடு சிலர் சொன்னார்கள். காவல் துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்குக்கூட, அவர்களுக்கு 2, 3 பிளாட்டுகள் என்கிற அளவிலே அரசினுடைய சார்பிலே, அவர்கள் அரசுக்கு விசுவாசமாக இருந்த காரணத்தாலே, கொடுக்கப்பட்டு இருக்கின்றன என்ற குற்றச்சாட்டுக்களும் வந்திருக்கின்றன. அதில் உண்மை எந்த அளவுக்கு இருக்கிறது என்பது தெரியவில்லை. ஆனாலும் கூட, இப்படிக் கொடுத்

[திரு. பொன். விஜயராகவன்] [1989 ஏப்ரல் 28

தவை பற்றி, தமிழகக் காவல் துறையில் ஒரு பாரபட்சமற்ற விசாரணையை நடத்துவதற்கு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, இன்னொரு அரசியல் இயக்கமாக இருந்தாலும் சரி, மற்ற இயக்கங்களாக இருந்தாலும் சரி, ஜனநாயகக் கடமைகளைச் செய்வதற்குக் கூட, இன்றைக்கும் தமிழகத்தில் இருக்கக்கூடிய காவல்துறை ஒத்துழைப்பாக இல்லை என்ற குற்றச் சாட்டை நான் இங்கே சுமத்த விரும்புகிறேன். நேற்றைய தினம் இந்தியா முழுவதும் ஜனநாயகத்திற்கு எதிரான ஒரு முக்கிய மான சவாலை எதிர்த்து, ஜனநாயகத்தினுடைய குரல்வளை யைப் பிடித்து மத்திய அரசு நடந்து கொண்ட முறையைக் கண்டித்து, மிகப் பெரிய போராட்டத்தை எதிர்க்கட்சிகளுடைய சார்பிலே நடத்தினோம். சென்னை மாநகரத்தில் நேற்றைக்கு நடைபெற்ற உண்ணாவிரதத்திற்குக் கூட, சென்னையில் இருக்கக் கூடிய காவல் துறையால் அனுமதி வழங்கப்படவில்லை என்பது மட்டுமலல, அந்த உண்ணாவிரதத்திலே கலந்து கொண்டு இருப்ப பவர்களை கைது செயதார்கள எனபது மட்டுமல்ல, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்குக் கூட சென்னை மாநக ரத்திலே, சென்னை மாநகரத்தினுடைய காவல் துறை அனுமதி வழங்கவில்லை என்பது மட்டுமல்ல, ஆர்ப்பாட்டத்தில் போய்க் கலந்துகொண்டு திரும்பி வருகின்றபோது, நானும், மரியாதைக் குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களும், சட்ட மன்ற உறுப்பினர் திரு. குருமூர்த்தி அவர்களும் கைது செய்யப் பட்டோம். கைது செய்யப்படுவது, காவலில் வைக்கப்படுவது என்பது ஒன்றும் எங்களுக்குப் புதிதல்ல. ஆனால், ஜனநாயகத் திற்கு எதிரான பிரச்சினைகள் வருகின்றபோது எதிர்க்கட்சிகளி னுடைய தார்மீகக் கடமைகளை நிறைவேற்றுவதற்குக் கூட அனுமதி வழங்கப்படவில்லை என்பதை நான் மிகுந்த வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

( முற்பகல் 9-40 )

என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்லிக் கொள்வேன். நான் சார்ந்திருக்கின்ற இயக்கம் ஒன்றும் தேசிய முன்னணியில் இல்லை என்று சொன்னாலும் கூட, இன்றைக்கு ஆளுகின்ற பொறுப்பிலே இருக்கிற அரசாங்கம் தன்னை தேசிய முன்னணியி னுடைய ஒரு அங்கமாக அறிவித்துக் கொண்டு இருக்கிறது. தேசிய முன்னணியினுடைய அங்கமாக அறிவித்துக் கொண்டு, இந்த ஜனநாயக படுகொலைக்கு எதிரான குரல் கொடுப்பதாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறது. நான் பெரிய அளவிற்கு மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். முதலமைச்சர் அவர் களுடைய கருத்துக்கள மிகப் பெரிய அளவிற்கு வந்ததாக நான்



1989 ஏப்ரல் 28] [திரு. பொன். விஜயராகவன்]

ஒன்றும் பார்க்கவில்லை. ஆனாலும்கூட, இன்றைக்கு ஏற்பட் டிருக்கக் கூடிய இந்தச் சின்ன போராட்டத்திற்குக் கூட, அமைதி யான முறையில் நடத்தப்படுகின்ற போராட்டத்திற்குக் கூட சென்னை மாநகரத்திலே அனுமதி இல்லை என்று சொன்னால் எப்படி ஜனநாயகக் கடமைகளை இந்த தேசிய முன்னணியிலே அங்கம் வகிக்கின்ற இந்த சர்க்காரே நடத்துகின்ற போது நிறை வேற்ற முடியும் என்பதை . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, கர்நாடக அரசு கவிழ்க்கப்பட்டது சம்பந்தமாகப் பெரிய அளவில் நான் கருத்துத் தெரிவிக்கவில்லை என்று சொன்னார்கள். அது எந்த அளவிற்கு என்று எனக்குப் புரியவில்லை. இதே மன்றத்தில் இந்த ஆட்சியாளர்களாக இருக்கின்ற ஆளும் கட்சியினுடைய கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே உடனடி யாக மறுநாள் நடைபெற்ற பெங்களூர் கூட்டத்திற்கு என்னை வருமாறு அழைத்தார்கள். 27-ந் தேதி. இங்கே 27, 28 ஆகிய நாட்களிலே போலீஸ் மானியம், ஏற்கெனவே 2, 3 முறை மாற்றப்பட்டுவிட்ட காரணத்தால் வர இயலவில்லை என்று, திரு. என். வி. என். சோமு, எம்.பி., அவர்கள் அனுப்பப்பட்டு, திரு. வி. பி. சிங்கோடு சேர்ந்து பேசி இருக்கிறார்கள். அடுத்து நேற்றைக்கு நடைபெற்ற கண்டனக் கூட்டத்திலே நம்முடைய உணவு அமைச்சர் மாண்புமிகு திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் கலந்துகொண்டு பேசியிருக்கிறார்கள். பஞ்சாயத்து கான்ஃபரென் சில் தமிழ்நாடு கலந்துகொள்ளாது என்று நம்முடைய எதிர்ப்பை அதன்மூலம் தெரிவித்து இருக்கிறோம். இதைவிட என்ன எதிர்ப்பைக் காட்டுவது என்று மாண்புமிகு உறுப்பினர் விரும்பு கிறார்கள் என்று தெரியவில்லை.

**திரு. பொன். விஜயராகவன் :** தலைவர் அவர்களே, நான் இதைக் குறிப்பிட்டுக் கொண்டு வருகிறபோது நேற்றைக்கு நடை பெற்ற சம்பவங்களின் அடிப்படையில் நான் சொல்வதற்குத் தான் வந்தேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கைது செய்து விடப் பட்டால், அது பெரிய செய்தியாகிறது. இல்லாவிட்டால் அது பெரிய செய்தியாக ஆகாது. எனவே உங்களுக்கும், எங்களுக்கும் இந்தப் பிரச்சினைக்கு உதவுகின்ற வகையில்தான் அந்த நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. மா. சுந்தரதாஸ் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், நேற்றைய சம்பவத்தில்கூட 20 பேர்கள் தான் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள் என்பதைக் கூட சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எப்படி "point of order"—இல் வரும் என்று கொஞ்சம் சொல்ல முடியுமா? நீங்கள் ஒரு வழக்கறிஞர். இதை எப்படி "point of order"—இல் எழுப்பலாம்? இதில் எத்தனை பேர் என்று போலீசிற்கும் தெரியும், எல்லோருக்கும் தெரியும். இதை நாம் சொல்ல வேண்டுமா? இதில் "point of order" ஒன்றும் கிடையாது. உட்காருங்கள்.

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது. வாய்ப்புக் கொடுங்கள். அரசியல் ரீதியாக ஒரு விஷயம் பெரிதாக்கப்பட வேண்டும் என்பதற்காகக் காவல்துறை தவறாகப் பயன்படுத்தப் பட்டு ஒரு சிலர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட் டார்கள் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களே கூறுவார்களே யானால், அது எந்த அளவிற்கு என்று எனக்குத் தெரியவில்லை. காவல் துறை தவறாக பயன்படுத்தப்படுகின்றது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப் பினர்கள், ஆந்திராவைப் போல் இங்கே அமைச்சர்கள் ரயிலை மறிக்கவில்லை என்பதற்காக மகிழ்ச்சி அடையலாம்.

திரு. பொன். விஜயராகவன்: தலைவர் அவர்களே, நான் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டருக்கும் போகவில்லை. நேற்றைக்கு அதற்கான உரிமையைக் கூட அவர்கள் வழங்கவில்லை என்ற நிலையில், அவர்களைக் கைது செய்யட்டும். அது பரவாயில்லை. அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் 4, 5 நாட்கள் கூட வைத் திருந்தால், இன்னும் உதவியாகக் கூட இருந்திருக்கும். அது போகட்டும். ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய காவல்துறை ஒரு வேளை மற்ற மாநிலங்களில் இருக்கின்ற காவல் துறையைப் போல் அல்லாமல், சிறப்பாக செயல்படுகிறது என்று கூட சொல்லிக் கொள்ளலாம். ஏனென்று சொன்னால், ஒரு வழக்கை ஆய்வு செய்து, அந்த வழக்கின் அடிப்படையிலே கொண்டுபோய், நீதிமன்றத்திலே தாக்கல் செய்து, தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், 2 பேரைத் தூக்கில் ஏற்றிய பின்னாலே அதற்குப் பின்னால் ஒரு கமிஷன் போடப்பட்டு, அந்தக் கமிஷன் ரிப்போர்ட்டும் தரப்பட்டதற்குப் பின்னாலே, அதற்குப் பிறகு விசாரணை நடைபெற்றது. இப்படிப்பட்ட ஒரு "wonderful investigatory department" இருப்பதை விட, அதைவிட வேண்டுமானால், தமிழகத்தினுடைய காவல் துறை பெருமையாக சொல்லிக்கொள்ள முடியும். ஆகவே உலகத்திலேயே பிராசிகியூஷன் வரலாற்றில் இல்லாத அளவிற்கு ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டு, நாம் எல்லோரும் வருந்தத்தக்க, நாம் எல்லோரும் எண்ணிப் பார்க்கக் கூடிய அளவிற்கு இந்த



நாட்டினுடைய பிரதமருடைய வழக்கைக் கூட விசாரிப்பதிலே பல்வேறு சங்கடங்கள் ஏற்பட்டு, இரண்டாவது ஒரு கமிஷன் வந்து, அதற்கும் பின்னாலே, பிராசிகியூஷனில் அந்த அளவிற்கு இல்லை என்று சொன்னால், அதைவிட வேண்டு மானால் தமிழகக் காவல் துறை பெருமைப்பட்டுக் கொள்ள முடியும். ஆனால் இது சிறப்பாக இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவிற்கு மேலே இருக்கக் கூடிய அதிகாரிகளிடமிருந்து கீழே இருக்கக் கூடிய அதிகாரிகள் வரை ஒரு demoralised state of affairs தமிழ்நாட்டில் நிலவுகிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேர்வுகளானாலும் சரி, தேர்வுகளிலிருந்து தேர்வு செய்யப் பட்டவர்களை நியமிப்பதானாலும் சரி, இதற்கு முன்புகூட ஆயிரக்கணக்கான காவலர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர் களுடைய நிலைமை என்ன என்று அவர்களுக்கே தெரியாமல் இன்றைக்கும் இருக்கிறார்கள். சிலபேரை டிரெயினிங்கிற்கு அனுப்பி யிருக்கிறார்கள். அவர்கள் சில பேர்கள் வேலையிலே சேர்ந் திருக்கிறார்கள். இன்னும் ஏராளமான பேர்கள் தங்களுக்கு உத்திரவு வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான பேர்கள். அவர்களுக்கு நிச்சயமாக டிரெயி னிங் அளிக்கப்பட்டு அவர்கள் வேலையிலே சேர்ந்து கொள் வதற்கான உத்திரவாதத்தை இந்த அரசு வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன்.

எத்தனையோ திருட்டுக்கள் நடக்கின்றன. அந்தத் திருட்டுக் களிலே இருக்கக்கூடிய ரெக்கவரியை பொறுத்தமட்டில் சொல்ல வேண்டுமென்று சொன்னால் உதாரணத்திற்கு தங்க நகையைத் திருடுகிற வழக்கு என்று வைத்துக் கொள்வோம். தங்க நகையை எடுத்துக் கொண்டு போவதில் அதை ரெக்கவரி செய்வதிலே இன்றைக்கு ஏராளமான பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண் டிருக்கின்றன. அதைத் திருப்பிக் கொண்டு வருவதிலே அதே நகையைத்தான் அடையாளம் காட்ட வேண்டுமென்று இருக் கிறது. தங்க நகையைத் திருடி அதை விற்றாலோ அல்லது அதை யாராவது எடுத்துக் கொண்டாலோ அந்த நகையை அப்படியே வைத்துக் கொள்வதில்லை. அந்த நகையை உடனடியாக உருக்கி விடுகிறார்கள். அதைத் தங்கமாக பெற்று விடுகிறார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய சட்டத்தின் அடிப்படையில் அந்தத் தங்க நகையை மீட்பதில் அதையேதான் கொண்டு வந்து காட்ட வேண்டும் என்பது போன்ற பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. அதனால் தங்க நகை திருடு போயிருக்கிறது என்று சொன்னால், தங்க நகை எவ்வளவு திருடு போய் இருக்கிறது என்று அதைக் கண்டுபிடிப்பதிலே, இன்றைக்குச் சுணக்கம் ஏற்பட்டிருப்பது

[திரு. பொன். விஜயராகவன்] [1989 ஏப்ரல் 28

மட்டுமல்ல, அதிலே போய் அந்த வழக்கை விசாரித்துப் புலன் விசாரணை செய்து, அந்த நகையை மீட்பது என்று சொன்னால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பல்வேறு காவல் துறை அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப்படுகிற அளவுக்கு அந்தச் சட்டத்திலே ஒட்டை இருக்கிறது. அதை அடைத்து ஒழுங்காக தங்க நகைத் திருட்டு வழக்கைக் கண்டு பிடிப்பதிலே சரியான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தது மேன் மிஸ்ஸிங். ஒருவர் காணாமல் போய் விட்டார் என்று காவல் துறையிலே இன்றைக்குப் புகார் கொடுப்போமேயானால்— அது குறித்து சரியான புள்ளி விவரங்கள் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் வெளியிலே சொல்லியிருக்கக்கூடிய கருத்து மேன் மிஸ்ஸிங் என்ற அளவில் சென்னை மாநகரத்துக் காவல் துறையிலே சொல்லப்படுகிறது. மேன் மிஸ்ஸிங் வழக்குகளில் எல்லாம் எப்படி என்று சொன்னால் — அதை ரெஜிஸ்டர் செய்து விட்டு அதற்கு பின்னாலே அதை அப்படியே விட்டு விட வேண்டியது. அந்த ஆள் என்ன ஆனார், எப்படி ஆனார் என்பதைப் பற்றித் தெரிவதில்லை. இப்படிப் பின்னாலே ஏராளமானவர்களுடைய கதையைப் பற்றித் தெரியவில்லை என்கிற அளவிலே சொல்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், காணாமல் போய் விட்டவர்கள் ஒரு வேளை கொலை செய்யப்பட்டிருக்கலாம் அல்லது எங்காவது கொண்டு போய் விடப்பட்டிருக்கலாம், இல்லையானால் கடத்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே இந்த மேன் மிஸ்ஸிங் வழக்குகளைக் கொஞ்சம் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, புரொஹிபிஷன் அஃபென்சஸ். மதுவிலக்கு வழக்குகளிலும் மற்ற வழக்குகளிலும் வண்டிகள், வாகனங்கள் கைப்பற்றப்படுகின்றன. அப்படிக் கைப்பற்றப்படுகிற வாகனங்களை அப்படி அப்படியே புரொஹிபிஷன் இலாக்காவிலே இருக்கக்கூடிய திறந்த வெளியிலே கொண்டு போய் விடுகின்றனர். அது மாதக் கணக்காக, ஆண்டாண்டுக் காலமாக அங்கேயே நின்று கொண்டு அப்படியே நாசமாகப் போய், அந்த வண்டி யாருக்குச் சொந்தமோ அவர்களுக்கும் பயன் இல்லாமல் அரசாங்கத்திற்கும் பயன் இல்லாமல் அந்த வண்டியிலே மேலே வெறுமனே இருக்கக் கூடிய கூடு இருக்கிறதே, அந்த பாடி மட்டும்தான் ஒழுங்காக இருக்கிறது. அதிலே இருக்கக்கூடிய இயந்திரங்கள் எல்லாம் காணாமல் போய் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருப்பதை இந்த மாமன்றத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1989 ஏப்ரல் 28] [திரு. பொன். விஜயராகவன்]

அதற்கு நான் ஒரு உதாரணத்தைச் சொல்வதற்கும் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு கஸ்டம்ஸ்ஸிலே — மத்திய சர்க்காருக்கு சொந்தமாக இருக்கக்கூடிய அந்த கஸ்டம்ஸ் துறையிலே என்ன செய்து வருகிறார்கள் என்று சொன்னால் அவர்கள் பிடிக்கிற வண்டிகளைப் பாதுகாப்பாக ஒரு இடத்திலே வைத்து— ஒரு மிகப்பெரிய கொட்டகையை வைத்துக் கொண்டு— அதிலே பழுது பார்த்து ஒழுங்கான நிலையில் ரன்னிங் கண்டிஷனில் வைத்திருக்கிறார்கள். கஸ்டம்ஸ் துறைக்கு வழக்கு எதிராகப் போகுமேயானால், அந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் அந்த வழக்கிலே வெற்றி பெறுவார்களேயானால், அவர்களுக்கு வண்டி மிச்சப்படுகிறது. இல்லை என்று சொன்னாலும் கூட கஸ்டம்ஸ் துறைக்கு அந்த வழக்கிலே வெற்றி கிடைக்குமானால் அந்த வண்டியை ஏலம் விடுகிற வகையில் சர்க்காருக்குப் பணம் வருகிறது. ஆனால புரொஹிபிஷன அஃபென்சில் நம் சர்க்கார் பிடித்து வைத்திருக்கிற அந்த வண்டிகளால் சர்க்காருக்கும் நன்மை இல்லை. சம்பந்தப்பட்ட வழக்கில் இருப்பவர்களுக்கும் உபயோகம் இல்லை. ஆகவே ஒரு யோசனையாக நான் சொல்லவிரும்புவது அந்த வண்டிகளை ஒன்று பிடித்தபின் ஏலத்திற்கு விற்று விடுங்கள். இந்த வண்டியைப் பிடித்தோம், பிடித்து ஏலத்தில் விட்டு அந்தப் பணத்தை நாங்கள் வங்கியிலே போட்டிருக்கிறோம் என்று சொன்னால் அந்த வழக்கு முடிந்து, வழக்கு சர்க்காருக்குச் சாதகமானால் அந்தப் பணம் சர்க்காருக்குப் போய்ச் சேரும். இல்லை என்று சொன்னால் அந்த வண்டிக்கு சொந்தக்காரருக்குப் போய்ச் சேரும் என்ற வகையிலே செய்யுங்கள். அல்லது கஸ்டம்ஸ் துறையிலே எந்த அளவுக்கு முடக்கி வைக்கப்பட்ட வண்டிகள் பாராமரிக்கப்பட்டு அந்த முறைகள் பின்பற்றப்படுகின்றனவோ, அதே முறையைத் தமிழ்நாட்டில் காவல் துறையும் பின்பற்ற வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 9-50)

தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய காவல் துறை ஒரு காலத்தில் (மணியடிக்கப்பெற்றது) விளையாட்டுத் துறையிலே புகழ்பெற்ற ஒரு காவல் துறை, ஆனால் இன்றைக்கு விளையாட்டுத் துறையில் தமிழகக் காவல் துறை எந்தவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. விளையாட்டுத் துறையில் இருக்கக்கூடிய—இன்றைக்குப் பஞ்சாப் போலீஸ், கேரளா போலீஸ், பார்டர் செக்யூரிட்டி போர்ஸ் இவை எல்லாம் மிக அதிகமான அளவிற்கு முன்னேறி விட்டன. ஒரு காலத்தில் தமிழகப் போலீஸ் என்று

[திரு. பொன். விஜயராகவன்] [1989 ஏப்ரல் 28

சொன்னால் விளையாட்டுத் துறையிலே மிக முக்கியமான அளவிற்குப் பெயர் பெற்றிருந்தது மட்டுமல்ல, நல்ல விளையாட்டு வீரர்களுக்கு வேலை தருவதற்கான ஒரு வாய்ப்பும் தமிழகக் காவல் துறைக்கு இருந்தது. ஆனால் இன்றைக்கு, முக்கியமாக விளையாட்டுத் துறையிலே இருக்கக்கூடியவர்கள் தமிழ் நாட்டுக் காவல் துறையினால் ஊக்குவிக்கப்படுவதில்லை. இந்தியாவில் இன்றைக்குப் புகழ்பெற்ற விளையாட்டு வீரர்கள் பஞ்சாப் போலீசிலே இருக்கிறார்கள். இந்தியாவில் இன்றைக்குப் புகழ் பெற்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் கேரளா போலீசிலே இருக்கிறார்கள். இந்தியாவில் இன்றைக்குப் புகழ் பெற்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பி.எஸ்.எஃப்பிலே இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இன்றைக்கு அது போன்ற ஒரு வழக்கம் இல்லாமல் மோசமான ஒரு சூழ்நிலை. அதை முன்னேற்றுவதற்கும், விளையாட்டு வீரர்களை ஊக்கப் படுத்துவதற்கும் விளையாட்டுக் குழுக்களை அமைப்பதற்கும் இந்தக் காவல் துறை முன்வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு விளையாட்டுத் துறையிலே ஈடுபட்டவர்கள் என்கின்ற அளவிலே காவல் துறையிலே இருக்கின்றவர்கள் கூட அவர்கள் விளையாட்டுத் துறை சம்பந்தமாகப் போக வேண்டும் என்று சொன்னால் அவர்களுக்கும் 'ஆன் ட்யூட்டி' கொடுப்ப தில்லை. விடுமுறை எடுத்துத்தான் போக வேண்டும் என்ற அளவில் இருக்கிறது.

இன்றைக்கு ஆர்டர்லி ஒழிப்பு என்பது ஏட்டளவிலே இருக்கிறதேயல்லாமல் உண்மையிலேயே நடைமுறையிலே ஆர்டர்லி ஒழிப்பு என்பது இல்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டுக் காவல் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு முக்கியமான சவால், இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கூடிய சவால் ஒரு ஓவர்ஹாலிங் ஃப்ரம் டாப் டு பாட்டம்-கீழிருந்து மேலே இருக்கின்ற வரையிலே இருக்கக்கூடிய தவறுகள் களையப்படுமேயானால் ஒரு பாரபட்சம் அற்ற விசாரணை, இன்னும் சொல்ல வேண்டுமென்றால், இந்த அரசாங்கத்திற்கு நம்பிக்கை ஏற்படுமானால் சி.பி.ஐ. விசாரணை கூடக் கோருவதிலே தவறு இல்லை. பல இடங்களிலே சி.பி.ஐ. விசாரணைப் கூட பல வழக்குகளிலே மாநில அரசுகள் கேட்டுப் பெற்றிருக்கின்றன. இதை நான் சுட்டிக்காட்டி இந்தக் காவல்துறை ஓரளவிற்கு வரன்முறைப் படுத்தப்பட்டு, ஒழுங்குப் படுத்தப்படவில்லை என்று சொன்னால் இந்தக் காவல் துறை மீது மக்களுக்கு நம்பிக்கை போய்விடும். மக்களுக்கு நம்பிக்கை போய் விட்டால் சட்டத்தை மக்களே கையில் எடுக்கின்ற காலம் வெகு தூரத்திலே இல்லை என்பதை நான் இந்த மன்றத்திலே சொல்லி அமைகிறேன். நன்றி. வணக்கம்.



1989 ஏப்ரல் 28]

*திரு. ஜெ. அசேன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நடைபெற்ற மறுமலர்ச்சிக் காவியத்தின் தலைநாயகராக விளங்கும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து எனக்கு இம் மாமன்றத்திலே பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய இராணிப் பேட்டைத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, மதுவிலக்கு ஆயத்தீர்வை, காவல் துறை, தீயணைப்புத் துறை மானியத்தின் மீது உரையைத் துவக்குகின்றேன். இந்த மானியத்தினை மாமன்றத்திலே எதிர்த்து பேசிய எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எல்லாம் இன்றைய ஆட்சியிலே கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடுவதாக குற்றச் சாட்டுச் சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் கடந்த காலத்தில் ஏறக்குறைய 10 ஆண்டுகளாகத் தமிழகத்திலே கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த வெள்ளத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு இன்றைய அரசு செய்து கொண்டிருக்கின்ற முயற்சியை நான் பாராட்டுகிறேன். அது மட்டுமல்ல. இந்த அரசு பொறுப்பு ஏற்றவுடன் சாராய சாம்ராஜ்ஜியத்தை ஒழிக்க வேண்டும் என்பதற்காக முனைப்பாக செயல்பட்டு அவர்கள் எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் இன்றையதினம் ஓரளவிற்குக் கள்ளச் சாராயத்தை கட்டுப்படுத்துகின்ற அளவுக்கு அமைந்திருப்பதை நான் வரவேற்கிறேன். அது மட்டுமல்ல. இதற்கு முந்தைய ஆட்சியிலே தமிழகத்திலே நடைபெற்ற சாராய விவகாரங்கள் எல்லாம் சந்தி சிரித்துக் கொண்டிருக்கின்ற காட்சியைத் தமிழகம் இன்னும் மறந்துவிட வில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் தமிழகத்திலே தயாரிக்கப்படுகின்ற அயல் நாட்டு மதுவகைகளுக்கு அந்த அரசாங்கம் தந்த சலுகைகளின் மூலமாக சில பேர் கொள்ளை லாபம் சம்பாதித்துக் கொண்டிருந்த நிலையை இந்த அரசு மாற்றியமைத்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகளுக்குப் பயன் படுத்தப்படும் தெளிந்த சாராவி மீதான ஆயத் தீர்வையை முந்தைய அரசு நீக்கியதால் ஆண்டொன்றுக்கு சுமார் 23 கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டது. இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் அந்த நிலையை மாற்றி அமைத்ததை வரவேற் கின்றேன். அது மட்டுமல்ல, ஐ.எம்.எப்.எல். என்கின்ற அந்த மது பானத் தயாரிப்புத் தொழிற்சாலைகளுக்குத் தமிழகத்தில் 5 பேருக்கு உரிமம் வழங்கப்பட்டது. அந்தத் தனியார் நிறுவனம் அயல்நாட்டுச் சாராவி மது பானத்தைத் தயாரிக்கின்றபோது, ஏறக்குறைய ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆண்டுக்கு 6 கோடி முதல் 12 கோடி ரூபாய் வரை லாபம்

[திரு. ஜெ. அசேன்] [1989 ஏப்ரல் 28

வந்தது. அது எப்படி வந்தது என்று கேட்டால் அவர்கள்
தயாரிக்கின்ற மது வகைகளுக்கு அவர்களே விலையை
நிர்ணயித்துத் தந்ததன் காரணமாக, அந்த விலையைக்
குறைத்துக் கூட வாங்க முடியாமல் தமிழ்நாடு மாநில
வாணிபக் கழகம், அவர்கள் சொன்ன விலையில் வாங்கியதன்
காரணமாக அந்தக் கம்பெனிகளுக்கு ஏறக்குறைய 6 கோடி
முதல் 12 கோடி ரூபாய் வரை லாபம் வந்தது. ஆனால் இன்
றைய தினம் நம்முடைய அரசு பதவிக்கு வந்தவுடன் அந்த
விலையை நிர்ணயிக்கின்ற அந்த உரிமையை ஆயத் தீர்வை
ஆணையர் அவர்களுக்கு விட்டு இருக்கிறது. எனவே, அதன்
மூலமாக தமிழகத்திற்கு ஏற்பட இருக்கின்ற அந்த நஷ்டத்தைப்
போக்கியிருக்கிற இந்த அரசின் செயலை நான் பாராட்டுகிறேன்.

அது மட்டுமல்ல, குறிப்பாக கடந்த ஆட்சி மது சில்லறை
வியாபாரத்தில், எந்த அளவிற்குத் தங்களுடைய கட்சிக்காரர்
களுக்கு உரிமை வழங்கியிருந்தது என்பதை நாம் எல்லாம்
நன்றாக அறிவோம். குறிப்பாக, சில்லறை வியாபாரத்தில்
யார், யாருக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டது என்பதைப்
பார்க்கின்றபோது, ஒரு தனிப்பட்ட கட்சிக்கு வழங்கப்பட்டு,
அந்தக் கட்சிக்காரர்களே லாபம் அனுபவித்துக் கொண்டிருந்த
காட்சியைக் கடந்த காலத்திலே நாம் பார்த்தோம். ஆனால்
இப்போது இந்த அரசு அந்த நிலையை மாற்றி, அதை
ஏலம் விடுவோம் என்று சொல்லியிருக்கிறபோது உள்ளபடியே
இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அது மட்டும் அல்ல. கடந்த ஆட்சியிலே மது குடிப்பவர்கள்
பெர்மிட் வாங்க வேண்டும் என்று இருந்தது. இப்போது
இந்த அரசு அந்தப் பெர்மிட் விவகாரத்திலே என்ன முடிவு
எடுத்து இருக்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ளக் கடமைப்
பட்டிருக்கின்றேன். பெர்மிட் முறை இருந்த காரணத்தினாலே
போலீஸ்காரர்கள வேண்டாதவர்கள் மீது பாய்ந்து அவர்கள்
மீது வழக்குப் போடுவதற்கு ஒரு வாய்ப்பு இருந்தது, இருக்கிறது.
எனவே, பெர்மிட் முறை இன்னும் இருக்கிறதா அல்லது பெர்மிட்
முறை நீக்கப்படுமா என்பதைக்கூட நான் தெரிந்துகொள்ள
விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல. ஐ.எம்.எப்.எல். மதுபானங்கள்,
தமிழ்நாட்டிலே உற்பத்தியாகின்ற மதுபானங்கள் மற்ற மாநிலங்
களோடு ஒப்பிடுகின்றபோது, கர்நாடகம், கேரளா, ஆந்திரா
வுடன் ஒப்பிடுகின்றபோது, ஏறக்குறைய 25 சதவிகிதத்திலிருந்து
30 சதவிகிதம் வரை விலை குறைவாக இருக்கிறது. அதனாலே
இங்கே தயாரிக்கப்படுகின்ற மது வகைகள் வெளி மாநிலத்திற்குப்
போகக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிறது. எனவே, இந்த



1989 ஏப்ரல் 28] [திரு. ஜெ. அசேன்]

அரசு இந்தச் சில்லறை வியாபாரத்தில் தன்னுடைய விலையை
அதிகமாக்கி, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் லாபத்திலே
போவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய
விரும்புகிறேன். காரணம் 25 சதவிகிதத்திலிருந்து 35 சதவிகிதம்
வரையிலே விலை குறைவாக இருக்கிறது. எனவே, அடுத்த
மாநிலத்திலே இருக்கிறவர்கள் இங்கே வந்து வாங்கி அதனு
டைய லாபத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த
நிலையைப் போக்குவதற்கு இந்த அரசு முன் வர வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் காவல் துறையைப் பற்றிப் பேசுகின்றபோது,
பல்வேறுபட்ட கருத்துக்களை இங்கே சொன்னார்கள். என்னைப்
பொறுத்தவரையில், நேற்றைய தினம் மதிப்பிற்குரிய உறுப்பினர்
திரு. உகம்சந்த் அவர்கள் பேசுகின்றபோது, போலீஸ் அராஜகம்
கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது, நாங்கள் எல்லாம் தாக்கப்
பட்டுக் கொண்டிருக்கிறோம், ஆளும் கட்சிக்குக் கைக் கூலியாகப்
போலீஸ் மாறியிருக்கிறது என்று கூடச் சொன்னார்கள். என்
னைப் பொறுத்த வரையில் ஒன்று சொல்லிக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கின்றேன். நான் கூட ஒரு சிறு போராட்டத்தை
நடத்தினேன். காரணம், இன்றையதினம் தமிழக மக்க
ளுடைய ஒப்பற்ற தலைவராக விளங்கிக் கொண்டிருக்கிற
டாக்டர் கலைஞர் அவர்களுடைய குடும்பத்தினரைப் பற்றி
எதிர்க்கட்சியிலே இருக்கின்ற பொறுப்பு வாய்ந்த ஒருவர் தரக்
குறைவாக (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, உங்களுடைய ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் மூன்று மணித் துளிகளில் முடிக்க வேண்டும்.

திரு. ஜெ. அசேன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, என்னைப் போன்ற புதுமுகங்களுக்கு அதிக நேரம் தர
வேண்டும். பழையவர்களுக்கு எல்லாம் நீங்கள் மணியடிக்கின்ற
போது, அது ஆலய மணியாக இருக்கின்றது. எங்களுக்கெல்லாம்
அது அடக்குகின்ற மணியாக இருக்கின்றது. தயவு செய்து
எங்களுக்கு அதிக நேரம் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு மற்றொரு
முறை நீண்ட நேரம் கொடுத்து, நாங்கள் எல்லாம் ஓய்வாக
இருந்து கேட்கிறோம். இப்போது மூன்று மணித் துளிகள்
தான்.

திரு. ஜெ. அசேன் : அந்தப் பேராட்டம் நடத்தியபோது,
நமது முதல்வர் அவர்களுடைய குடும்பத்தைப்பற்றி தரக்
குறைவாக ஒருவர் பேசுகிறார். அதை எதிர்த்து நாங்கள்
ஊர்வலம் நடத்த வேண்டும் என்று சொல்லி காவல் துறை
யினரைக் கேட்கின்றபோது, அவர்கள் தடுக்கிறார்கள். அதை
யும் மீறி நான் நடத்த வேண்டும் என்று சொல்லி நடத்து
கிறேன். நடத்துகின்றபோது கிரைம் சப்-இன்ஸ்பெக்டர் வந்து
கேட்கிறார்,

(முற்பகல் 10–00)

எதற்காக ஊர்வலம் என்று கேட்கிறார் ; நான் சொல்
கிறேன், தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுடைய
குடும்பத்தைப் பற்றித் தரக் குறைவாகப் பேசியிருக்
கிறார்கள். அதைக்கண்டித்து என்று சொன்னால், அந்தக்
கிரைம் சப்-இன்ஸ்பெக்டர் மிகத் தவறான வார்த்தையைப்
பயன்படுத்தினார். இந்த அவையிலே நான் அதைச் சொல்ல
விரும்பவில்லை. அவர் சொல்லுகிறார், என்ன தமிழகத்தி
னுடைய முதலமைச்சர் குடும்பம் தரமான குடும்பமா என்ற
கேள்வியைக் கேட்கிறபோது என்னுடைய ரத்தம் கொதித்தது.
ஆக, காவல் துறையினர் பாரபட்சம் என்று சொல்லுகிறார்களே
ஆளுங்கட்சிக்குக் கூட அவர்கள் சாதகமாக நடந்து கொள்ள
வில்லை என்பதற்காக இதை நான் சொல்கிறேன்.

அது மட்டும் அல்ல, இங்கே பேசுகின்றபோது போலீஸ்
உடை பற்றிச் சொன்னார்கள். எங்களுடைய மாவட்டத்தைப்
பொறுத்த வரையில் ஒரு போலீஸ் உடை போட்டுக்கொண்டு
வந்தால் கால் ஒரு கலராக இருக்கிறது, கை ஒரு கலராக இருக்
கிறது. ஒரு உடையில் பல வித்தியாசங்கள் இருக்கின்றன.
எனவே நேற்றைய தினம் பேசிய மதிபபிற்குரிய அண்ணன் திரு.
தென்னரசு அவர்கள் சொன்னதைப் போல ஒரு உடை காக்கி
உடையாகவோ, அல்லது டார்க் புளு உடையாகவோ போலீஸ்
காரர்களுக்கு என்று நிர்ணயிக்க வேண்டும் என்று நான் மெத்தப்
பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த தீயணைப்பு வாகனத்தைப் பற்றி பேசுகிற
போது பல்வேறு இடங்களில் இருக்கின்ற தீயணைப்பு வண்டிகள்
பழைய வண்டிகளாக இருக்கின்றன. இன்னும்கூட என்னுடைய
ராணிப்பேட்டைப் பகுதியில் இருக்கின்ற வண்டிகள் ஐதர் அலி
காலத்து வண்டியாகத்தான் இருக்கின்றன. தீப்பிடித்து எரிகிறது
என்றால் அந்த வண்டி வருகிறது மணி ஆட்டி ஓரம் போ என்று



சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அந்த வண்டியிலிருந்து
வருகின்ற சவுண்டே மக்களை ஓரம் போ என்று சொல்கிற
அளவுக்கு இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் அங்கே
இருக்கின்ற இளைஞர்கள் கூட ஓரம் போ, ஓரம் போ, ருக்குமணி
வண்டி வருகிறது ஓரம் போ என்று சொல்லக் கூடிய அளவுக்கு
தான் தீயணைப்பு வண்டிகள் இருந்து கொண்டிருக்கின்றன.
எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கள் பகுதியில்
இருக்கின்ற தீயணைப்பு வண்டிகளை, புதிய வண்டிகளாக
மாற்றித் தரும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அங்கே இருக்கின்ற ஆம்புலன்ஸ் பயன் அற்ற ஆம்பு
லன்ஸாக இன்றைய தினம் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.
(மணியடிக்கப்பெற்றது). உதாரணத்திற்குச் சொல்ல வேண்
டும் என்றால் கடந்த 14 ஆம் தேதி புத்தாண்டு அன்று
என்னுடைய பகுதியில் ஒரு விபத்து ஏற்பட்டது. அம்பேத்கார்
பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்வதற்காகச் சென்ற மக்கள்
பாதிக்கப்பட்டு அவர்களுக்கு ஆக்சிடெண்டு ஏற்பட்டு அவர்கள்
மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நேரத்தில் அவர்களைக்
கொண்டு வந்த ஆம்புலன்ஸ் நிற்கிறது. அந்த ஆம்புலன்ஸி
லேயே மீண்டும் அவர்களை வேலூருக்கு எடுத்துச் செல்ல வேண்
டும் என்று சொல்கிறார்கள். எடுத்துச் செல்வதற்கு
ஆம்புலன்ஸ் கேட்ட போது பணம் கட்டினால்தான் வருவோம்
என்று சொல்கிறார்கள். ஆனால் இங்கே நீங்கள் தந்து இருக்
கின்ற குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது, ஏழைகளுக்கு
இலவசமாக ஆம்புலன்ஸ் பயன்படுத்தப்படும் என்று சொல்லி
இருக்கிறீர்கள். ஆனால் உண்மையாகவே தாழ்த்தப்பட்ட,
அரிசன மக்கள் பாதிக்கப்பட்டு பேசக் கூட முடியாத நிலையில்
இருந்து கொண்டிருக்கிறவர்களை வேலூர் மருத்துவமனைக்கு
எடுத்துச் செல்வதற்கு அந்த அம்புலன்ஸை நான் கேட்ட
நேரத்தில் பணம் வேண்டும் என்று கேட்டார்கள். நானே
பணத்தைத் தந்தேன். அதற்குப் பிறகுதான் வண்டி எடுக்கப்
பட்டது என்பதை இந்தப் பேரவையினுடைய கவனத்திற்குக்
கொண்டு வந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு, இறந்து விட்ட
மக்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஏதாவது
பணம் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்க கடமைப்
பட்டிருக்கிறேன். எனவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த
மானியக் கோரிக்கையை வரவேற்று விடைபெறுகிறேன், நன்றி
வணக்கம்.

திரு. கா. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத்
தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்தக் காவல் துறை
மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை
எடுத்து வைக்க விரும்புகிறேன். நேற்றைய தினம் மானியக்
கோரிக்கையின் மீதான பேச்சில் காவல் துறை மானியக் கோரிக்கை
மாதிரி அவ்வளவு விறுவிறுப்பும் வேகமும் இல்லை. ஆனால்

[திரு. கோ. பூவராகன்] [1989 ஏப்ரல் 28

இன்றையதினம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற நம்முடைய முதல
மைச்சர், 1962-லிருந்து 1967 வரை எதிர் வரிசையில் இருந்து
அன்றைய தினம் காவல்துறை பற்றிப் பேசிய பேச்சு,
போல் இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.
ஸ்டாலின் அவர்கள் பேசிய பேச்சு நினைவுபடுத்துகின்ற அளவில்
அமைந்தது என்று பார்க்கின்றபோது மிக்க மகிழ்ச்சி. இன்றைய
தினம் பேச்சு ஒரு விறுவிறுப்பை எட்டி இருக்கிறது. இந்த காவல்
துறை கடமை உணர்வோடு செயல்படவில்லை. நல்லமுறையில்
நாம் எல்லாம் பாராட்டக் கூடிய அளவுக்கு அவர்களுடைய
போக்கு இல்லை என்று எல்லோரும் எடுத்து வைத்தார்கள்.
குறிப்பாக, வளருகின்ற சமுதாயத்தில் அரசியல் கட்சிகள் ஏரா ள
மாக வளர்ந்து விட்டன. தொழிற்சாலைகள் ஏராளமாக
வளர்ந்து விட்டன. ஜனத் தொகை ஏராளமாக வளர்ந்து விட்
டது. இதை எல்லாம் பார்க்கின்றபோது இந்தக் காவல் துறை
அதிகமாக வளரவில்லை. அதற்கு ஒதுக்கியிருக்கின்ற பணமும்
அதிகமாக இல்லை. குறிப்பாகக் கடந்த காலங்களிலே அதிகாரி
கள் அதிகமாக ஆகியிருக்கிறார்கள், காவலர்கள் அதிகமாக
ஆகவில்லை. இன்றைக்கு மூன்று டைரக்டர் ஜெனரல்கள்
நம்முடைய மாநிலத்திலே இருக்கிறார்கள். அவர்களுக்கு,
யார் யாருக்கெல்லாம் என்ன வேலை என்று தெரியாது. ஐ. ஜி.க்
கள் ஏராளமாக இருக்கிறார்கள். யாருக்காவது ஒருவருக்கு பதவி
உயர்வு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் உடனே டி.ஐ.ஜி.க்
கள் நிறைய வந்து விடுகிறார்கள். அதாவது இந்த வாரியங்கள்
வந்த மாதிரி, ஐ. ஜி.க்கள், டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்
பதவிகள் உண்டாக்கப்பட்டு விட்டன. ஆனால் அந்த அளவிற்குக்
காவல் துறையின் கீழ் மட்டத்திலே உள்ளவர்களுக்குப் பதவி
உயர்வு கொடுத்து இருக்கின்றார்களா? அவர்களுடைய எண்
ணிக்கை உயர்ந்து இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை.
ஏராளமான ஐ. ஜி.க்களும், டி.ஐ.ஜி.க்களும் இருக்கின்ற காரணத்
தினால், குறிப்பாக அவர்களுக்குத் தகுந்த வேலை இல்லாத
காரணத்தினால் அவர்களுடைய வேலைத் திறனை நாம் சரியான
முறையிலே கண்டுகொள்ள முடியாத நிலையிலே இருக்கிறோம்
என்பதை நான் இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன்.

அதே போன்று, போக்குவரத்துத் துறையும் இருக்கிறது.
அந்தப் போக்குவரத்துத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகளை
இன்றைய தினம் அதிக அளவிலே பயன்படுத்தக்கூடிய அள
விற்கு நாம் ஏற்பாடுகளைச் செய்யவில்லை. பெரிய நகரங்
களிலெல்லாம் இன்றைய தினம் போக்குவரத்து நெரிசல் இருக்கி
றது. அந்த நெரிசலைத் தவிர்ப்பதற்கு எத்தனை காவலர்
கள் இருக்கிறார்கள் என்று பார்த்தால், மிகக் குறைவான அள
விலே தான் இருக்கிறார்கள். நேற்றைய தினம் கூட மாண்புமிகு
உறுப்பினர் ஒருவர், நம்முடைய போலீஸ் கமிஷனர் அவர்கள்



1989 ஏப்ரல் 28] [திரு. கோ. பூவராகன்]

போகின்றபோது படாடோபத்தோடு போகின்றார் என்று சொன்னார். ஏதோ அந்த சமயத்திலாவது இந்தப் போக்குவரத்துத் துறையிலே நின்று கொண்டிருக்கின்ற அந்தக் காவலர்கள், அவர்கள் ஒன்றாகக் கூடி நின்று பேசுவதை விட்டுவிட்டு கமிஷனர் வருவதை அறிந்து அவர்களுடைய பணியினைச் செய்வதற்கு அது பயனுள்ளதாக இருக்கிறது.

இந்தப் போலீஸ் இலாக்காவிலே பணிபுரிகின்றவர்களுக்கு வாரந் தோறும் அல்லது மாதந் தோறும் ஏதாவது எக்ஸர்ஸைஸ் கொடுக்கப்படுகிறதா ? அவர்களைத் தேர்வு செய்து எடுக்கின்றபோது எவ்வாறு அவர்கள் அந்தத் தேர்விலே பார்த்து எடுக்கப் படுகின்றார்கள்? உயரம், அவர்களுடைய உடல் கட்டுமானம், படித்த படிப்பு, அவர்களுடைய தோற்றம் இவற்றை எல்லாம் பார்த்து எடுக்கின்றார்களா என்றால், கடந்த காலங்களிலே அவ்வாறு எடுக்கப்படவில்லை. சிபாரிசுகள்தான் அதிகமாக இருந்திருக்கின்றன என்பதை நாம் பார்க்கின்றபோது, அந்தத் துறை எவ்வாறு செயல்பட்டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒருவர் ஒரு சமயம் இந்தத் துறைக்கு, தேர்வுக்குச் சென்றபோது, அப்போது ஐ.ஜி.யாக இருந்தவர், தேர்வுக்குச் சென்றவர், தோற்றத்திலே நன்றாக இருந்தார் ; படிப்பைப் பொறுத்த வரைக்கும் மிக உயர்ந்த படிப்பு படித்து இருந்தார். இருந்தாலும் இந்த போலீஸ் இலாக்காவுக்கு அவர் லாயக்கு இல்லை என்று எழுதிவிட்டார். இதை என்னிடம் ஒரு முறை சொன்னார்கள். பார்த்தால் தோற்றத்திலே அழகாக இருக்கிறார் ; நன்றாக படித்து இருக்கிறார் ; முதல் வகுப்பிலே தேர்வு பெற்று இருக்கிறார் ; ஆனால் மிகவும் சாதுவாக இருக்கிறார் ; அந்தச் சாதுவான தோற்றம் உடையவர்கள் போலீஸ் இலாக்காவுக்கு லாயக்கில்லை என்று நான் எழுதி விட்டேன் என்று அன்றைய தினம் இருந்தவர் சொன்னார்.

அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற உடைகளைப் பற்றி எல்லாம் இங்கே சொன்னார்கள். இந்த உடைகளைப் பற்றிச் சொல்லவேண்டுமென்றால், இப்போதுள்ளவர்களுக்கு இரண்டு உடை போட வேண்டும் போல் இருக்கிறது. கணபதி மாதிரி சில பேர் இருக்கிறார்கள். பெரிய அதிகாரிகள் கூட அப்படி இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் முருகன் தோற்றத்திலே இருந்தால் பரவாயில்லை. எப்படி அவர்களுக்கு அந்த உருவம் வந்தது என்று தெரியவில்லை. போலீஸ் துறையிலே அதற்கு என்று ஏதாவது நல்லமுறையிலே அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டதா.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் கணபதியா அல்லது பிள்ளையார் கணபதியா?

திரு. கோ. பூவராகன் : உறுப்பினர் கணபதியைச் சொல்ல வில்லை. பிள்ளையார் கணபதியைத்தான் [சொன்னேன். சுப்பிரமணிய சுவாமியைவிட ஒல்லியாக இருக்கின்றவர்கள் கூட இருக்கிறார்கள். நான் சொல்வது பிள்ளையார் கணபதியைத் தான்; படத்திலே எல்லாம் பார்த்திருக்கிறோமே அவரைத் தான்; நேரடியாக யாரும் பார்க்கவில்லை. படத்திலே பார்க் கின்ற பிள்ளையாரை விட ரொம்ப அதிகமான தோற்றம் உடையவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். உயர் அதிகாரிகளாக இருக்கின்றவர்கள் கூட அவ்வாறு இருக்கிறார்கள். இதற்கு எல்லாம் என்ன பயிற்சி அளிக்கப்படுகின்றது; இம்மாதிரித் தோற் றத்தை உருவாக்கிக் கொள்வதற்கு என்ன பயிற்சி அளிக்கப்படு கிறது என்பதை முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவிப்பார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். அவர் களுக்கு ஒரு கட்டுப்பாடு, நியதி வேண்டும். காலப் போக்கிலே பார்க்கின்ற போது இந்தப் பயிற்சி எல்லாம் குறைந்து விட்டது. அந்த மாதிரி பயிற்சிகள் எல்லாம் குறைந்து விட்டதால், எப் போதாவது ஒரு சமயத்திலே, அதாவது அரசியல் கட்சிகள் போராட்டங்கள் நடத்துகின்றபோது, தொழிலாளர்கள் போராட்டங்கள் நடத்துகின்றபோதுதான் அவர்கள் பயன் படுத்தப்படுகின்றார்களே தவிர, உண்மையான நிலையிலே அவர் களுக்குப் பயிற்சிகள் இல்லையென்று நான் இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-10].

முன்பெல்லாம், இந்த மானியக் கோரிக்கை வருகின்றபோது எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்றவர்களுக்கு நிறைய கடிதங் கள் வரும். எங்கள் கோரிக்கைகளெல்லாம் இவ்வாறு இருக் கின்றன. பேட்டா போதவில்லை; எங்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் போதவில்லை; சலவைக்காக கொடுக்கின்ற மானியம் போதவில்லை என்றெல்லாம் குறைபட்டு கடிதங்கள் வரும். ஆனால் இப்போது ஒரு கடிதம் கூட வரவில்லை. அதில் இருந்து நாங்கள் அறிவது, அவர்களுக்கு குறைகள் இல்லாமல் நன்றாக இருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கின்றபோது நம் எல்லோருக்கும் மகிழ்ச்சிதான். இருந்தாலும் இந்த சபையிலே பேசுகின்ற போது பலர் குறைபட்டுக் கொண்டார்கள். அவர்கள் எல்லாம் வேறு துறையிலே பெரும் பணக்காரர் களாக இருக்கிறார்கள். மண்ணாசை, பெண்ணாசை, பொன் னாசை பிடித்தவர்கள் என்று சொல்வார்கள். அப்படி ஆகி விட்டார்கள். இன்றைய தினம் பலருக்கு பல வீடுகள் இருக்கின் றன. பலருக்கு சொத்துக்கள் இருக்கின்றன என்று சொன்னார் கள் இங்கே. அதை எல்லாம் விசாரிக்க ஒரு கமிஷன் போட வேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார் கள். என்னைப் பொறுத்த வரையில் அது தேவையில்லை. மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றாகத் தெரியும். அவர்கள்



முதலமைச்சராக இருக்கிற போதும், இல்லாத போதும் போலீஸ் இலாகாவுடன் நெருங்கிய தொடர்பு உண்டு. போலீஸ் இடர்ப்பாடுகள் என்ன என்ன என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பலருடைய பெயர்களைச் சொல்லி அழைக்கக்கூடிய அளவுக்கு ஞாபக சக்தி உடையவர்கள். எந்த எந்தத் துறையிலே அவர்கள் எப்படி எப்படி ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

நான் பொதுவாக போலீஸ் இலாக் காமீது குறை சொல்பவன் அல்ல. ஆனால் இன்றைக்குச் சொல்லக் கூடிய சந்தர்ப்பங்கள் பல இருக்கின்றன. போலீஸ் இலாகாக்வில் டி. ஜி. பி. ஆக இருந்த ஒருவருடைய மனைவி பெயரில் ரெவின்யூ இலாகாவுக்குச் சொந்த மான 75 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது; செங்கற்பட்டு மாவட்டத்தில் பெருங்களத்தூரில் அந்த நிலம் கொடுக்கப்பட்டு இருப்பதாகச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் நீங்கள் குறிப்பிடுவதை எவ்வளவு உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்பது கண்ணாடி போடாததால் உங்களுக்குத் தெரியாது.

திரு. கோ. பூவராகன் : கண்ணாடி போட்டால் சில நேரங் களில் மாற்றி மாற்றிக் காட்டும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அதனால் நான் போடவில்லை. அந்த டி. ஜி. பி. தற்போது ஓய்வு பெற்றிருக்கிறார். செங்கற்பட்டு மாவட்டத்தில் பெருங் களத்தூரில் 75 ஏக்கர் நிலம் அவருடைய மனைவி பெயரில் ஒரு பொதுக் காரியத்திற்கு என்று வாங்கி இன்றைய தினம் மனை களாகப் பிரித்துவிற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல் கிறார்கள்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : தலைவர் அவர்களே, பொறுப்பு உணர்ச்சியோடு பேசி பழக்கப்பட்ட எனது அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் அந்த நபரின் பெயரையும் சொல்லி, இடத்தையும் சொல்லி, எங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியினை அவர்களுக்கு நான் அளிக்கிறேன்.

திரு. கோ. பூவராகன் : செங்கற்பட்டு மாவட்டத்தில் பெருங்களத்தூர் என்ற இடத்தில் கொடுத்திருக்கிறார்கள். அந்த டி. ஜி. பி.-க்குக் கொடுக்கவில்லை; அவருடைய மனைவி பெயரில் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய மனைவி பெயர் எனக்கு நினைவில்லை. தகவலைக் கொடுத்திருக்கிறேன். யார், யார் என்று பார்த்துக் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு உங் களுக்கு இருக்கிறது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவரவர்களே, நான் தவறாகச் சொல்லவில்லை. கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு என்பதை ஏற்றுக்கொள்கிறேன். அரசுக்கு உதவும் கடமை உங்களுக்கு உண்டு என்பதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது.

திரு. கோ. பூவராகன்: அவருடைய பெயரை இங்கே தெரிவித்தால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் என்னை அனுமதிக்க மாட்டார்கள். வேண்டுமென்றால் நான் தனியாகத் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெயரை அறையில் வந்து கொடுங்கள்; இங்கே வேண்டாம்.

திரு. கோ. பூவராகன்: பேரவைத் தலைவர் அவர்களே, பெயரை வெளியிடத் தயாராக இருக்கிறேன். அறையில் வந்து கொடுக்கச் சொல்கிறார்கள்; அங்கே வந்து கொடுக்கிறேன். போலீஸ் இலாக்காவைப்பற்றிய செய்திகள் தொடர்ந்து பத்திரிகைகளில் வந்தவண்ணம் இருக்கின்றன. அவற்றைஎல்லாம் இந்த அவையில் எடுத்து வைக்கக் கஷ்டமாக இருக்கிறது. காவல் துறை பற்றி எப்போதும் நான் பெருமையாகப் பேசுவது உண்டு. ஆனால் இன்றைக்குப் போலீஸ் எக்செஸஸ் என்று சொல்லுகின்ற அத்துமீறிய போக்கு அதிகமாகி விட்டது. அத்துமீறிய அதிகாரங்களைப் பயன்படுத்தி தவறான முறையில் ஏராளமாக சொத்துச் சேர்த்திருக்கிறார்கள்; பணம் சேர்த்திருக்கிறார்கள் என்று நான் இந்த மன்றத்தில் சொல்லவிரும்பவில்லை. ஆனால் இன்றைய தினம் அவ்வாறு சொல்லும்படியாக வைத்துவிட்டார்கள்.

நம்முடைய காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இன்றைய தினம் பாரதப் பிரதமருடைய பாதுகாப்புக்குச் செல்கிறார்கள். இதை எல்லாம் ஏன் பாராட்டக் கூடாது. எத்தனையோ மாநிலங்களில் போலீஸ் இலாக்கா இருக்கிறது. அவர்களை எல்லாம் அழைக்காமல் தென்னாட்டிலிருந்து, குறிப்பாகத் தமிழ்நாட்டிலிருந்து பாதுகாப்புக்கு அழைத்திருக்கிறார்கள். காரணம் என்ன? கடமை உணர்ச்சியோடு நல்ல முறையில் செயலாற்றக் கூடியவர்கள் என்பதால் அழைத்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது நமக்குப் பெருமையாக இருக்கிறது. அந்தப் பெருமைகளைச் சேர்த்து நாம் அதிக அளவில் பாராட்ட முடியாமல் இருப்பதற்குக் காரணம் சாராயம். சாராயத்தை அவர்களிடம் விடக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சாராயத்தை விட்டுவிடுகின்ற வழிமுறை இருக்கிறதா என்றால் இருக்கிறது; முயன்றால் முடியும். இன்றைக்குத் திடீர் சாராயம் உற்பத்தி செய்வதற்கான முறைகளை எல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு ''கேன்'' இருக்கிறது என்று சொல்கிறார்கள்.



அதை ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி, அதிலே போட்டு விட்டால் சாராயம் வருகிறது என்று சொல்கிறார்கள். திடீர் ரசம், திடீர் சாம்பார் போல இப்போது திடீர் சாராயத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறபோது, காவல் துறையில் இந்த மாதிரி பயிற்சி பெற்று, அதிலே கை தேர்ந்தவர்கள் என்ற முறையில் செயலாற்றி, நல்ல முறையில் கண்டுபிடித்து, இந்த இலாக்காவுக்கு நல்ல பெயரை நிலைநாட்டி இருக்கிறார்களா என்று பார்க்கும்போது இல்லை என்றே சொல்லலாம். சரியான முறையில் நடக்க முடியுமா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது நாம் பூரண மதுவிலக்கை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அண்டை மாநிலங்களில் அவ்வாறு எல்லாம் இருக்கிறது. ஓரளவிற்கு நாம் வைத்திருக்கிறோம். மதுபானங்கள் தயாரிக்கக் கூடிய தொழிற்சாலைகளிலே இரண்டை நாம் எடுத்துக் கொண்டு மீதி ஐந்து மதுபானம் தயாரிக்கின்ற தொழிற்சாலைகளை அவர்களிடத்திலே ஒப்படைக்கின்றோம் என்று சொல்கிறோம். இந்த சாராயம் தயாரிப்பதற்கு பெரிய நிபுணத்துவம் எதுவும் தேவை இல்லை. அதிக அளவில் கைதேர்ந்தவர்கள் தேர்ச்சிபெற்றவர்கள் தான் இதற்கு வேண்டும் என்ற அவசியம் இல்லை. எனவே மதுபானம் தயாரிக்கின்ற அத்தனை தொழிற்சாலைகளையும் நாம் எடுத்துக்கொண்டால் அரசுக்கு ஏராளமான வருமானம் வரும். அப்படி வருகின்ற பணத்தை வைத்து நல்லவிதமாக நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த முடியும். கன்ட்ரோலும் நம் பக்கம் இருக்கும். வரி ஏய்ப்பதற்கும் வழி இருக்காது. அடிக்கடி வந்து அவ்வாறு வரியை மாற்றுங்கள், இவ்வாறு வரியை மாற்றுங்கள், நீங்கள் இப்படி மாற்றியிருப்பதால் எங்களுக்கு அதிக வருமானம் இல்லை அதனால் போராட்டம் நடத்துகிறோம் என்றெல்லாம் சொல்ல முடியாது. எனவே இந்த மதுபானம் தயாரிக்கின்ற அத்தனை தொழிற்சாலைகளையும் அரசாங்கமே எடுத்துக் கொண்டால் அவற்றைத் தவிர்க்க முடியும்.

சாராயத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் அதிலே ஒன்றும் பெரிய சிரமம் இல்லை. அதற்கு 2 ரூபாய் 3 ரூபாய்தான் செலவாகும் என்று சொல்கிறார்கள். பாட்டிலுக்கு என்றுகூட அதிகமான செலவு ஏற்படாது. இப்போதெல்லாம் நிறைய டிஸ்போஸபில் பாட்டில்கள் வந்திருக்கின்றன. கண்ணாடி பாட்டில்கள் எல்லாம் தேவையில்லை. டிஸ்போஸபில் பாட்டில்களுக்கு ஒரு ரூபாய் அல்லது 75 காசு அல்லது 65 காசு என்றுதான் ஆகிறது என்று சொல்கிறார்கள். எனவே மொத்தமாகப் பார்த்தால் எல்லாம் அடக்கம் 3 ரூபாய், 4 ரூபாய், 5 ரூபாய் என்ற அளவுக்குள்ளே அதைத் தயாரித்துக் கொள்ளலாம். அதிலே எவ்வளவு தண்ணீர் இருக்கிறதோ அவ்வளவுக்கு இலாபம். எனவே இதற்காக ஒன்றும் பெரிய நிபுணத்துவம் தேவையில்லை. எனவே சாராயத் தொழிற்சாலைகளை முழுக்க, முழுக்க நாம் எடுத்துக் கொள்வதன் மூலம் அவற்றை நம்முடைய கன்ட்ரோலுக்குள் கொண்டு வருவதுடன், அதிகமான வருவாயையும் தேடிக்

கொள்ள முடியும். அப்படி வருவாய் தேடிக்கொள்வதற்காக மட்டும் நான் சொல்லவில்லை. ஒரு தனிப்பட்ட இலாக்காவிற்கு ஒரு பெரிய இழுக்கு வருவதைத் தவிர்க்கின்ற ஒரு சந்தர்ப்பம் ஏற்படும் என்பதால் தான் இதை நான் சொல்கிறேன். என்ன தான் தனியார்த் துறையிலே ஓரளவுக்கு மதுபானம் தயாரிக்கின்ற தொழிற்சாலைகளைக் கொடுத்தாலும் ஏற்கெனவே நன்றாகப் பழக்கப்பட்டவர்கள் அந்த முதலாளிகள். எனவே அதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். முன்னாலே இருந்த அரசாட்சி நடைபெற்றபோது அவர்கள் எல்லாம் என்ன வேலை செய்தார்கள் என்பதும் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பொறுத்தவரையில் அதற்கு ஒரு தனிப்பட்ட ஒருவரிடம் சென்று அந்த இடங்களுக்குப் போய் தான் அவர்கள் இன்றையதினம் என்னென்ன வேலைகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருந்தார்கள். அப்படிப் பழக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அதனால் இப்போது திடீரென்று ஒரு அரசாங்கம் மாறி ஒரு நல்ல ஆட்சி ஏற்பட்டு இருக்கிறது. எனவே இவற்றைச் சீர்திருத்துவதற்குரிய வகையில் ஏன் இப்படிப்பட்ட நல்ல முயற்சிகளை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, மொலாஸஸ் நிறைய தயாரிக்கப்படுகிறது. இதை சாராயத்திற்காக மட்டுமல்ல, மாட்டுத் தீவனங்களுக்கும் பயன்படுத்துகிறார்கள். நல்லெண்ணெய் தயாரிக்கப் பயன்படுத்துகிறார்கள். ரப்பர் எண்ணெய் தயாரிக்கப் பயன்படுத்துகிறார்கள். இப்படிப் பல காரியங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். முழுமையாக அவற்றைப் பயன்படுத்தாவிட்டாலும் கூட, வெளி நாடுகளில் அதற்கு நல்ல கிராக்கி இருப்பதால் மொலாஸஸ்—ஆக அனுப்பாமல் " இன்டஸ்ட்ரியல் ஆல்கஹால்-ஆக " தயாரித்து வெளிநாட்டிற்கு அனுப்பினால் அன்னியச் செலாவணி நமக்குக் கிடைக்கும். (மணியடிக்கப்பெற்றது) எனவே அந்த வகையில் அன்னியச் செலாவணியைப் பெருக்க முயற்சி எடுக்க வேண்டும்.

மொலாஸஸ்-ஆக இருந்தாலும் சரி, சாராயமாக இருந்தாலும் சரி, மது தயாரிக்கின்ற எந்தத் தொழிற்சாலைகளாக இருந்தாலும் அவை அனைத்தையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், இதில் முதலீடுகள் அதிகம் தேவையில்லை. அதிகம் பயிற்சி பெற்றவர்களும் தேவையில்லை. எனவே, இலகுவாக சிரமம் இல்லாமல் வருமானம் வரக்கூடிய இந்தத் தொழிற்சாலைகளை ஏன் நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படிப்படியாக எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் துறையில் மட்டும் படிப்படியாகப் போனால் அரசுக்குக் கெட்ட பெயர்வரக் கூடிய சந்தர்ப்பம் பின்னாலே ஏற்படும். நாம் எவ்வளவுதான்





நேர்மையாக நல்லவிதமாக நடந்தாலும், இதை அதற்காக செய்துவிட்டீர்கள், இதற்காகச் செய்துவிட்டீர்கள் என்று குறை சொல்லக்கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள். எனவே அரசே எடுத்துக் கொண்டால் அந்த நிலைமைகளைத் தவிர்க்க ஒரு சந்தர்ப்பம் ஏற்படும்.

கடைகளில் 10 ரூபாய், 8 ரூபாய் என்று வெளி மார்க்கெட்டில் கள்ளச்சாராயம் விற்கின்ற விலையை விடக் குறைந்த விலைக்கு இதனை விற்கவேண்டும். மேலும் இதற்குக் கடைகளே தேவையில்லை. சோடா விற்கிற மாதிரி சுலபமாக இதைக் கொடுத்து விட வேண்டும். தயாரிக்கும் இடத்திலேயே இதற்கு விலை நிர்ணயித்துவிட வேண்டும். சாராயத்திற்கு இதுதான் விலை, இதை யார் வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் எடுத்து விற்கலாம் என்று சொல்லிவிட்டால் போலீஸ்காரர்கள் சென்று அவர்களைப் பிடிக்கக்கூடிய சந்தர்ப்பமே ஏற்படாது. வெளி நாடுகளில் என்ன செய்கிறார்கள்? மாண்புமிகு அமைச்சர்கள் குறிப்பாக நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் எல்லாம் வெளிநாடுகளுக்குச் சென்றிருப்பார்கள். அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பல இடங்களில் பீர் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு காயினைப் போட்டால் பீர் பாட்டில் அப்படியே கீழே வந்து விழுகிறது. அவர்கள் பருகிவிட்டுப் போகிறார்கள். அதை யாரும் லட்சியம் செய்வது கிடையாது. அந்தமாதிரி முறையையே நாமும் கையாள வேண்டும் என்று சொல்லவில்லை. அதிலே வருவாய் வருகின்ற நிலைமைகள் குறித்துப் பார்க்கின்றபோது சங்கடம் இல்லாமல் செய்வதற்கு ஒரு சந்தர்ப்பம் இருகிறது. இது குறித்து அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[ முற்பகல் 10-20 ]

இந்த போக்குவரத்து காவல் துறையிலே இருக்கின்றவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். நம்முடைய சென்னை நகரத்திலே இன்றையதினம் சைக்கிள்கள். இரண்டு சக்கர வாகனங்கள், மூன்று சக்கர வாகனங்கள், லாரிகள் பஸ்கள், கட்டை வண்டிகள் இதெல்லாம் ஏராளமாகப் போய்க் கொண்டிருக்கின்றன. நாம் அதையெல்லாம் ஒரு ஒழுங்குமுறைப் படுத்த வேண்டும். அதிலேகூட, கவர்னர் ஆட்சியிலே பார்க்கும்போது சைக்கிளிலே லைட் போட்டுக் கொண்டுதான் போக வேண்டும் என்று முன்னாலே அறிவித்துவிட்டு பின்னாலே அதிலே சங்கடம் இருக்கின்றது என்று தளர்த்தி விட்டார்கள்.

ஆம்பத்திலே கவர்னர் ஆட்சியிலே பெரிய விளம்பரம் நிறைய இருந்தது. ஆனால் விளம்பரத்திற்கு தகுந்தமாதிரி விளைவுகள் இல்லை. அதற்குக் காரணம் குறுக்கீடுகள். நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். போலீஸ் இலாகாவிலே குறுக்கீடுகள்

இல்லாமல் இருப்பது மிகவும் நல்லது. இந்த இரண்டு நிமிடங்கள் போதாது, பேரவைத் தலைவர் அவர்களே. (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்குத் தங்களுக்கு ஒதுக்கப்பட்டிருப்பது 20 மணித் துளிகள். இப்போது 18 மணித் துளிகள் ஆகின்றன. கண்டிப்பாக இந்த நேரத்தைக் கடைப் பிடிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே இப்போது நான் சொல்லிய தகவல்கள் எல்லாம் அரசாங்கத்திற்கு உதவியாகவும், வருமானம் வரக்கூடிய தகவல்கள் ஆகவும் இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் உரிய நேரத்தில் முடித்தால்தான் உண்மையிலேயே அரசாங்கத்துக்கு உதவியாக இருக்கும். பதில் சொல்கின்ற முதல்வர் அவர்களுக்கும் உதவியாக இருக்கும்.

திரு. கோ. பூவராகன்: மணியடித்து, மணியடித்து ஒவ்வொரு நிமிடமாகப் போய்விடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே மணியடிக்கக் கூடிய தேவையை நீங்கள் ஏற்படுத்தாமல் இருந்தால் நான் மணியடிக்காமலே இருப்பேன். நீங்கள் கடிகாரத்தை நேரே பார்த்துப் பேசலாம்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய சென்னை நகரத்திலே வளர்ந்து வருகின்ற வாகனங்கள் எண்ணிக்கையையொட்டி, போராட்டம் நடக்கிறதையொட்டி, மற்றும் பல நிகழ்ச்சிகளையொட்டி, போக்குவரத்து வசதிகளுக்கு அதிக கவனம் காட்ட வேண்டும். அதை ஒரு முறைப்படுத்த வேண்டும். என்னென்ன காலங்களிலே லாரிகள் இந்த நகரத்திற்கு வரவேண்டும். என்னென்ன நேரத்திலே வரக்கூடாது என்ற நியதியை ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதுபோன்று சைக்கிள், வேகமாகப் போகின்ற துரிதமாக போகின்ற கார் போகின்ற இடத்திலே சைக்கிள் போய்க்கொண்டிருக்கிறது. அதையெல்லாம் தவிர்ப்பதற்கு ஒரு வழிவகை காண வேண்டும். இப்போது ஒவ்வொரு நிலையிலும் நாம் பார்க்கிறோம். போக்குவரத்துக்கு இடைஞ்சல் வருகிறது என்று சொன்னால், ஒருவர் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போய் சேர்வதற்கு குறைந்தபட்சம் 2 மணி நேரம் 3 மணி நேரம் ஆகக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு அந்த இலாகாவிற்கு அதிக அளவிலே வசதிகள் அளிக்கப்பட வேண்டும். இன்



றைய தினம் எல்லா இடங்களிலும்கூட, நவீன கருவிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. காவல் துறைக்கு. இன்னும் நவீன கருவிகள் வந்து கொண்டிருக்கின்றன. அதைப் பயன் படுத்தக் கூடிய அளவுக்கு போலீஸ் இலாகாவிற்கு அதிகப் பணம் ஒதுக்கவேண்டும் என்று இந்த குறிப்பிலே சொல்லியிருக்கின்றார்கள். இதுபோதாது. தாராளமாகக் கொடுக்கவேண்டும். அதிக அளவிலே ஒதுக்குவதனாலே தவறு இல்லை. இன்றைய தினம் 70 ஆயிரம் காவலர்கள் தான் இருக்கின்றார்கள். மொத்தத்திலே. அதிகாரிகளிலிருந்து காவலர் வரையிலே இருக்கின்றார்கள். எத்தனை கோடி மக்கள் நம்முடைய தமிழகத்திலே வாழ்கிறோம் என்று பார்க்கும்போது அதற்காக செலவிடுகின்ற பணமும் இந்த காரியத்தை ஆற்றுகின்ற பொறுப்பிலே உள்ளவர்கள் எண்ணிக்கையும் மிகவும் குறைவாகவே இருக்கிறது. அதாவது நம்முடைய பொருள்கள் பாதுகாக்கப்படவேண்டும், நம்முடைய உயிர் பாதுகாக்கப்பட வேண்டும், நம்முடைய நாட்டிலே இருக்கின்ற இந்த கட்சிகள் எல்லாம் செய்கின்ற காரியங்களை முறையாக கட்டுப்படுத்த வேண்டும். அதே போன்று ஒவ்வொரு ஆட்சியும் சிரமம் இல்லாமல் நடைபெறுவதற்கு காவல் துறை பயன்படுகின்ற அளவிலே இருப்பதாலே, காவல் துறைக்கு அதிக கவனம் காட்டவேண்டும் என்று இந்த சமயத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று இந்த பையர் சர்வீஸ். இன்றைய தினம் 1986-87-ஆம் ஆண்டு ஆடிட் அறிக்கையைப் படிப்பீர்களேயானால், அதிலே பணம் பெற்றிருக்கிறார்கள். இந்த காரியத்திற்கு என்று பணம் பெற்று அந்த காரியத்தைச் செய்ய இல்லை. திரும்பவும் பணம் வாங்கியிருக்கின்றார்கள். அதிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். சென்றதடவை வாங்கிய பணமேசரியாக செலவிடப்படவில்லை, திரும்பவும் எதற்கு பணம் வேண்டும் ஏன் கொடுங்கள் என்று கேட்கிறீர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆண்டுதோறும் பணம் வாங்குகின்றார்கள். டியூப், டிப்புகள் இதுபோன்ற காரியங்களிலேகூட கவனம் காட்டாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. வண்டிகள் பழுதடைந்தால், சரியான முறையிலே குறித்த காலத்திலே பழுதுபார்த்து உரிய நேரத்திலே தேவைப்படுகின்றபோது பயன்படுத்துகின்ற அளவுக்கு அந்த இலாகா இல்லை. விருத்தாச்சலத்திலே இருக்கின்ற ஒரு வண்டி, அவர்கள் எல்லோரும் சொல்வது போன்று, அப்படித்தான் இருக்கிறது. இந்த இலாகாவிலே இரண்டு, மூன்று புது வண்டிகள் யாருக்கும் வழங்கப்படாமல் அல்லாட் செய்யப்படாமல் இருக்கின்றன என்று அறிந்து, அந்த இலாகா சம்பந்தப்பட்ட டைரக்டருக்கு நான் சொல்லியிருந்தேன். இந்தமாதிரி ஒரு வண்டி பழுதடைந்திருக்கிறது, எங்கள் ஊரிலே, நீங்கள் வண்டி எல்லோருக்கும் கொடுக்கிறீர்கள்.

அந்த வண்டியில் ஒன்று விருத்தாசலத்திற்குக் கொடுத்தால் நல்லது என்று கேட்டேன். இப்போதுகூட சமீபத்திலே அடிக்கடி தீ விபத்துகள் ஏற்படுகின்றன. என்பதால் அது பயன்படும் என்று சொல்லும்போது, அவர்கள் அதை கவனமாக குறித்து வைத்துக் கொண்டு ஒருவரை அனுப்பினார்கள். அவர் அந்த வண்டி சரியாக இருக்கிறது என்று சர்டிபிகேட் வாங்கி வந்துவிட்டார். நான் கேட்டது வண்டியைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக. ஓடாத வண்டி ஓடுகிறது என்று சொல்லி கையொப்பம் வாங்கிவிட்டு அந்த வண்டி நன்றாக ஓடிக்கொண்டிருக்கிறது என்று திருப்திபடக்கூடிய அளவுக்கு சொல்கின்றார்கள் என்று சொன்னால் இந்த இலாகா எவ்வாறு செயல்படுகிறது என்பதை நீங்கள் எண்ணிப பார்த்துக் கொள்ளவேண்டும்.

எனது சொந்த போக்குவரத்துக்காக நான் வண்டி கேட்க வில்லை. ஊரிலுள்ள மக்கள் பயன்படுத்தத்தான் கேட்டேன் அங்கே நிறைய தீ விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. மேலும் அது நகராட்சி ஆக்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, அங்கே மக்கள் தொகையும் அதிகரித்திருக்கிறது. இந்த நிலையில் அங்கே இருக்கிற வண்டி ஓடவில்லை. ஆனால் ஓடுகிற மாதிரி பாவனை பண்ணுகிறார்கள். போலீஸ் துறை எந்தக் காரணத் தைக் கொண்டும் பாவனை செய்யக் கூடிய துறையாக இருக்கக் கூடாது. நடைமுறை சாத்தியத்திற்கேற்ற செயல்பாடுள்ள ஒரு துறையாக இருக்க வேண்டும். மக்களுடைய குறைபாடுகளை எல்லாம் போக்க காவல் துறை பாடுபட வேண்டும். இந்தத் துறை பொறுப்புள்ள துறை. இவர்களை நம்பித்தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். காவல் துறை மற்ற துறைகளை போல அல்ல. இவர்கள் மீது நமக்கு நம்பிக்கை போய்விட்டது என்றால் நம் கதி அதோ கதிதான்.

இந்தத் துறையிலே நல்ல நிர்வாக திறமை மிக்க போலீஸ் அதிகாரிகள் பலர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய நிர்வாகத் திறமையை எல்லாம் நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பொறுப்புக்களை ஒப்படைத்து அந்த வகையில் அவர்களை எல்லாம் பயன்படுத்த வேண்டும். அதே நேரத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் தலைவராக ஒரு டி.ஜி.பி.யை போட்டிருக்கிறார்கள. அவர்களுக்கு ஏற்படுகிற கார் செலவைப் பொறுத்தவரையில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் போய்க் கொண் டிருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கோ. பூவராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பயன்படுத்துகிற அந்தக் காரில் டி.வி., ரேடியோ, டிரான்சிஸ்டர் போன்ற எல்லா வசதிகளும் உள்ளன. அந்தக் கார் அவருடைய சொந்தக் கார் அல்ல. பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான கார். அதுபோல அவருடைய அலுவலகத்தில் போய்ப் பார்த்தால் கீழே உள்ள





அலுவலகத்தில் டி.வி. உள்ளது. அதுபோல மேலே அலுவலகத்தில் போய்ப் பார்த்தால் அங்கேயும் ஒரு டி.வி. அதுமட்டுமல்ல, எல்லா வசதிகளும் பொருத்தப்பட்டுள்ளன. எல்லா படங்களை யும் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் பார்த்துக் கொள்வதற் குரிய வசதிகள் உள்ளன. அந்தத் துறை மானியத்திலே நாம் பேசியதற்குப் பின்னாலே 40 ஆயிரம் ரூபாய் செலவு செய்து இவ்வாறு எல்லாம் நவீனமாகச் செய்திருக்கிறார்கள். அதற்கு ஒரு அளவு வேண்டுமல்லவா ? ஆகவே, மிகவும் திறமை உள்ளவர்கள் பலர் இந்தத் துறையிலே இருக்கிறார்கள். அப் படிப்பட்டவர்களை எல்லாம் சரியான முறையிலே, நல்ல முறை யிலே, இந்த அரசு பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்திலே என்னுடைய கருத் துக்களை வெளியிடுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி சொல்லுகின்றேன். ஒரு மொழிக்கு எப்படி இலக்கணம் முக்கி யமோ அது போல ஒரு சமுதாயத்திற்கு நல்ல காவல் துறை தேவை என்று ஓர் அறிஞர் சொலலியிருக்கின்றார். What grammar is to language, Police is to Society என்று அந்த அறிஞர் வெளிப்படுத்தியிருக்கிறார். காவல் துறையை நம்பித் தான் உயிரோடும், உடைமையோடும் நாம் எல்லோரும் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அடிபட்டாலும் காவல் துறை யிடம்தான் போய்ச் சொல்லுகின்றோம். தாக்கப்பட்டாலும் அங்கேதான் போய்ச் சொல்லுகின்றோம். ஆனால் அதே காவல் துறையைத் தான் நாமே கண்டனத்திற்கும் ஆளாக்கிக் கொண் டிருக்கிறோம் என்பதையும் யாரும் மறந்துவிடக்கூடாது.

காவல் துறை மற்ற துறைகளைப் போன்றது அல்ல. மற்ற துறைகள் அரசாங்கத்தின் நேரடிப் பார்வையில் இயங்கிக் கொண்டிருக்கின்ற துறைகளாகும். ஆனால் காவல் துறையைப் பொறுத்தவரையில் அதனுடைய அதிகாரங்களை சட்டத்தி லிருந்துதான் பயன்படுத்துகிறார்கள். CRPC-Criminal Procedure Code, Cognisable Offences பற்றி ஒன்றைத் தெரிந்துக்கொள்ள வேண்டும். இந்த அபன்சின்கீழ் ஒருவரைக் கைது செய்ய அர சாங்கத்தின் உத்தரவை எதிர்நோக்க வேண்டிய தேவையில்லை. அதற்கான அதிகாரங்கள் சட்டத்தின் அடிப்படையில்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தச் சட்டத்தை அமுல் படுத்துகிறவர்கள் , அதை அமுல்படுத்துகின்ற நேரத்தில் நீதி மன்றமே கூட அதில் குறுக்கிட முடியாது. 1968 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்திலே Law Court cannot interfere in investigation என்று தீர்ப்புச் சொல்லப்பட்டிருக்கிறது. கடைசியாக பஜன்லால் வழக்கில் மட்டும்தான் உச்ச நீதிமன்றம் உள்ளே போய் எப்.ஐ. ஆரை ஸ்க்வாஷ் பண்ணியது.

[திரு. பி. எச். பாண்டியன்] [1989 ஏப்ரல் 28

நீதித் துறையோடு பின்னிப் பிணைந்து செயல்படக் கூடியது துறை காவல் துறை என்பதை முதலில் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் அரசாங்கத்திற்கும், அரசாங்கச் சட்டத்திற்கும் மட்டும் பதில் சொல்ல வேண்டுமே தவிர நேரடியாக யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் அவர்கள் கிடையாது என்பதை இந்த அவையில் உள்ள அனைவருக்கும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10–30)

காவல் துறை அதிகாரிகளைப் பற்றி எல்லாம் இங்கே பலரும் பேசினார்கள். எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் காவல் துறை அதிகாரிகள் குற்றவாளிகளைப் பார்த்துச் சந்தேகப்படக்கூடிய ஒரு பாவனையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். சந்தேகப் படத் தெரியாதவர்கள் நல்ல காவல துறை அதிகாரியாக வர முடியாது. யாரையும் சந்தேகப்படாமல், மக்களோடு நேருக்கு நேராகப் பழகி கொண்டிருக்கவில்லையானால்— இங்கே சொன்னார்களே கள்ளச் சாராயம் பற்றியும் மற்றும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் பற்றியும்— அதுபோல குற்றச்சாட்டுகள் வந்துகொண்டே இருக்கும் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. ஆகவே குற்றவாளிகள் யார் என்று பார்த்து, சந்தேகப்படக்கூடிய அளவுக்கு அவர்களுடைய பாவனையை வளர்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் சட்டத்தை நகர வைக்கிறார்கள் புத்தகங்களிலிருந்து—They are Law enforcing agencies.

இன்னும் ஒன்று, யார் என்று பார்க்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டியது துறை காவல் துறை. நம்முடைய இந்தியத் தண்டனைச் சட்டத்தில் முதலிலே எழுதப்பட்டிருக்கக்கூடிய எழுத்து whoever 'யாராக இருந்தாலும்' என்றுதான் எழுதப் பட்டிருக்கிறது. அமைச்சர் என்று விட முடியாது, எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று விட முடியாது, பணக்காரன் என்று பார்த்து விட்டுவிட முடியாது. யாராக இருந்தாலும், சட்டத்தை மீறினால் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யலாம். கர்நாடக மாநிலத்தில் ஓர் அமைச்சர் மீதே வழக்கு பதிவு செய்தார்கள். பதிவு செய்வதற்கு யாரிடமும் உத்தரவு கேட்கத் தேவையில்லை. நான் இங்கே ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். கேட்டுச் செய்வார்களானால் ஒரு வழக்கும் நீதி மன்றத்திற்குப் போகாது, நடவடிக்கை எடுக்க முடியாது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மற்ற மானியக் கோரிக்கைகளில் 'பெர்பார்மன்ஸ் பட்ஜெட்' என்று ஒரு பட்ஜெட்டை வைப்பார்கள். நான் இங்கே புத்தகத்தைப் பார்த்தேன், அதில் சில வழக்குகளைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். 1969 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம்



1989 ஏப்ரல் 28] [திரு. பி. எச். பாண்டியன்]

ஆண்டு வரை, அப்போதிருந்த டி.ஜி.பி. அவர்களிடமிருந்து நான் ஆராய்ச்சிக்காக ஒரு விவரத்தை வாங்கியிருந்தேன். 1969ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெற்ற கொலைகள் 824. 1970 ஆம் ஆண்டு 890; 1972ஆம் ஆண்டு 785. இப்படியே 1983ல் 1347 என்று எழுதப்பட்டு, 15,000 கொலைகள் தமிழகத்தில் நடைபெற்றிருக்கின்றன. இது 1969லிருந்து 1983 வரை. இந்தப் பதினைந்தாயிரம் கொலைகளில் எத்தனைக் கொலைகள் கண்டு பிடிக்கப்பட்டன, எத்தனை கொலைகளுக்கு நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன., எத்தனை வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டதென்பதை இந்த அவைக்குத் தெரிவித்தால் தலை சிறந்ததாக இருக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இதை வெளிப்படுத்துவதற்குக் காரணம், இந்தத் துறையை நம்பித்தான் அரசியல் கட்சிகளும் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. அரசியல் கட்சிகளின் உரிமைகளைப் பாதுகாப்பது கூட காவல் துறைதான் என்பதை மறந்துவிடக் கூடாது. இருந்தாலும் தேர்தல் நேரத்தில் எப்படி எல்லாம் பணியாற்றினார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. இங்கே பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினரும், மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்.விஜயராகவன் அவர்களும் காவல் துறைமீது குற்றச் சாட்டுகளைத் தெரிவித்தார்கள். நாட்டிலே அடிப் படையே கோளாறு. நாட்டில் தேர்தல் முறையே கோளாறு. தேர்தல் நாளன்று நான் தெரிந்துகொண்டதைச் சொல்கிறேன். 20,000 வாக்குகளை, ஒரு வாக்குக்கு 10 ரூபாய் என்று விலைக்கு வாங்கிவரக்கூடிய காலகட்டத்தில் நாம் எப்படி ஒரு ஒழுங்கை நாட்டிலே எதிர்பார்க்க முடியும்? அடிப்படையில் மக்கள் ஒழுக்கத்தையே கெடுத்துவிட்டு, எப்படி ஓர் ஆட்சியை, நல்ல ஒழுக்கமுள்ள துறையை வளர்க்க முடியும் என்பதை மறந்துவிடக்கூடது. நீமே மக்களைக் கறை படிய வைக்கிறோம். 10 ரூபாய் ஆசை காட்டி, காரிலே ஏறும்போது கூடப் பணம், வாக்குச் சாவடிக்குச் செல்லும்போதும் பணம், இப்படி பணத்தை வாரி வழங்கி மக்கள் குரலே மகேசன் குரல் என்று பேசிக்கொண்டிருக்கிறோம். இந்த நிலை மாறினால்தான், அந்த அடிப்படைக் கோளாறு தகர்த்து எறியப்பட்டால்தான் காவல் துறை சுத்தமாகும். காவல் துறையில் இருக்கக் கூடியவர்கள் வெளி நாட்டவர்களல்ல. நம்மோடு பிறந்தவர்கள். நமக்கு என்ன குணம் உண்டோ, நமக்கு என்ன ஒழுக்கம் உண்டோ அதைவிட அதிகமாக அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே நம்மோடு பிறந்தவர்கள், நம் மண்ணில் பிறந்தவர்கள் காவல் துறை அதிகாரிகளாக வரும் போது அவர்கள் நம்மைப்போல்தான் இருப்பார்கள். ஆகவே அடிப்படையை மாற்றுங்கள். இன்னும் சொல்லப்போனால் ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கிக் காட்டுங்கள் என்று நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னொன்று, தேர்டு டிகிரி மெதட்ஸ் கூடாது என்று சிலர் வாதிக்கிறார்கள். நம்முடைய நாட்டில்—தமிழ்நாட்டிலும் சரி—இந்திய நாட்டிலும் சரி,—காவல்துறை முழுமையாக நவீன மயமாக்கப்படவில்லை, மாண்புமிகு சட்டப் பேரவை

உறுப்பினர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் பேசும்போது 'ஸ்காட்லாண்டு யார்டு' போல் நம்முடைய தமிழக போலீசார் இருந்தார்கள் என்று குறிப்பிட்டார். மனப்பான்மையில் இருந்தார்கள். அவர்களுடைய innate charactor and ability ஸ்காட்லாண்டு யார்டுக்கு ஈடாக இருந்ததேயொழிய, ஸ்காட்லாண்டு யார்டினுடைய நவீன மயமாக்கபபட்ட சாதனங்கள் இங்கே உள்ள காவல் துறையினருக்கு வழங்கப்படவில்லை.

லை டிடெக்டர்களைப் புகுத்த வேண்டும். ஒரு மாவட்டத்திற்கு ஒரு லை டிடெக்டர். உண்மையைக் கண்டுபிடிப்பதற்காக நீங்கள் அந்தச் சாதனத்தை வெளிநாட்டிலிருந்து வாங்கி, புகுத்தினால்தான் தேர்டு டிகிரி மெதட்சை விட முடியும். இல்லையென்றால் எப்படி உண்மையைக் கண்டுபிடிப்பது? எல்லோரையும் அடிக்கக் கூடாது. காரணம் பத்திரிகையில் போட்டுவிடுவார்கள். '' பாண்டியன் எல்லோரையும் அடிக்கச் சொன்னார் '' என்று. காவல் துறையில் இருப்பவர்களுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது எல்லோரையும் அடிப்பதற்கு. குற்றவாளிகளைப் பார்த்துத்தான் பிடிப்பார்கள. சில குற்றவாளிகளை உட்கார வைத்து, காப்பி கொடுத்து, சாப்பாடு கொடுத்தா கேட்க முடியும் ?

சில நேரங்களில் உண்மைகளை வரவழைப்பதற்கு அதுபோன்ற சாதனங்கள் தேவைப்படுகிறது. அதை முழுமையாக ஒழிக்க முடியாது. நம்முடைய வீட்டிலேயே கூட பிரம்பால் அடித்தால் தான் பிள்ளை உருப்படுகிறான். சில நேரங்களில் உருப்படாத மனிதனை உருப்பட வைப்பதற்கு இதுபோன்ற சாதனங்கள் கொஞ்சம் வேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் இங்கே நிம்மதியாக உட்கார முடியாது.

குற்றவாளிகள் இன்றைக்கு இன்டெலிஜென்ட்டாக இருக்கிறார்கள். குற்றவாளிகள் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். வேகமாகக் காரில் போய்க் கொண்டிருக்கிறார்கள். காவல் துறையைச் சார்ந்தவர்கள் எப்படிப் போய் அவர்களை விரட்டிப் பிடிக்க முடியும்? குற்றவாளிகள் பணக்காரர்களாகி விடுகிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் சொன்னதைப் போல், சமுதாயத்தில் ஒரு அந்தஸ்தைப் பெற்று விடுகிறார்கள். பணம் வந்த உடனே நான் ஒரு ஆராய்ச்சியே செய்து பார்த்தேன்.

ஒவ்வொரு பணக்காரனுடைய வரலாற்றையும் பார்த்து இவன் பிறப்பிலேயே பணக்காரனா என்று பார்த்தேன். பணக்காரனானவன் ஒன்று அவன் தவறு செய்திருக்கிறான். இல்லாவிட்டால் அவனுடைய தகப்பனார் தவறு செய்திருக்கிறார். அதுவும் இல்லா விட்டால் அவனுடைய பாட்டனார் தவறு செய்திருக்கிறார். எப்படி என்றால் அரசாங்கத்தை ஏமாற்றி, வரியை ஏய்த்து பணக்காரன் ஆகிறான். எனவே இப்படிப்



பட்ட காலக் கட்டத்திலே இந்த முறையைச் சில பேரிடம் கையாளாமல் இருக்க முடியாது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். நான் அதை ஆதரிப்பதாக எண்ணி விடக்கூடாது.

குற்றவாளிகளில் சில பேர் ஈவு இரக்கமில்லாமல் கொலை செய்வதை நாம் மறந்து விடக் கூடாது. குத்திக் குத்திக் கொல்வது, உதைத்து உதைத்து கொல்வது. இது என்ன மெதட் ? இது பர்ஸ்ட் டிகிரி மெத்தடா ? தேர்டு டிகிரி மெத்தடை வைத்துக் கொல்லுகிற போது என்ன நடவடிக்கை எடுப்பது ? ஆகவே ஜனநாயகத்தை, கொடுமையான குற்றவாளிகளுக்கு, கொடுமையான எண்ணம் கொண்ட குற்றவாளிகளுக்குச் சொல்லிக் கொடுப்பீர்களானால் உண்மையாக நாம் நாட்டில் நிம்மதியாக இருக்க முடியாது என்பதை மறந்து விடக் கூடாது. காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கும் சில குறைபாடுகள் உண்டு. எல்லா இடத்திலும் குறைபாடுகள் இருக்கின்றன. எல்லா இடத்திலும் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. எங்கே இல்லை? மேலே இருந்தே குற்றச்சாட்டு இருக்கிறது. டெல்லியிலிருந்தே குற்றச்சாட்டு. அப்படியானால் எப்படி தமிழ் நாட்டில் மட்டும் குற்றச்சாட்டு இல்லாமல் இருக்கும்? எப்படி தமிழ் நாட்டில் உள்ளவர்கள் மட்டும் குற்றச்சாட்டுகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க முடியும்? நம்முடைய சகோதர காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகள் மட்டும் எப்படி அதற்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க முடியும்? மேலே திருந்தினால்தான், மேலே குற்றச்சாட்டு இல்லாமல் இருந்தால் தான் இவர்கள் மீது குற்றச்சாட்டு வராமல் பாதுகாக்க முடியும் என்பதை மறந்து விடக் கூடாது.

ஆர்டர்லி முறையைப் பற்றிச் சொன்னார்கள். கட்சிக்காரர்கள் கட்சித் தலைவரிடம் எப்படி இருக்கிறார்கள்? ஆர்டர்லியாக இல்லையா ? அது என்ன முறை ? வெளியே பேசுவது ஜனநாயகம். டெல்லியிலே சென்றால் அங்கே ஆர்டர்லியாக இருக்கவில்லையா ? ஆகவே அந்தந்தத் துறைக்கு ஆங்காங்கே விதிமுறைகள் உண்டு. நேருக்கு நேர் இங்கு பேச முடியுமா ? கொஞ்சம் அமர்ந்து, உட்கார்ந்து, இறங்கிப் பேச வேண்டிய நிலை இருக்கிறது அல்லவா ? அதே நிலை தான் அங்கே அவர்களும் மனிதர்கள் தான் என்பதை மறந்துவிடக்கூடாது.

இன்னொன்று. ஐ.பி.எஸ். அதிகாரிகளை நீங்கள் ஏன் தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளுக்குச் செயலாளர்களாக நியமிக்கக் கூடாது ? ஏன் 8 டி.ஜி.பி. க்கள் ? 4 பேரை இங்கே கொண்டு வந்து செயலாளராக ஆக்குங்கள். அவர்களுடைய ஆற்றலைப் பயன்படுத்துங்கள். அப்படிப் பயன்படுத்துவீர்களானால் அங்கே இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு

கிடைக்கும். டி.எஸ்.பி. யை நேரடியாகத் தேர்ந்தெடுக்காமல் காவல் துறையில் பல ஆண்டுகளாக பதவி உயர்வுக்காக காத்துக் கொண்டிருப்பவர்களைப் போடுங்கள்.

(முற்பகல் 10.40)

இங்கே காவலர் எண்ணிக்கை 60,000. கணக்குப்
பார்க்கும்போது 1 லட்சம் பேருக்கு 120 காவலர்
கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அது போதுமா ? ஒரு
லட்சம் பேரைக் கண்காணிக்க 120 காவலர்கள். இந்த
ஸ்ட்ரெங்க்த்தை உயர்த்த வேண்டும். 165 கோடி ரூபாய்
இந்த மானியத்திற்கு வழங்குகிறார்கள். இன்னும் 25 கோடி
ரூபாய், முதலமைச்சர் கையிலே தான் நிதி இலாக்கா
இருக்கின்ற காரணத்தால், நானே பரிந்துரைக்கின்றேன். வேலி
ஸ்ட்ரெங்க்த்தாக ஆக இருக்க வேண்டும். நான் கூட வீடு
கட்டும்போது காம்பவுண்ட் சுவருக்கு 12 ஆயிரம் ரூபாய்
என்று சொன்னார்கள். என்னுடைய சகோதரன் சொன்னார்,
அதற்கு ரூமே கட்டி விடலாம் என்றார். இல்லை, எத்தனை
ரூம் கட்டினாலும் சுற்றுச் சுவர் இருந்தால்தான் பாதுகாப்பு
என்று நான் சொன்னேன். அது போலத்தான் இங்கே 4 ஆயிரம்
கோடி செலவழித்தாலும் இதற்கு 200 கோடி ரூபாய் வைத்து
அந்தத் துறையை ஒழுக்கம் உள்ள துறையாக ஆக்கி வைத்துக்
கொள்ளுங்கள். ஸ்டாலின் சொன்னார், கடந்த கால தேர்வு
களைப் பற்றிச் சொன்னார். இப்போது அவர்கள் புதியவர்கள்
அல்ல. They are old wine in new bottle இன்றைக்கு
உங்களிடம் தானே அவர்கள் இருக்கிறார்கள். கட்சி
அரசியலில், நான் வெளிப்படையாகச் சொல்கிறேன்.
பல பேர் சொன்னார்கள் இவர்கள் இப்படித் தேர்ந்தெடுந்
தார்கள் கட்சிக்காரர்களை, இவர்கள் இப்படித் தேர்ந்தெடுத்
தார்கள் கட்சிக்காரர்களை என்று. கட்சிக்காரர்களைத்
தேர்ந்தெடுக்காமல் எதற்கு நீங்கள் ஆட்சிக்கு வருகின்றீர்கள் ?
உண்மை தானே ? ஏன் அதை ஒழிக்க வேண்டும். நான்
மேற்கு வங்காளத்திற்குச் சென்று இருந்தேன். எனக்குப் பாது
காவல் அதிகாரியாக வந்தவர் போலீஸ்காரர், மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர். கட்சிக்காரர்களைத் தேர்ந்
தெடுப்பதில் தவறு கிடையாது. காரணம் அந்தத் தகுதி
எல்லாம் இருந்து ஏன் கொடுக்கக் கூடாது ? நீங்கள் கட்சிக்
காரரைத்தான் அமைச்சராக ஆக்கி இருக்கின்றீர்கள். அர
சியல் சட்டத்தில் கட்சி என்று எழுதப்படவில்லை. முதலமைச்
சர் நியமனம், அமைச்சர்கள் நியமனம், இதுவும் நியமனம்
தான். இதற்கும் கவர்னர்தான் கையெழுத்துப் போடு
கிறார்; அதற்கும் கவர்னர்தான் கையெழுத்துப் போடு
கிறார். (மணி அடிக்கப்பெற்றது) ..........பேரவைத்



தலைவரவர்களே, நான் சில வாதங்களில் ஒன்றிப் போகும் போது தான் இது போல் வந்து விடுகிறது குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது இனிமேல் நீங்கள் எல்லாம், ஒரு முறை தேர்தல் வரும்போது நீங்கள் யாராவது சொல்ல முடியுமா ? ஐந்து ஆண்டுகளில் ஆட்சிக்கு வரும்போது ஒழுங்காக, நிம்மதியாக, இன்னும் சொல்லப் போனால் கட்சியை வைத்து ஆட்சி ; கீழே கட்சி இல்லை என்றால் இந்த ஆட்சி எப்படி இருக்கும் ? ஆகவே கட்சி ஜனநாயகத்தைக் குறை சொல்லக் கூடாது. தவறு செய்தால் தான் தவறு. தகுதி அடிப்படையில் அவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது குறை சொல்வது சரியானதல்ல என்ற வாதத்திற்குத்தான் சொன்னேன். நாளைக்கு இதையே வேறு விதமாகப் பேசுவார்கள், இப்படிச் சொல்கிறார் என்று. அவரவர்களுடைய கட்சியில், அவரவர்களுடைய கட்சிக்காகப் பாடுபட்டவர்களுக்குத்தான் எம்.எல்.ஏ., எம்.எல்.சி. பதவிகள் கொடுக்கப் படுகின்றன. அதுபோல கீழே வாக்குகளைச் சேகரித்துக் கொடுப்பவர்களுக்கு 'இந்தப் பதவி' கொடுப்பார்கள். எல்லா நாட்டிலும் நடைபெறுகிறது. இங்கே மட்டுமல்ல ; லஞ்சத்தை நம்முடைய தமிழகத்துக்கு மட்டும் சொந்தமானது என்று எண்ணி விடக் கூடாது; உலகம் முழுவதும், ஜப்பானைப் பார்த்தீர்கள் ; அங்கு பிரதமரின் முன்னாள் தனிச் செயலரே தற்கொலை செய்து கொண்டார். இந்தியா முழுவதும் எவ்வளவோ கோடி. இதையெல்லாம் கேட்பதற்கு, வாதிப்பதற்கு இடம் கிடையாது. அங்கே வாதிக்க முடியாது என்றல்ல ; முடிவு காண முடியவில்லை. உலக அளவில், இந்தியாவில் கவர்னர் ஜெனரல்களாக இருந்தவர்கள் வாரன் ஹேஸ்டிங்ஸ், ராபர்ட் கிளைவ் நம்முடைய சந்ததியினருக்கு சொல்லிக் கொடுத்து விட்டுப் போனது இந்தப் பாடம். அந்தப் பாடத்தை, பிரிட்டிஷ் கலாச்சாரத்தை முழுமையாக ஒழித்தால் தான் அதை ஒழிக்க முடியும். இன்றும் அதே கவர்னர் ; அதே ஜனாதிபதி இருக்கும் போது கலாச்சாரம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே தேர்தலில் அடிப்படை முறையை மாற்ற வேண்டும். அங்கே மாற்றினால் தான், எம்.எல்.ஏ.க்கள் சுத்தமாக, எம்.பி.க்கள் சுத்தமாக, அமைச்சர்கள் சுத்தமாக, பிரதம அமைச்சர் சுத்தமாக, ஜனாதிபதி சுத்தமாக இருந்தால் தான் இந்த காவல் துறை அதிகாரிகளிடம் நான் சுத்தத்தை எதிர்பார்ப்பேன். இவர்களுக்கு என்ன தலையெழுத்தா ? ஆகவே நான் இங்கே வெளிப்படுத்திக் கொள்வது எல்லாம் நம்முடைய நாட்டில் அடிப்படையில் தான் கோளாறு இருக்கிறதே யொழிய, மேலே ஒரு சிலரைத் தவிர, மற்ற இடங்களில் கோளாறு கிடையாது என்பதை நாம் இங்கே எடுத்துச் சொல்லியாக வேண்டும். ஆகவே இந்தக் காவல் துறை மானியத்தில் முதலமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்வேன், நவீனமயமாக்குங்கள். 1970 ஆம் ஆண்டு எனக்கு நினைவு இருக்கிறது.

சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மண்டபத்தில்—நான் அன்றைக்கு எம்.ஏ. கிரிமினாலஜி படித்துக்கொண்டிருக்கும் பொழுது—நீங்கள்தான் வந்து

அன்றைக்கு அந்த சொசைட்டியை ஆரம்பித்து வைத்தீர்கள். கிரிமினாலஜி சொசைட்டி. அதாவது நாங்களெல்லாம் ஏதோ ஐ.பி.எஸ். அதிகாரிகளாக அன்றைக்கு ஆகப் போகிறோம் என்று எண்ணிக் கொண்டு அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டோம். அன்றைக்கு ஆர். எம். மகாதேவன் இருந்தார். நான் முதல் நாளே இந்த அவையிலே நான் பேசும் பொழுது. இந்த அவைக்கு வரக் காரணமாக இருந்தவரே நீங்கள் தான் என்று பேசினேன். 1977 இல் நுழைந்தவுடன் பேசினேன். என்ன வென்றால், ஒரேயொரு பதவிதான் இருந்தது. டி.எஸ்.பி. பதவி. அன்றைக்கு ஆர்.எம். மகாதேவன் உங்களை அழைத்துக் கொண்டு வந்து உட்கார வைத்தார். அவர் என்னைப் பார்க்கும் பொழுதெல்லாம் உன்னைப் பார்த்தால் ஸ்ரீபால் போல இருக்கிறது, ஸ்ரீபால் போல இருக்கிறது என்று சொல்லி என்னை எஸ்.பி. ஆக்கி விட்டார். அந்தத் தேர்வில் உங்களுக்கு நினைவு இருக்கிறதோ என்னவோ எனக்குத் தெரியாது. வைத்தியலிங்கத்தின் கோ-பிரதர், அவருக்குக் கிடைத்தது. எனக்குக் கிடைககாத காரணத்தினால் நான் இங்கே வந்தேன். ஒரு வேளை அங்கே சென்றிருந்தால் இங்கே நாள் தோறும் நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வரக் கூடிய கட்டாயத்திற்கு ஆளாகியிருப்பீர்கள். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒருவேளை அங்கேயே போய் இருந்தால் நன்றாக இருக்குமோ என்று எல்லோரும் யோசிக்கிறார்கள். (சிரிப்பு).

திரு. பி. எச். பாண்டியன்: அதையும் நான் பேசி முடித்தவுடனே கலைஞர் இங்கே அமர்ந்திருந்தார். நான் அங்கே அமர்ந்திருந்தேன். அழைத்தார்கள். என்ன, இங்கேதான் வந்து விட்டீர்களே, இப்பொழுது என்ன என்று. நான் அங்கே போயிருந்தால் எஸ். பி. யாகியிருப்பேன், அன்றைக்கே சொன்னேன். அதனால்தான் சொன்னேன். நாள்தோறும் ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்து கொண்டிருக்கும். காரணம், நான் எளிதில் யாரையும் விட மாட்டேன். ஆகவே, இந்த அளவிற்கு இந்த மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி சொல்லி, நவீன மயமாக்குங்கள். நம்முடைய ஸ்டாலின் சொன்னதைப்போல, ஸ்காட்லாந்து யார்டு—சபாநாயகர் அவர்களே, நீங்கள் பாராளுமன்றச் சபாநாயகர் மாநாட்டிற்குச் செல்லப் போகிறீர்கள். நான் இரண்டு ஆண்டுக் காலத்திற்கு முன்பு, இங்கேயிருந்து பாராளுமன்ற சபாநாயகர் மாநாட்டுக்கு இலண்டனுக்குச் சென்றபொழுது, இலண்டனிலிருந்து கேட்டிருந்தார்கள், நீங்கள் எதை முக்கியமாகப் பார்க்க வேண்டுமென்று, நம்முடைய அலுவலகத்தில் கடிதம் எழுதி, நான் மூன்று நாட்கள் ஸ்காட்லாந்து யார்டில் இருந்து பார்த்து விட்டு வந்தேன். நவீன மயத்தைக் கண்ணால் பார்த்தவன். அவர்கள் கம்ப்யூட்டர் மயமாக்கியிருக்கிறார்கள். ஐ.ஜி. அலுவலகம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அங்கே டி.வி. கண்ட்ரோல் சென்டர் மானிட்டர்



என்று வைத்துக் கொண்டு, மவுண்ட் ரோடு, நம்முடைய பாரீஸ் கார்னர் போன்ற இடங்களில் அவர்கள் கேமிராக்களைப் பொருத்தி, அலுவலகத்திலிருந்தே காவலர்கள் இல்லாமல், அதை மானிட்டர் செய்து. வாகனங்கள் ஒழுங்காகச் செல்கிறதா, வாகனங்கள் எதனோடாவது மோதுகிறதா என்பதைப் பார்க்கின்றார்கள். அப்படி, நவீன மயமாக்கப்பட்டடிருக்கிறது, கம்ப்யூட்டர் மயமாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதிகமாகப் பணத்தைக் காவல் துறைக்கு ஒதுக்கி, இன்னும் அதிகம் கொடுத்து, நாட்டின் காவல் சுவற்றைப் பாதுகாத்திடுங்கள் என்று சொல்லி, குறைபாடுகள் எல்லாயிடங்களிலும் இருக்குமென்று சொல்லி, நன்றி சொல்லி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

திரு. இரா. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வரவர்கள் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கின்ற தமிழ்நாடு காவல் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை, தீயணைப்புத் துறை ஆகிய இந்த மூன்று மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளை இங்கே நான் கூற விரும்புகிறேன்.

ஏற்கெனவே, தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சராக ஏழாண்டு காலம் பணியாற்றிய நேரத்திலே, இந்தத் துறைகளையெல்லாம் தன் பொறுப்பிலே வைத்திருந்தவர்தான் நம்முடைய தலைவரவர்கள். அந்த ஏழாண்டு காலம் அவருக்குக் கீழே, பணியாற்றிய ஐ. ஜி. பொறுப்பிலேயிருந்து பணியாற்றிய பல அதிகாரிகள், ஓய்வு பெற்றதற்குப் பின்னால், பதவியிலே இருக்கின்ற நேரத்திலே அல்ல, முதலமைச்சருடைய தயவு வேண்டுமென்ற காரணத்தினாலே அல்ல, ஓய்வு பெற்றதற்குப் பின்னால், தங்களுடைய வாழ்க்கை நினைவுகளை எழுதுகின்ற பொழுது, தமிழ்நாட்டினுடைய முன்னாள் ஐ. ஜி.யாகப் பணியாற்றிய மேன்மை மிகுந்த அருள் அவர்கள், ஒரு போலீஸின் டைரி என்ற அந்தப் புத்தகத்திலே குறிப்பிட்டார். கலைஞருடைய ஆட்சிக் காலத்திலேதான் தமிழ்நாடு போலீஸ் நவீனப்படுத்தப்பட்டது என்பதை நான் பெருமையோடு தெரிவிக்கிறேன் என்று ஓய்வு பெற்ற ஐ.ஜி. அவர்கள் குறிப்பிட்டார்கள். அதே போல முன்னாள் ஐ.ஜி. இலட்சுமி நரசிம்மன் அவர்கள் ஜூனியர் விகடன் என்ற ஒரு வாரப் பத்திரிகையிலே தன்னுடைய நினைவுகளை எழுதுகின்றபொழுது, ஓய்வு பெற்றதற்குப் பின்னால், கலைஞர் ஆட்சிக் காலத்திலேதான் அரசியல் தலையீடு எதுவும் இல்லாமல் நாங்கள் சுதந்திரமாகச் செயல்பட்டோம், அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக நம்முடைய சென்னை மாநகராட்சியில் நடைபெற்ற மஸ்டர் ரோல் வழக்கினை அவர் எடுத்துக்கூறி, தமிழ்நாட்டு முதலமைச்சராகயிருந்த கலைஞர் அவர்களுக்கு மிகவும், வேண்டிய அவருடைய அன்பைப், பாசத்தைப் பெற்ற

[திரு. இரா. மோகன்] [1989 ஏப்ரல் 28

[ முற்பகல் 10-50 ]

பலர் தவறு செய்திருந்த நேரத்தில் நாங்கள் அதை தயக்கத் தோடு எடுத்துச் சொல்லி, நடவடிக்கை எடுக்கவா என்று கேட்ட போது, உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற் கொள்ளுங்கள் என்று எங்களுக்கு உத்தரவிட்டு, அந்த வழக்கு நடைபெறும்போது எந்தத் தலையீடும் இல்லாமல் நாங்கள் செயல்படுவதற்கு ஒத்துழைத்தவர் அன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் என்று ஓய்வு பெற்றதற்குப் பிறகு, ஐ.ஜி. யாக இருந்த திரு. இலட்சுமி நரசிம்மன் அவர்கள் தன்னுடைய நினைவை அன்றைக்கு வெளியிட்டார்கள். எதற்காக இவைகளை நான் சொல் கிறேன் என்றால், ஏழு ஆண்டுக்காலம் இந்தத் துறையை தன் னுடைய கரங்களில் வைத்துக்கொண்டு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவர், யாரிடமிருந்து பாராட்டுக்களைப் பெறவேண்டுமோ அந்தப் பராட்டுக்களைப் பெற்றவராக இருக்கிறார். நியாயம், நீதி, நேர்மை தன்னுடைய ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டில் நிலை நிறுத்தப்பட வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டவ ராக இருக்கிறார். அவருடைய கரங்களில் மீண்டும் இந்தத் துறை அமைந்திருப்பதை தமிழகத்தினுடைய பொற்காலம் என்றே நாங்கள் கருதுகிறோம்.

இங்கே அன்பிற்குரிய அ. இ. அ. தி. மு. க. கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் உகம்சந்த் அவர்கள் நேற்றைக்குப் பேசி னார். அவர் 3, 4 நாட்களுக்கு முன்னால் ஒரு போராட்டம் நடத்தி, சிறையில் அடைபட்டபோது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் எழுந்து நம்முடைய முதல மைச்சரைப் பார்த்து, அவர் சிறையில் இருக்கிறாரே, சட்ட மன்றக் கூட்டத்தொடரில் கலந்துகொள்கிற வாய்ப்பு இல்லையே என்று சொன்னவுடன், மறுநாளே அவரை இங்கே பார்க்கிறோம். அதைப் பார்க்கும்போது எனக்கு ஒரு ஞாபகம், ஒரு ஏக்கம். இப் படிப்பட்ட முதலமைச்சர் அன்றைக்கு எங்களுக்கு இல்லாமல் போய் விட்டார்களே என்று.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்க்கலாம் என்று சொன்னார்கள். உகம்சந்த் அவர்கள் ஜாமீனில்தான் விடுதலையாகி வந்திருக்கிறார்கள்.

திரு. இரா. மோகன் : தலைவர் அவர்களே, ஜாமீனில் வந்திருக்கிறார் என்று சொன்னார். அதைத்தான் நான் சொல்ல வந்தேன். எதற்கு என்றால் நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தியது ஒரு போராட்டம். கைலாசம் கமிஷன் ஆணையின் நகலை எரிப்பது; அன்றைக்குப்பாராளுமன்றத்தில் பட்ஜெட் கூட்டம் நடைபெற்றுக்



1989 ஏப்ரல் 28] [திரு. இரா. மோகன்]

கொண்டிருந்தது. அந்த நகலை எரித்தேன் என்ற ஒரு காரணத் திற்காக குற்றப் பத்திரிகையே தாக்கல் செய்யாமல் நான்கு முறை ரிமாண்ட் செய்து, இரண்டு மாதகாலம் கோவை சிறையில் என்னை அடைத்தார்கள். அன்றைக்கு பட்ஜெட் கூட்டம் நடை பெற்றுக் கொண்டிருந்தது. பட்ஜெட் கூட்டம் நடைபெறுகிறதே என்று பல்ராம் ஜாக்கர் கேட்கிறார். 60 நாட்கள், இரண்டு மாதம் கோவை சிறையில் நீங்கள் அடைத்து வைத்தீர்கள் என்பதை அ. இ. அ. தி. மு. க. கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்று கே. கே. எஸ். எஸ். ஆரைப் பார்த்தால் அவரா உங்களை அடைத்து வைத்தார் ?

திரு. இரா. மோகன் : தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய கட்சி அதைச் செய்தது. அதைப்போல நம்முடைய உகம்சந்த் அவர்கள் . . . . . . . . . . . . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கே. கே. எஸ். எஸ். ஆர். அவர்கள் ஒரு செய்தியைச் சொன்னார். பார்ப்போம் என்று தான் சொன்னார் என்று, சரியாகப் படித்துப் பார்க்க வேண்டும், நான் சொன்ன பதிலை. திருநாவுக்கரசு, அவர்கள் அவர் அவை யில் கலந்து கொள்கிற அளவிற்கு விடுதலை செய்ய வேண்டு மென்று சொன்னார். நான் அதுபற்றி ஆராய்ந்து அவர் அவையில் கலந்துகொள்கிற அளவிற்கு ஆவன செய்யப்படும், அதற்கேற்ப அரசு முடிவு எடுக்கும் என்று சொன்னேன். அதற்காக உத்தரவு களை நான் பிறப்பிக்கின்ற நேரத்தில், பத்திரிகையைப் பார்த் தால், அவர் ஜாமீனில் விடுதலையாகி விட்டார் என்று இருந்தது. வழக்கை நடத்துவதற்கு அவர் தயாராகிவிட்ட பிறகு நான் என்ன செய்ய முடியும் ?

திரு. இரா. மோகன் : தலைவர் அவர்களே, மற்றொன்றை நம்முடைய மாண்புமிகு உகம்சந்த் அவர்கள் பேசுகிறபோது சொன்னார். மதுராந்தகத்திலிருந்து கடலூருக்குக் கொண்டு போய் விட்டார்களே என்று சொன்னார். அவருடைய வேதனை அது. இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் அதை வலியுறுத்திப் பேசினார். அப்படிக் கொண்டு போகலாமா என்றார். அதைப்போலச் சொல்கிற போது, முன்னால் உட்கார்ந் திருந்த தலைவர் கலைஞர் அவர்களை, இன்றைய முதலமைச்சர் அவர்களை நான் பார்க்கிறேன். 1965 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்ற நேரத்தில், எந்தக் குற்றச் சாட்டும் இல்லாமல், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நீங்கள் தான் தூண்டுகிறீர்கள் என்று காங்கிரஸ்காரர்கள் அநியாயமாக ஒரு குற்றச்சாட்டை அவர் மேல் சுமத்தி பாளையங்கோட்டைக்குக்

[திரு. இரா. மோகன்] [1989 ஏப்ரல் 28

கொண்டு போனார்கள். சென்னையிலிருந்து நெஞ்சு வலியோடு போலீஸ் வேனில் ஏற்றிக் கொண்டுபோய் பாளையங்கோட்டைச் சிறையில் அடைத்தார்கள். அந்த காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் தான் இங்கே கேட்கிறார் மதுராந்தகத்திலிருந்து கடலூருக்கு உறுப்பினரைக் கொண்டு போகலாமா என்று. அது மட்டுமல்லாமல், போலீசை இந்த ஆட்சி தவறான முறையில் பயன்படுத்துகிறது என்ற கருத்தை இங்கே காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் பேசினார். கவர்னர் ஆட்சிக் காலத்தில் நாம் பார்த்தோமே, போலீஸ் எப்படியெல்லாம் பயன்படுத்தப்பட்டது தமிழ்நாட்டிலே என்று. ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். திரு. ராஜீவ் காந்தி அவர்கள் ........

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், இதிலே "Point of order" என்ன இருக்கிறது? "Supply of points" வேண்டாம். "Point of order" இருந்தால் மட்டும் எழுப்புங்கள்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மோகன் அவர்கள், டாக்டர் கலைஞர் அவர்களை பாளையங்கோட்டைக்கு லாரியிலே கொண்டு போனதைப் பற்றிச் சொன்னார்கள். அப்படி கலைஞர் அவர்கள் கொண்டுபோகப்பட்டு, சித்திரவதை செய்யப்படும் போது, திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருந்து பயிற்சி பெற்றவர்தான் இன்று காங்கிரஸ் கட்சியிலேயிருந்து பேசுகிறார் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய குறிப்புடன் இணைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். குடிதண்ணீர்ப் பிரச்சினைக்காக சென்னை மாவட்டக் கழகத்தின் சார்பாக நடைபெற்ற ஒரு மறியல் போராட்டத்திலே கலந்து கொண்ட நூற்றுக்கணக்கானவர்களை சென்னையிலிருந்து 100 மைல் தள்ளி இருக்கிற வேலூர் சிறைச் சாலைக்குக் கொண்டு போய் அடைத்து வைத்தது கடந்த கால அரசாங்கம் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் நடைபெற்றது அநியாயம் என்று சொன்னால், இப்போது நடைபெறுவதும் அநியாயம் என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, இதை நியாயப்படுத்துவதற்காக இப்போது செய்திருப்பது நியாயம் என்று சொன்னால், அதுவும் நியாயமாகும். எனவே பழைய காலத்திலே தவறு என்று கண்டித்தவர்கள் அதே முறையைப் பின்பற்றக்கூடாது என்பதை நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



1989 ஏப்ரல் 28]

திரு. இரா. மோகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தை எல்லாம் என்னுடைய நேரத்திலே கழித்துவிடக் கூடாது என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இங்கே இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். இந்த ஆட்சிக் காலத்திலே போலீஸ் தவறான முறையில் பயன்படுத்தப்படுகிறது என்று சொன்னார்கள். கவர்னர் ஆட்சிக் காலத்திலே போலீஸ் எப்படிப் பயன்படுத்தப்பட்டது? நம்முடைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் தமிழ்நாட்டிலே 13 முறை சுற்றுப் பயணம் வருகிறார் என்று சொன்னால், இரவோடு இரவாக தமிழ்நாடு போலீசாருக்கு என்ன தெரியுமா உத்தரவு, கலைஞர் அவர்களுடைய படம் போட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின், சுவரொட்டிகளை, போஸ்டர்களை கையிலே தண்ணீர் பக்கெட்டை வைத்துக்கொண்டு, விடிய விடிய சுவற்றிலேயிருந்து அந்தப் படங்களை எல்லாம் கிழிப்பது அன்றைய போலீசாருக்கு வேலை. ஓர் ஆண்டுக்காலம் தமிழ்நாட்டுப் போலீசை அப்படி எல்லாம் பயன்படுத்தியவர்கள்தான் இன்றைக்கு இந்த ஆட்சிக் காலத்திலே போலீஸ் துறை தவறான முறையில் பயன்படுத்தப் படுகிறது என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள்.

இன்றைய போலீஸ் துறையைப் பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். இங்கே பலரும் எடுத்துக் காட்டியதைப் போல, பிரிட்டிஷ் காலத்தினுடைய நடைமுறை இப்போதும் பின்பற்றப்படுவதை மாற்றியமைக்க வேண்டும். முன்பு ஒரு ஐ.ஜி. தமிழ்நாட்டிலே இருந்தார் என்று சொன்னால் இப்போது ஏராளமான ஐ.ஜி.க்களைப் போட்டிருக்கிறோம். அதேபோல் ஐ.ஜி.க்கள் என்பது மட்டுமல்லாமல் ஒரு டி.ஜி.பி, யும் இங்கே பணியாற்றுகிறார். ஆனால் அந்த அளவிற்கு காவல் துறையிலே இருக்கின்ற காவலர்களுடைய எண்ணிக்கை மேம்படுத்தப்பட்டு இருக்கிறதா என்றால் இல்லை. 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் தேதி கணக்குப்படி, காவல் துறையினுடைய மொத்த எண்ணிக்கை 66,872. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிற குறிப்பிலே காணப்படுவது. இந்த 66,872 காவலர்களை வைத்துக் கொண்டு தமிழ்நாட்டினுடைய சட்டம்-ஒழுங்கை, மற்ற நிலைமைகளை எல்லாம் சீர்படுத்திவிட முடியாது. ஆகவே இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தமிழ்நாட்டிலே இருக்கிற 3 மாநகராட்சிகளான சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகியவைகளில், சென்னை, மதுரை ஆகிய இரண்டு மாநகராட்சிகளில் மட்டும் குதிரைப் படை இருக்கிறது. கோவை மாநகராட்சியிலே இன்னும் குதிரைப்படை அமைக்கப்படவில்லை. ஆகவே அங்கே குதிரைப் படையை, அதனுடைய யூனிட்டை அமைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இரா. மோகன்] [1989 ஏப்ரல் 28

அதேபோல் பெண் போலீசார். மிக நல்லமுறையில் பணியாற்றி நல்ல பெயரைப் பெற்றுக் கொண்டிருக்கிற அந்தப் போலீசாருடைய எண்ணிக்கை தமிழ்நாடு முழுவதும் சேர்த்து இப்போது 690 காவலர்கள்தான். நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே சட்டமன்றத்திலே பேசுகின்றபோது பலமுறை கூறியிருக்கிறார்கள். பெண்களுடைய மேம்பாட்டிற்காக பல்வேறு நல்ல திட்டங்களை இந்த ஆட்சி நிறைவேற்றும் என்ற உறுதிமொழியைத் தந்திருக்கிறார்கள். அதுபோல், இந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலே ஏராளமான நல்ல திட்டங்கள், தாய்மார்களுக்காக நிறைவேற்றப்படுவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். எனவே பெண் போலீசாருடைய எண்ணிக்கையையும் அதிகப்படுத்தி, மிக நல்ல முறையில் அவர்களைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு மிக முக்கியமான பிரச்சினை. இந்தக் குறிப்பிலே சிலைத் திருட்டை ஒழிப்பதற்காக போலீஸ் துறை மிக நல்ல முறையில் பயன்படுத்தப்படுகிறது என்ற செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு செய்தியை தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பாராளுமன்றத்திலே நான் ஒரு கேள்வி எழுப்பினேன். இந்தியாவிலே பஞ்சலோகச் சிலைகள், எந்த மாநிலத்திலிருந்து அதிகமாகக் களவாடப்படுகிறது என்ற கேள்வியை எழுப்பியபோது, எல்லா மாநிலங்களிலும் உள்ள புள்ளி விவரங்களைத் திரட்டி, அன்றைக்குப் பாராளுமன்றத்திலே அமைச்சர் அவர்கள் அளித்த பதில், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் பஞ்சலோகச் சிலைகள், ஐம்பொன் சிலைகள் மிக அதிகமாகத் திருட்டுப் போகின்றன, அதுவும் கடந்த 5 ஆண்டுக் காலத்திலே மிக அதிகமாக நம்முடைய கோவில்களிலிருந்து திருடப்பட்டது என்ற செய்தியை அன்றைக்குப் புள்ளிவிவரமாகத் தந்திருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசு மிகுந்த கவனத்தோடு அதைக் கருத்திலே கொண்டு, பஞ்சலோகச் சிலைகளை, ஐம்பொன் சிலைகளைக் காப்பதற்கும், அந்தத் திருட்டுக்களைப் போக்குவதற்கும், தடுப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

அடுத்து தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மிக மோசமான ஒரு நிலைமை என்னவென்று சொன்னால், சமீப காலமாக, கடந்த 10, 12 ஆண்டுகளாக வளர்ந்திருக்கிற ஒரு மோசமான சூழ்நிலை, கஞ்சாச் செடிகளைப் பயிரிடுவது. நம்முடைய கேரள மாநிலத்தை ஒட்டிய மலையோரங்களில் நீங்கள் பார்த்தீர்களேயானால், ஏராளமான அளவிற்கு கோடிக்கணக்கான ரூபாய் அளவிற்கு கஞ்சாச் செடிகளைப் பயிரிடுகிறார்கள். அதைப் பத்திரிகை நிருபர்கள் எல்லாம் போலீசாருடன் சென்று நேரிலே



1989 ஏப்ரல் 28] [திரு. இரா. மோகன்]

பார்த்த செய்தியைச் சொல்கிறார்கள். ஒரு இடத்திலே மட்டும் ரூ. 35 கோடிக்கான கஞ்சாச் செடிகளை நாங்கள் அழித்தோம் என்ற செய்தியை அவர்கள் சொன்னார்கள் என்றால், எந்த அளவிற்கு கஞ்சா செடிகளைப் பயிரிடுவது தமிழ்நாட்டில் உச்ச கட்டமாக இருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். அதை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று போதை மருந்து. இப்போது புதியதாக இளைஞர்கள் மத்தியிலே, கல்லூரிகளிலே மிக வேகமாக வளர்ந்து வருகின்ற ஒரு பரிதாபகரமான நிலை என்னவென்று சொன்னால், பில்ஸ்களை, போதை மருந்துகளை, எல்.எஸ்.டி., ஹார்ட் அட்டாக் வந்த பேஷண்டுகளுக்குத் தருகின்ற 'மேன்ட்ராக்ஸ்' இப்படிப்பட்ட மருந்துகளை எல்லாம் ஏராளமான அளவிற்கு....(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மாத்திரைகளுடைய பெயர் எனக்கே தெரியவில்லை. உங்களுக்கு எப்படி இவ்வளவு விளக்கமாகத் தெரிகிறது.

திரு. இரா. மோகன் : பத்திரிகையிலே வந்த செய்திகளைத்தான் சொல்கிறேன். தலைவர் அவர்களே, இங்கே சொல்கின்ற காரணத்தால், அதையெல்லாம் நாங்கள் பயன் படுத்துகிறோம் என்று எண்ணக் கூடாது. அப்படிப்பட்ட மிகக் கொடிய கஞ்சா, இளைஞர்களை அழிக்கின்ற அந்தப் போதை மருந்துகள் எல்லாம் இன்றைக்கு சர்வசாதாரணமாக பல கல்லூரிகளிலே, மாணவர்களால் பயன்படுத்தப்படுகிறது என்ற செய்தி பத்திரிகைகளிலே வருகின்றபோது மிக வேதனை தருகின்றது. இந்தக் கொடிய பழக்கங்களை நீக்குகின்ற வகையில் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கள்ளச் சாராய ஒழிப்பு. அதிலே பாருங்கள். ஒரு புள்ளி விவரம் இந்தப் புத்தகத்திலே இருக்கிறது. 1987ஆம் ஆண்டு ஒரு மாதத்தில் 19,000 வழக்குகள் போடப்பட்டுள்ளன. 1988 ஆம் ஆண்டு ஒரு மாதத்தில் 34,000 வழக்குகள் போடப்பட்டுள்ளன. இந்த ஆண்டு ஒரே மாதத்திலே 50,000 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது).

இந்தக் குறுக்கீடுகளுக்காக நேரத்தை எல்லாம் நீங்கள் என்னுடைய கணக்கிலே கழித்துக்கொண்டால் நான் பேசவே முடியாதே. ஏராளமான குறிப்புகளுடன் நின்று கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணித் துளியில் முடிக்க வேண்டும். இல்லையென்றால் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டுவிடுவேன்.

[1989 ஏப்ரல் 28

திரு. இரா. மோகன் : மற்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் நீங்கள் நேரத்தை ஒதுக்குகின்றீர்கள். எனக்கு மட்டும் நேரத்தைக் குறைக்கின்றீர்கள். தயவு செய்து அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும்.

இந்த ஆண்டு 50,000 வழக்குகள் ஒரு மாதத்திலே போடப் பட்டிருக்கிறன. கள்ளச் சாராய வழக்குகளில், 91,488 நபர்கள் இந்த பிப்ரவரி, மார்ச் மாதத்திலே மட்டும் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். 7.72 இலட்சம் லிட்டர் சாராயம் பிடிக்கப் பட்டிருக்கிறது. 92 இலட்சம் லிட்டர் ஊறல் அழிக்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளிவிவரம் எல்லாம் தரப்பட்டிருக்கிறது. ஆக நம்முடைய அரசு வேகமாக கள்ளச் சாராய ஒழிப்பிலே நடவடிக்கை எடுக்கிறது என்று சொன்னாலும் கூட, எந்த அளவிற்கு இந்தக் கள்ளச் சாராயம் என்ற நிலைமை தமிழ்நாட்டில் பரவலாகிக் கொண்டிருக்கிறது என்பதைக் கருத்திலே கொண்டு, முழுவதுமாக, முற்றிலுமாக அதை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை நம்மால் மேற்கொள்ள இயலுமா அல்லது மாற்று முறைகளை ஏதாவது இந்த அரசு கவனிக்க முடியுமா என்பதையெல்லாம் இங்கே விளக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது) அரை நிமிடத்திலே பெல் அடிக்கிறீர்கள்.

வெளி மாநிலங்களிலே இருந்து சாராயம், மது வகைகள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். அதேபோன்று மது பானங்கள் தயாரிக்க தனியாருக்கு உரிமையில்லை என்ற செய்தி இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. அரசு நிறுவனமான 'டாஸ்மாக்' தயாரிக்கும் மது வகைகள் தரம் வாய்ந்ததாக இருந்தால்தான், நிச்சயமாக அவைகளை நல்ல முறையில் விற்பனை செய்வதற்கு முடியும். இல்லையென்றால் காம்படிஷன்லே ....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாக்கியத்தை எப்படி முடிக்கவேண்டுமென்று நான் சொல்ல வேண்டுமா ?

திரு. இரா. மோகன் : அதேபோன்று தொழிலாளர் போராட்டங்களில் போலீசார், தொழிலாளர்களுக்கு விரோதமான போக்கிலே நடவடிக்கையெடுப்பதை நம்முடைய ஆட்சி அனுமதிக்கக்கூடாது என்று நான் தெரிவித்துக்கொண்டு, காவலர்களுக்கான வீட்டுவசதிக் கழகத்தை மிகச் சிறப்பான முறையிலே நடத்தவேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

பொதுக் கூட்டங்களில் ஒலிபெருக்கி வைப்பதற்கான அனுமதி தரப்படுகின்றபோது அங்கே பாக்ஸ்கள் தான் இருக்க வேண்டுமென்றும், கூம்பு வடிவ ஒலிபெருக்கிகளை பயன்படுத்தக் கூடாது என்றும் சட்டம் இருக்கிறது. அதை ஓரளவிற்குத் தளர்த்தி, கூம்பு வடிவ ஒலி பெருக்கிகளை சிறிய கூட்டங்களுக்கு



1989 ஏப்ரல் 28] [திரு. இரா. மோகன்]

நான்காவது பயன்படுத்தக் கூடிய அளவில் அனுமதிக்கலாம் என்ற அளவிற்கு அந்தச் சட்டத்தை தளர்த்த வேண்டுமென்று கேட்டு, இந்த மானியத்தை தாக்கல் செய்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திற்கு ஒரு நல்ல எதிர்காலத்தை, ஒளிமயமான எதிர்காலத்தை வழங்க வேண்டுமென்ற முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். எல்லா தரப்பினருடைய ஒத்துழைப்பும் அதற்குத் தேவை. அது உண்டு என்று கூறி, நான் முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு தான் குறைகள் இருந்தாலும் இந்தியாவிலேயே தமிழக போலீஸ் துறை சிறப்புக்குரிய ஒரு துறை, மிகவும் பாராட்டப்படக்கூடிய ஒரு துறை என்பதை இன்றைக்கு நாடு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இன்றைக்குக் கூட நம்முடைய போலீஸ்துறை குறித்து சொல்லும்போது, தேர்தல் காலத்திலே அமைதியாகவும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துத் தரக்கூடிய வகையிலேயும் தேர்தலை நடத்துவதற்காக போலீஸ் துறையினர் செம்மையாக செயல்பட்டார்கள் என்று தமிழகத் தேர்தல் குறித்து பார்வையாளர்களாக நியமிக்கப்பட்ட அந்தக் குழுவினர் தமிழக போலீஸ் துறையினருக்குப் பாராட்டைத் தெரிவித்திருக்கிறார்கள். போலீஸ் துறை நாட்டுக்கு தேவையான துறை என்பதைநாம் அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கும்போது அதனுடைய குறைகளைச் சுட்டிக் காட்டுகிற அதே நேரத்திலே, அந்தத் துறையினர் மன உறுதியோடும், நம்பிக்கையுடனும் செயல்படக் கூடிய வகையில் அவர்களிடத்திலே காணப்படுகிற நிறைவுகளைப் பாராட்டியும், அதே நேரத்தில் குறைகளைச் சுட்டிக் காட்டும்போது, அந்தக் குறைகளை அகற்றி, அந்தத் துறையை செம்மைப் படுத்த வேண்டும் என்ற நன்நோக்கத்திலே கருத்துக்களை வெளிப்படுத்துவது முறையாக இருக்கும் என்பது என்னுடைய கருத்தாகும்.

குளிர் காய்பவனை, நாம் பார்த்திருக்கிறோம். நெருப்பை மூட்டி, நெருப்புக்குச் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டு குளிர் காயக் கூடியவன் எவ்வளவுதான் அவனுக்குக் குளிராக இருந்தாலும் நெருப்புக்கு கொஞ்சம் தள்ளித்தான் அவன் உட்கார்ந்து கொண்டே குளிர் காய்வானே தவிர, இந்தக் கடுமையான பனியிலே உடல் நடுக்கம் ஏற்பட்டிருக்கிற இந்த நிலையிலே ஏன் நாம் நெருப்பிலேயே உடலை வைத்துக் கொள்ளக் கூடாது அல்லது நெருப்போடு இணைந்து விடக் கூடாது என்று நினைக்க மாட்டான். அப்படி நினைத்தால் அந்த நெருப்பு அவனைச் சுட்டு விடும். எனவே நெருப்புக்கும் குளிர் காய்பவனுக்கும் ஒரு தூரம் இருக்க வேண்டும். அதனைப் போலத்தான் நெருப்பு உடலிலே பட்டாலும் உடலுக்குத்தான் ஆபத்து, அல்லது உடல் சென்று நெருப்பிலே இணைந்து கொண்டாலும் உடலுக்குத்தான் ஆபத்து என்ற நிலையில் போலீஸ் துறையும் மக்களோடு பழகும்போது மக்களோடு அவர்கள் தம்மை

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 ஏப்ரல் 28

இணைத்துக் கொள்ளாமல் ஒரு இடைவெளி வைத்துப் பழக அவர்கள் பழகிக் கொள்ள வேண்டும். அதேநேரத்தில் போலீஸ் துறையை பயன்படுத்த வேண்டும் என்று கருதுகிறவர்கள் போலீஸ் துறையினுடைய உள்ளார்ந்த விவகாரங்களில் தம்மை இணைத்துக்கொண்டு, போலீஸ் துறை நிர்வாகத்திலே தலையிடக் கூடியவர்களாக அவர்கள் மாறிவிடுவார்கள் என்றால் ஒரு நேரம் இல்லாவிட்டால் ஒரு நேரம் எந்தப் போலீஸ்காரர்கள் அவர் களுக்கு நண்பர்களாக இருக்கிறார்களோ அவர்களே அவர்களுக்கு விரோதிகளாகவும் மாறுவார்கள். எனவே போலீஸ்காரர்கள் இடத்திலே கொஞ்சம் ஜாக்கிரதையாகப் பழகுங்கள் என்று நாமெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறோம்.

எனவே அந்த முறையில்தான் போலீஸ்காரர்களை அணுக வேண்டும். அதற்கு மாறாக இன்றைக்கு பல்வேறு நிலைகளிலே போலீஸ்காரர்கள் சிலருக்கு ஆதரவாகவும் சிலருக்கு தேவை யில்லாமல் விரோதியாகவும், சுய நலத்தைக் கருதி சொந்த நலத்தை வளர்த்துக் கொள்வதற்காக அந்தத் துறையை பயன் படுத்துகிறார்கள், அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் அடிக்கடி வெளியே வந்து கொண்டேயிருக்குமானால் அது அந்த போலீஸ் துறைக்கும் நல்லது அல்ல. நாட்டுக்கும் நல்லது அல்ல என்பதை அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும்.

பொதுவாக ஒரு சமுதாயம் நாகரிகத்தோடு செயல்படுகிறது என்றோ, நாகரிகமான சமுதாயம் என்றோ எப்போது சொல்வார்கள் என்று சொன்னால் எவ்வளவு போலீஸ்காரர்கள் குறைவாக இருக்கிறார்களோ அப்போது தான் அந்தச் சமுதாயம் நாகரிகமான சமுதாயம் என்று இன்றைக்கு உலகத்திலே ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது. எவ்வளவு போலீஸ்காரர்கள் அதிகமான எண்ணிக்கையிலே இருக்கிறார் களோ அந்தச் சமுதாயத்தில் குற்றங்கள் அதிகமாக நடை பெறுகின்றன, போலீஸ்காரர்களைப் பயன்படுத்தக்கூடிய அத்தியா வசியங்கள் அதிகமாக ஏற்படுகின்றன என்பதைத்தான் அது சுட்டிக்காட்டுகிறது.

(முற்பகல் 11-10)

எனவே அது நாகரிகத்தை ஏற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு சமுதாயமாக இருந்தாலும் குற்றம் புரிகின்ற ஒரு சமுதாயம் என்பதை எடுத்து காட்டுவதாகத்தான் போலீஸ்காரர்கள் அதிக மான எண்ணிக்கையில் இருப்பதை நாம் எடுத்துக்கொள்ள வேண் டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். போலீஸ்துறை ஏதோ ஒரு போலீஸ்துறை என்ற அளவுக்கு அது கணிக்கப்படாமல் அந்தத் துறையால் ஏற்படுகின்ற மகத்தான சமுதாய, பொருளாதார விளைவுகளைப் பற்றியெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சமுதாயத்தில் பொருளாதார



1989 ஏப்ரல் 28] [திரு. இரா. மோகன்]

சமதர்மம் நிலவ வேண்டுமானால், அதே நேரத்தில் சமுதாயத் தினுடைய ஒழுக்கம் பேணிக் காக்கப்படுமேயானால் சமூக அடிப் படையிலே ஒரு சமுதாயம் நாகரிகமான, பண்பாடு உள்ள ஒரு சமுதாயமாக அது திகழ்கிறது என்று நாம் எடுத்துக் கொள்வோ மானால் எந்த அளவிற்குப் போலீஸ்காரர்கள் உண்மையாகவும் விசுவாசமாகவும் தாங்கள் இந்தச் சமுதாயத்திற்கு ஒரு அடிப்படை யான சேவை செய்யக்கூடிய பரோபகாரிகள் என்ற அடிப்படை யிலே ஒரு சேவா மனப்பான்மையோடு அவர்கள் செயல்படு வார்களோ அந்த அளவிற்கு தான் அந்த சமுதாயத்தினுடைய சமுதாய பொருளாதார நன்மைகள் பாதுகாக்கப்படும் என்பதை போலீஸ் துறையினர் நினைவில் வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு போலீஸ் துறையைப் பற்றிப் பல்வேறு குற்றச் சாட்டுக்களை நாம் இங்கே பார்க்கிறோம். பொதுவாக ஒரு ஐதீகம் இருக்கிறது. போலீஸ் துறைக்கு இன்றைக்குக் குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், சம்பளம் இவ்வளவு, கிம்பளம் அவ்வளவு என்று சொல்லப்படுகின்ற ஒரு ஐதீகம் இருக்கிறது. எனவே போலீஸ் துறையினர் மற்ற வழிகளிலே சம்பாதிக்க நினைக்காமல் அவர்கள் முறையாக தங்களுடைய கடமைகளைச் செய்ய வேண்டுமென்று சொன் னால், அவர்களுக்கு முறையான சம்பளமும், முறையான வசதிகளும் செய்து தர வேண்டும் என்பதிலே எந்த விதமான சந்தேகமும் இல்லை. அதே நேரத்தில் ஏனைய துறைகளில் வேலை செய்கின்றவர்களுக்கும் போலீஸ் துறையிலே வேலை செய்கின்றவர்களுக்கும் இருக்கக் கூடிய வித்தியாசங்கள், அநீதிகள் போக்கப்பட வேண்டும். அவர்கள் தனியாக நடத்தப் படுகின்ற ஒரு தன்மை இருக்கிறது. இன்றைக்கு இந்தத் துறையிலே என்னவோ தெரியவில்லை, அரசாங்கம் அவர்களுக்கு ஒரு தனி அளவு கோலை வைத்து நடத்துகிறது. இந்த அரசாங்கம் மட்டும் அல்ல. எந்த அரசாங்கம் வந்தாலும் அதே நிலையிலே தான் இருக்கிறது. உதாரணமாக எந்த ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்தக் கட்சிக்கு ஒரு கிளையாகத்தான் போலீஸ் துறை செயல் படுகிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அது அந்த ஆட்சிக்கும் நல்லதல்ல, அந்தக் கட்சிக்கும் நல்ல தல்ல, அந்தத் துறைக்கும் நல்லதல்ல என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் 1971ல் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பிலே இருந்தபோது சிறப்புப் பணியாளர்களாக அல்லது இரண்டாம் நிலை போலீஸ் காரர்களாக சிலரை டாக்டர் கலைஞர் அவர்கள் நியமித்தார் கள். அதை ஒரு குறையாக இன்றைக்கு சிலர் நாட்டிலே சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். அதற்கான ஜீ.ஓ. எம்.எஸ். நம்பர் 210, என்று சொல்லியிருக்கிறார்கள். நான்

[திரு. இரா. மோகன்] [1989 ஏப்ரல் 28

11—3—1987 என்ற அளவிற்கு போடப்பட்ட அந்த ஜீ.ஓ.விலே 1971லே டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது நியமித்த அந்த போலீஸ்காரர்களுக்கு ஒரு சிறப்புத் துறையில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு பாதுகாப்புக்காகவும் ஏனைய அரசாங்க விழாக்களுக்காகவும் அல்லது சிறப்பாக செயல்பட வேண்டிய சில சூழ்நிலைகளிலும் அவர்கள் பயன் படுத்தப்பட வேண்டும் ; அது மட்டுமல்லாமல் ஸ்காட்லாண்டு யார்டிலே கொடுக்கப்படுகின்ற பயிற்சிகளைப் போல அவர்களுக்கும் பயிற்சி கொடுத்து அவர்கள் ஒரு ரிசர்வ் போலீஸ் என்ற நிலையிலே இல்லாவிட்டாலும் தேவைப்படும்போது சிறப்புக் காரியங்களுக்காகப் பயன் படுத்தப்பட வேண்டும் என்று சிலர் நியமனம் பெற்றார்கள். ஆனால் அவர்களுக்குப் பிறகு நியமனம் பெற்றவர்கள், அவர்களுடைய ஜுனியர்கள் எல்லாம் இன்றைக்கு இரண்டாவது நிலையிலிருந்து ஒன்றாவது நிலைக்கு நம்பர் ஒன் கிரேட் போலீஸ் கான்ஸ்டபிள் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கும்போது, 71 லே டாக்டர் கலைஞர் அவர்களால் நியமிக்கப்பட்ட போலீஸ்காரர்கள் மட்டும் இன்று வரையிலே அந்த இரண்டாம் நிலையிலேயே இருப்பதாகச் சொல்கிறார்களே, ஏன் ? அது மட்டுமல்ல, அந்த போலீஸ்காரர்களுக்கு ஒரு சிறப்புப் பெயரையே அந்தத் துறையில் வழங்கியிருப்பதாகவும் நான் கேள்விப்படுகிறேன். தி.மு.க. கான்ஸ்டபிள் என்று அவர்களைச் சொல்கிறார்களாம். இன்னொரு பெயர் கலைஞர் கருணாநிதி கான்ஸ்டபிள். ஏனென்றால் கலைஞர் அவர்கள் நியமித்த காரணத்தினாலே. உங்களுக்கு இந்தத் துறையிலே எந்த விதமான உற்சாகமும் கிடைக்காது, ப்ரமோஷன் கிடைக்காது. ஏனென்றால் நீங்கள் தி.மு.க. போலீஸ்காரர்கள் என்று சொல்லக் கூடிய அவல நிலைக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், அவர்களுக்குப் பிறகு நியமனம் பெற்ற பல போலீஸ்காரர்கள் 1980 லே, 1984 லே இருக்கக் கூடிய ஜுனியர்கள் எல்லாம் இன்றைக்கு முதல் நிலை கான்ஸ்டபிளாக உயர்த்தப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பழைய நிலையிலேயே இருக்கிறாாகள் என்று சொல்லப்படுகிறது. பெண் போலீஸ்காரர்கள் பிறகு நியமனம் பெற்றார்கள். 1973-லே டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும் போதுதான் பெண்களுக்குக் கூட பாதுகாப்பு தருகின்ற வலிமையும், உரிமையும் உண்டு என்ற அந்த மகத்தான தத்துவத்தை நிலை நாட்டுகின்ற சமுதாய புரட்சிக்கு அடிப்படை வகுத்த அந்தப் பெண் போலீஸ்கள், போலீஸ் துறையிலே நியமனம் பெற அந்த மகத்தான ஒரு முடிவு எடுக்கப்பட்டது. பெண் போலீசார் நியமனம் பெற்றார்கள். அந்தப் பெண் போலீசார் கூட இன்றைக்குப் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். 1971-லே உங்களால் நியமிக்கப்பட்ட அந்தப் போலீஸ்காரர்கள் இதுவரையிலே அவர்களுடைய பதவி உயர்வெல்லாம் ஊறுகாய்.



1989 ஏப்ரல் 28] [திரு. எம். அப்துல் லத்தீப்]

போடப்பட்டிருக்கிறது, அதற்குப் பிறகு வந்த பெண் போலீஸ் கூட இன்றைக்குப் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்களே, தயவு செய்து, அவர்களுக்கு ஏன் இந்த அநீதி என்பதை முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது நம்முடைய அரசமைப்புச் சட்டம் விதி 14-க்கு விரோதமானது என்பதையும், நம்முடைய பே-கமிஷன், போலீஸ் பே-கமிஷன் அல்லது ஜெனரலாக, பொதுவாக அமைக்கப்பட்ட நம்முடைய பேகமிஷன்கள் செய்த பரிந்துரைகளுக்கு மாறாகவும் அரசமைப்புச் சட்டம் 14-க்கு விரோதமாகவும் இருக்கின்ற காரணத்தினால் உடனடியாக இந்த அநீதி போக்கப்பட வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த ஸ்டிக்மா —that they are D. M. K. Police Constables என்று சொல்லப்படுகிற அதையெல்லாம் அகற்றி அவர்களுக்கு முறையாக, அவர்களுக்கு என்றைக்கு, பணி கொடுக்கப்பட்டதோ, அவர்கள் என்றைக்கு நியமனம் பெற்றார்களோ, அந்தத் தேதியிலிருந்து கணக்கிட்டு தயவு செய்து அவர்களுக்குப் பதவி உயர்வு தர வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் போலீஸ்காரர்களுக்கு அந்தப் பணி நிச்சயமற்றது. அவர்களுக்கு 'ஆஃப் டே' கூட கிடையாது. ஹாலிடே கிடையாது. ஏன் அப்படி ? அவர்களெல்லாம் மனிதர்கள் இல்லையா ? அவர்களுக்கும் குடும்பங்கள் இருக்கின்றன. எனவே, வாரத்திற்கு ஒரு நாளாவது அல்லது ஒரு பாதி நாளாவது அவர்களுக்கு ஹாலிடேயாகக் கொடுக்கக் கூடாதா ? வேண்டுமானால் அவர்கள் லீவ் தான் எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு ஆஃப் டே கிடையாது என்று சொல்லப்படுவது, தயவு செய்து இது நீதி பூர்வமானது அல்ல. நீதியின்பாற் பட்டது அல்ல. இந்த அநீதியை அகற்ற வேண்டும் என்று சொல்லி, வாரத்திற்கு ஒரு நாளோ அல்லது பாதி நாளோ அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அவர்களுடைய நிர்வாகத் துறையிலேயே, யார் யாருக்கு விடுப்பு கொடுக்க வேண்டும், எப்போது கொடுக்க வேண்டும் என்று வேண்டுமானால் அவர்கள் அந்தத் துறையிலே உள்ள சிறப்புத் தன்மையைக் கருதி ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆனால் தயவு செய்து அவர்களுக்கு விடுப்பு கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது இருக்கிற அவர்களுடைய சம்பள விகிதத்திலே
கிரேடு-2 கான்ஸ்டபிளுக்கு பேசிக் பே 505 ரூபாய். முழுமை
யாக அவர்களுக்குக் கிடைப்பது 800 ரூபாய். கிரேடு-1 கான்ஸ்
டபிளுக்கு 705 ரூபாய். முழுமையாகக் கிடைப்பது 1,100
ரூபாய். ஹெட் கான்ஸ்டபிள் என்பவர்களுக்கு பேசிக் பே
830 ரூபாய். முழுமையாகக் கிடைப்பது 1,400 ரூபாய்.
எஸ்.ஐ.க்கு 1,050 ரூபாய். முழுமையாகக் கிடைப்பது 1,750.

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 ஏப்ரல் 28

ரூபாய். இன்ஸ்பெக்டருக்கு 1,250 ரூபாய் பேசிக் பே. முழுமை
யாகக் கிடைப்பது 2,050 ரூபாய் என்று எல்லாம் சொல்லப்
பட்டிருக்கிறது. நான் உங்களைக் கேட்கிறேன். நாம்
சமுதாயத்திலே பலருக்குச் சம்பளம் உயர்த்தியிருக்
கிறோம். சாதாரணமாக 1980-இலே ஒரு ஆசிரியர்
நியமனம் பெற்றிருந்தாலும் ஒரு ஆசிரியருக்கு இன்
றைக்கு 3,000 ரூபாய், 4,000 ரூபாய் அவர்களுக்குச் சம்பளம்
கிடைக்கிறது. ஆசிரியர்களுக்குக் கிடைத்திருப்பதைப் பற்றி
நான் மகிழ்கிறேன். ஆனால் சமுதாயத்திற்குப் பாதுகாப்பு
தரக்கூடிய காவலர்கள் என்று சொல்லக் கூடியவர்கள்,
சமுதாயத்தினுடைய ஒழுக்கத்தைக் காப்பாற்றக் கூடியவர்கள்,
சமுதாயத்திலே இருக்கக் கூடிய குற்றங்களையெல்லாம் கண்டு
பிடித்து நடை முறைப்படுத்தக் கூடியவர்கள், அவர்களுக்கு
முழுமையான ஒரு ஆதரவு அரசிடமிருந்து கிடைக்க வேண்டும்.
அவர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுங்கள்.
தவறுகள் இழைத்தால் கடுமையாகத் தண்டியுங்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

ஏதாவது சம்திங் வாங்குகிறார்கள் என்ற ஐதீகம் இன்றைக்கு
போலீஸ் துறையைத் தொற்றிக் கொண்டிருக்கிறது. எனவே,
அதை அகற்றும் வகையில் ஓரளவிற்கு அவர்களுக்குச் சம்பளம்
உயர்த்திக் கொடுத்து, அவர்களுடைய குடும்பத்தை நடத்தக்
கூடிய அளவிற்கு அவர்களுக்கு வருமானத்தை ஏற்படுத்தித் தாருங்
கள். அதற்கு மேலும் அவர்கள் குற்றவாளிகளோடு பங்கு கொள்
கிறார்கள், அவர்களோடு இணைந்து விடுகிறார்கள்; பிக்
பாக்கெட்டை அவர்கள் தான் நடத்துகிறார்கள்—இப்போது பல
ராக்கெட்டுகள் சிட்டியிலேயும், பல இடங்களிலேயும் அவர்கள்
தான் நடத்துகிறார்கள்—கள்ளச் சாரயத்தைக் காய்ச்சுவதற்கு
ஊக்கம் அளிக்கிறார்கள், கள்ளச் சாராயத்தை விற்பதற்கு
அவர்களே வழி வகுக்கிறார்கள், கடத்தல்காரர்களுக்கு அவர்கள்
தான் துணையாக இருக்கிறார்கள் என்று எல்லாம் பல்வேறு
தரப்பட்ட குறைபாடுகளுக்கு, குற்றங்களுக்கு இன்றைக்கு
ஆதாரமாகவும், ஆதரவு அளிக்கக் கூடியவர்களாகவும் போலீஸ்
காரர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பது பொது
மக்களுடைய நம்பிக்கை. அந்த நம்பிக்கையிலே போலீஸ்
காரர்களை ஒரு தனி மனிதன் பார்த்தால், விரோதி
யாகத்தான் கருதுவான். அது நாட்டிற்கு நல்லதல்ல. எனவே,
போலீஸ்காரர்களும் ஒழுக்கமாக நடந்துகொள்ள வேண்டு
மானால், அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுங்கள்.
அதற்குப் பிறகும் ஒழுங்கீனமாக நடந்துகொள்ளக் கூடியவர்கள்
மீது சட்டம் பாயட்டும், அவர்கள் டிஸ்மிஸ் செய்யப்படட்டும்,
அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படட்டும்.



1989 ஏப்ரல் 28] [திரு. எம். அப்துல் லத்தீப்]

காவல் சட்டத்தை நிலை நிறுத்துகின்ற போலீஸ்காரர்களே குற்றம் செய்கிறார்கள் என்று சொன்னால், சாதாரணமானவர்களுக்குக் கிடைக்கின்ற தண்டனையை விட 10 மடங்கு அதிகத் தண்டனையைப் போலீஸ்காரர்களுக்கு வழங்க வேண்டும். அதுவும் கொலைக் குற்றத்திலே சம்பந்தப்படுகிறார்கள் என்று எல்லாம் கூட சொல்லப்படும்போது, மிக வேதனையாக இருக்கிறது. எனவே, அந்த நிலையை எல்லாம் மாற்ற வேண்டுமானால் அவர்களுக்கு போதிய நிம்மதி வீட்டிலே இருக்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

இதிலே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளிலே, குற்றத் தலைப்பு—1987–88 லே கொடுத்திருக்கிறார்கள். ஆதாயத்திற்காக கொலை, கொள்ளை, வழிப்பறி என்று எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். இந்த ஆதாயத்திற்கான கொலை 1987-ல் 81 ஆக இருந்திருக்கிறது. அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 44 என்று எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். இதிலே வீடுபுகுந்து திருட்டு என்பதிலே 1987-ல் 7,664 திருட்டு நடந்து இருக்கிறது. அதில் கண்டுபிடிக்கப்பட்டவைகள் 4,021. இதே மாதிரி 1988-ல் வீடு புகுந்து திருட்டு 7,602 நடந்து இருக்கிறது. அதில் 3,933 கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. பெரிய திருட்டு 1987-ல் 19,388 நடந்து இருக்கிறது. அதில் கண்டு பிடிக்கப்பட்டவை 13,694. 1988-ல் பெரிய திருட்டு 20,309 நடந்து இருக்கிறது. அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 14,693. இதில் பெரிய திருட்டுகள் போதிய அளவுக்கு 50 சதவீதம், 60 சதவீதம் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் சிறிய திருட்டுகள் மட்டும் 1987-ல் 1,451 நடந்து இருக்கின்றன. அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 1,386. ஓரளவுக்கு எல்லாமே கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. அதே போல் 1988-ல் சிறிய திருட்டுகள் 1,398 நடந்து இருக்கின்றன. அதில் 1,312 கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. இதிலும் ஓரளவுக்கு கண்டு பிடிக்கப்பட்டு இருக்கின்றன. ஆக குற்றம் செய்பவர்களில் கூட பெரியவர்கள், சிறியவர்கள் என்று அங்கே ஒரு சமுதாயமே இருக்கிறது. அந்த குற்றம் செய்பவர்களில் கூட பெரிய குற்றவாளிகள், பெரிய திருட்டுக்காரர்கள், பெரிய கொலை செய்பவர்கள், பெரிய பணக்காரர்களைப் போல சமுதாயத்தில் இருக்கின்ற சீமான்களைப் போல யார் யாரை எப்படி சரிக்கட்ட வேண்டுமோ அவர்களைச் சரிகட்டித் தப்பித்துக் கொள்கிறார்கள் என்று இந்தப் புள்ளி விவரங்கள் நமக்கு கதைகளாகச் சொல்கின்றன. அதிலே கூட ஒரு சாதாரண ரொட்டி திருடுகிறவன் அல்லது கடைகளில் ஏதாவது அரிசி திருடுகிறவன் அவன் எல்லாம் தேவைக்காக அத்தியாவசியத் தேவைக்காக திருடுகிறான். ஏழை எளியவனைக் கண்டுபிடிப்பதில் போலீஸ்

காட்டுகின்ற முனைப்பை, பெரியவர்களை கண்டுபிடிப்பதில்
காட்டவில்லை என்று சொல்லும்போது அங்கேதான்
சந்தேகம் வருகிறது. அந்தப் பெரியவர்களோடு நீங்கள்
சேர்ந்துகொள்கிறீர்கள் என்ற சந்தேகம் மட்டும் அல்ல. அந்தப்
பெரியவர்கள் போலீஸைச் சரிகட்டி விட்டார்கள். ஏதோ ஒரு
காரணத்தாலே இவர்களில் சில பேரைக் கண்டுபிடித்தோம் என்று
அரசாங்கக் குறிப்புகளில் நீங்கள் கொடுத்து இருக்கிறீர்களே தவிர
சிறிய திருட்டுக்காரர்களைக் கண்டுபிடிக்கின்ற முனைப்பை ஏன்
நீங்கள் பெரிய அளவில் காட்டவில்லை, பெரிய இடங்களில்
காட்டவில்லை. ஏதோ ஒரு ஆட்டோ சங்கர் எப்படியோ
மாட்டிக்கொண்டார். அது கூட அவர்களாகக் கண்டுபிடிக்க
வில்லை. வேறு காரணங்களினால் அது வெளியே வந்துவிட்டது
என்ற நிலை இருக்குமானால் போலீஸ் துறை பற்றி மக்களுக்கு
இருக்கின்ற அபிப்பிராயம் சரியாக இருக்காது என்பதை அவர்
கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அதே நேரத்தில் சமுதாயத்திலே, இன்றைக்கு நாட்டிலே
ஒரு புதிய சூழ்நிலையை உருவாக்க சில சக்திகள் தமிழ்நாட்டில்
பயன்பட்டுக்கொண்டு இருக்கின்றன. வகுப்புக் கலவரங்களைத்
தமிழகத்திலே திட்டமிட்டு செயல்படுத்துவதற்காக அவர்கள்
முனைந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் போலீஸ்
எடுக்கின்ற நடவடிக்கைகளைக் குற்றம் சொல்லியும், போலீஸ்
காரர்களுக்கு இருக்கக் கூடிய தைரியத்தைக் குறை சொல்லியும்
அவர்களுடைய ''மொரேல்'' என்று சொல்லக் கூடிய அந்த
தன்னம்பிக்கையைக் குறைத்துவிடும் வகையிலும் சில பேர் முதல்
அமைச்சரையே இன்றைக்கு பயமுறுத்திக்கொண்டு இருக்கிறார்
கள். முதலமைச்சர் அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்துக்
கொண்டு இருக்கிறார்கள். ஆனால் நான் கேட்டுக்கொள்ளுவது
இந்த வகுப்புக் கலவரங்கள் நடக்கின்ற இடங்களில் எல்லாம்
போலீசார் போலீசாராக இருக்க வேண்டும். அவர்களுக்கு மதம்
கிடையாது. லத்தீப் என்கின்ற நான் இங்கே பேசும்
போது எனக்கு மதம் கிடையாது. நான் ஒரு குறிப்பிட்ட கட்
சிக்குச் சொந்தக்காரனாக இருந்தாலும் மக்களுடைய பிரதிநிதி
யாக வருகிறபோது அந்தப் பொது நோக்கத்தோடு பேச வேண்
டும் என்ற ஒரு கட்டாயத்தின் அடிப்படையில் கடமை உணர்ச்சி
யின் அடிப்படையில் நான் எப்படி பேசுகிறேனோ அதே அடிப்
படையில் போலீஸ்காரர்கள் வகுப்புக் கலவரங்கள் நடக்கும் போது
நடந்து கொள்ள வேண்டும். அப்படி நடக்காத காரணத்தால்
தான் நாங்கள் வற்புறுத்திச் சொல்கிறோம், குறைந்தபட்சம் நீங்
கள் பொதுவாக போலீஸ் துறையில் இல்லாவிட்டாலும் ஒரு
ரையட் போலீஸ் என்று ஏற்படுத்தினால் நல்லது. அந்த ரையட்
போலீஸில் எல்லோருக்கும் சம வாய்ப்புத் தரவேண்டும். எல்லா
சமுதாயத்தினருக்கும், எண்ணிக்கையின் அடிப்படையில் அல்ல,
சூழ்நிலைக்கு ஏற்ப, ஏற்படுகின்ற தேவையின் அடிப்படையில்





நீங்கள் அந்த சமுதாயத்திற்கு அந்த போலீஸ் துறையில்
வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன்
காரணமாகத்தான் 1965-ல் அபரிமிதமான அசாதாரணமான
வகுப்புக் கலவரங்கள் இந்தியாவில் ஏற்பட்ட காரணத்தால் எண்
ணிக்கையின் அடிப்படையில் இருக்கிற போலீஸ் வகுப்பு உணர்
வோடு அவர்கள் சிறுபான்மை மக்களை நடத்திய காரணத்தால்
தான் 1965-ல் மத்திய அரசின் வாயிலாக ஒரு சுற்றறிக்கை மாநில
அரசுகளுக்கு அனுப்பப்பட்டன. அந்த சுற்றறிக்கை நம்முடைய
அரசுக்கும் வந்திருக்கின்றது. அப்போது வேறு கட்சியைச்
சேர்ந்த நம்முடைய பெரியவர் மாண்புமிகு பக்தவச்சலம் அவர்
களுடைய ஆட்சி இருந்தது. அந்த சுற்றறிக்கையை அரசின்
கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். அதிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள், ஒரிசா
போன்ற மாநிலங்களில் சிறுபான்மை முஸ்லீம்கள் 2 சதவீதமாக
இருந்தாலும் அந்த மாநிலத்திலே கூட (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. கே. ஏ. செங்கோட்
டையன்): 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் ஒரு நிமி
டத்தில் முடித்து விடுங்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. எம. அப்துல் லத்தீப்: எனக்கு ஒரு நிமிடம் போதாது.
நான் இப்போதுதான் பேச ஆரம்பித்து இருக்கிறேன்.
நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன், இப்படிப்பட்ட சூழ்
நிலையில் தயவுசெய்து இந்த வகுப்பு துவேஷத்தை கட்டுப்
படுத்தும் அளவுக்கு 1965-ல் அனுப்பப்பட்ட அந்த சுற்றறிக்கையை
ஏற்றுக் கொண்டு எல்லா துறைகளிலும், குறிப்பாக போலீஸ்
துறையில் நீங்கள் முஸ்லீம்களுக்கு 10 சதவீத பிரதிநிதித்துவம்
அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்
பெற்றது)

வன்னியர்களைப்பற்றி குறிப்பிடும்போது 65 இலட்சம்
இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டது. நாங்கள் தெரிந்து
கொள்ள விரும்புவது, இந்தத் தமிழ்நாட்டில் எவ்வளவு பேர்
தான் இருக்கிறோம். 20 வருடங்களாக ஒரே எண்ணிக்கையைச்
சொல்லிக்கொண்டு இருக்கிறார்களே. தமிழ்நாட்டிலே
எவ்வளவு முஸ்லீம்கள் இருக்கிறோம்? அதையாவது தயவுசெய்து
அறிவித்து விடுங்கள். அப்படி அறிவிக்கும்போது அந்த எண்ணிக்கை
யின் அடிப்படையிலே வேண்டுமானால், 5 சதவீதத்தை நீங்களே
எடுத்துக் கொள்ளுங்கள். எங்களுக்கு குறைத்தாவது தாருங்கள்.
தயவுசெய்து அதை ஆய்வு செய்து கொடுக்க வேண்டுமென்று
நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்
திலே, எப்போதும் கலெக்டரும், எஸ்.பி.-யும்.... (மணியடிக்கப்
பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் கவனிக்க வேண்டும். முதல்வர் அவர்கள் உரிய நேரத்தில் பதில் சொல்ல வேண்டும். இப்போது நீங்கள் முடிக்கவில்லையென்றால் நான் அடுத்த உறுப்பினரைக் கூப்பிடவேண்டியிருக்கும். அதனால் நீங்கள் வருத்தப்படக் கூடாது (குறுக்கீடு), இப்படி யெல்லாம் நீங்கள் என் பேரில் குற்றம் சாட்டக் கூடாது. இன்னும் ஒரு மணித் துளி, அவ்வளவு தான்.

திரு. எம். அப்துல் லத்தீப் : நான்கு நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படியெல்லாம் சொன்னால் நான் ஒலிபெருக்கியை நிறுத்தச் சொல்லிவிடுவேன். அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டியிருக்கும். இதிலே வருத்தப்படுவதிலே பயன் எதுவும் இருக்காது.

திரு. எம். அப்துல் லத்தீப்: சில முக்கியமான செய்திகளைப் பற்றிப் பேசவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு ஆயிரம் முக்கியமான செய்திகள் இருக்கும். எனக்கு நேரம் முக்கியம். (குறுக்கீடு) எனக்கு இந்த அவை முக்கியமானது.

திரு. எம். அப்துல் லத்தீப் : இந்த அவை நாட்டுக்கு முக்கியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை நாட்டுக்கு முக்கியமென்றால் முதல்வருடைய பதிலுரை அதைவிட முக்கியமானது. உங்களுக்கு ஒரு மணித்துளி கொடுக்கிறேன். அதற்குள் பேசி முடித்து விடுங்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேசி முடித்து விடுகிறேன். வடாற்காடு மாவட்டத்திலே இருக்கிற ஐதீகம், அங்கே முஸ்லீம்கள் நியமிக்கப்படவேண்டும். அதாவது கலெக்டராகவும், எஸ்.பி.- யாகவும் நியமிக்கப்படவேண்டுமென்று இருப்பதை தயவுசெய்து இந்த அரசாவது மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னொரு பழைய மரபு மாற்றப்பட்டிருக்கிறது. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இரகசியத் துறைக்கு முஸ்லீம்களை நியமிக்கக் கூடாது என்று பழைய அரசு போட்டிருந்த உத்தரவை மாற்றி இன்றைக்கு முதன் முறையாக இரகசிய துறைக்கு ஒரு முஸ்லீமைப் போட்டிருப்பது இந்த அரசாங்கத்தினுடைய பரந்த மனப்பான்மைக்கும், பெரு நோக்கத்துக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. எனவே அதற்கு நான் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் 'Q' B .nch 'K' Branch என்று இருக்கக்கூடிய அந்தத் துறைகளிலும் முஸ்லீம்களை நியமிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



மவுண்ட் ரோடு தர்கா, அண்ணா சதுக்கம் போன்ற சுற்று
லாப் பயணிகளைக் கவரக் கூடிய இடங்கள் என்னுடைய தொகுதி
யிலேதான் இருக்கின்றன. அந்த இடங்களில் பல்லாண்டுகால
மாக சுமார் 20, 25 வருடங்களாக ஏழையெளிவர்கள் சிறுசிறு
கடைகளை, வேர்க்கடலைக் கடை போன்ற கடைகளை வைத்
திருக்கின்றனர். இப்போது அவர்களிடம் கெடுபிடி செய்கிறார்
கள். அண்ணா சதுக்கத்திற்கு, சுற்றுலாவிற்கு பிள்ளை
களை அழைத்து வருகின்றவர்களுக்கு அங்குள்ள ஐஸ்கிரீம் கடை,
வேர்க்கடலைக் கடை போன்ற கடைகள் எல்லாம் பயன்படக்
கூடிய அளவிலே இருக்கின்றன. இப்படிப்பட்ட தின்பண்டக்
கடைகளை எல்லாம் அகற்றுவது முறையல்ல. அதை அரசு
கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடலாடித் தொகுதியிலே தீயணைப்பு நிலையம் இல்லாமல்
இருக்கிறது. கீழக்கரை போன்ற பெரிய நகரங்களிலேகூட தீ
யணைப்பு நிலையம் இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு முத
லமைச்சர் அவர்கள், கீழக்கரையிலோ அல்லது ஏர்வாடியிலோ
அல்லது அந்தத் தொகுதியிலே எங்கேயாவது தீயணைப்பு நிலை
யத்தை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
தீப்பிடித்துக் கொண்டால் 25 கிலோ மீட்டர் என்ற அளவிற்காக
வாவது அவர்கள் இராமநாதபுரம் போகவேண்டும். சாயல்குடி,
சிக்கல் போன்ற இடங்களில்கூட தீயணைப்பு நிலையம் கிடை
யாது. எனவே தயவுசெய்து குறைந்தபட்சம் கீழக்கரையிலே
நீங்கள் ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சாராய சாம்ராஜ்யத்தை அழிப்பதற்காக இந்த அரசு முயற்
சித்து வருவதற்கு நான் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்
கிறேன். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை அழிப்
பதற்காக இன்றைக்கு திரைமறைவிலே வேலை செய்துகொண்
டிருக்கும் அந்த சாராய சாம்ராஜ்யத்தை அடிமட்டம் ஆக்கு
வதற்கு போலீஸ் துறை முன்வரவேண்டும். இல்லையெனில்
மக்கள் அதைப் பொறுத்துக்கொண்டு இருக்க மாட்டார்கள்.
போலீஸ் நம்மிடத்திலேயிருந்தாலும், இன்றைக்கு ஆளுங்கட்சிக்
காரர்களுக்கு அவர்கள் பக்கபலமாக இல்லாமல் எதிர்க்கட்சியிலே
ஏற்கெனவே இவர்களுக்கு ஏதேதோ கொடுத்துக்கொண்டிருந்
தார்களே, அதைப் பெற்றுக்கொண்டதற்காக அவர்களுக்குச்
சாதகமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆளுங்கட்சிக்
காரர்கள் அடக்கப்படுகிறார்கள். எனவே தயவுசெய்து இதை
யெல்லாம் சரிசெய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்
(மணியடிக்கப்பெற்றது).

*திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர்
அவர்களே, 11-29க்கு என்னுடைய பேச்சைத் தொடங்குவதற்கு
நீங்கள் அனுமதித்து இருக்கிறீர்கள், நன்றி. ஆங்கில ஆட்சி
இங்கே நடைபெற்றபோது, அந்த ஆட்சியை நிலைப்படுத்து

வதற்கு எவ்வாறு போலீஸ் இலாக்கா இருக்கவேண்டுமோ,
அவ்வாறு அமைக்கப்பட்டதினுடைய அடிப்படையே இன்னும்
தொடர்ந்து வந்துகொண்டு இருக்கிறது. விடுதலை பெற்ற
நாட்டில் அவர்களுடைய நோக்கும் போக்கும் மாற வேண்டு
மென்று சொல்லுகின்ற சிந்தனையின் அடிப்படையிலே இன்னும்
முழுமையான சீர்திருத்தம் வந்துவிடவில்லை. லண்டன் மாநகரத்
தையும் ஆங்கிலப் பேரரசையும் பின்பற்றி இங்கே வைக்கப்
பட்டிருந்தாலும் கூட, லண்டன் மாநகரத்தில் இருக்கின்ற
போலீஸ்காரர்கள் கையிலே லத்தி என்று சொல்லப்படுகின்ற கம்பு
இருக்காது. அது நமது நாட்டில் இருக்கிற மக்களை அச்சுறுத்து
வதற்கு—தூரத்தே துப்பாக்கியை ஒருவன் கொண்டு வந்தால் கூட
இங்கே இருக்கிறவர் அஞ்சி நடுங்குவார் என்று பாரதியார்
சொன்னாரே அந்த அச்ச உணர்வை ஊட்ட வேண்டும்
என்பதற்காக செய்யப்பட்ட வேலை. அது இன்றும் தொடர்ந்து
வந்து கொண்டிருக்கிறது.

(முற்பகல் 11–30)

லண்டன் மாநகரிலே சர் ராபர்ட் பீல் என்பவர் ஏற்படுத்திய
மிக முக்கியமான சில சீர்திருத்தப் பணிகள் அங்குள்ள போலீ
சாருக்குக் கிடைத்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனால்
லண்டனில் இருக்கிற போலீசாரே பாபி என்று சொல்கிறார்கள்.
அந்த ராபர்ட்டுக்கு பாபி என்று சொல்கிற ஒரு செல்லப்பெயர்
இருந்தது. அதற்குக் காரணம் அவர் நல்லவராக, நண்பராக
நடந்துகொண்டார் என்பது தான். இன்றும் லண்டன் மாநகரில்
இருக்கிற ஒரு போலீஸ்காரரைப் பார்த்தால் வண்டிகள் ஓடிக்
கொண்டிருக்கிற ஒரு நெடுஞ்சாலையிலே ஒரு மூதாட்டி வருவாரா
னால் அத்தனை வண்டிகளையும் நிறுத்தி அந்த மூதாட்டியை
பத்திரமாக அந்தப் பகுதியிலே கொண்டு விட்டு போகின்ற ஒரு
நல்ல குணத்தை இன்றும் நாம் பார்த்துக் கொண்டிருக்கலாம்.
ஆக, ''நான் உங்கள் நண்பன்'' என்று படம் எடுத்தாலும்
கூட இங்கே இருக்கிறவர்கள் நண்பர்களாக இருக்க
முயல வேண்டும். மக்கள் அவர்களை நண்பர்களாக ஏற்றுக்
கொள்ளுகின்ற மனப் பக்குவம் வரவேண்டும். நான் இருவழிப்
பாதையைச் சொல்கிறேன்; ஒரு வழிப் பாதையைச் சொல்ல
வில்லை.

ஆனால் சாதாரணமாகப் பார்க்கும்போது ஒரு கூட்டம் நடந்
தால் கூட அந்தக் கூட்டம் நிலைக்க வேண்டுமென்ற எண்ணத்
தோடு இவர்கள் போகிறார்களா அல்லது அதைக் கலைக்க வேண்டு
மென்ற எண்ணத்தோடு போகிறார்களா என்று சில நேரங்
களிலே ஐயப்பாடு வருகிறது. காரணம் நீங்கள் பார்க்கிறபோது—
They must be trained to manage, not to disperse, கூட்டத்தை
எப்படிக் கலைப்பது என்று சொல்லிக் கொடுப்பதற்குப் பதிலாக
ஒரு கூட்டம் நிலைத்து நிற்க எப்படி அதை அமைதியாக
நடத்துவது அதற்கு எந்த வகையிலே உதவுவது என்று
சொல்லுகிற பயிற்சியே போலீஸ் நண்பர்களுக்கு அதிகமாக இருக்



வேண்டுமென்று நான் கருதுகிறேன். காரணம் ஏதாவது பிரச்ச
னைகள் வருகின்ற நேரத்திலே அவர்கள் எந்த எந்த நடவடிக்கை
கள் எடுக்கிறார்கள் என்பதை எல்லாம் நான் பட்டியல் போட்டுச்
சொல்ல முடியவில்லை என்றாலும் ஒரு சட்டமன்ற உறுப்பினராக
இருக்கிற திரு. உகம்சந்த் அவர்களைக் கைது செய்ய வேண்டு
மென்று சொன்னால் கூட கையை ஒடித்துத்தான் கைது செய்ய
வேண்டுமா? பாராளுமன்ற உறுப்பினர் எவருக்காவது இப்படிப்
பட்ட நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கிறதா என்றுகூட நான்
பார்க்க வேண்டுமென்று நினைத்தேன். எனவே இவைகளைக்
குறிப்பிடுவதற்குக் காரணம் நம்முடைய நோக்கில் சற்று மாறுதல்
ஏற்பட்டால் நல்லது என்பதற்காகச் சொல்கிறேன்.

கறுப்புக் கொடி காட்டுவதைப் பற்றிச் சில நாட்களாக இங்கே பேச்சு நடந்து கொண்டிருக்கிறது. 25 ஆம் தேதி நான்கூட ஆற்காடு தாண்டி, வேலூரில் நடைபெற்ற கூட்டத்திற்குச் சென்றேன். அங்கே, ஆற்காட்டிலே காலையிலே கறுப்புக்கொடி காட்டுவதற்கு என்று, வருகின்ற அமைச்சர் பெருமகனுக்கு தங்களுடைய எதிர்ப்பைக் காட்டுவதற்கு, கறுப்புக் கொடி காட்டுவதற்கு என்று ஒதுக்கப்பட்ட இடத்தில் நின்றுகொண்டு இருந்தவர்களைக் கூட அமைச்சர் வருவதற்கு ஒரு மணி நேரத் திற்கு முன்னாலே எடுத்துச் சென்று ரிமாண்டில் வைத்து விட்டார் கள் வேலூர் ஜெயிலிலே. காட்டுவதற்கு அனுமதிக்கவில்லை. அதன் பிறகு பிரச்சனைகள் அதிகம் வந்திருக்கலாம். நான் அந்த அளவுக்கு மட்டும் சொல்கிறேன்.

அதைப் போலவே நான் கலந்துகொண்ட கூட்டத்திலே ஏதோ பாரதியார் பாட்டில் வரும் என்றேன். உடனே ஒரு பாட்டில் வந்தது. சொன்னதாலே வந்ததோ என்னவோ தெரியாது. ஆக, கூட்டத்திலே சோடா பாட்டில் வீசப்பட்டது. அதை நான் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. பத்திரிகையிலும் பெரி தாகச் சொல்லவில்லை. பாரதியார் பாட்டிலே ஒரு இடத்திலே மாடு வருகிறது என்று சொன்னேன். உடனே மாடு வந்தது. எனவே, பாட்டில் வருகிறது என்றால் பாட்டில் வருகிறது; மாடு வருகிறது என்றால் உடனே மாடு வருகிறது. பாட்டில் வந்தது, மாடு வந்தது. இவை எல்லாம் உண்மை; நடந்தவை. நான் அதைப் பெரிதுபடுத்தவில்லை என்றாலும் சொந்தமாக ஒருவர், கட்சிக்காரர் ஒரு கூட்டத்தை நடத்தி, பேசுகின்ற நேரத்திலே அவர்கள் அமைதியாக கூட்டத்தை நடத்துகின்ற சூழ்நிலைக்கு உதவ வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

இங்கே 25 ஆம் தேதி நடந்த நிகழ்ச்சி பற்றி நான் சொல்ல வில்லை. ஆனால் அதே நாள் மாலையிலே உஸ்மான் ரோட்டிலே நான் இருந்து கொண்டிருந்த கடைக்குப் பக்கத்திலே வசந்த் அன்ட் கோ அடித்து நொறுக்கப்பட்டது. என்னுடைய பெயர் அங்கே பயன்படுத்தப்பட்டது உங்களுக்குத் தெரியும். அது ஒரு புறம் இருக்கட்டும்.

[திரு. குமரி அனந்தன்] [1989 ஏப்ரல் 28

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஊர்வலம் போனபோது அமைச்சர் பெருமக்கள் எல்லாம் போய்க் கொண்டிருக்கிற நேரத்தில் ஒரு ஏ. சி. தலைமையில் 30 கான்ஸ்டபிள்கள் அதற்குப் பாதுகாப்பு கொடுத்தபோது கூட அந்த போர்டு உடைக்கப்பட்டது. நான் இன்று வரை அதைப்பற்றி இந்தச் சட்டமன்றத்திலே பேசவில்லை. பேசாமல் இருக்க வேண்டுமென்றே நினைத்தேன். ஆனால் தொடர்பு இருக்கிற காரணத்தால் இதை மட்டும் சொல்கிறேன். நீங்கள் என்னை அனுமதிக்க வேண்டும்.

அதைப் போல அதனுடைய கிளை ஒன்று இராயபுரத்தில் இருக்கிறது. அதனுடைய போர்டும் அடித்து உடைக்கப்பட்டது. இன்று அரசாங்கம் எந்த வகையிலே அதை நோக்குகிறது என்பது அல்ல எனக்குப் பிரச்சனை. இவை எல்லாம் ஒன்றாக தொடர்பாக சங்கிலியாக வந்துகொண்டிருக்கின்றன. ஒன்றனுடைய சிலரை கைது செய்திருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். நல்ல நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை உண்டு. அதற்கு மேலே நான் எதையும் பேச விரும்பவில்லை.

போலீஸ் மக்களை விட்டு விலகிச் சென்று கொண்டிருக்கக் கூடாது. ஒரு இடத்திலே ஒருவன் சட்டைப் பையிலிருந்த காசை எடுத்துவிட்டான் என்றால் அவனைத் துரத்தி ஓடுகிறான். இழந்தவன் எடுத்தவனை நோக்கி ஓடிக்கொண்டே இருக்கிறான். குறுக்கே ஒரு போலீஸ் வந்தது என்றால் அவனுக்கு நம்பிக்கை வரவேண்டும். இப்போது குறுக்கே போலீஸ் வந்துவிட்டது என்றால் அவனைப் பிடிக்கவே முடியாது என்ற அவநம்பிக்கை ஏற்படுகிறது. இன்னும் சில இடங்களில் பார்த்தால் "The area of operation" என்று வைத்திருக்கிறார்களாம். இந்த சங்கிலி அறுப்பவர்கள், சட்டைப் பையிலிருந்து காசு எடுப்பவர்கள் இவர்கள் இன்னின்ன இடங்களிலே இன்னின்ன வகையிலே செயல்படுவார்கள். இன்னின்னார் செயல்படுவார்கள் என்று காவல் துறைக்குத் தெரியும் என்று சொல்கிறார்கள்.

அவர்கள் விரும்பினால் பிடித்து விடுகிறார்கள். விரும்பவில்லை என்றால் பிடிப்பது இல்லை. உதாரணமாக இரண்டு நாட்களுக்கு முன்பு வண்ணாரப்பேட்டையிலே ஒரு இலட்சத்து அறுபதினாயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டு போன ஒருவரை பட்டப்பகலிலே நட்ட நடுவீதியிலே அரிவாளால் வெட்டி விட்டு, அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு போய் இருக்கிறார்கள். எடுத்துக்கொண்டு போன ஒரு சில மணி நேரத்தில், அல்லது ஒரு நாளிலே அந்தக் குற்றவாளி கைது செய்யப்பட்டு விட்டான். அதற்குக் காரணம் என்ன என்று விசாரிக்கும்போது, ஊக்க போனஸ் கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். இது குறித்து



1989 ஏப்ரல் 28] [திரு. குமரி அனந்தன்]

விசாரிக்க வேண்டும். இது உண்மையா என்பது எனக்குத் தெரியவில்லை. இது ஒரு தகவல். இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால் பல கேஸ்கள் அப்படியே இருந்து கொண்டு இருக்கின்றன.

ஒரு உதாரணம் சொல்கிறேன். இன்று காலையிலே கூட பத்திரிக்கையிலே வந்தது. சிதம்பரத்தில் டவுன் பஸ்ஸிலே போய்க்கொண்டிருந்த 26 வயதுடைய வாலிபனை வெட்டித் தலையைத் தனியாக எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். பிரேத பரிசோதனை கூட தலை தனியாகவும், முண்டம் தனியாகவும் செய்யவேண்டிய அளவுக்கு ஒரு பஸ்ஸிலே 10 பேர் சேர்ந்து வெட்டி இருக்கிறார்கள். அவர்களிலே இரண்டு பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

அதைப்போலே எனக்கு இன்று ஒரு கடிதம் வந்திருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் கிளிக்காடு என்ற கிராமத்தில் பிச்சுமணி என்ற வேலாயுதம் பஸ்ஸிலே போய்க் கொண்டிருந்த நேரத்திலே 15 எதிரிகள் உள்ளே புகுந்து கழுத்தைச் சுருக்கி இழுத்து வெட்டிக் கொலை செய்துவிட்டுத் தப்பி இருக்கிறார்கள். பிறகு அவர்களே சென்று அரியலூர் நீதிமன்றத்திலே ஆஜர் ஆகி இருக்கிறார்கள். பிறகு மூன்று நாட்களிலே—அதாவது சில நாட்களிலேயே —ஜாமீனில் வெளியே வந்திருக்கிறார்கள். அவர்களிலே ஒருவர் அந்த ஊரிலேயே சுற்றிச்சுற்றி வருகிறாராம். அங்கே கணவனை இழந்த பெண்மணி இருக்கிறார். அவருடைய மகன் கொல்லப்பட்டிருக்கிறான். இன்னும் இரண்டு மகன்கள் வயலிலே வேலை செய்ய வேண்டும். அந்தப் பெண்மணியிடம் நீங்கள் ஒழுங்காக இல்லாவிட்டால் உன்னுடைய மற்ற மகன்களுக்கும் இதே கதி வரும் ஜாக்கிரதை என்று அச்சுறுத்தியிருக்கிறார்கள். இது நடந்தது கிளிக்காடு என்ற ஊரில். அது திருச்சி மாவட்டம். எனவே விரைவாகக் காரியங்களை செய்யவேண்டிய இடத்தில் காவல் துறையினர் ஏன் மெதுவாகப் போகிறார்கள் என்பதற்காகத்தான் இவற்றை எல்லாம் நான் சொல்கிறேன்— இங்கே நேரத்தோடு போட்டியிட்டுப் போகவேண்டும் என்ற காரணம் எனக்குப் புரிகிறது. எனவே, நான் செய்திகளை மட்டும் தொட்டுத் தொட்டு போய்க்கொண்டிருக்கிறேன், விளக்கங்களைச் சொல்லாமல்.

முதல் தகவல் அறிக்கை என்று சொல்வது எழுதப்படுவதில்லை. பல இடங்களில் புகார் கொடுக்கப் போனால்கூட அதை எழுதுவதில்லை. சான்றாக ஒன்றிரண்டை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்தில் நடந்திருக்கிற ஒரு செய்தி. பக்கத்திலே ஆழ்வார் தோப்பு என்ற ஊரில் அடிக்கடி ஆடுகள் களவு போய்க் கொண்டே இருக்குமாம். எத்தனை ஆடுகள் களவு போனாலும், அந்தக் காவல் நிலையத்திற்குச் சென்று சொன்னால் அவர்கள் எஃப். ஐ. ஆர். என்று

[திரு. குமரி அனந்தன்] [1989 ஏப்ரல் 28

சொல்கின்ற அந்த முதல் தகவல் அறிக்கையை எழுதுவ
தில்லை. அறிக்கைகளையோ, தகவல்களையோ பற்றி அவர்கள்
கவலைப்படாமல் முதல் தகவல் அறிக்கை என்பதில் அந்த முன்
பகுதியிலே மட்டும் மிகுந்த அக்கறையோடு இருப்பார்களாம்.
எனவே அந்த எஃப். ஐ. ஆர். அவர்கள் எழுதுவதே இல்லை.
ஒவ்வொரு தடவையும் இப்படி ஆடுகள் களவு போய்க்கொண்டே
இருந்தது. ஒரு நாள் ஒரு வேன் குறும்பூரில் ஒரு பிரியாணிக்
கடை முன்னாலே நின்று கொண்டிருந்திருக்கிறது. திடீரென்று
அந்த வேன் உள்ளே இருந்து ஆடுகள் கனைக்கிற சத்தம் கேட்
டிருக்கிறது. என்ன என்று பார்த்தால் ஆழ்வார்த்தோப்பு ஆடு
களிலே சில அங்கே இருந்திருக்கின்றன. உடனே அதை வைத்துக்
கொண்டு புகார் செய்திருக்கிறார்கள். அப்படி புகார் செய்த
வுடனே அந்தக் காவல் நிலைய அதிகாரி என்ன செய்திருக்கிறார்
தெரியுமா? யார், யாருக்கெல்லாம் ஆடுகள் களவு போயிற்றோ
அவர்கள் அத்தனை பேரையும் காவல் நிலையத்திற்கு அழைத்து
வந்து ஆளுக்கு 200 ரூபாய் கொடுத்து இதைப் பற்றிப் பேசக்
கூடாது என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். அப்படி என்றால்
அந்த ஆடு களவு போனதற்கும், இந்தக் காவல் துறைக்கும் எந்த
வகையில் எல்லாம் சம்பந்தம் இருக்கிறது என்று அங்கேயுள்ள
மக்கள் எல்லாம் பேச மாட்டார்களா? நான் இங்கே இவற்றை
எல்லாம் குறிப்பிடுவது குற்றம் சாட்டுவதற்காக அல்ல; குற்றத்தி
லிருந்து விடுபட வேண்டும் என்பதற்காகத்தான்.

அரசு என்று சொன்னால் போலீஸ் என்று சொல்கிற ஒரு
மனப்பான்மை நம்மிடையே கூட வளர்ந்திருக்கிறது. அரசாங்
கத்தின் மீது கோபம் வருகிறது என்றால் பஸ் எரிகிறது, ஏனென்
றால் பஸ் அரசு போல; அரசாங்கத்தின்மீது கோபம் வந்தால்
இரயில் எரிகிறது, ஏனென்றால் இரயில் அரசு போல; அதைப்
போல சில நேரங்களில் அரசாங்கத்தின்மீது கோபம் வந்தால்
போலீஸ் மீது கூட கல்லெறிகிறார்கள். இப்படி ஒரு மனப்
பான்மை இருக்கின்ற காரணத்தால் அவர்கள் நல்லது செய்
தாலும் இந்த அரசுக்கு வரும்; அவர்கள் தீயது செய்தாலும்
இந்த அரசுக்குத்தான் அது வரும்.

அந்தக் காவல் நிலையம் இன்னும் புகழ் பெற்றதாக இருக்கி
றது. பக்கத்திலே ஒரு ஊர். அங்கே ராமலட்சுமி என்கிற பெய
ருடைய பெண்; மாசானமுத்து என்று சொல்லப்படுகிற ஒரு இளை
ஞன்; இரண்டு பேருக்கும் காதல். அந்தப் பெண்ணிற்குப் பத்
தொன்பது வயதுக்கு மேல் ஆகிவிட்டது. குறும்பூரிலே ரிஜிஸ்டரார்
ஆபீசிலே போய் திருமணம் செய்துகொண்டார்கள். காதல்
வாழ்க்கையிலே அடி எடுத்து வைத்திருக்கிற காரணத்தால்
அவர்கள் தேன் நிலவுக்காக அச்சத்தோடே சென்னைக்கே
வந்துவிட்டார்கள். பெற்றோருக்குத் தெரியாமலே நடைபெறுகிற



1989 ஏப்ரல் 28] [திரு. குமரி அனந்தன்]

அந்தக் களவு முறையிலே எழுந்தது இந்தக் காதல். அக்காலத்
திலே காந்தர்வக் காதல் என்று சொல்வார்கள். ஆனால் இது
முறைப்படி பதிவு செய்யப்பட்டது. அவர்கள் சென்னைக்கு
வந்துவிட்டார்கள். மாஞ்சோலைக்குப் போனார்கள்.

பெண்ணினுடைய தந்தை இதை விரும்பாத காரணத்தால்
காவல் நிலையத்திலே புகார் கொடுத்தார். புகார் கொடுத்தார்
என்றால் அவர்கள் வாங்கிக் கொள்ளவில்லை. குறிப்பிலே
எழுதிக்கொள்ளவில்லை, எஃப். ஐ. ஆர். போடவில்லை. அந்தக்
காவல் நிலைய அதிகாரி மாஞ்சோலைக்குப் போனார். இரண்டு
பேரையும் அழைத்து வந்துவிட்டார். காவல் நிலையத்திலே
வைத்து அவர்கள் செய்த கொடுமை இருக்கிறது பாருங்கள்,
இங்கே நம்முடைய பாண்டியனார் அவர்கள் பேசும்போது குறிப்
பிட்டார்களே, அந்தக் கொடுமைகளை எல்லாம் விட மிகக் கடுமை
யான கொடுமைகளைச் செய்து அந்தப் பெண்ணினுடைய தந்
தையைக் கூப்பிட்டு, இந்தப் பெண் கதறிக் கதறி, அழ, அழ,
கண்ணீர் வடிக்க, வடிக்க தந்தையிடம் ஒப்படைத்துவிட்டார்.
அவனைக் கூப்பிட்டார். அதாவது அந்தக் காதலனைக் கூப்பிட்
டார். ஒரு 150 ரூபாயைக் கையிலே கொடுத்து ஸ்ரீவைகுண்டம்
பக்கத்திலேயே வரக்கூடாது, எங்கேயாவது ஓடிவிடு என்று
சொல்லி அனுப்பி விட்டார்கள். பின்னர் நீதிமன்றத்திற்குப்
போனார்கள். சர்ச் வாரண்ட் வந்தது. நாட்கள் பல ஆகியும்
கூட இந்தப் போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை. நடவடிக்கை
எடுக்கவில்லை என்பது மட்டுமல்ல. நாங்கள் தேடினோம் இப்
போது கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மீண்டும்
இப்போது வழக்கு மன்றத்திற்குப் போக இருக்கிறார்கள். இவைக்
குறிப்பிடுவதற்கு காரணம் இன்றுவரை எப். ஐ. ஆர். போட
வில்லை. இவ்வளவு காட்சிகள் ஒரு பக்கத்திலே நடந்துகொண்டி
கின்றன. இதை நினைத்துப் பார்க்கவேண்டும் என்பதற்காகத்
தான் சொல்கிறேன். அரசியல் காரணங்களுக்காக பல இடங்
களிலே தகராறு நடக்கிறது என்பது உண்மை. இரண்டே
இரண்டு நாள் கட்டிக்காட்டிவிட்டு செல்வேன். பழனிக்கு பக்கத்
திலே இருக்கின்ற ஒரு ஊரில், பழனி வட்டம். அங்கு என் அருமைக்
குரிய தோழர் முருகானந்தம் என்று சொல்லப்படுகின்றவர் அவர்
அரசியல் காரணத்திற்காக பிறருடைய தூண்டுதலின் காரணமாக
அடிக்கப்பட்டிருக்கின்றார். ஏன் என்று கேட்டு மகனை விடு
விக்கப் போன தாயார் ராமாயி என்பவரை அடித்திருக்
கின்றார்கள், போலீஸ் ஸ்டேஷனிலே.

(முற்பகல் 1-40)

அதைப் போலவே, நாப்பாளையம் என்று சொல்கின்ற
பக்கத்திலே இருக்கின்ற இந்த ஊர், பொன்னேரி தாலுக்கா
விலே இருக்கின்ற நாப்பாளையம், அந்த நாப்பாளையத்திலே
உள்ள தோழர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாதவன்,
காந்தி என்று சொல்கின்ற இரண்டு பேர்களையும் அரசியல்

[திரு. குமரி அனந்தன்] [1989 ஏப்ரல் 28

நோக்கத்துநாடு, தேர்தல் நேரத்திலே ஒருவருக்கொருவர் வந்த
தகராறிலே வெட்டியிருக்கிறார்கள். ஸ்டேன்லி மருத்துவக்கல்லூரி
யிலே போய் அவர்கள் மருத்துவமும் பெற்றிருக்கின்றார்கள் வெட்
டியவர்கள் மீது 307 என்று சொல்கின்ற வழக்கும், கொலை செய்ய
முயன்றதாக வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால்
அவர்கள் ஜாமீனிலே வெளியிலே வந்து இப்போது மிரட்டிக்
கொண்டிருக்கின்றார்கள். இந்த தோழர்களை விரட்டிக்கொண்
டிருக்கின்றார்கள். இந்த சூழ்நிலை இருந்துகொண்டிருக்கின்றது.
இங்கே இருக்கின்ற அதிகாரிகளும், மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களும் இவைகளுக்கெல்லாம் பரிகாரம் தேடவேண்டுமென்ப
தற்காக சொல்லப்படுகிறதே தவிர, பழி போடவேண்டுமென்ற
நோக்கத்தோடு சொல்லப்படுவதில்லை.

கள்ளச் சாராயம். அதற்கு நான் இப்போது வந்துவிட
வேண்டும். இடையிலே உள்ள பல செய்திகளை விட்டுவிடுகிறேன்.
ஏனென்றால் மணிப்பொறி ஓடிக்கொண்டிருக்கிறது அல்லவா?
கள்ளச்சாராயத்திற்கு வந்தார்கள் என்று சொன்னால், என்
னுடைய தொகுதியிலே சாத்தான்குளம் தொகுதியிலே விஜய
ராமபுரம் என்று சொல்கின்ற ஒரு இடம் இருக்கிறது. அந்த
இடத்திலே ஒரு பெண்மணி தொடர்ந்து கள்ளச்சாராயம் விற்
கிறாராம். ஒரு நிரபராதியைப் பிடித்து உள்ளே போடவேண்டும்
என்று, கேஸ் கொடுக்க வேண்டுமோ, வழக்கு தொடுக்க
வேண்டுமோ—குற்றம் ஒன்றும் செய்யவில்லை என்று சொன்னாலும்
—ஒருவர் திருச்செந்தூருக்கு போய்க்கொண்டிருந்தபோது, அந்த
அப்பாவி மனிதனை, ஒரு நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவரை நீங்
கள்தான் கள்ளச்சாராயம் காய்ச்சினீர்கள் என்று சொல்லி, அவர்
மீது வழக்குப்போட்டுவிட்டதால், ஊரே திரண்டு உண்ணாவிர
தம் இருந்து கொண்டிருக்கிறது. ஊரே திரண்டு உண்ணா
விரதம் இருந்து, எனக்கும் கையெழுத்துப்போட்டு மனுவை
அனுப்பியிருக்கின்றார்கள். எனக்கே அனுப்பியிருக்கின்றார்கள்
என்றால், அதிகாரம் இருக்கின்றவர்கள் இடத்திற்கும் அனுப்பி
யிருப்பார்கள். அதை நான் நிச்சயப்படுத்தி சொல்லமுடியாது.
இருந்தாலும் அனுப்பியிருப்பார்கள். அதன் மீது நடவடிக்கை
எடுக்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.
இப்போது கள்ளச்சாராயம் எங்கெங்கே இருக்கிறது என்றெல்
லாம் சொன்னால், நேரம் போதாது. அதிலேயே நேரம் போய்
விடும்.

எங்களுடைய பகுதியிலே நாசரேத் தொகுதியில் பஸ்
ஸ்டேண்டுக்கு அருகிலே, ரெயில்வே நிலையத்திற்கு அரு
கிலே, பள்ளிக்கூடத்திற்கு அருகிலே, வயல் ஓரத்திலே, வரப்பு
ஓரத்திலே, பெருக்கெடுத்தோடுகின்ற ஆற்று ஓரத்தே, எங்கும்
இருக்கிறது. இங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருப்பது
போல கள்ளச்சாராயம் நிறைந்திருக்கிறது. எனவே நீங்கள்
கண்டுகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.



1989 ஏப்ரல் 28] [திரு. குமரி அனந்தன்]

சொல்லவேண்டுமென்று சொன்னால்,
சான்றாக ஒன்று சென்னையிலே, பல இடங்களிலே
இராயபுரம் தொகுதியிலே, போடாதீர்கள் என்று சிலர்
குப்பைத் தொட்டியிலே குப்பை யாரும் குப்பை போட்
மிரட்டிக்கொண்டிருக்கின்றார்களாம். ஏனென்றால் குப்பைத் தொட்டி
டால் தொலைத்துவிடுவோம், வைத்து விற்கவேண்டியிருக்
யிலே நாங்கள் கள்ளச்சாராயம் தொட்டியிலே யாரும் குப்பை
கிறது. எனவே குப்பைத் சொல்கின்றார்கள்.
போடக்கூடாது என்று பல இடங்களிலே இருக்கின்றார்களாம்.
சொல்வது மட்டுமல்ல 10, 15 பேர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்
பழக்கமான போலீஸ்காரர்கள் வந்தால் அவர்கள் எப்படிப்பட்ட
களாம். புதிதாக யாரும் வந்தால், விசில் அடிப்பார்
வர்கள் என்று தெரியாத காரணத்தினாலே குப்பைத்
களாம். விசில் அடித்த உடனே 10, 15 பேர்கள் பாக்கெட்டுகளையெல்
தொட்டியிலே இருக்கின்ற இந்தச் சாராய இப்படி நடந்து
லாம் எடுத்துக்கொண்டு ஓடிவிடுவார்களாம். தெருமுனைகளைக்
கொண்டு இருக்கிறது. இராயபுரத்திலே தேவைப்படுமானால்
கூட சொல்கின்றார்கள். உங்களுக்குத் சொல்கிறேன்.
நான் உடனடியாக உங்களுக்கு உதவுவதற்குச் தெரிந்தும் இருக்
இது எல்லாம் உங்களுக்குத் தெரியாதது அல்ல. நம
கும். சில இடங்களில் நடவடிக்கை எடுத்திருப்பார்கள். மீனாட்சியம்மன்
சிவாயச்செட்டித் தெரு, நரசய்யர் தெரு, சப்ளை நடந்து
பேட்டை இந்த இடங்களிலே எல்லாம் ரெகுலர் சொல்கின்றார்கள்.
கொண்டிருக்கிறது என்று அவர்கள்

கறாராக இருந்தால், கண்
அடுத்து கலால் துறையிலே சிலர் லோகலிலே இருக்
டிப்பாக இருந்து நடவடிக்கை எடுத்தால், இடம் மாற்
கின்ற போலீசே பெருமுயற்சி எடுத்து அவர்களை பேர்வழிகளோடு
றம் செய்கிறதாம். இவர்களே கள்ளச்சாராய கொடுமைகள்
சேர்ந்து இவர்களை இடமாற்றம் செய்கின்ற இவை
நடந்து கொண்டிருக்கின்றன என்று சொல்கின்றார்கள். சொல்கிறேன்.
களையெல்லாம் தடுக்க வேண்டும் என்று அவர்கள்
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மகாநாட்டில் முதல்வர் தெரி
சொன்னதாக நான் கேள்விப்பட்டேன். நேரடியாகத் கள்ளச்
யாது. எந்தெந்த இடங்களிலே இப்படிப்பட்ட பிடிக்கப்படுகிறதோ
சாராயம் விற்கப்படுகிறது என்று கண்டு பேர்களை
அந்த இடத்திலே இருக்கின்ற அதிகாரிகள் அத்தனை 'தே மஸ்ட் பி
யும் அதற்கு பொறுப்பாளர்கள் ஆக்கவேண்டும். பொறுப்பாளர்களாக ஆக்
ஹெல்ட் ரெஸ்பான்சிபிள்'. அவர்கள் நமக்கு இருக்கிறது.
கப்பட்டால் இது நிற்கும் என்ற நம்பிக்கை மக்கள்
இன்னும் ஒன்று. ஊர் மக்களுடைய ஒத்துழைப்போடு அவர்
குழுக்களைப் போட்டு இவர்களோடு ஒத்துழைக்க வைத்து, கொண்டு
களும் சேர்ந்து இந்த சமுதாயத்திலே சீர்திருத்தம் இது
வருவதற்கு வழி காணவேண்டும். அப்போதுதான்
நிற்கும்.

[திரு. குமரி அனந்தன்] [1989 ஏப்ரல் 28

மது தவறான வழியிலே பயன்படுத்தக்கூடாது.
தவறான வழியிலே பயன்படுத்தக்கூடாது மாது
அறிந்த ஒரு உண்மை. அதுவும் போலீஸ் என்பது உலகம்
மான ஒன்று. உதாரணத்திற்கு நிர்வாகத்திலே முக்கிய
மன்றத்திலே இருப்பதை நான் சொல்கிறேன். நீதி
தயவு செய்து நான் இழுக்கிறேன் என்று யாரும்
மாதுவையும் நினைத்துக்கொள்ளாதீர்கள். அந்த மதுவையும்
தங்கள் வைத்து, அந்த ஆட்டோ சங்கர்கள் போலீசை
றைக்கு யார் பக்கத்திலே இழுத்துகொண்டிருக்கின்றார்கள். இன்
சில மூலம் நீதி பெறுவது? நமக்குத் தெரிந்து வெளியிலே
தெரியாதவர்கள் மனிதர்கள் இருக்கின்றார்கள். இன்னும் வெளியிலே
நாம் எத்தனையோ பேர்கள் இருக்கின்றார்களாம்.
நாம் எப்படி அவர்களைக் கண்டுபிடிக்கப்போகிறோம். எனவே
தாயத்திலே சிந்தித்துப்பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். சமு
பக்கம் நம்முடைய கடமை என்ன? நாணயத்திற்கு இரு
நாம் இருக்கிறது என்பது உண்மையல்லவா? மறுபக்கத்தை
களுடைய சொல்வதாக இருந்தால், போலீஸ் மிகச் சிரமப்பட்டு தங்
முன்னாலே கடமையைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.
போல பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்
அவர்கள் வாரத்திற்கு 7 நாட்கள் உண்டு என்றால் அந்த
7 நாட்களும் வேலை செய்கிறார்கள். இத்தனை மணி நேரம்
தான் அவர்களுக்கு வேலை என்று குறிப்பிட்டுச் சொல்ல முடி
யாது. அந்த அளவுக்கு அவர்கள் வேலை செய்கிறார்கள். அப்
படி வேலை செய்தாலும் 'ஆப்' என்று சொல்லுகிற விடுமுறையை
அவர்கள் எடுத்தால், அந்த நாளைக்கு அவர்களுக்கு எந்த
விதமான ஊதியமும் அதிகமாகக் கொடுப்பதில்லை. 7 நாட்களும்
வேலை செய்தால் தான் முழுச் சம்பளம் உண்டு. எனவே, ஒரு
நாள் விடுமுறை எடுப்பதாக இருந்தால், 10 ரூபாய் மட்டும்
கொடுக்கப்படுவதாகச்சொல்கிறார்கள். அதுவும் ராஜாஜி காலத்
தில் இருந்து கொடுக்கப்பட்டு வருகிறதாம். இதுகுறித்து ஒரு
வர் சொன்னபோது நானே ஐயப்பட்டேன். நானே அதுபற்றி
உண்மையா என்று கேள்விகேட்டேன். ஆகவே, அதை இன்னும்
உயர்த்தாமலா இருப்பார்கள் என்கிற கேள்வியை இங்கேயும்
நான் கேட்கிறேன்.

அடுத்து, மத்திய அரசு ஊழியர்களுக்குரிய ஊதியத்தை
இங்கேயும் கேட்டு வருகிறார்கள். இன்றைக்கு சென்ட்ரல்
சி.ஆர்.பி. கான்ஸ்டபிள் பெறுகிற அடிப்படைச் சம்பளம்
ரூபாய். 900. ஆனால் மாநிலத்தில் இருக்கிற ஒரு கான்ஸ்டபிள்
பெறுகிற சம்பளம் ரூபாய் 505. சி.ஆர்.பி. சப்-இன்ஸ்பெக்டர்
வாங்குகிற சம்பளம் இந்த மாநிலத்தில் பணியாற்றுகின்ற
டி.எஸ்.பி. பெறுகிற சம்பளத்திற்கு சமம் என்று கூறுகிறார்கள்.
அங்கேயுள்ள சப்-இன்ஸ்பெக்டருக்கு சம்பளம் 1,400
ரூபாய் என்று சொல்கிறார்கள். இங்கே டி.எஸ்.பி.-க்கே
1,360 ரூபாய்தான் சம்பளம் என்று சொல்கிறார்கள். நான்
சொல்லுகின்ற எண்களில் ஒன்றிரண்டு வித்தியாசம் இருக்கலாம்.



1989 ஏப்ரல் 28] [திரு. குமரி அனந்தன்]

அதை பொருட்படுத்த வேண்டியதில்லை. ஆனால் இந்த வேறுபாடு
மாறுபாடு குறைக்கப்படவேண்டும் என்பது தான் நான் கூற வந்த
கருத்து. அவர்களுக்கு மத்திய அரசு ஊழியர்கள் பெறுகின்ற
சம்பளம் வேண்டும். ஆகவே, நான் இங்கே சொல்லியுள்ள
புள்ளிவிவரத்தில் ஒருசில தவறுகள் இருக்குமேயானால் அதை
அவ்வளவுதூரம் பொருட்படுத்த வேண்டாம். நான் சொல்ல
வந்ததன் நோக்கம் என்ன என்று புரிந்துகொண்டு நடவடிக்கை
எடுத்தால்போதும்.

அடுத்து, ஊர்வலம் போகிறவர்கள், நினைவு நாளை முன்
விட்டு மாலையிடப் போகிறார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சி
களை அரசியல் கட்சிகள் நடத்துகின்றபோதும் சரி, பெரிய தலை
வர்கள் வருகிறபோதும் சரி அப்போதெல்லாம் போலீஸ்காரர்
கள் காலையில் 5 மணிக்கே கூட வேலைக்கு வந்துவிட வேண்டும்
அப்போது அவர்களுக்கு மொபிலைசேசன் அலவன்ஸ் என்கிற
பெயரில் 6 ரூபாய் கொடுக்கிறார்கள். இப்போதும் 6 ரூபாய்
தான் கொடுக்கிறார்கள் என்று சொன்னபோது என்னால் நம்ப
முடியவில்லை. இன்னொருவர் அதுபற்றி குறிப்பிடும்போது இந்த
6 ரூபாயை கூட உடனே கொடுப்பதில்லை, போன வருடம்
மார்ச் மாதத்திற்கான தொகையை இந்த வருடம் மார்ச்சில்
தான் கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டபோது நான் ஆச்
சரியப்படுகிறேன்.

அதுபோல அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற கிட்ஸ்,
யூனிபாரம் மற்றும் ஷூஸ் எல்லாம், 1988–89 ஆம் ஆண்டுக்
கானவற்றை எல்லாம் இதுவரை கொடுக்கவில்லை. அதுமட்டு
மல்ல, 1983 ஆம் ஆண்டுக்கு கொடுக்கப்பட வேண்டியதே
கொடுக்கப்படவில்லையாம். அதுவே இப்போது தான் கொடுக்
கப்பட்டுள்ளதாம். ஆக, இன்னும் கூட 1988–89 ஆம் ஆண்டுக்
கான யூனிபார்ம் கொடுக்கப்படவில்லை என்று சொல்லியிருக்
கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பல காவல் நிலையங்களில் எழுதுபொருளே
இல்லை. யாராவது புகார் கொடுப்பதற்காக போகிறவர்
களிடம் இரண்டு கொயர் பேப்பர், இங்க் பாட்டில்
போன்றவற்றை வாங்கி வா என்று சொல்கிறார்
கள். சென்னையைப் பொறுத்தவரையில்,
இத்துறையில் ஸ்டோரேஜ் டிப்பார்ட்மெண்ட் ஒன்று இருக்கிறதாம்.
அதில் பொறுப்பாளராக இருப்பவர் எவ்வளவு குறைவாக காவ
லர்களுக்கு கொடுக்கிறாரோ அதற்கு தகுந்தவாறு அவருக்கு
அவார்ட் உண்டாம். அவார்டை வாங்குவதற்காகவே, பொறுப்
பில் இருக்கின்ற அவர் இவ்வாறு குறைத்துக் கொடுக்கி
றாராம். ஆக, ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் ஒரு ரைட்
டர் இருப்பார், ஆனால் ரைட்டிங் பேப்பர் இருக்காது. ஆகவே,
காவல் நிலையத்தில் இருக்க வேண்டிய டைப்ரைட்டர் மெஷின்,

[திரு. குமரி அனந்தன்] [1989 ஏப்ரல் 28

டைப் அடிக்கிறவர் போன்றவற்றைப் பற்றி கேட்க வேண்டிய அவசியமேயில்லை. அப்படி அங்கே யாரும் இல்லை. ஆக, எப்படி எப்படி எல்லாம் அவர்கள் சிரமப்படுகிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்து, இங்கே குற்றப் பிரிவு போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். நாங்கள் போய் வருகின்ற வழியில் இருப்பதால் அடிக்கடி பார்க்கிறோம். திருவல்லிக்கேணியில் டி-1 போலீஸ் நிலையத்தில் கிரைம் பிரான்ச் என்கிற பிரிவு இருக்கிறது. அங்கே 6'க்கு 4'ல் ஓர் இடம் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த இடத்திலே 10 கான்ஸ்டபிள்கள் இருக்கிறார்கள். இரண்டு ஹெட் கான்ஸ்டபிள்கள் இருக்கிறார்கள். இரண்டு எஸ்.ஐ. மற்றும் ஓர் இன்ஸ்பெக்டர் இருக்கிறார். இத்தனை பேரும் அந்த 6க்கு 4ல் இருந்து பணியாற்றுகிறார்கள். அது மட்டுமல்ல, அண்ணா சதுக்கத்திலுள்ள கிரைம் பிராஞ்சில் உள்ளவர்களுக்கு இடம் இல்லையென்று சொல்லி அவர்களும் இங்கே வருகிறார்கள். இந்தக் குறுகிய இடத்தில் நிற்கக் கூட இட வசதியில்லை. அது மட்டுமல்ல, வாகன வசதியில்லை.

(முற்பகல் 11-50)

அடுத்து, டிராபிக்கை எடுத்துக்கொண்டால், சென்னையிலே அவர்கள் ஒலியெழுப்புகின்ற சத்தம் இருக்கிறதே அந்த சத்தம் செவிப்பறைகளை தாக்கி செவிடு ஆக்குகின்ற அளவுக்கு இருக்கிறது. இதன் காரணமாக நரம்பு தளர்ச்சி நோய் வரும் என்பதால் அதனை தவிர்க்கப்பல்வேறு சட்டங்களைக்கூட போட்டு விட்டோம். இவர்கள் எழுப்புகின்ற ஒலி அலறலில் செவிப்பறைகள் பாதிக்கப்படுகின்றன. ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு ஒருவர் சொல்கிறார், 'இவ்வளவு ஒலி எழுப்பியும் கூட ஓரம் ஒதுங்க பார்ட்டேன் என்கிறார்களே' என்று இவைகளை எல்லா வகையிலும் ஒரு காம்பிரெஹென்சிவ் ஆக, கோவார்டினேட் பண்ணி, ஒருங்கிணைந்து, நல்ல முறையில் எபர்ட் எடுத்து நடவடிக்கையை முடுக்கி விட வேண்டும். இன்றைக்கு ஒரு பல்லவன் வண்டி ஓரிடத்தில் நின்று கொண்டிருக்கிறது என்று சொன்னால் பக்கத்திலேயே பட்டுக்கோட்டை அழகிரி வண்டி போய் நிற்கும். பின்னாலே வரிசையாக மற்ற மற்ற வண்டிகளைக் கொண்டு போய் நிறுத்துகிறார்கள். சாலையில் செல்கின்ற எங்களைப் போன்றவர்களும், மாருதி போன்ற கார்களிலே போகின்றவர்கள் எல்லாம் அவர்கள் பார்வைக்கு பூனைகள் மாதிரி போலும். அவர்கள் பெரிய வண்டிகளை ஓட்டிச் செல்கின்ற நேரத்தில் எங்களை எல்லாம் அவர்களுக்குப் புழுக்களாய், பூச்சிகளாய் தெரிகிறது. அவர்கள் இன்றைக்கு ஒலியை அலற விட்டுவிட்டு செல்வதைப் பார்த்தால் பயங்கரமாக இருக்கிறது. அந்த அளவுக்கு அவர்கள் அடித்துக் கொண்டுபோய்க் கொண்டிருக்கிறார்கள், இவைகளைத் தடுக்க வழி இருக்கிறதா என்று பார்த்தால் அங்கே கான்ஸ்டபிள்கள் போதாது. டிராபிக் கான்ஸ்டபிள்கள் போதாது. வேகத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.



1989 ஏப்ரல் 28] [திரு. குமரி அனந்தன்]

சில மணல் லாரிகள், குடி தண்ணீர் கொண்டுபோகிற லாரிகள் போகிற போக்கைப் பார்த்தால், ஒதுங்குங்கள், இல்லையென்றால் குழிப்பாட்டி புதைத்து விடுவோம், ஏனென்றால் தண்ணீரும் உண்டு, மணலும் உண்டு என்று சொல்வதைப் போல இருக்கிறது. அந்த வேகத்திலே போகிறது தண்ணீர் லாரியும், மணல் லாரியும். எவ்வளவு வேகத்திலே போகிறார்கள். எங்கேயாவது டேஞ்சர் லைட் என்று சொல்லுகிறார்களே, பின்னாலே இருக்கிற சிவப்பு விளக்கு, அது இருக்கிறதா என்றால் இல்லை. நமது மாண்புமிகு முதல்வராக இருக்கின்ற கலைஞர் அவர்கள்கூட எதிர்பாராத விதமாக ஒரு காலத்திலே ஒரு ஆபத்திலே, ஆட்பட்டு, நல்லவேளையாக அவர்கள் பிழைத்தார்கள் என்று சொல்லுகிறபோது, அதிலே மகிழ்ச்சி என்னைப் போன்றவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் அந்தக் காலத்திலே கடுமையான பல சட்டங்களைப் போட்டார்கள். எங்கே எங்கே சிவப்பு விளக்கு எரிய வேண்டும் ஒரு பெரிய வாகனத்திலே என்று சொன்னார்கள். இப்போது அப்படியில்லை. ஒரு பெரிய காட்டுக்குள்ளே போவது போல இருக்கிறது. காண்டா மிருகம்போல லாரிகளும், பஸ்களும் உறுமிக்கொண்டு போக, திடீர் திடீரென்று ஆட்டோ ரிக்ஷாக்கள் செடிகளுக்குள் வண்டுகள் போவதுபோல குறுக்கே குறுக்கே ஓடி, பார்த்தால் ஜங்கிள் போல ஒரு சூழ்நிலை சென்னையிலே உருவாகிக் கொண்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று சிந்தித்துப் பார்த்தோமானால் ஒரு திட்டமிட்ட வகையிலே நாம் அதற்கு ஒழுங்கான விதிகளை வகுத்துக் கொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இப்போது அண்ணா சாலையில் இருக்கும் டிராபிக் தோழர்களைப் பார்த்துக் கேட்டபோது, அவர்கள் சொன்னதைச் சொல்கிறேன். 1976லே 30 கான்ஸ்டபிள்களை அங்கே போட்டார்கள். அண்ணா சாலையில் இருக்கிற அந்தப் போக்குவரத்து பிரிவு இருக்கிறதே அது எதையெல்லாம் பார்க்க வேண்டுமென்றால் வடக்கே வெலிங்டன், தெற்கே அண்ணா மேம்பாலம், இந்தப் பக்கம் பார்டர் தோட்டம், அந்தப் பக்கம் எதிராஜ் கல்லூரி இத்தனை இடங்களையும் பார்க்க வேண்டியவர்கள் அவர்கள். அந்தக் காலத்தில் மணிக்கு 500 கார்கள், ஸ்கூட்டர்கள், மோட்டார்-சைக்கிள்கள் போய்க்கொண்டிருந்தன. இப்போது மணிக்கு 5000 போகிறது என்று சொல்கிற அளவுக்கு போக்குவரத்தில் வேறுபாடு வந்துவிட்ட நேரத்தில்கூட, இப்போது எவ்வளவு பேர் தெரியுமா? 1976லே போட்ட 30 கான்ஸ்டபிள்கள் தான். அப்போது போட்டது 4 ஹெட்-கான்ஸ்டபிள்கள். இப்போது இருப்பதும் 4 ஹெட்-கான்ஸ்டபிள்கள்தான். அன்று போட்டது ஒரு எஸ்.ஐ. இன்று எஸ்.ஐ. மட்டும் 3 அவ்வளவுதான் ஐயா. ஆக வாகனங்கள் இவ்வளவு கூடியிருக்கும்போது, அதைக் கட்டுப்படுத்துகிறவர்கள் இவ்வளவு குறைவாக இருப்பார்களேயானால், அவர்கள் எப்படி பணியாற்ற முடியும்? 13 ஆண்டுகளுக்குப் பிறகும் இந்தச் சூழ்நிலை [illegible] இதைப்போல பல இடங்களில் டிராபிக் இருக்கிறது [illegible] குறிப்பாக [illegible] மாநகரம் [illegible]

D
V211, 31'N85
N85.13.3
144829

கோவிலைச் சுற்றிப் பாருங்கள். அங்கே ஒரு செயின்ட் ஆன்ஸ் பெண்கள் பள்ளி இருக்கிறது. லேடி சிவஸ்வாமி பெண்கள் பள்ளி மயிலையில் இருக்கிறது. அங்கே பள்ளியைச் சுற்றிலும் கார்களை நிறுத்தி விடுகிறார்கள். அப்படிக் கார்களை நிறுத்தி ஒரு மறைவு வந்துவிட்டால் போதும், நம்மவர்கள் அந்த மறைவிலே என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லம் செய்கிறார்கள். இயற்கையின் உபாதைகள் அத்தனையும் அந்த மறைவிலே செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். எனவே, தயவுசெய்து பார்க்கிங் லாட் கட்ட வேண்டும். பார்க்கிங் லாட் கட்டுவது அரசாங்கத்தால் முடியவில்லை, கார்ப்பரேஷனால் முடியவில்லை என்றால், கார்ப்பரேஷன் இடத்தில் தனியார்கள் கட்டட்டும். அரை கிலோ மீட்டருக்கு ஒரு இடத்தில் மேல் மாடி, மேல் மாடி, மேல் மாடி என்று பார்க்கிங் லாட் கட்டட்டும். தனியாருக்கு இதை ஏலத்தில் விட்டுவிடுங்கள். எதை எதையோ தனியாருக்கு ஏலத்தில் விடும்போது இதையும் ஏலம் விட்டுவிடலாம். அவர்கள் இத்தனை வருஷங்கள் கழித்து அதை அரசாங்கத்திற்கு ஒப்படைக்க வேண்டுமென்று சொல்லுகிற நோக்கத்தோடு, ஏலம் விட்டு, பார்க்கிங் லாட் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

அடுத்து, கார்கள் மிக வேகமாகப் போகின்றன. அதற்கு டெக்னோ மீட்டர் என்று சொல்கிற ஒரு மீட்டர் வந்திருக்கிறதென்று சொல்லுகிறார்கள். அது வெளி நாடுகளில் எல்லாம் இருக்கிறது. வெளி நாட்டில் இருப்பதை எல்லாம் சொன்னால் நேரமாகிவிடும். அந்த டெக்னோ மீட்டர் எவ்வளவு தூரம், எவ்வளவு நேரம், எவ்வளவு வேகம், எந்தெந்த இடத்தில் நிறுத்தப்பட்டது என்ற விவரங்களை ஒரு கிராப் போலக் கொடுக்கிறது. டிரிப் ஷீட் மாதிரி ஒவ்வொரு நாளும் கொடுக்கிறது. அதைக் கொண்டு யார் யார் என்னென்ன வேகத்தில் போனார்கள் என்பதை எல்லாம் கண்டு பிடிக்க முடியும்.

1972 ஆம் ஆண்டு பிரைம் மினிஸ்டராக இருந்த ஹீத் அவர்களை, அவர் புறப்பட்டு வந்த நேரத்தில், டிராபிக் கான்ஸ்டபிள் லண்டனிலே நிறுத்திவிட்டார். அவர் 2 நிமிடங்கள் கழித்து சபைக்குப் போனார். சபையே கொதித்து எழுந்தது, ஏன் 2 நிமிடங்கள் காலதாமதமாக வந்தீர்கள் என்று. அவர் விவரத்தை சொன்னார். விவரத்தைக் கேட்டவுடன், A Royal Commission was appointed, உடனே ஒரு குழு அமைக்கப்பட்டு, டிராபிக் பற்றி ஆராயப்பட்டது. அதைப்போல நாமும் இங்கே ஆராய வேண்டும். யாரையும் தடுத்து நிறுத்துவதால் அல்ல. நாமும் அதை ஆராய வேண்டும். ஆராய்வது மட்டுமல்ல, டிராபிக் கோர்ட், ஒரு போக்குவரத்துக் குழுமத்தை அமைக்க வேண்டும். அந்தக் குழுமத்திலே போலீஸ், மெடிக்கல் டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவர்கள் எல்லாம் சம்பந்தப்பட வேண்டும். லாரி ஓனர்கள், லாரி ஓட்டுநர்கள், ஆட்டோ ரிக்ஷா ஓனர்கள், ஓட்டு-





னர்கள், பள்ளிக்கூட பிள்ளைகள் சார்பில் ஸ்கூட்டர் ஓட்டுபவர்கள் இப்படிப்பட்டவர்கள் கொண்ட டிராபிக் குழுமத்தை உடனே கொண்டு வந்து, அத்தனை பேர்களுடைய ஒத்துழைப்போடு சென்னை மாநகரத்தை சீரான மாநகரமாக மாற்றி, அதையே மற்ற இடங்களும் பின்பற்றுகிற நிலைமையைக் கொண்டு வர வேண்டுமென்று உங்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு செய்தியோடு முடிக்கிறேன். தட அறிவியல் துறை—பாரன்சிக் சையன்ஸ்—என்று சொல்கிற ஒரு துறை சிறப்பான துறையாக இங்கே இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு வாய்த்திருக்கின்ற இயக்குநர் அவர்கள் திறமையானவராக மற்ற இயக்குநர்களைப்போல இருக்கிறார். சிவபுரம் நடராஜர் சிலையைக்கூட லண்டன் மாநகரத்தின் நீதி மன்றத்திலே போய், இது எமக்குச் சொந்தம் என்று உரிமை கொண்டாடி, வென்று வந்திருக்கிற மனிதராகவும் இருக்கிறார்.

இன்றுகூட தலை எழுத்து என்று சொல்லுகிற தலையில் இருக்கிற கோடுகளை வைத்துக் கொண்டு—வரிகளை வைத்துக் கொண்டு—அதுவும் ஒரு மனிதனுக்கு இருப்பதைப் போல் மற்றொரு மனிதனுக்கு இருக்காது—அவற்றிலே ஒரு ஒற்றுமை இருக்காது என்று சொல்லுகிற புதிய தத்துவத்தைக் கொண்டு வந்து, ஆஸ்திரேலியாவுக்குப் போய் பரிசு பெற்று வந்த இயக்குநர் இங்கே இருக்கிறார். அப்படி நல்லவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இன்றுகூட ஒரு குழந்தையை இரண்டு தம்பதிகள் 'இது எங்கள் குழந்தை' இது எங்கள் குழந்தை' என்று கேட்ட போது அதைக்கூட யார் குழந்தை என்று முடிவு செய்கிற பொறுப்பு அவரிடம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே இங்கே மட்டும்தான் இப்படி இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்டவர் இருக்கிற துறைக்கு ஒதுக்கியிருக்கிற பணம் ரூ. 1 கோடியே 30 லட்சம்தான். எனவே அதைக் கொஞ்சம் அதிகமாக உயர்த்தி அதையும் திட்டச் செலவில் சேர்த்து வளர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாகவே காவல் துறையை வளப்படுத்த வேண்டும். அவர்களுக்கு வீட்டு வசதி போதாது. சைக்கிள் அலவன்ஸ் இல்லை. இவைகளை எல்லாம் சொல்லிக் கொண்டே போனால் நேரம் இருக்காது. முழுவதையும் சொல்வதானால் நம்முடைய சபாநாயகர் அவர்கள் கொடுத்த நேரத்தைத் தாண்ட வேண்டி நேரிடும். நான் ஆரம்பித்த நேரத்தைக் குறித்து வைத்திருக்கிறேன். எனவே அதன் எல்லைக்குள் நின்று முடிக்க விரும்புவதோடு, இதற்கு மேல் சொல்ல மேலும் வாய்ப்புகள் இருக்கிற காரணத்தால் இதோடு அமைகிறேன். முதல்வர் அவர்களிடத்திலே இந்தக் கருத்துக்களை வைத்து, இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கான வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

[1989 ஏப்ரல் 28

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண். 2, மாநில ஆயத் தீர்வைத்துறை, கோரிக்கை எண். 15, காவல்துறை மற்றும் கோரிக்கை எண். 16, தீயணைப்புத் துறை ஆகியவற்றின் மானியக் கோரிக்கைகளின் கீழ், அனைந்திந்திய அண்ணா தி.மு.க.வின் சார்பில் கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிற வாய்ப்பினைத் தந்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலில் தமிழ்நாடு தீயணைப்புத் துறை பற்றிய மானியக் கோரிக்கையை எடுத்துக் கொண்டு, அதிலே மிகச் சுருக்கமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கை விளக்க அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல் 1988-ல் மட்டும் தீப்பிடித்த இடங்களிலே தீயை அணைக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் சுமார் 10,200-க்கு மேல் வந்து, தீயணைப்புத் துறையில் பணியாற்றுகிற பணியாளர்களின் உடனடி சேவையால் ஏறக்குறைய 35 கோடி ரூபாய்க்கான சொத்துக்கள்—சேதமாக வேண்டியிருந்த சொத்துக்கள்—காப்பாற்றப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. தன்னுடைய உயிரையும் பணயம் வைத்து இந்தத் துறையிலே பணியாற்றுகிற பணியாளர்கள் மற்றும் காவலர்களை—நாம் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இதிலே 5,550 பேர்கள் தான் கடந்த காலத்தில் மொத்தமாகப் பணிவகித்திருக்கிறார்கள். மொத்தமுள்ள தீயணைப்பு நிலையங்கள்—தமிழகத்தில்—173 என்றும், அதிலே சென்னை நகரத்தில் உள்ள 21 போக சுமார் 152 நிலையங்கள் மட்டுமே தமிழகம் முழுவதும் இருக்கிற மாவட்டங்களிலும் கிராமப்புறங்களிலும் இருக்கின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது போதாது. ஒரே ஆண்டிலேயே திராவிட முன்னேற்ற கழக அரசு எல்லா ஊர்களிலும் தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்திவிட வேண்டும் என்று நான் கேட்க மாட்டேன். உங்களாலே செய்யவும் முடியாது. ஆனால் ஒரு ''ஃபேஸ்டு புரோகிராமாக'' எடுத்துக் கொண்டு ஆண்டுக்கு இத்தனை நிலையங்கள் என்று திட்டமிட்டு, குறைந்தபட்சம் 25 கிலோ மீட்டருக்கு ஒரு தீயணைப்பு நிலையம் இருக்க வேண்டும் என்று அரசு விரும்புகிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பில் இருக்கிறது—குறைந்தபட்சம் ஒரு ஒன்றியத்திற்கு ஒரு நிலையம் அல்லது ஒரு தாலுக்காவுக்கு ஒரு நிலையம் அல்லது நகரத்திற்கு ஒன்று என்ற விதத்திலாவது எல்லா இடங்களிலும் தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்தினால்தான் அந்தந்தப் பகுதிகளில் பாதிப்பு ஏற்படுகிறபோது விரைந்து சென்று தீயை அணைக்கவோ உயிரைக் காப்பாற்றவோ, பொருள்களைக் காப்பாற்றவோ அழிவிலிருந்து காப்பாற்றவோ முடியும்.



1989 ஏப்ரல் 28] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

(நண்பகல் 12-00)

ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட நகராட்சிகள், சென்னையைத் தவிர மீதம் உள்ள மாநகராட்சிகள், தாலுக்காக்கள் ஆகியவற்றிலே ஒவ்வொரு ஆண்டுக்கும் குறைந்தது இவ்வளவு என்று கணக்கு எடுத்துக்கொண்டு நான்கு ஐந்து ஆண்டுகளில் எல்லா இடங்களிலும் தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது மக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்பாக அமையும் என்கிற காரணத்தாலே அதை நான் முதலிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 35 கோடி ரூபாய்க்கு அவர்களால் ஒரு ஆண்டிலே பொருட்கள் உடைமைகள் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டு இருப்பதாக சொல்லப்பட்டு இருக்கிறது. இப்படி தன்னுடைய உயிரையும் பணயம் வைத்து இந்தப் பணியிலே ஈடுபடுகிற அந்தக் காவலர்கள் இதுபோன்ற சேமிப்புகளை அல்லது அழிவிலிருந்து காப்புக்களை ஏற்படுத்தும் போது அவர்களுக்கு ஏதாவது ஒரு ஸ்பெஷல் அலவன்ஸ் அல்லது ஏதாவது கிஃப்ட் இன்னும் சொல்லப்போனால் அது அரசின் சார்பிலே இருக்கலாம், அல்லது பாதிக்கப்பட்டவர்களிடத்திலே ஏதாவது ஒரு பெர்சென்ட் கொடுக்கச் சொன்னால் கூட மகிழ்ச்சியோடு செய்வார்கள். அப்படி ஏதாவது ஒரு வகையிலே, அவர்களை உற்சாகப்படுத்தும் வகையிலே ஒரு ஊக்க ஊதியமாக வழங்க வேண்டும். ஏனென்றால் அதிலே அவர்களுக்கு எந்த விபத்தானாலும் உயிரே போகும் சூழ்நிலைகள், தீக் காயங்கள் ஏற்படும் சூழ்நிலைகள், பல்வேறு பாதிப்புக்கள் இருக்கின்றன. எனவே அவர்களுக்கு ஏதாவது ஸ்பெஷல் அலவன்ஸ் தரும் விதத்திலே நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மொத்தத்திலே 247 நீர்த் தாங்கி வண்டிகளும், 70 நோயாளிகள் ஊர்திகளும் தான் இருப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே 10,500 இடம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. எந்த ஒரு இடத்திலும் தீ விபத்து ஏற்படும்போது யாராவது பாதிக்கப்படும்போது அந்த நோயாளிகளை வண்டிகளிலே வைத்து அழைத்து செல்ல இருக்கிற அந்த ஊர்திகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. நீர்த் தாங்கி வண்டிகளின் எண்ணிக்கையும் குறைவாக இருக்கிறது. அவற்றையெல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு அவைகளை அதிகரிக்க முயற்சிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் இங்கிலாந்திலிருந்து ஸ்நார்கில் என்கிற நவீன தீயணைப்புக் கருவி வாங்கப்பட்டு இருக்கிறது. அது வந்ததற்குப் பின்னால் தீவிபத்து ஏற்படும் போது அது மிகப்பயன் உள்ளதாகப் பயன்பட்டுவருகிறது. எனக்கு நினைவு இருக்கிறது, இன்னொரு

[திரு.எஸ். திருநாவுக்கரசு] [1989 ஏப்ரல் 28

கருவி கூட அதுபோல் வாங்குவதற்கு திட்டம் அப்போது இருந்தது. அது ஏறக்குறைய 1 கோடி சொச்சம் என்று நினைக்கிறேன். அப்படி சென்னையில் இருப்பதைப் போல் தொழிற்சாலைகள் நிறைந்து இருக்கிற கோவை, மதுரை போன்ற பகுதிகளிலேயும் ஒரு நவீனக் கருவி வாங்கி இந்தத் துறையை நவீனப்படுத்துகிற முயற்சியிலே அரசு ஈடுபட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே என்னுடைய கருத்தை இந்த விவாதத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறை. இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இருந்த அரசு செய்த சலுகைகளில் விதிவிலக்குகளில் கடந்த ஆண்டுக்காலத்தில் ஏறக்குறைய 10 ஆண்டுகளில் நூறு கோடி ரூபாய்க்கு அரசுக்கு இழப்பு ஏற்பட்டு இருக்கிறது என்று முன்னாலே சுட்டிக்காட்டினார்கள். அவையே பல்வேறு வடிவங்களிலே இந்தக் கொள்கைக் குறிப்பிலேயும் கூட திருப்பித் திருப்பிச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்கு விளக்கமாக முதலிலே நாங்களும் பதில் சொல்லி இருக்கிறோம். நேற்றுகூட உக்கம்சந்த் பேசி இருக்கிறார். இருந்தாலும் இந்தத் துறை இன்றைக்கு வாதிக்க எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது என்கிற போது இதிலே எங்களுடைய அபிப்பிராயங்களை நாங்கள் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறோம். இதிலே சென்ற அரசு மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப் போல ஆதாரம் அற்றவை; மிகைப்படுத்தி கூறப்பட்டவை. அரசியல் . நோக்கங்களுக்காக முன்னால் இருந்த முதல்வரை அல்லது அரசை இழிவுபடுத்தும் நோக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே நூறு கோடி என்று கூறி, அதை அமைச்சர்களே தவறாக எடுத்துக்கொண்டு, ஆண்டுக்கு நூறு கோடி என்று சொல்லி, பொதுக்கூட்டங்களிலே, வெளியிலே பேசுகின்றபொழுது தங்களுடைய கற்பனை வளத்தையெல்லாம் கூட்டி, ஏறக்குறைய ஆயிரம் கோடி, இரண்டாயிரம் கோடிக்கு ஊழல் நடந்திருக்கிறது என்றெல்லாம் பேசி, அந்தச் செய்திகளெல்லாம் பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. அதைச் சுருக்கமாக மட்டும், அந்த புள்ளி விவரங்கள் தவறானவை என்பதற்கு ஒன்றிரண்டை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்ன பொழுது கூட, இந்த Auditor General Report பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள். Comptroller and Auditor-General Report -இலே 1986-87-லே பக்கம் 190-191 இலே, ஏதோ பலகோடி அதிலே விதிவிலக்கு தரப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால், உண்மை என்னவென்றால், ஏறக்குறைய 74,27,096 ரூபாய்க் குத்தான் முன் தேதியிட்டு, retrospective effect என்ற முறையிலே



1989 ஏப்ரல் 28] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

கொடுக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்ட தொகையாகும்.
அது 25 கோடியோ, 50 கோடியோ அல்ல.

இரண்டாவது, ஆடிட்டர் சுட்டிக்காட்டியது கூட, இது
போல Excise Duty-ஐக் குறைக்கிற அதிகாரம், ரத்து
செய்கிற அதிகாரம், அரசுக்கு இல்லை என்றோ அல்லது
முன் தேதியிட்டு retrospective effect கொடுத்து கொடுக்கிற
அதிகாரம் அரசுக்கு இல்லை என்றோ அவர் சுட்டிக்காட்ட
வில்லை. அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், நான்
சுருக்கமாகச் சொல்கிறேன். The Government order is not in order
—அதுதான் அவர் கடைசியாகச் சொல்லியிருப்பது. அந்த
உத்தரவு எதில் போடப்பட்ட வேண்டுமோ அதிலே போடப்பட
வில்லை. செக்ஷன் 54(ii) -இன் கீழே விதி விலக்கு
retrospective effect கொடுப்பதற்கு அதிகாரம் உண்டு. அது எந்
தெந்த செக்ஷன்களிலேயெல்லாம், 17-C, 17-D, என்றெல்லாம்
பல செக்ஷன்கள் அதிலே உள்ளடக்கி இருக்கின்றன. அதிலே
18-H -இலே கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லித்தான்,
இதை ஒரு tecnical error ஆக, அதுமாதிரி இந்த செக்
ஷனிலே கொடுத்தது தவறு என்றுதான் அதிலே சுட்டிக்காட்டி
யிருக்கிறதே தவிர, வேறு அரசினுடைய சலுகை என்றோ, அது
தவறு என்றோ, கொடுப்பதற்கு அரசுக்கு அதிகாரம் இல்லை
என்றோ, அந்த Auditor Report -இலே கூட சொல்லப்
படவில்லை. ஆனால், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தன்னு
டைய வாதத் திறமையால் அதைச் சொல்கிறபொழுது, அது
ஆடிட்டர் ஜெனரலே சொல்லியிருக்கிறார், ஆட்சேபணை தெரி
வித்திருக்கிறார், அதையும் மீறி இந்த அரசாங்கம் செய்தது
என்பதைப்போன்ற உணர்வு பத்திரிகையிலே வருவதைப்போல
மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சுட்டிக் காட்டினார்கள். ஆனால்
உண்மை அது அல்ல என்பதற்காக, இந்த ஆடிட்டரின் அறிக்கை
யையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆயத் தீர்வை குறைக்கப்பட்டபொழுது, நேற்
றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் சொன்னதைப்
போல, 1972 இலே நம்முடைய இன்றைய முதலமைச்சரவர்
களே அன்றைக்கும் இதுபோல ஆயத்தீர்வையினுடைய— 25
ரூபாயாக இருந்ததை அன்றைக்கு 14 ரூபாயாகக் குறைத்
திருக்கிறார்கள். அப்படிக் குறைக்கிற பொழுது இன்றைக்கு
நாங்கள் என்ன காரணம் சொன்னோமோ அதே காரணத்தைத்
தான், மற்ற மாநிலங்களிலே விலை குறைவாக இருக்கிற
காரணத்தினாலே, தமிழகத்திலே விலை அதிகமாக இருக்
கிற காரணத்தினாலே மற்ற மாநிலங்களிலேயிருந்து, பக்
கத்திலேயிருக்கின்ற கேரள மாநிலம், அதுபோல பக்கத்திலே
யிருக்கிற பாண்டிச்சேரி, மற்ற மாநிலங்களிலேயிருந்து திருட்டுத்
தனமாக இங்கே சரக்கு கொள்முதல் செய்து கொண்டு
வரப்படுகின்றன, அதனாலே நம்முடைய Turnover

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 ஏப்ரல் 28

பாதிக்கிறது, அதாவது அரசுக்கு வருகிற வருமானம் பாதிக்
கப்படுகிறது என்ற அடிப்படையிலேதான் அன்றைக்கும் அதற்கு
அவர் விளக்கம் சொன்னார்கள். அந்த விளக்கம் நம்முடைய
மாண்புமிகு இன்றைய முதலமைச்சரவர்களுக்கு மட்டும்தான
பொருந்துமா? அது ஏற்கனவே அறிவித்த மாண்புமிகு முதலமைச்
சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் பொருந்து
மே. அப்படியிருக்கிறபொழுது அதிலே குற்றம் கண்டு, அதிலே
வந்த இழப்புத் தொகையெல்லாம், அது யாருக்கோ போனது,
முன்னால் இருந்த அரசுக்குப் போனது என்றெல்லாம் சொல்
வது, வேண்டுமானால் அரசியல ரீதியான குற்றச்சாட்டுக்குப்
பயன்படலாமே தவிர, அதிலே கொஞ்சமும் எதார்த்தம் இல்
லை, உண்மை இல்லை என்பதைச் சொல்வதற்காக நான்
சுட்டிக்காட்டினேன்.

இன்னொன்று. Retrospective effect இதற்கு முன்னாலே
கொடுத்தது இல்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு
அன்றைய முதலமைச்சரவர்களே, அன்றைக்கு 72-லே அறிவிக்
கிறபொழுது அவர்கள் Retrospective effect கொடுத்துத்தான்
அன்றைக்கும் அறிவித்திருக்கிறார்கள் என்கிற அந்தத் தகவலை
யும் இன்றைக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பின்னால் இனிமேல் புதிதாக யாருக்கும் மது
பானங்களை உற்பத்தி செய்வதற்கு லைசென்ஸ் தரப்
போவதில்லை என்று கூறியிருக்கிறீர்கள். TASMAC-ஐ இரண்டு
யூனிட் போட இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள்.

(பிற்பகல் 12-10)

இவற்றுக்கெல்லாம் பின்னால் இந்த கொள்கையை அறி
விக்கிறபோது, ஏற்கனவே ரீடெயில் கடைகளுக்கு 20,500
ரூபாய் என்று 'பீஸ்' வாங்கிக் கொண்டு ஆண்டுதோறும் புதுப்
பிக்கப்பட்டது. அதனால் அரசுக்கு குறைவான வருமானம் வந்
தது என்று கூறி, அதை ஏலத்தின் மூலமாக விடப்போகிறோம்
என்று அறிவித்தீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
சட்டமன்றத்தில் பிப்ரவரி 17 ஆம் தேதி அறிவிக்கிறார்கள்.
ஆனால் 20 ஆம் தேதி ஆணையர் உரிமப்பணம் 28 ஆம் தேதி
வரை அபராதம் அடுத்த ஆண்டிற்கு கட்டலாம் என்றும், அதற்கு
பின்னால் 31 ஆம் தேதி வரையில் அபராதத்தோடு கட்டலாம்
என்றும், இந்த 20,500 ரூபாய் அடுத்த ஆண்டு, 1989 ஆம்
ஆண்டிற்கு புதுப்பிப்பதற்கு கட்டலாம் என்று அறிவித்து, அது
தாசில்தார் அலுவலகங்களிலும், மற்ற அலுவலகங்களிலும் 30
ஆம் தேதி வரையில் 20 ஆயிரம், 20 ஆயிரம் ரூபாய் என்று
வாங்கியிருக்கிறார்கள். அதாவது அடுத்த ஆண்டு, ஒரு ஆண்டு
மார்ச்சோடு முடிகிறது—அடுத்த ஆண்டிற்கு இன்னும் ஒரு 20



1989 ஏப்ரல் 28] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

ஆயிரம் ரூபாய் வாங்கியிருக்கிறார்கள். அப்படி வாங்கியதற்
குப் பின்னால், முதலில் இரண்டு மாதம் என்று சொல்லி, இப்
போது, ஜூன் ஒன்றிலிருந்து ஏலம் விடப்படும் என்று தெரிவித்து
இருக்கிறீர்கள். அதிலே ஏராளமான குழப்பமான செய்திகள்
இருக்கின்றன. 40 பெர்சென்ட் அரசும், அரசுத் துறை கூட்டுறவு
நிறுவனங்கள், 60 சதவீதம் தனியார்கள். இதிலே யார் யா
ருக்கு எவ்வளவு அதிகபட்சம்—சென்னை என்றால் 1,25,000
ரூபாய், மதுரை என்றால் அதற்கு அடுத்து, கிராமப்புறங்
களுக்கு எவ்வளவு என்றெல்லாம் நிர்ணயம் செய்திருக்
கிறீர்கள். இதிலே இந்த அறிவிப்புக்குப் பின்னால் என்ன
ஆகியிருக்கிறது என்றால் அவர்கள் வழக்குமன்றத்திற்குப் போய்
இருக்கிறார்கள். அது வேறு பிரச்சினை. ஆனால் அரசுக்கு
வருமானம் அதிகமாக வருகிறது என்று சொன்னால் எதிலே
அதிகமாக வருகிறதோ அதிலே கவனம் செலுத்த வேண்டியது
தான். ஆனால் அதிலே முடிவெடுத்து அறிவிக்கிற போது
தெளிவான முடிவு இல்லாத காரணத்தால்—ஒரு வேளை மது
விலக்கு என்ற காரணத்தால் அப்படித்தான் தடுமாற்றங்கள்
இருப்பது இந்தத் துறையில் சகஜமோ என்னவோ—எனவே
அறிவிக்கிறபோதே இந்த இரண்டு மாதமும் நான் கேள்விப்பட்ட
வரையில் ஏறக்குறைய 15 கோடி ரூபாய் அளவிற்கு அரசுக்கு
நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் ஏற்கனவே 'எக்
சைஸ் டியூட்டி' பொறுத்தவரையில் 30 ரூபாயாக இருந்தது
புரட்சித் தலைவர் காலத்தில் 25 ரூபாய் வரையில் அதிகபட்சம்
விதிக்கப்பட்டது. 8 ரூபாய் முன்னால் ரத்து செய்யப்பட்டது.
பின்னால் அதை 'இன்கிரீஸ்' பண்ணி 25 ரூபாய் வரையில் வந்
திருக்கிறது. அதைத் தொடர்ந்து 'எக்சைஸ் டியூட்டியை' இல்லா
மல் இருக்கவில்லை. அதைப்போல ஒரு தவறான கணக்கு
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த 8 ரூபாயை கழித்து
ஆண்டுதோறும் பெருக்கி 50 கோடி என்று சொன்னார்கள்.
இப்போது நீங்கள் மாற்றுகிறபோது 25 ரூபாய் என்று இருக்
கிறது. அதை நீங்கள் 60 ரூபாய் என்று—அந்த 'மாக்சிமம்
சீலிங்கை' 30-ஐ 60 ஆக்கி இப்போது எக்சைஸ் டியூட்டி
அளவை 55 ஆக உயர்த்தி இருக்கிறீர்கள். அப்படி உயர்த்தி
இருப்பதால் ஏறக்குறைய 70 கோடி ரூபாய் வருமானம் வரும் என்
கிறீர்கள். நான் சொன்னேன். இந்த 'எக்சைஸ் டியூட்டி, 'இன்
கிரீஸ்' பண்ணுகிறபோது, அதிகப்படுத்துகிறபோது ரீடெ
யில் விலை அதிகமாகுமே, அதனால் 'டர்ன் ஓவர்'
பாதிக்காதா என்று கேட்டேன். அப்போது நம்முடைய உணவுத்
துறை அமைச்சர் மாண்புமிகு திரு. வீராசாமி அவர்கள் எழுந்து,
இல்லை. நாங்கள் விலையை ஏற்றவே மாட்டோம், என்று
அறிவித்தார்கள். என்னவாயிற்று என்றால் இப்போது கடந்த
இரண்டு மாதத்தில் 'ரீடெயில்' கடைகளில் விற்பனை இல்லை.
உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யவில்லை. சரக்கு சப்ளை
செய்யவில்லை. இரண்டு மாதத்தில் ஏறக்குறைய 15 கோடி
ரூபாய்க்கு அரசுக்கு அதனால் நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம்,

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 ஏப்ரல் 28

விற்பனை இல்லாத காரணத்தால், எனக்கு தகவல் கிடைத்
திருக்கிறது. நான் இதைச் சொல்வதற்கு காரணம், இதிலே
இந்த 15 கோடியில் ஊழல் என்று சொல்லவில்லை. அரசுக்கு
வரவேண்டிய வருமானம் வராமல் போய் இருக்கிறது. இப்படி
போகிற போது ஒரு ஆண்டில் நீங்கள் எவ்வளவு எதிர்பார்க்
கிறீர்களோ, ஏறக்குறைய 150 கோடி ரூபாய் வருமானம் வரும்
என்றால் இதிலே ஒரு தெளிவான முடிவு இல்லாத காரணத்தால்
இதை எவ்வளவு தூரத்திற்கு வெற்றிகரமாக அந்த வருமானத்
தை இந்தத் துறையின் மூலமாக நீங்கள் பெறமுடியும் என்பதில்
சந்தேகம் இருக்கிறது. அதிலே அதிகமான கவனத்தை அர
சுத் துறை அதிகாரிகள் செலுத்தி உரியவகையில்- ஏனென்றால்
இதுதான் நமக்கு சேல்ஸ் டாக்சிற்கு அடுத்தபடியாக பெரிய
சோர்ஸ். அரசாங்கத்திற்கு அதிக அளவில் வருமானம் வரக்
கூடிய இலாக்கா இது தான். எனவே, இதிலே கவனம் செலுத்
திட வேண்டுமென்று இந்த அரசுக்கு என்னுடைய எண்ணத்
தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு முதலில் வாங்குகிறபோது இங்கேயிருக்கிற உற்பத்தி
யாளர்களிடத்தில் மட்டுமே வாங்கப்பட்டது. இன்றைக்கு
கொள்கை குறிப்பிலே நட்சத்திர உணவு விடுதிகள், கிளப்புகள்,
வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் போன்றவர்களுக்கும், இதைப்
போல எல்லாவற்றையும் சேர்த்து விட்டீர்கள். மற்ற
பெர்மிட்தாரர்களுக்கும், மற்ற பெர்மிட்தாரர்கள் என்
றால், இங்கேயிருக்கிற பெர்மிட்தாரர்கள். இப்படி இவர்களுக்கு
எல்லாம் உயர்ந்த ரகங்கள் தேவைப்படுவதாகவும், அந்த உயர்ந்த
ரகங்களை வேறு மாநிலங்களிலேயிருந்து வாங்கப்போகிறோம்
என்றும் இந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கி
றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பத்திரிகையிலே
ஏற்கனவே வந்த தகவல்கள் தெரியும். அதிலே தவறுகளைக்
களையப் போகிறோம் என்று கூறிவிட்டு, இதிலே தவறு நடக்கா
மல் பார்த்துக்கொள்ள வேண்டியது முதலமைச்சருடைய பொறுப்
பாகும். இதற்கு முன்னாலே இங்கேயிருக்கிற 5 உற்பத்தியாளர்
கள் தயாரித்துக் கொடுத்தார்கள். இவர்கள் மீது, இங்கே இருப்
பவர்கள் மீது கோபமா அல்லது முன்னாலே இருந்த அரசால்
அனுமதிக்கப்பட்டார்கள் என்ற காரணமா, தெரியவில்லை.
என்ன காரணமோ, வேறு மாநிலத்தில் இருக்கக்கூடிய உற்பத்தி
யாளர்கள் இங்கே வருவதற்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது. அந்த
அதிர்ஷ்டசாலிகள் கர்நாடகத்தில் இருக்கிறார்களா அல்லது ஆந்
திராவிலே இருக்கிறார்களா, எந்த மாநிலத்திலே, இருக்கிறார்
கள், யார் வந்து இங்கே லாபங்களைப் பெற இருக்கிறார்கள் என்
பது தெரியவில்லை. அந்த வாய்ப்புக்கள் இங்கே தமிழ்நாட்டிலே
இருக்கிற போது, உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகள் இருக்கிற
[illegible] வேறு மாநிலங்களிலிருந்து வாங்கவேண்டிய அவசியம்



1989 ஏப்ரல் 28] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

இல்லை. வேண்டுமானால், வெளிநாட்டுக்காரர்கள் உயர்ந்த
ரகங்களைக் கேட்டால், இங்கே இருப்பவர்களைக் கூட தயாரிக்கச்
சொல்லலாம். ஆனால் மற்ற மாநிலங்களிலேயிருந்து வாங்கு
வதற்கு வழி செய்யப்பட்டு இருக்கிறது. இதுவும் கொள்கைக்
குறிப்பிலே இடம் பெற்றிருக்கிறது. இதிலே தவறுகள் இல்லா
மல், டெண்டர் மூலமாக யார் குறைந்த விலைக்குத் தருகிறார்
களோ, அவர்களுக்கு வாய்ப்புத் தரவேண்டும். நான் சென்ற
முறை பேசுகிறபோது, முதலமைச்சரிடத்திலே ஒரு வேண்டு
கோள் சொன்னேன். டாஸ்மாக் எம். டி. முதலிலே விலை நிர்
ணயம் செய்தார்கள். நான் அந்தத் துறையினுடைய ஆணை
யாளருக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறேன் என்று
சொன்னீர்கள். நான் சொன்னேன். அவரும் ஒரு ஐ. ஏ. எஸ்.
அதிகாரிதான், இவரும் ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரிதான். எனவே
ஒருவராக இருந்தால் இந்தப் பிரச்சினை வரும் என்ற காரணத்
தால்தான், சீப் செக்கரட்டரி மற்றும் இரண்டு அல்லது மூன்று
பேர்களைப் போட்டு, ஒரு குழுவாக நியமியுங்கள் என்று சொன்
னேன். அப்படிச் சொன்னதற்குப் பின்னாலே, நீங்கள் ஒரு
குழுவை நியமித்து இருக்கிறீர்கள். அந்தக் குழு ஆணையருக்கு
ஆலோசனைச் சொல்கிற குழுவாக இருக்கிறது. ஆலோசனைச்
சொல்கிற குழுவாக இல்லாமல், அதிகாரம் உள்ள குழுவாக
இருந்து முடிவு எடுக்கிற போது, ஒருவருக்குப் பதிலாக, 3 அல்லது
நான்கு பேர்களைக் கொண்ட ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டு உற்
பத்தியாளர்களிடத்திலேயிருந்து வாங்குகிற போது, விலை நிர்
ணயம் செய்கிற அதிகாரம் இந்த மூன்று பேர்களை உள்ளடக்கிய
குழுவிற்குத் தரப்படுகிறபோது,—ஹோம் செக்கரட்டரி அல்லது
சீப் செக்கரட்டரி, அதுபோல கமிஷனர், மற்றும் ஃபைனான்ஸ்
செக்கரட்டரி போன்றவர்களை எல்லாம், 3, 4 பேர்களைப் போட
லாம், இவர்களைக் கொண்டு குழு அமைக்கப்படுகிறபோது—
அதிலே தவறுகள் இல்லாமல் இருப்பதற்கு வாய்ப்பு ஏற்படும்.

இது ஒரு பக்கத்திலே சட்டபூர்வமாக விற்பனை செய்யப்படு
கிற மது வகைகளைப் பொறுத்தது. இன்னொரு பக்கத்திலே
சராசரி ஒரு மாதத்திற்கு 1 லட்சம் டன் முதலிலே நல்ல சாரா
யம் அரசு சார்பிலே கொடுக்கப்பட்ட சாராயம், விற்பனை செய்
யப்பட்டது என்று சொன்னால், இன்றைக்கு நீங்கள் கொடுத்திருக்
கிற புள்ளி விவரங்களைப் பார்க்கிறபோது, ஏறக்குறைய 1 லட்
சம் பேர்கள் 2 மாதத்திலே கைது செய்யப்பட்டு, அதிலே ஏறக்
குறைய 40 ஆயிரம் லிட்டர் கள்ளச் சாராயம் கைப்பற்றப்
பட்டு, ஏறக்குறைய $4\frac{1}{2}$ கோடி லிட்டருக்கான கள்ளச் சாராய
ஊறல் கைப்பற்றப்பட்டு, கணக்கு தரப்படுகிறது. இதை நீங்
கள் கணக்குப் பார்த்தால், ஏறக்குறைய பிடிபட்டது மட்டுமே,
ஏற்கனவே மதுவிலக்கு இல்லாமல் இருந்தபோது, எப்படி அரசின்
சார்பிலே சாராயங்களை வினியோகித்தபோது எவ்வளவு அளவு
இருந்ததோ அதிலே ஏறக்குறைய கண்டுபிடிக்கப்பட்டதே பாதி
அளவிற்கு வருகிறது இன்னும் கண்டுபிடிக்கப்படாமல் இருப்பது
எவ்வளவு இருக்கிறதோ நமக்குத் தெரியாது.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 ஏப்ரல் 28

இங்கே கூட சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகிற போது
சுட்டிக்காட்டினார்கள். 1987 லே வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்ட
கள்ளச் சாராயம், 19 ஆயிரம் என்றும், 1988 லே 34 ஆயிரம்
என்றும் இந்த 2 மாதத்திலே சராசரியாக 50 ஆயிரம் என்றும்
சுட்டிக்காட்டினார்கள். இப்படி கள்ளச் சாராயம் உற்பத்தி
பெருகும் என்று அதற்கான தண்டனையை சட்டத்தில் குறைக்கிற
போது நான் சொன்னேன். அதற்கு என்ன காரணம் இப்போது
சொல்லப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், வழக்குகள் அதிக
மாகத் தேங்கி இருக்கின்றன. அவற்றை துரிதப்படுத்த வேண்
டும், வேகப்படுத்தவேண்டும் அவர்கள் கட்டுகிற அபராதத்தினால்
அரசாங்கத்திற்கு வருமானம் வரும் என்றெல்லாம் சுட்டிக்காட்டி
யிருக்கிறார்கள். இது தவறாக இடம் பெற்றிருக்கிறது. கவலைக்
குறைவாக இடம் பெற்றிருக்கிறது என்று கூட நான் கருதுகிறேன்.
அரசாங்கத்திற்கு இதன்மூலம் வருமானம் வேண்டும் என்று
சொன்னால், அவர்கள் அடிக்கடி போய் அடிக்கடி பைன் கட்டி,
திரும்பி வந்து கொண்டு இருக்கவேண்டும். இதிலே வழக்குகளை
துரிதப்படுத்துவது ஒன்று. ஆனால் ஏற்கனவே 3 ஆண்டு
மற்றும் 3 ஆயிரம் ரூபாய் அபராதம் என்று இருந்ததை, இப்
போது தண்டனைக் குறைப்பின் மூலமாக 3 மாதம் அல்லது
ஆயிரம் ரூபாய், மேக்சிமம் ஆயிரம் ரூபாய் வரையில், அதுபோல்
மேக்சிமம் 3 மாதம் வரை தண்டனை என்று கொண்டு வந்த
காரணத்தாலே, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு அதிகமாக
தைரியமும் துணிச்சலும் ஏற்பட்டு இருக்கிறது. காரணம் அப
ராதமும் குறைவு; தண்டனையும் குறைவு. இரண்டும் சேர்ந்து
கிடையாது. எனவே அடிக்கடி அவர்கள் காய்ச்சுகின்ற வாய்ப்
பும் அதேபோல் அடிக்கடி உள்ளே போய்விட்டு வந்தவுடனே மீண்
டும் காய்ச்சுகின்ற அந்த வாய்ப்பும் ஏற்படுகிறது.

(பிற்பகல் 12-20)

எனவே இந்த தண்டனைக் குறைப்புச் சட்டத்தால் இன்றைக்கு
கள்ளச் சாராய சாம்ராஜ்யம் வெளியே உருவாகியிருக்கிறது. பல
பேர், இந்தத் தொழிலிலே, ஒரு லட்சம் பேர் கைது செய்யப்பட்டி
ருக்கின்ற சூழ்நிலை, 50,000 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்
கின்ற ஒரு சூழ்நிலை தமிழ்நாட்டிலே உருவாகியிருக்கிறது. அது
இன்னும் அதிகமாகக் கூடிய வாய்ப்பும் இருக்கிறது. இந்த அள
விற்கு என்ன தான் காவல்துறை இதிலே ஈடுபட்டாலும் நட
வடிக்கை எடுத்தாலும், நீங்களே மானியக் கோரிக்கையிலே சுட்டிக்
காட்டி இருப்பதைப் போல சில இடங்களில் சில பேர் அவர்க
ளோடு சேர்ந்து விடுகின்ற காரணத்தால், அவர்களை கைது செய்ய
முடிவதில்லை. வழக்கு தொடர முடிவதில்லை. அவர்கள் கள்
ளச் சாராயம் காய்ச்சுவதோடு நிற்பதில்லை. பல சமூக விரோத
செயல்களுக்கு, ஆங்காங்கே ஒரு சின்ன சின்ன குட்டி சமஸ்தானங்
களாக அவர்களே இருந்துகொண்டு, அந்தப் பகுதியிலே நடை
பெறுகின்ற வன்முறைகள், கலவரங்கள் என்ற வகையில் அத்தனை



1989 ஏப்ரல் 28] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

விதமான சமூக குற்றங்களுக்கும் அவர்கள் தான் காரணமாக இருக்
கிறார்கள். காவல்துறையினருக்கு அவர்களோடு சில இடங்களில்
தொடர்பு இருக்கின்ற காரணத்தால் அந்தக் குற்றங்களைச் சில
இடங்களிலே தடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே,
அவற்றில் எல்லாம் இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும்.
கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழிக்கின்ற முயற்சியிலே முழு
மையாக தன்னை இந்த அரசு ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்
என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே ரூ. 100 கோடி நஷ்டம், ரூ. 200 கோடி நஷ்டம்
என்று எல்லாம் இங்கே நீங்கள் சொன்னது வெறும் புள்ளிவிவரங்
கள் தான். எனக்கு ஒரு சிறு கதை ஞாபகத்திற்கு வருகிறது.
சர்ச்சில் அவர்கள் பிரதமராக இருந்தபோது அதிகாரிகளை எல்
லாம் அழைத்து, நாடாளுமன்றத்திலே ஒரு புள்ளிவிவரம் தேவைப்
பட்டதால் அதிகாரிகளிடத்திலே கலந்து பேசினார். அதிகாரிகள்
எல்லாம் நீங்கள் கேட்கின்ற விவரத்தை தயார்செய்து கொடுக்க
2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் ஆகும் என்று சொன்னார்கள். சரி சரி
போங்கள் என்று அவர்களையெல்லாம் அனுப்பிவிட்டு, நாடாளு
மன்றத்திலே வந்து அவர், 0.01 என்ற அளவிற்குக்கூட மிகத்
துல்லியமாக புள்ளி விவரங்களை எல்லாம் அடுக்கடுக்காக சொல்
லிக் கொண்டே போனார். அதிகாரிகள் எல்லாம் பதைபதைத்து
வெளியே போன உடனே என்ன இப்படி தவறான புள்ளிவிவரங்
களை எல்லாம் நீங்கள் அடுக்கிக் கொண்டே சொல்லிவிட்டீர்களே,
பிரதமராகிய நீங்களே இப்படி சொல்லிவிட்டீர்களே என்று அதி
காரிகள் கேட்டார்கள். அதற்கு அவர் சொன்னார். நான் உங்க
ளிடத்திலே கேட்டேன். நாம் அரசுத்துறையிலே இருக்கிறோம்.
நான் பிரதமராக இருக்கிறேன். நம்முடைய அதிகாரிகள் எல்
லாம் சேர்ந்து நான் கேட்ட புள்ளிவிவரங்களை முழுமையாகத்
தரவேண்டுமென்று சொன்னால், 3 லிருந்து 5 ஆண்டுகள் ஆகும்
என்று நீங்களே சொன்னால், எதிர்க்கட்சிகளுக்கு குறைந்தது
25 ஆண்டுகள் ஆகும், நான் சொன்ன புள்ளி விவரங்கள் தவறு
என்று அவர்கள் வந்து திருப்பிச் சொல்ல. அதற்குள்ளே பதவியில்
நான் இருக்க மாட்டேன். பின்னாலே பார்த்துக் கொள்ளலாம்.
போங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள் என்று சொல்
வார்கள். அதைப் போன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களும் குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது கலை நயத்தோடும்
கற்பனை நயத்தோடும் எவ்வளவு இதிலே
அவருக்கே இருக்கின்ற கற்பனை நயத்தோடும் எவ்வளவு இதிலே
அதிக பட்சமாகச் சொல்ல முடியுமோ, அவ்வளவு அதிகபட்சமான
புள்ளிவிவரங்களை அடுக்கடுக்காகச் சொல்லியிருக்கிறார்கள்.
இதிலே ஏற்கனவே இருந்த அரசின்மீது மது விலக்குத் துறையின்
சார்பிலே சொல்லப்பட்ட குற்றமும், அந்த வகையிலே
கற்பனை வகையைச் சாருமே தவிர, அதிலே அதிகமான உண்மை
அந்த சொல்லப்பட்ட புள்ளிவிவரங்களிலே இல்லை என்பதை
நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 ஏப்ரல் 28

இந்த அளவோடு மதுவிலக்கு ஆயத்தீர்வை துறையை விட்டுவிட்டு, காவல்துறையைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்லி விடைபெற நான் விரும்புகிறேன். அதிலே காவல் துறையைப் பொறுத்த வரையில், இந்த 2, 2½ மாதத்திலே ஏராளமான பொய் வழக்குகள், ஆளுங்கட்சியின் சார்பிலே தூண்டப்பட்டு, ஆங்காங்கே எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் மீதும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் மீதும் போடப்பட்டு எங்களுக்கு நூற்றுக்கணக்கான மனுக்கள், ஆயிரக்கணக்கான மனுக்கள் வந்து, அதையெல்லாம் சட்டமன்றத்திலே எழுப்பவேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். அதையெல்லாம் ஒன்வொன்றாக படித்தால், அதுவே 5, 6 மணி நேரமாகும். எனவே இதை ஒட்டுமொத்தமாக இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இதிலே இந்த அரசு கவனம் செலுத்த வேண்டுமென்றும், பொய் வழக்குகள் போடுவதைத் தவிர்க்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். காவல்துறையினரும் அங்கே இருக்கின்ற ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அல்லது எவ்வளவு செல்வாக்கு மிக்கவர்களாக இருந்தாலும், எதிர்க்கட்சிகளை அழிக்கும் நோக்கத்தோடு அங்கே இருக்கிற காவல்துறையினரைத் தூண்டி வழக்குகள் பதிவு செய்கின்றபோது, அவற்றையெல்லாம் விசாரித்து, அதில் உண்மை இருக்கிறதா என்று தெரிந்து கொண்டு, வழக்குகளைத் தொடரவேண்டும். பாரபட்சம் இல்லாமல் நியாயமாக காவல் துறை நடந்துக் கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே காவல் துறையை கேட்டுக் கொள்வேன். முதலிலே நான் தமிழ்நாடு காவல் துறையை மனப்பூர்வமாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த காலங்களில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் அமைதி பூங்காவாக கருதப்பட்டு பலபேர் வட நாட்டவர்கள் கூட, வட நாட்டிலே பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் பின்னால் தமிழ் நாட்டிலே வந்து குடியேறி வாழ விரும்புகிறார்கள் என்று சொன்னால், அதற்கு இங்கே தமிழ்நாட்டிலே பொது அமைதி இருப்பதும், சட்டம் ஒழுங்கு தொடர்ந்து காப்பாற்றப்படுவதும் தான் காரணம். இந்த நிலை கடந்த பல ஆண்டுகளாக தொடர்ந்து இருந்து வருகிறது. அது இனிமேலும் தொடர வேண்டும். அந்த வகையிலே காவல் துறை சிறப்பாக பணியாற்ற வேண்டும்.

இன்னொன்று, காவல் துறை சட்டம் ஒழுங்கை காப்பாற்றுவது மட்டும் அல்ல தமிழகத்தினுடைய வளர்ச்சியே கூட காவல் துறையினுடைய கையிலே தான் இருக்கிறது. ஏனென்றால் அது தொழிற்சாலைகளுடைய உற்பத்தியாக இருந்தாலும் சரி அல்லது வர்த்தக பெருக்கமாக இருந்தாலும் சரி அல்லது விவசாய உற்பத்தியாக இருந்தாலும், சரி, இவையெல்லாம் பொது அமைதி இருந்தால்தான் சட்டம் ஒழுங்கு சரியாக இருந்தால்தான் அவை அனைத்தும் சிறப்பாக இருக்க முடியும்.



1989 ஏப்ரல் 28] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

ஒட்டு மொத்தமாக காவல் துறையினுடைய கையிலேதான் தமிழகத்தினுடைய வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி கூட, மக்களுடைய நலன் கூட, அவர்கள் எவ்வளவு பாரபட்சம் இல்லாமல் நடந்துக் கொள்கிறார்கள். பொது நோக்கோடு நடந்துக் கொள்கிறார்கள். பொது அமைதியை எப்படி தமிழகத்தில் நிலை நிறுத்துகிறார்கள். என்பதைப் பொறுத்து தான் தமிழகத்தினுடைய ஒட்டு மொத்தமான பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் விவசாயம் ஆகிய அத்தனை உற்பத்தி பெருக்கங்களும் வளர்ச்சியும் அவர்களுடைய கரங்களிலேதான் இருக்கிறது.

இதிலே கடந்த காலங்களிலே நான் ஏற்கெனவே சொன்னதைப் போல மற்ற மாநிலங்களில் இருப்பவர்களெல்லாம் இங்கே வந்து தங்கி குடியேற விரும்பும் அளவுக்கு தமிழ் நாட்டில் அமைதி இருந்தது. எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் இருந்தது. பாதுகாப்பு இருக்கிறது என்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே வட நாட்டவர்கள் எல்லாம் கூட இங்கே வந்து குடியேறி வயதான காலத்திலே இங்கே வந்து வாழ நினைக்கிறார்கள். அந்த அளவிற்கான சூழ்நிலை தமிழகத்திலே இருப்பதற்கு காரணம் தமிழகத்தில் இருக்கிற புகழ் மிக்க காவல் துறையினர் தான். எனவே தமிழகத்திற்கு என்று இருக்கிற அந்தப் புகழை தொடர்ந்து நிலை நாட்டுகிற விதத்திலே காவல் துறை தன்னுடைய செயல்பாடுகளை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறை சிறப்பாக பணியாற்ற வேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு வேண்டிய வசதிகள், முதலிலே அவர்களுக்கு போதுமான மேன்-பவர் இருக்க வேண்டும். அது போல அவர்களுக்கு போதுமான வாகன வசதிகள் வேண்டும். தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட வேண்டும். இவைகள் எல்லாம் அவர்களுக்கு போதுமான அளவுக்கு தரப்பட்டால் தான் அவர்கள் தங்களுடைய பணிகளைச் சிறப்பாக செய்ய முடியும். இங்கே பார்த்தால் மொத்தம் 66,872 போலீஸ்காரர்கள் தான் இருக்கிறார்கள். எல்லா அதிகாரிகளையும் சேர்த்து, டி.ஜி.பி. யிலிருந்து ஆரம்பித்து மொத்தக் கணக்கே இதுதான். சொல்லப்போனால் பிரிட்டிஷ்காரன் காலத்திலே எவ்வளவு பாபுலேஷன் இருந்ததோ அதற்கேற்றவாறு அப்போது எவ்வளவு காவல் துறையினர் இருந்தார்களோ அதே அளவுக்குத்தான் இப்போதும் இருக்கிறார்கள். இப்போது 5 கோடி, 5½ கோடி மக்கள் தொகை பெருக்கம் ஆனதற்கு பின்னாலும், அந்த மக்களுடைய வளர்ச்சிக்கு ஏற்றவாறு காவல் துறையினரின் ரேஷியோ, காவல் துறையினருடைய எண்ணிக்கை அதிகரித்திருக்கிறதா என்று பார்த்தால் அன்றைக்கும் ஒரு ஸ்டேஷனிலே 4,5 கான்ஸ்டேபில்கள்தான் இருந்தார்கள். இன்றைக்கும் ஒரு ஸ்டேஷனிலே 4,5 கான்ஸ்டேபிள்கள்தான் இருக்கிறார்கள். அந்த எண்ணிக்கை உயரவே இல்லை. அது உயர்த்தப்பட வேண்டும்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 ஏப்ரல் 28

குறிப்பாக பெண்களுக்கு அதிகமான வாய்ப்பு தருகிற விதத்திலே—
1973-லே பெண்களை காவல் துறையிலே கொண்டு வந்தார்கள்.
அன்றைய முதலமைச்சர் அவர்களாலே 73-லே அந்த திட்டம்
ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் 16 ஆண்டு 17 ஆண்டு ஆன
தற்குப் பின்னாலும் இப்போது பார்த்தாலும் மொத்தக் காவலர்
களில் பெண் காவலர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று
சொன்னால் 800 பேர்கள் தான். வருடத்திற்கு 100 பேர்கள்
எடுத்தால் கூட இப்போது 1700 பேர்களுக்கு வரும். எனவே
இதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். எண்ணிக்கை
குறைவாக இருக்கிற காரணத்தாலே அவர்களுக்கு பாதுகாப்பு
இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆண் போலீஸ்காரர்கள் தவறாக
எடுத்துக் கொள்ளக் கூடாது. அவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத
சூழ்நிலை எல்லாம் சில இடங்களிலே இருக்கிறது. எல்லா இடங்
களிலும் அல்ல. சில இடங்களிலே இருக்கிறது. மனசாட்சியோடு
அதிகாரிகள், நினைத்துப் பார்த்தால் ஒத்துக்கொள்வார்கள்.
அந்தப் பெண் காவலர்களுடைய எண்ணிக்கையை அந்த ரேஷி
யோவிற்கு ஏற்றவாறு ஓரளவிற்கு உயர்த்த வேண்டும். அப்படி
உயர்த்துகிறபோது, பெண்கள் செய்கிற அல்லது பெண்கள்
சம்பந்தப்பட்ட சில குற்றங்கள் தடுக்கப்படுவதற்கு அது
வாய்ப்பாக இருக்கும். ஆக 16 ஆண்டுகளுக்குப் பின்னாலும்
அந்த எண்ணிக்கை உயர்த்தப்படவில்லை என்பதை முக்கிய
மான பிரச்சினையாக நான் அரசினுடைய கவனத்திற்கு
கொண்டுவர விரும்புகிறேன்.

ஒரு போலீஸ் ஸ்டேஷன் என்று சொன்னால் அங்கே ஒரு
ஜீப் குறைந்த பட்சம் இருக்க வேண்டும். தற்போது கிராமங்
களிலே எல்லாம் என்ன வாடிக்கை என்று சொன்னால் யாரா
வது போய் கம்ப்ளெயின்ட் கொடுத்தால், அவர்களையே
டாக்சி எடுத்து வரச் சொல்லுவார்கள். கம்ப்ளெயின்ட்
கொடுத்து விட்டு ஒரு டாக்சி எடுத்து வந்து போலீஸ்
காரர்களைக் கூட்டிக் கொண்டு போய் ஒரு நாளைக்கு
அதற்கு செலவே அவருக்கு ஆயிரம் ரூபாய் ஆகும். அத்தோடு
ஆங்காங்கே குற்றவாளிகளைக் கைது செய்தால் கூட ஸ்டேஷ
னுக்குக் கொண்டு வர முடியாது—வாகனங்கள் வசதி இல்லாத
காரணத்தாலே, எனவே ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும்
குறைந்த பட்சம் ஒரு ஜீப் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன்.

(பிற்பகல் 12-30)

இன்னொரு பிரச்சினை, இப்போது ஆயிரம் பேர்கள்
சப்-இன்ஸ்பெக்டர்களாக இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம்
ஹெட் கான்ஸ்டபுளாக இருந்தவர்கள். சப்-இன்ஸ்பெக்டர்
களாக இன்றைக்கு பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள்
பொது நியமனத்தாலே அந்த ஆயிரம் சப்-இன்ஸ்பெக்டர்



1989 ஏப்ரல் 28] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

ஹெட் கான்ஸ்டபுள்களாக மாறி ஆயிரம் ஹெட் கான்ஸ்ட
புள்கள் பர்ஸ்ட் கிரேட் கான்ஸ்டபுள்களாக மாறி, அந்த
ஆயிரம் பர்ஸ்ட் கிரேட் கான்ஸ்டபுள்கள், செகண்ட் கிரேட்
கான்ஸ்டபுள்ளாக மாறுகின்ற வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே
அவர்கள் எல்லாம் சேர்ந்து எங்களை சப்-இன்ஸ்பெக்டராகவே
வைத்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் குறைந்
தது ஏ.எஸ். ஐயாவது வைக்க வேண்டும், என்று கேட்கிறார்
கள். அந்த கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்வேன். ஏன் என்றால் ஒரு ஊரிலிருந்து ராஜா
வேஷம் போட்டுக் கொண்டிருந்துவிட்டு, அந்த ராஜா வேஷம்
போட்டவரே அங்கே ப்யூன் வேஷம் போடுகின்ற மாதிரி—
முதலிலே சப்-இன்ஸ்பெக்டர் உடையிலே இருந்து விட்டு,
அவரே கான்ஸ்டபுள் உடையிலே போய் நின்றால் யாரும்
அங்கே மதிக்க மாட்டார்கள். எனவே குறைந்த பட்சம் அந்த
ஆயிரம் பேரை ஏ.எஸ். ஐ-யாவது ஆக்க வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. அவர்களுக்கு
சப்சிடைஸ்டு ரேட்டிலே அரிசி போன்ற உணவுப் பொருள்கள்
எல்லாம் கொடுத்தோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ராஜாவாக
இருந்துவிட்டு ப்யூனாக இருந்தால் தான் கஷ்டம். ராஜா
வேஷம் போட்டு விட்டு ப்யூன் வேஷம் போடுவதில் ஒன்றும்
தப்பு இல்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்
களே, அது சரிதான். ஆனால் இவர்கள் கான்ஸ்டபுள்களாக
இருக்கிறார்கள். கான்ஸ்டபுள்களாக இருந்தவர்கள் 8 ஆண்டு
களாக சப்-இன்ஸ்பெக்டர்களாக பணியாற்றியிருக்கிறார்கள்.
எனவே 8 ஆண்டுகள் சப்-இன்ஸ்பெக்டராக சப்-இன்ஸ்
பெக்டர் உடையோடு இருந்துவிட்டு—சப்-இன்ஸ்பெக்டர் என்றால்
2 ஸ்டார் கொடுப்பார்கள். அட்லீஸ்ட் ஏ.எஸ். ஐயாக இருந்
தால் அந்த யூனிபார்ம் ஒரு ஸ்டார் இருக்கும். இரண்டு
ஸ்டார் போய், 1 ஸ்டார் போய், அந்த யூனிபார்ம் போய் சாதா
ரண போலீஸ் ட்ரெஸ்ஸிலே நிற்கின்ற போது அது தர்ம
சங்கடமான நிலையை உண்டாக்கும். அதனால் அவர்கள் மத்தி
யிலே ஊக்கக்குறைவு ஏற்படும். அதை அரசு கவனத்திலே
எடுத்துக்கொள்ள வேண்டும். அதுமாதிரி ஒரு குறைபாடு இருக்
கிறது. இதை நீங்கள் நிறைவு செய்தால் அவர்கள் சிறப்பாக
பணியாற்ற முடியும். அதற்காகத்தான் நான் சொன்னேன்.

இன்னொன்று சப்சிடைஸ்ட் ரேட்டிலே கொடுக்கின்ற போது,
81-லே கொண்டு வந்த போது 50 சதவீதம் கொடுத்தோம். அதற்
குப்பின்னாலே விலையேற்றம்—இந்த சிவில் சப்ளைஸ் கார்ப்ப
ரேஷனிலே என்ன செய்கிறார்கள் என்றால், எவ்வளவு விலை
ஏற்றப்படுகிறதோ அதையெல்லாம் சேர்த்து உண்மையிலேயே

கான்ஸ்டபிளிலிருந்து சப்-இன்ஸ்பெக்டர்வரைக்கும் இப்போது எவ்வளவு வாங்குகிறார்கள் என்று சொன்னால் 90% உள்ள விலையிலே கட்ட வேண்டியிருக்கிறது. உண்மையிலேயே இப் போது என்ன விலையோ அந்த விலையிலே 50% கொடுக்க வேண்டும். அதுதான் ரியல் சப்சிடியாக இருக்குமே தவிர இல்லை யென்றால் அப்போது 81-லே பிக்ஸ் பண்ணியதிலிருந்து நீங்கள் வைத்து விலை ஏற்றத்தையெல்லாம் கணக்கு எடுக்காமல் என்று சொன்னால் சிவில் சப்ளைஸ் போனால் எங்களுக்கு உத் திரவு இல்லை. இப்போது உள்ள விலையெல்லாம் சேர்த்து ஏறக் குறைய சப்சிடி இல்லாத நிலைக்கு 90% கட்டவேண்டிய நிலை இருக்கிறது. எனவே ரியல் சப்சிடி என்று சொன்னால் அது 50% என்று சொன்னால் இன்போது இருக்கின்ற விலையிலே— ஆப்டர் ஆல் இன்கிரிஸஸ் என்ன இருக்கிறதோ அதை சொன் னால் தான் அதிலே அவர்கள் பயன்பெற முடியும். இதையும் அரசு கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டும்.

சுருக்கமாக ஒன்றிரண்டைச் சொல்லி முடிந்துவிடுகிறேன். தமிழ்நாட்டிலே 1034 காவல் நிலையங்கள் இருக்கின்றன. புறநகர் எல்லாம் சேர்த்து 1200. இதிலே எவ்வளவு ஸ்டேஷன்களுக்கு கட் டிடம் இருக்கிறது என்று சொன்னால் ஏறக்குறைய700-க்குத் தான் சொந்தக் கட்டிடம் இருக்கிறது. 400 ஸ்டேஷன்களுக்கு இன் னும் கட்டிடம் இல்லை. ஒரு ஆண்டுக்கு 20 என்று அறிவித்தால் கூடமொத்தத்தில் 20 வருஷம் ஆகும் எல்லா ஸ்டேஷன்களுக்கும் கட்டிடம் வருவதற்கு. சென்ற ஆண்டு 18 அறிவித் திருக்கிறீர்கள். இந்த ஆண்டு புது போலீஸ் ஸ்டேஷன் கட்டி டங்கள் எதுவுமே அறிவிக்கப்படவில்லை. அது வருந்தத் தக்கது. ஏனென்றால் சப்-இன்ஸ்பெக்டரோ, இன்ஸ் பெக்டரோ தனியார் வீட்டிலே, ஒரு பிரைவேட் வீட்டிலே தங்குகின்றபோது அவர்களுடைய ஆதிக்கத்திற்கு உட்பட வேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால் போலீஸ் ஸ்டேஷன் அவர்கள் வீட்டிலே இருக்கிறது. அந்த ஊரிலே வசதியான ஆள் வீடு வைத்திருப்பார். அவர் வீட்டில் போலீஸ் ஸ்டேஷன் இருக்கும். இன்ஸ்பெக்டரும் அவருடைய வீட்டில் தான் குடியிருப்பார். அதனால் அவர்களுடைய ஆதிக்கத்திற்கு உட்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே இதில் கவனம் செலுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல நம்முடைய மாண்புமிகு திரு. லத்தீப் அவர்கள் புள்ளிவிவரம் சொல்லி இருக்கிறார்கள். எனவே ஒன்றிரண்டு மட்டும் சொல்லிவிடுகிறேன். மொத்த புகார்களிலே—கம்ப்ளெயிண்ட்ஸ் வருகின்ற போது அவற்றை கண்டுபிடிப்பதிலே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. அது பாராட்டுக்குரியது. 1987–88-லே பார்த்தால் பெரிய கொலை கொள்ளை எல்லாம் எடுத்துக்கொண்டால் 81 புகார்கள் வந் தது என்று சொன்னால் 44 கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 50% தான் வருகிறது. அதுபோல கொள்ளைகள், வழிப்பறி, வீடு புகுந்து திருட்டு—நேரம் இல்லாததால் அவற்றையெல்லாம் சொல்லாமல் விடுகிறேன். பெரிய திருட்டைப் பார்த்தால்



ஆவரேஜ்ஜாக 50% அந்த அளவிற்குத்தான் கண்டுபிடிக்கப்படு
கிறது. மற்றவை கண்டுபிடிக்கப்படவில்லை. அதே நேரத்
தில் பெட்டி கேஸஸ் வழக்குகள் 1451 என்றால் 1400 கண்டு
பிடித்துவிடுகிறார்கள். இதிலே இருக்கின்ற அந்த கவனம்
பெரிய கொலை, கொள்ளை, வழிப்பறி, வீடுபுகுந்து தாக்கு
வதில் இல்லை. இதில் எல்லாம் காவல்துறை முழுவதுமாக
தங்களுடைய கவனத்தைச் செலுத்தி குற்றவாளிகளைக் கண்டு
பிடிக்கின்ற முயற்சியிலே ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

இறுதியாக ஒருசில மணித்துளிகள் வேண்டும் என்று கேட்
டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்
காட்டுகின்றபோது காவல்துறைக்கும் பொதுமக்களுக்கும் இடை
யிலே அரசியல் தலைவர்கள் பாலங்களாக பயன்பட வேண்டும்
என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே
சமீபகாலத்திலே என்ன நடக்கிறது என்று சொன்னால் அரசியல்
தலைவர்கள் பாலங்களோடு சட்டசபைக்குள்ளே வருகின்ற
அந்தச் சூழ்நிலை. கைக்கும், கழுத்துக்கும் பாலம் போட்டு,
கட்டு போட்டு வருகின்ற சூழ்நிலை சமீபத்திலே ஏற்பட்டுக்
கொண்டிருக்கிறது.

பொதுமக்களுக்கும், காவல்துறைக்கும் பாலமாக இருக்க
வேண்டிய அரசியல் தலைவர்களை, பொய் வழக்குகளிலே சிக்க
வைப்பதும், இங்கே நண்பர்கள் எல்லாம் சுட்டிக்காட்டியதைப்
போல, ஜனநாயக ரீதியாக, கருப்புக் கொடியோ, மற்ற போ
ராட்டங்களிலோ ஈடுபடுகிறபோது, அவர்களை அடிப்பது எந்த
விதத்திலே நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. இன்னும்
சொல்லப் போனால், கொலைக் குற்றம் செய்தவர்களைக்
கூட, அவர்கள் மீது வழக்குத் தொடரலாம். அவர்களை நீங்கள்
ஜெயிலுக்கு அனுப்பலாம். விசாரணை செய்யலாம். சில நேரத்
திலே பொது நன்மை கருதி, மிகப் பெரிய அளவில் ஏதாவது
ரகசியங்கள் அவர்களிடமிருந்து பெற்றுத்தான் ஆகவேண்டும்
என்கிற சூழ்நிலை இருக்கிறபோது, கொஞ்சம் எக்ஸெஸ்-ஆக
பவர் யூஸ் பண்ணி—அது எக்ஸ்கியூசபிள்—அது மாதிரி செய்
தால் கூட பரவாயில்லை. ஆனால் அதைக் கூட நியாயமாக
சட்டப்படி செய்யக்கூடாது.

எனவே, நண்பர்கள் எல்லாம் சொல்வதைப் போல, தேர்ட்
டிகிரி மெத்தேட்ஸ்' என்று சொல்வார்களே, அதைப் போல,
ஒரு பாவமும் செய்யாத சட்டமன்ற உறுப்பினர்களும்—
உகம்சந்த் தாக்கப்பட்டிருக்கிறார். அவரே இங்கே சொன்
னார். அவர் தவறாக—நீங்கள் சொன்னதையே நான் சொல்
கிறேன் ஒரு வேளை நீங்கள் சொன்னதைப் போலவே, கருப்புக்
கொடி காட்ட அனுமதி கொடுத்த இடத்திலே இல்லாமல்,
அவர் வீட்டிலே இருந்ததாக வைத்துக்கொள்வோம். அந்தச்
சம்பவங்கள் நீங்கள் சொன்னதைப் போல நடந்திருந்தால்கூட,

வண்டியிலே ஏற்றுவதற்கு முன்னால் அடித்துத் தூக்கி கையை ஒடித்துத்தான் ஏற்றவேண்டும் என்ற அவசியம் என்ன வந்திருக்கிறது? ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு, இன்றைக்கு எங்களுக்கு நடக்கிறது. நாளைக்கு உங்களுக்கு நடக்காதா? காங்கிரஸ் கட்சி, அண்ணா தி.மு.க., தி.மு.க. இதெல்லாம் மாறி, மாறித்தான் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியாக இருந்து கொண்டே வருகிறோம். அது யாராக இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, நாளைக்கு வருகிற எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும், இந்தச் சூழ்நிலை சட்டமன்றத்திலே எதிர்க்கட்சிகள் அல்லது சட்டமன்ற உறுப்பினர்களுக்கே இந்த கௌரவக் குறைவான நிலை என்று சொன்னால், எப்படி அவர்கள் பொதுமக்களாலே மதிக்கப்படுவார்கள்? எப்படி பொதுமக்களுக்கும், காவல்துறையினருக்கும் பாலங்களாக இருக்கமுடியும்?

அவர் போர்ஸ் பண்ணி படுத்து இருந்தால்கூட, ஒரு இரண்டு பேர் தூக்க முடியவில்லையென்றால்கூட, நான்கு பேராகத் தூக்கிக் கொண்டு போய்ப் போடுவது அது ஜனநாயகத்தில் அனுமதிக்கப்பட்ட முறை தான். அதற்காக அடித்துத் துன்பப் படுத்துவது, கஷ்டப்படுத்துவது நிச்சயமாக தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக காவல்துறையினருக்கு, எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல, எந்தக் கட்சியாக இருந்தாலும், அவர்களை அடிக்கக்கூடாது என்று உத்தரவு இடவேண்டும். இதிலே காவல்துறையினர் மனிதாபி மானத்தோடு நடந்து கொள்ளவேண்டும். அவர்களும் மனிதர் கள் தான். வீட்டிலே சென்று அங்கே இருக்கின்ற ஒரு எம்.எல்.ஏ. வை அடிக்கிறபோது, அவர் தம்பியை அடிக்கிறபோது, அவர் களுடைய சம்சாரம், மனைவி மக்கள் பார்க்கிறபோது, எவ் வளவு கஷ்டங்களுக்கு ஆளாவார்கள்? நீங்கள்கூட முன்னாலே இருந்த சம்பவங்களை எல்லாம் சொன்னீர்கள். நான் கூட ஒத்துக்கொள்கிறேன். அதற்காக ஒரு தவறுக்குத் தவறே பரி காரமாகாது. முன்னாலே இருந்த ஆட்சிக் காலத்திலே இது போல தவறு செய்திருக்கிறார்கள். அடித்து இருக்கி றார்கள். அதனாலே இப்போதும் அடிக்கிறோம் என்று சொல்ல முடியுமா? சொல்லலாமா? எனவே அது தவறு என்று சொன் னால் இப்போது நடப்பதும் தவறுதான். எனவே, இவற்றை யெல்லாம் நீங்கள் களைய முயற்சிக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே, நடைப்பயணமாகப் போன மகளிர், கமிஷ னர் அலுவலகத்திற்கு முன்னால், திருமதி ஸௌமதி, முன்னாள் எம்.எல்.ஏ., திருமதி இந்திராகுமாரி ஆகியோர் எல்லாம் கருப்புக் கொடி காட்டப் போனார்கள். அங்கே வைத்து அடிக்கிறார்கள். அது என்னவோ தெரியவில்லை. போலீஸ்காரர்கள் வேனிலே



ஏற்றுவதற்கு முன்னாலே அடித்து ஏற்றினால்தான் அதிலே ஆனந் தம் போல் இருக்கிறது. ஏற்றுகிறபோது கொஞ்சம் ஒரு தட்டுத் தட்டி, பிரம்பாலே நாலு சாத்து சாத்தி, நாலு இடத்திலே புடைக்க வைத்து, அதற்குப் பின்னாலேதான் வண்டிக்குள்ளே தள்ளுகிறார் கள். அதிலே என்ன ஆனந்தமோ தெரியவில்லை. எனவே, கமிஷனர் அலுவலகத்திற்கு முன்னாலே போன மகளிரை அடித்து இதே மாதிரி வண்டியிலே ஏற்றிக் கொண்டு போய் ஜெயிலிலே அடைத்தார்கள். கருப்புச் கொடி காட்டினால் கைது செய்யுங் கள். வழக்கைப் பதிவு செய்யுங்கள். ஜெயிலிலே தள்ளுங்கள். அது வேறு பிரச்சினை. வழக்கு நடக்கட்டும். ஆனால் அடிக்கப் பட்டிருக்கிறார்கள்.

அதுபோல, திருமதி இந்திராகுமாரி நான்கு நாளுக்கு முன் னாலே ஒரு ஊரிலே நடை பயணம் போய் கவர்னர் அவர்களுக்கு மனு கொடுக்கப் போனார்கள். அப்போது தி.மு.க. வினர் இடையிலே போய் புகுந்து அந்த ஊர்வலம் தடுக்கப்பட்டு, சிதறி ஓடி, அதற்குப் பிறகு காரிலே போய் கவர்னர் கிட்டே மனு கொடுத்து விட்டு வந்தார்கள். எனவே, அப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் தவிர்க்கப்படவேண்டும் என்பதை நான் மாண்புமிகு முதலமைச் சர் அவர்களுடைய கவனத்திற்கு இந்த நேரத்தில் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

அது போல, திரு. அர்ச்சுனன், சட்டமன்ற உறுப்பினர் இன்றைக்குப் பேச வாய்ப்புக் கேட்டார். அவருக்கு வாய்ப்பு இல்லை. அவருடைய வீடு தாக்கப்பட்டிருக்கிறது. எம். எல். ஏ. வே தாக்கப்பட்டிருக்கிறார். எனவே, இதையெல் லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இன்னொன்று, சென்னை நகர காவல் துறையைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு தமிழ்நாட்டில் நடக்கிற அத்தனை சம்பவங்களுக்கும் கருப்புக் கொடியாக இருக் கட்டும், அல்லது போராட்டமாக இருக்கட்டும் அல்லது அரசு பதவி விலகவேண்டும் என்று நடக்கிற கோரிக்கையாக இருக்கட் டும், இதற்கெல்லாம் சென்னையிலே இருக்கிற கமிஷனர் அவர் களுடைய நடவடிக்கைகள்தான், தவறான நடவடிக்கைகள் தான் காரணமாக அமைந்தது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன். அவர் எமர்ஜென்சியிலே எல்லாம், அந்த நேரத்திலே எல்லாம் நல்லவராகத்தான் இருந்தார். இப்போது தானே கெட்டுப் போய்விட்டாரா, அல்லது யாரும் கெடுத்து விட் டார்களா என்று தெரியாது.

இந்தத் தவறுகள் எல்லாம் நடப்பதற்குக் காரணம், உதாரண மாக நடராசன் மேலே வழக்கு வந்திருக்கிறது என்று சொன் னால், இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொன்னார் கள். செய்தித் துறை அமைச்சரும் படித்தார். அவர் ராஜி னாமா செய்து கொள்ளுகிறேன் என்று கேட்கிறபோது, நான் பதவி

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 ஏப்ரல் 28

விலகிக் கொள்கிறேன் என்று கேட்கிறபோது, அவர் காருக்குக்
கடன் வாங்கியிருக்கிறார், வீட்டுக்குக் கடன் வாங்கியிருக்கிறார்
என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் கைது செய்யப்பட்டது
அவர் அலுவல் சார்பிலே, அவருடைய அலுவலிலே ஏற்பட்ட
தவறுகளுக்காக அல்ல. அல்லது அலுவலிலே அவர் தவறாக
நடந்து கொண்டார் என்பதற்காக அல்ல. ஒரு சாதாரண கம்ப்
ளெயின்ட். அது நியாயம் தானா என்று கேட்க விரும்புகிறேன்.

ஆலந்தூரிலே ஜகாங்கீர் கொல்லப்பட்டார். அந்தக் குற்ற
வாளி நான்கு நாளிலேயே வெளியே வந்துவிட்டார். மர்டர்
நடந்திருக்கிறது. கொலை நடந்திருக்கிறது, பட்டப் பகலிலே.
அந்தக் குற்றவாளி நான்கு நாட்களிலே வெளியே வந்துவிட்டார்.
ஆனால் இவர் 18-ஆம் தேதி கைது செய்யப்பட்டார். இன்
றைக்குத் தேதி, 1-ஆந் தேதி வரை அவர் ஊரிலே இங்கே
தங்க முடியவில்லை. 30-ம் 12-ம், 42 நட்கள் அவர் ரிமாண்
டில் வைக்கப்பட்டு, கண்டிஷன் பெயிலிலே விடப்பட்டு, அதற்குப்
பின்னாலே இன்னமும் காஞ்சிபுரத்திலே தங்கவேண்டியிருக்
கிறது. என்ன விசாரணை நடத்துகிறார்கள். 42 நாளைக்கு?
ஏன் அவரை பெயிலிலே விடக்கூடாதா? ஏன் சென்னையிலே
அவர் தங்கக்கூடாது?

(பிற்பகல் 12-40)

சரி, கைது செய்கிறபோது, 12 மணிக்கு கம்பிளைண்ட் கொடுக்
கிறான். யாரோ ஒருவன் வந்து அண்ணா தி.மு.க.விலிருந்து
விலக்கப்பட்டவன் வந்து கம்பிளைன்ட் கொடுக்கிறான். அதை
வைத்துக்கொண்டு உடனடியாக 12-30 மணிக்கே அவர் வீட்டுக்கு
போய் கைது செய்து வழக்கு தொடர்ந்து இது எல்லாம்
ப்சிக்வெண்டாக இத்தனை நிகழ்ச்சிகளுக்கும் அதற்குப் பின்னால்
நடந்த துர்பாக்கியமான அத்தனை சம்பவங்களுக்கும் இது
தானே காரணம். எந்தவிதமான விசாரணையும் இல்லாமல்,
முன்னறிவிப்பும் இல்லாமல் 12-00 மணிக்கு கம்பிளைண்டு
வாங்கி அதை ரிட்டன் கம்பிளைண்ட்டில் ரிஜிஸ்ட்டர் செய்து
12-30 மணிக்கு ஜீப்பை எடுத்துக்கொண்டு போய் வேக வேகமாக
வீட்டுக்குள் ஓடி அவரை கைது செய்து, ரிமாண்டு செய்து, என்ன
அவசியம் வந்தது.

இன்னும் ஒன்று, எதிர்க்கட்சித் தலைவர் மேலே வழக்கு,
அவருக்கு உடம்பு சரியில்லை என்று தேர்தலுக்கே வர
வில்லை. இரண்டு தேர்தலுக்கு மருங்காபுரி, மதுரை தேர்தல்
களுக்கு அவர் வரவில்லை. அவர் யாரையோ துப்பாக்கி
எடுத்து சுட வந்தார். வீட்டில் பணம் கேட்கப் போனால்
எதிர்க்கட்சித் தலைவர் சுட வந்தார் என்று சொல்லி அவர்



1989 ஏப்ரல் 28] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

மீதே ஒரு வழக்கு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனக்குத்
தெரியாது, கேள்விபட்டவுடன் நான் ஆணையருக்குச் சொல்லி
இந்த வழக்கை உடனடியாக வித்டிரா செய்யப்படும்.
வாபஸ் பெறப்படும் என்று நானே சொன்னேன் என்று சொன்
னார்கள். அதற்குப் பின்னால் கமிஷனர் பத்திரிகையில் பேட்டி
கொடுக்கிறார். இல்லை, இல்லை அது எங்களுக்கு இன்னும்
அதிகாரபூர்வமாக வரவில்லை என்று அவர் சொல்லுகிறார்.
நான் முதலமைச்சர் அவர்கள் இடத்தில் இந்தப் பிரச்சினையை
எழுப்புகிறபோது முதலமைச்சர் அவர்கள் அதைப்பற்றி விளக்கம்
கொடுக்கிறேன் என்று சென்னார்கள். என்ன விளக்கம்? இன்
றைக்கு பதில் பேசும்போது அவர்கள் சொல்வார்கள் என்று
நான் எதிர்பார்க்கிறேன். உண்மையிலேயே அந்த வழக்கு ரத்து
செய்யப்பட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) 2 நிமிடத்தில்
முடித்து விடுகிறேன். அந்த வழக்கு உண்மையிலேயே ரத்து
செய்யப்பட்டு விட்டதா? இல்லையா? எதிர்க்கட்சித் தலைவர்
மேல் இருக்கிற வழக்கு. அது யாரோ ஒரு பெரிய பிரபலமான
வரா? என்ன முன்னாள் முதலமைச்சரா? இந்த நாட்டில்
கவர்னராக இருந்தாரா; பிரசிடெண்டாக இருந்தாரா?
எங்களுக்குத் தெரியாதா? காவல்துறை அங்கிருந்து அவரை
கொண்டு போய் ஒரு ஓட்டலில் ரூம் போட்டு வைத்துக்கொண்டு
பத்திரிக்கையாளர்களை எல்லாம் காலையில் கூப்பிடுகிறார்கள்.
பத்திரிகைகளில் அந்த செய்தி வந்திருக்கிறது. கமிஷனர்
ஆபீசுக்குப் போனால் உடனே வண்டியில் ஏறுங்கள், ஜீப்பில்
ஏறுங்கள் என்று சொல்லி ஏற்றிக்கொண்டு அந்த ஆள் இருக்கிற,
யாரோ ஒரு ஆள் கட்சியிலிருந்து ஒதுக்கப்பட்ட ஒரு சாதாரண
மான நபர் அந்த நபர் இருக்கிற ஓட்டலுக்கு கூட்டிக்கொண்டு
போகிறார்கள். இப்போது சட்டசபை இருக்கிற காரணத்தால்
அறிக்கை எதுவும் காணோம். சட்டசபை முடிந்தால்
உடனே அறிக்கை வந்துவிடும். என் மேல் குற்றச்சாட்டுகள்
கே.கே.எஸ்.எஸ்.ஆர். மேலே் குற்றச்சாட்டுகள், புரட்சித்
தலைவர் எம். ஜி. ஆர். மேலே குற்றச்சாட்டுகள், எதிர்க்
கட்சித் தலைவர் மேலே குற்றச்சாட்டுகள் இது எல்லாம்
வரிசையாக பக்கம் பக்கமாக டைப் செய்து ஒரு நபர் போலீஸ்
பந்தோபஸ்தோடு போலீஸ் கஸ்டோடியில் வைத்துக்கொண்டு
லாட்ஜில் ரூம் போட்டு வைத்துக்கொண்டு, பத்திரிகை
யாளர்களை கூட்டிக்கொண்டு போய் யாரோ ஒரு
மூன்றாம் தர பேர்வழி, நான்காம் தர பேர்வழி கட்சியிலிருந்து
விலக்கப்பட்டவனை வைத்துக்கொண்டு தினம் தினம் அரைப்
பக்கம், முழு பக்கம் பத்திரிகையில் கட்டாயப்படுத்தி செய்தி
களைப் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நியாயம்தானா?
இந்த வேலை எல்லாம் காவல் துறைக்கு தேவைதானா?
இதிலே காவல்துறை கண்டிப்பாக ஈடுபட வேண்டுமா? யாரை
யாவது குற்றம் சொல்லவேண்டும் என்று சொன்னால் முதல
மைச்சர் அவர்கள் என்ன குற்றம் சுமத்துவதற்கு பயப்படப்
போகிறவரா? இருக்கவே இருக்கிறது. 110ஐ எடுத்துப்
படித்தால் போகிறது. எந்த விதியில் வேண்டுமானாலும்

சொல்லலாம். (மணியடிக்கப்பெற்றது). யார் வேண்டுமானாலும் குற்றச்சாட்டு சொல்லலாம். காவல் துறை என்ன அவ்வளவு வேக வேகமாக செய்கிறார்கள். யாரையோ ஒருவரை கொண்டு வந்து வைத்துக்கொண்டு தினம் தினம் அறிக்கை வரிசையாகப் போட்டால், எல்லோர் மேலும் குற்றச்சாட்டு; யார் அவர் ? அப்படி என்ன அரசியலில் ஒரு பெரும் புள்ளியா ? அரைப் பக்கம் முக்கால் பக்கம் வருகிறதே; பத்திரிகையாளர்களே போடுகிறார்கள். காவல்துறைக்கு 9–30 மணிக்கு வாருங்கள் என்று சொல்கிறார்கள். அங்கிருந்து ஜீப் கொடுத்து, கார், கொடுத்து ஏற்றிக்கொண்டு போய் ஒட்டலுக்கு அழைத்துக் கொண்டு போகிறார்கள். அங்கே வைத்து பேட்டி தரப்படு கிறது. பேட்டி கூட அல்ல. எடுத்து எல்லாம் டைப் செய்து விநியோகிக்கப்படுகிறது. இந்த முறைகள் எல்லாம் நியாயம் தானா ? இது சரியா ? அவனை இதற்கு காவல்துறை பயன் படுத்தலாமா ? என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதேபோல் அவர் மேல் போடப்பட்ட வழக்கின் காரணமாக இன்றைக்கு நடைபெற்ற அத்தனை சம்பவங்களுக்கும், நிகழ்ச்சி களுக்கும் அது காரணமாக அமைந்தது. எனவே இதில் கமிஷனர் கொஞ்சம் கவனத்தோடும், நிதானத்தோடும் நடந்து கொண்டிருக்கலாம் அல்லது நடந்து கொள்ள ஏன் யார் அவரை கட்டாயப்படுத்துகிறார்கள் என்று தெரியாது, முதலமைச்சருக் குத் தெரியாது எதிர்க்கட்சித் தலைவர் மேல் கேஸ் போட்டது என்று சொல்லுகிறபோது ஒரு எதிர்க்கட்சித் தலைவர் 55 லட்சம் நோட்டு வாங்கிய ஒரு எதிர்க்கட்சித் தலைவர் மேல், எம். எல். ஏ., மேல் ஒரு கேஸ் யாரோ ஒருவர் புகார் பெட்டிஷன் இந்த மாதிரி நான் பணம் கேட்கப் போனேன், கொடுத்து இருக்கிறேன் என்று சொன்னதை வைத்துக்கொண்டு உடனடியாக 307 எல்லாம் போட்டு ஒரு கேஸ் பைல் செய்துவிட்டு விசாரணைக்குப் போய் என்றைக்கு வேண்டுமானாலும் கைது செய்யலாம் என்ற நிலையை ஏற்படுத்தி இருப்பது நியாயம் தானா ? எனவே இதில் எல்லாம் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். காவல் துறை தவறாக பயன்படுத்தப்படுகிறது. அரசியல் ரீதியாக எதிர்க்கட்சிகளை ஒழிப்பது, அல்லது எதிர்க் கட்சித். தலைவர் அல்லது தலைவருக்கு உதவியாளராக இருப்பவரை அல்லது அங்கு இருக்கிற அந்த எம். எல். ஏ.க்கள் போன்றவர்களை அடித்து, பயமுறுத்துவது, அவர்களை எல்லாம் நசுக்குவது என்ற முறையிலே இந்த அரசு மேலும் முயற்சிக்கக் கூடாது. அதற்கு காவல்துறை உதவியாக இருக்கக்கூடாது. தமிழக காவல்துறை புகழ் பெற்ற காவல்துறையினர், எனவே அவர்களுடைய பாரம்பரியத்தை காப்பாற்றுகின்ற வகையில் அவர்கள் தொடர்ந்து செயல்படவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்கனவே நேரம் அதிகமாக கேட்டு அவர்கள் இன்றைக்காவது ஒத்துழைப்பு கொடுங்கள் சீக்கிரமாக முடியுங்கள் முதலமைச்சர்.



அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள். எனவே முதலமைச்சர் அவர்களுடைய பதிலில் நம் காவல்துறை யினர் மற்றும் எல்லோருக்கும் வேண்டிய பொது அறிவிப்புகள் ஏராளமாக இருக்கும் என்ற முறையில், அந்த நம்பிக்கையோடு நான் என்னுடைய நேரம் குறைக்கப்பட்டாலும் பரவாயில்லை என்று கூறி இந்த அளவில் என்னுடைய உணர்வினை நான் நிறுத்திக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். எனவே தமிழகக் காவல்துறையினர் தடம் புரளாமல், கட்டாயத்திற்கு ஆட்படாமல், சிபாரிசுக்கு ஆட்ப டாமல், அது போல எதிர்க்கட்சிகளை அழிக்கிற முயற்சியில் ஈடுபடாமல், பொய் வழக்குப் போடாமல் நிதானத்தோடு நடந்துகொள்ள வேண்டும் என்று காவல் துறை அதிகாரிகள்— இங்கே இருக்கிற அதிகாரிகள் எல்லோரும் அப்படி அல்ல, யாராவது ஒரு சில பேர் மோசமானவர்களாக இருக்கலாம். பல பேர் நியாயமாக நடப்பவர்கள் தான் இருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அரசும் அதிகாரிகளை ஈடுபடுத்தக்கூடாது. சில நேரத்தில் அதிகாரிகள் தாங்களே செய்கிறார்கள், சில நேரத்தில் அதிகாரிகள் அரசு அளவில் சொல்லி, செய்கிறார்கள். அரசும் அதில் நிதானம் காட்டி, அதிகாரிகள் நியாயமாக நடக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நேற்றும் இன்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் நீண்ட நேரம் எடுத்துக் கொண்டு இந்த மானியக் கோரிக்கைகள் மீது தங்களுடைய கருத்துகளை விரிவாக எடுத்துக்கூறி இருக்கின்றார்கள். நேற்றைய தினம் முழுவதும் நடைபெற்ற விவாதத்தில் பெரும்பாலான உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கையிலே மிக முக்கியமாக மதுவிலக்கு, ஆயத் தீர்வை குறித்துப் பேசியிருக் கின்றார்கள். இன்றைக்குப் பெரும்பாலானவர்கள் காவல்துறை, தீயணைப்புத் துறை ஆகிய இந்தத் துறைகள் குறித்துப் பேசி யிருக்கின்றார்கள். நம்முடைய, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், அவருடைய உரைக்குத் தொடக்கமாகவே காவல்துறையைப் பின்னுக்குத் தள்ளி, மது விலக்கு ஆயத் தீர்வைத் துறையை முன்னால் வைத்துப் பல விளக்கங்களைச் சொல்லி, மறுப்புக்களை அளித்து இருக்கின்றார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவருடைய உரைக்குத்தான் முதலில் முன்னுரிமை தரவேண்டும் என்கின்ற முறையில் நானும் என்னுடைய விளக்க உரைக்கு முதல் கட்டமாக மதுவிலக்கு ஆயத்தீர்வை நிதி ஒதுக்கீட்டுக்கான அனுமதியை இந்த அவையிலே பெறுகின்ற வகையில் சில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றைய தினம் இங்கே உரையாற்றிய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களும் இப்போது எனக்கு முன்னால் உரையாற்றிய எதிர்க்கட்சித்

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 ஏப்ரல் 28

துணைத் தலைவர் அவர்களும், மதுவிலக்கு ஆயத் தீர்வையிலே இந்த அரசு கொண்டுள்ள புதிய அணுகுமுறையின் காரணமாக பல கோடி ரூபாய், இன்னும் சொல்லப்போனால், மாதத்திற்கு 15 கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்பட்டு இருக்கிறது, இவர்கள் எப்படி 100 கோடி ரூபாயை உபரியாகத் தரப் போகிறார்கள் என்ற கேள்வியை எழுப்பியிருக்கின்றார்கள். அதற்கு நான் பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1988ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதங்களையும், 1989ஆம் ஆண்டு இந்த பிப்ரவரி, மார்ச் மாதங்களையும் இந்த வருமான வகையில் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டியது மிக முக்கியமான ஒன்றாகும். 1988 ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அரசுக்குக் கிடைத்த வருவாய் 16.85 கோடி. இந்த ஆண்டு, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அரசுக்குக் கிடைத்த வருவாய் 22.18 கோடி. இதிலேயிருந்து கடந்த இரண்டு மாதங்களில் வருவாய் குறையவில்லை என்பது தெளிவாகத் தெரிவதோடு, அதிகமாகக் கிடைத்து இருக்கிறது என்பதும் புரியும். இன்னும் சொல்லவேண்டுமேயானால், 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலே மதுவிலக்கு ஆயத் தீர்வையின் மூலமாக அரசுக்குக் கிடைத்த வருவாய், 1988-ல் 8.17 கோடி, இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலே மாத்திரம். இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முடிய அல்ல, 24 ஆம் தேதி வரை கிடைத்துள்ள வருவாய் 11.67 கோடி ரூபாய். இந்த மாதம், அடுத்த வாரத்திலே, 'இண்டெண்ட்' கொடுத்ததின் அடிப்படையில் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகின்ற வருவாய் $3\frac{1}{2}$ கோடி. எனவே கடந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் கிடைத்தது 8.17 கோடி ரூபாய். இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் கிடைக்கும் வருவாய் 15.17 கோடி ரூபாய். எனவே இழப்பு இல்லை. இழப்பு ஏற்பட்டுவிட்டதாக அவருக்குச் சொன்னவர்கள், தங்களுக்கு ஏற்பட்ட இழப்பின் காரணமாக இத்தகைய கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மேலும் நேற்றைக்கு நண்பர் பீட்டர் ஆல்போன்ஸ் பேசும் பொழுது, இன்றைக்கு அவர் இல்லை, பேசிவிட்டுப் பதிலை எதிர்பார்ப்பார் என்று எதிர்பார்த்தேன். மற்றவர்கள் வந்து சொல்வார்கள் என்று அவர் வேறு வேலையாகச் சென்று இருப்பதாக அறிகிறேன். அவர்கள் சொன்னார்கள், மாதம் 40 இலட்சம் கேஸ் முன்பெல்லாம் மதுபானம் விற்றது, இப்போது இல்லையென்று சொன்னார்கள். அது தவறு. 4 லட்சம் என்பதைத் தான் அவர் அவசரத்திலே, யாரோ சொல்லி, குறித்துக் கொள்ளும்போது 40 இலட்சம் என்று குறித்துக்கொண்டிருக்கிறார் என்று கருதுகிறேன். மாதம் 4 இலட்சம் தான்.



1989 ஏப்ரல் 28] [டாக்டர் மு. கருணாநிதி]

இரண்டாவதாக ஒன்றைச் சொன்னார்கள். ஆளுநர் ஆட்சியிலே 39 கோடி ரூபாய் கூடுதல் வருமானத்திற்கு நாங்கள் வழி செய்தோம் என்றும் குறிப்பிட்டார். நான் ஆளுநர் ஆட்சியைக் குறை சொல்லவில்லை. அன்றைக்குக்கூட நான் பேசும்போது, 'அவர் ஒரு கல்லை எடுத்தார்' என்று சொல்லியிருக்கிறேன். ஆனால், அதற்காக 39 கோடி ரூபாய்க்குக் கூடுதல் வருமானத்திற்காக வழி செய்தார் என்று காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் சொன்னது ஒரு தவறான புள்ளி விவரமாகும்.

(பிற்பகல் 12–50)

மூன்றாவதாக இன்னொன்றையும் சொன்னார். ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் ஐ.எம்.எஃப். எஸ்.–னுடைய விற்பனை குறைவாக இருக்கும்போது, தமிழ் நாட்டிலே மாத்திரம் ஏன் அதிகம் இருக்கிறது என்று தெரியவில்லையென்றும் கேட் அதற்கெல்லாம் விளக்கம் அளிக்கப் பின்னால் வருகிறேன். டார். அதற்கெல்லாம் விளக்கம் அளிக்கப் பின்னால் வருகிறேன். இருந்தாலும், ஆளுநர் ஆட்சியின்போது மதுபான உற்பத்தி யாளர்களிடம் வாங்கும் விலையைக் குறைத்துத் தரும்படி அந்த அரசு கேட்டது. அதாவது அரசாங்கத்தினுடைய நிறுவன மாக இருக்கின்ற 'டாஸ்மாக்' உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கும் விலையைச் சற்றுக் குறைத்துத் தர வேண்டுமென்று கவர்னர் ஆட்சியிலே கேட்கப்பட்டது. ஆனால் முதலிலே அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. பின்பு அவர்களிடம் வாங்காமல் அகில இந்திய அடிப்படையில் டெண்டர் முறையில் வாங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு, ஆளுநர் ஆட்சியிலே டெண்டர் பெறப்பட்டது. அப்படிப் பெறப்பட்ட டெண்டர்களை பரிசிலனை செய்து கொண்டிருக்கும்போது, மதுக் கடைக்காரர்கள் உயர்நீதிமன்றத்தில், வெளி மாநிலத்திலிருந்து வாங்கக் கூடாது என்று வழக்குப் போட்டார்கள்; 'ஸ்டே' கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். உயர்நீதிமன்றம் தடை வழங்காவிட்டாலும், அந்த டெண்டர்களைப் பரிசீலிக்கலாமே தவிர, அதன் மீது முடிவு எதுவும் எடுக்கக்கூடாது என்று உத்தரவிட்டது. இதற்கிடையில் கவர்னர் ஆட்சியில் அதிகாரிகளும், மதுபான உற்பத்தியாளர்களும் பேச்சுவார்த்தையைத் தொடங்கினார்கள். அப்போது உற்பத்தியாளர்கள் தாங்களாகவே விலையைக் குறைத்துக்கொள்வதாகச் சொன்னார்கள். அப்படி ஒரு கேசுக்கு குறைத்துக்கொள்வதாக ஒப்புக்கொண்டது 30 ரூபாய் ஆகும். அக்டோபர் முதல் ஜனவரி முடிய இப்படி 31 ரூபாய் ஒரு கேசுக்கு குறைத்துக்கொள்ளப்பட்டு, குறைக்கப்பட்ட மொத்த கேசுகள் 19 இலட்சம் கேஸ்களாகும்.

கடந்த ஆண்டு மொத்தத்திலே விற்கப்பட்ட 47 லட்சம் கேசுகளில் உள்ளடங்கியதுதான் இந்த 19 லட்சம் கேசுகள் என்பதையும் நான் நினைவூட்டுகிறேன். இதனால் 'டாஸ்மாக்' நிறுவனத்திற்கு 5.7 கோடி ரூபாய்தான்

கிடைத்தது. அதுபோலவே அந்த நிறுவனத்திற்கு பீர் வியாபாரம் மூலம் 28 லட்சம் ரூபாய் கிடைத்தது. இரண்டும் சேர்ந்து சுமார் 6 கோடி ரூபாய்க்கு மேல் லாபமாகக் கிடைத்ததேயல்லாமல், நேற்றைய தினம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் சொன்னதைப்போல 30 கோடி அல்ல என்பதை நான் தெளிவுபடுத்துகிறேன்.

இன்னொன்றையும் அவர் கேட்டார். ஆந்திரா, கர்நாடகா, கேரளாவை விட தமிழகத்திலே மாத்திரம் இந்த ஐ.எம்.எஃப்.எஸ். அதிகமாக விற்பதற்கு என்ன காரணம் என்பதையும் கேட்டார். அதற்கான காரணத்தை நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். 1986-87ஆம் ஆண்டு வரையில் இந்த மதுவிலக்கினால்—ஆயத் தீர்வை—286 கோடி ரூபாய் அரசுக்கு வருமானமாக வந்தது. அந்த 286 கோடி ரூபாயிலே சாராயக் கடைகள் மூலமாக வந்தது 202 கோடி ரூபாய் ; கள்ளுக் கடை மூலமாக வந்தது 17 கோடி ரூபாய்; ஐ.எம். எஃப்.எஸ். மூலமாக வந்தது 56 கோடி ரூபாய்தான். பீர் மூலம் 5 கோடி ரூபாய்; இதர வருவாய் 6 கோடி ரூபாய். இப்படி மொத்தம் 286 கோடி ரூபாய் 1986-87 வரையில் வந்தது.

பிறகு 31-12-1986-ல் சாராயக் கடைகளும், கள்ளுக் கடைகளும் மூடப்பட்டு விட்டன. அவை மூடப்பட்டு விட்ட காரணத்தால் அடுத்த ஆண்டு 1987-88-ல் அரசாங்கத்தினுடைய மொத்த வருவாய் 120 கோடி என்று ஆகிவிட்டது. அந்த ரூபாய் 120 கோடியிலே ஏற்கனவே 56 கோடி ரூபாய் வருமானம் கொடுத்த ஐ.எம்.எஃப்.எஸ். 105 கோடி ரூபாய் வருமானம் கொடுக்க ஆரம்பித்து விட்டது. எனவேதான் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களுடைய ஆச்சரியமான சந்தேகத்திற்குத் தருகின்ற விளக்கம், சாராயக் கடைகளும், கள்ளுக் கடைகளும் தமிழ்நாட்டிலே மூடப்பட்டு விட்ட காரணத்தாலேதான் ஆந்திராவைவிட, கர்நாடகத்தைவிட, கேரளாவைவிட ஐ.எம்.எஃப்.எஸ்.-னுடைய வியாபாரம் இங்கே அதிகமாயிற்று என்ற விளக்கத்தை நான் தர விரும்புகிறேன்.

120 கோடி ரூபாயிலே ஐ.எம்.எப்.எஸ். மூலம் 105 கோடி ரூபாய்; பீர் மூலம் 3 கோடி ரூபாய்; ஹை குவாலிடி வெளி மாநில மதுவின் மூலம் 12 கோடி ரூபாய்; மொத்தம் 120 கோடி ரூபாய் 1987-88-ல். 1988-89-லும் அதே சுமார் 120 கோடி ரூபாய்தான் வருமானம். ஐ.எம்.எஃப். எஸ். மூலமாக 112 கோடி; பீர் மூலமாக 6 கோடி; இதர வருவாய் 2 கோடி. எனவே மொத்தம் சுமார் 120 கோடி மதுவிலக்குத் துறையின் மூலமாக கடந்த ஆண்டு அரசுக்குக் கிடைத்த வருவாய்.

நான் இப்போது இந்த ஆண்டு கிடைக்கக்கூடிய வருவாய்க்கான ஆதாரப் புள்ளி விவரங்களை உங்கள் முன்னால் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஆண்டு 47 இலட்சம்





கேஸ்கள் விற்பனையாகி இருக்கின்றன. அதற்கு முதல் ஆண்டு 36 இலட்சம் கேஸ்கள். அது 47 இலட்சமாகப் பெருகி இருக்கிற காரணத்தால் இந்த ஆண்டு சுமாராக நாம் கணக்கிடுவது 50 இலட்சம் கேஸ்களாவது விற்கும் என்ற அடிப்படையிலே கணக்குப் போட்டுப் பார்த்தால் 50 இலட்சம் கேஸ்களுக்கு 'ப்ரூப் லிட்டருக்கு' 55 ரூபாய் வீதம்—எக்சைஸ் வரியை நாம் 25 முதல் 55 என்று உயர்த்தியிருக்கிறோமே அதன் மூலம்—கிடைக்கிற எக்ஸ்சஸ் வரி 185.62 கோடி ரூபாய். இதற்கு 20 சதவீதம் விற்பனை வரி. அதன் மூலம் கிடைக்கக்கூடியது 37.12 கோடி ரூபாய். இதன்மீது 10 சதவீதம் சர்சார்ஜ் 3.71 கோடி ரூபாய்.

பல்க் லிட்டர் ஒன்றுக்கு வெண்ட் பீ 4 ரூபாய் வீதம் மொத்தம் 18 கோடி ரூபாய். எக்சைஸ் வரி, அதாவது முதலிலே கடந்தகால ஆட்சியில் ரத்து செய்யப்பட்டுவிட்டதாக, எடுக்கப்பட்டுவிட்டதாகச் சொன்னோமே, அந்த எக்சைஸ் வரியை மீண்டும் போட இருக்கிற காரணத்தால் எக்சைஸ் வரி வெண்ட் பீ இவற்றின் மூலம் 31.50 கோடி ரூபாய் ஏலக்கடைகள் மூலம் எதிர்பார்க்கக்கூடிய வரவு முன்பு 4 கோடி ரூபாயாக இருந்தது. இப்போது 20 கோடி ரூபாய் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பீர் மீது போடப்பட்ட எக்சைஸ் வரி, வெண்ட் பீ மூலமாக எதிர்பார்க்கப்படுகிற வரவு 20 கோடி ரூபாய். பீர் மீது எதிர்பார்க்கக்கூடிய அதிக வருவாய் 5 கோடி. ஆக மொத்த வருமானமாக இந்த ஆண்டு சுமார் 300 கோடி ரூபாய்க்குமேல் வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மொத்த வருவாய் 300 கோடியில் கடந்த ஆண்டு கிடைத்த சுமார் 120 கோடியைக் கழித்து விட்டால் கூடுதல் வருவாய் 180 கோடி ரூபாயாகும். சில்லறையில் பழைய விலைக்கே இப்போது விற்கப்படுவதால் கடந்த ஆண்டு கிடைத்ததைப் போல 'டாஸ்மாக்'குக்கு 45 கோடி ரூபாய் கிடைக்காது. அது குறையும். எனவே, மொத்தமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிற 300 கோடி ரூபாயில் கடந்த ஆண்டு கிடைத்த 120 கோடி ரூபாயையும் டாஸ்மாக் மூலம் கிடைத்த 45 கோடி ரூபாயையும் கூடக் கழித்து விட்டுப் பார்த்தாலும் கூட அதிகமாக 135 கோடி ரூபாய் இந்த அரசுக்கு இந்த ஆண்டு வருவாய் கிடைக்க வழி இருக்கிறது. மொத்தமாக நான் சொன்ன 255 கோடி ரூபாயிலே கூட ஏதாவது சற்று இலாபம், அதாவது வருவாய் குறையுமானால் நிச்சயமாக 240 கோடி ரூபாய்—அதாவது 135 கோடி ரூபாய் அதிகமாகக் கிடைக்கும். இப்படிக் கூடுதலாகக் கிடைக்கும் 130 கோடி ரூபாய் அல்லது 135 கோடி ரூபாயுடன் மேலும் வருவாயைப் பெருக்கவும் முடியும். அது எப்படி என்றால் நான் இதைச் சொல்லும்போது நீங்கள் சில்லறை விற்பனைக் கடைகளில் விலையை அதிகப்படுத்தித்தான் இலாபத்தைப் பெருக்கப் போகிறீர்கள் என்று தவறாகக் கருதிக் கொள்ளக் கூடாது. அந்த விலையை அதிகப்படுத்தாமலேயே 130 கோடி ரூபாய் அதிகமாக இந்த ஆண்டு இந்த அரசுக்குக் கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 ஏப்ரல் 28

சில்லறைக் கடைகளில் இப்போது விற்கின்ற விலையைப் பார்த்தால் தமிழ்நாட்டிற்கும் மற்ற மாநிலங்களுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. கர்நாடகாவில் 750 எம்.எல். கொண்ட நெம்பர் ஒன் விஸ்கி ஒரு பாட்டில் 117 ரூபாய். ஆந்திராவில் 120 ரூபாய். கேரளாவில் 125 ரூபாய். தமிழ்நாட்டில் மாத்திரம் 87 ரூபாய்.

அதைப்போல நெம்பர் ஒன் பிராந்தி 750 எம்.எல். கொண்ட பாட்டில் கேரளாவில் 93 ரூபாய்; ஆந்திராவில் 100 ரூபாய்; கர்நாடகாவில் 117 ரூபாய்; தமிழ்நாட்டில் 69 ரூபாய்தான்.

'பேக் பைப்பர் விஸ்கி' என்று எடுத்துக் கொண்டால் கேரளாவில் 103 ரூபாய்; ஆந்திராவில் 100 ரூபாய்; கர்நாடகாவில் 98 ரூபாய்; தமிழ்நாட்டிலே 76 ரூபாய்தான்.

(பிற்பகல் 1—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதிலே இருந்து எந்த அளவுக்குத் தமிழகத்திலே இந்த சில்லறை விலை குறைவாக இருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

அது மாத்திரமல்ல. இப்படி விலை இங்கே குறைவாகவும், வேறு மாநிலங்களில், அண்டை மாநிலங்களில் எல்லாம் அதிகமாகவும் இருந்திருக்கிற காரணத்தால் இந்தப் பொருட்களை அங்கே கடத்திச் செல்லக்கூடிய வாய்ப்புகளும் உண்டு. சில்லறை விலையை நாம் ஓரளவுக்கு, மற்ற மாநிலங்களில் விற்கக்கூடிய அளவுக்குக்கூட இல்லாமல், ஏதோ ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்ற அளவுக்குக்கூட பாட்டிலுக்கு உயர்த்தினால் நான் சொன்ன 130 கோடியோடு மேலும் 30 கோடி ரூபாய்—30 கோடி ரூபாய் என்று நான் மிகக் குறைவாகச் சொல்கிறேன்—சேரும். எனவே 160 கோடி ரூபாய் மேலும் அதிகமாக இந்த ஆண்டு இந்தத் துறையிலே நாம் எதிர் பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

15 கோடி ரூபாய் இப்போதே நஷ்டம்; எனவே எதிர் பார்த்தது வராது என்றெல்லாம் சொல்வது இந்த அணுகுமுறையின் காரணமாக இன்றைக்கு ஆத்திரப்பட்டுக் கொண்டிருப்பவர்களுடைய தவறான பிரச்சாரமே தவிர வேறல்ல என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன்.



1989 ஏப்ரல் 28] [டாக்டர் மு. கருணாநிதி]

மது பானங்களுடைய மொத்த விலையையும் அல்லது அவர்களிடமிருந்து டாஸ்மாக் என்ற இந்த நிறுவனம் வாங்குகிற மொத்த விலையையும், டாஸ்மாக் நிறுவனம் சில்லறைக் கடைக்காரர்களுக்கு விற்கிற சில்லறை விலையையும் நிர்ணயிக்கும் அதிகாரத்தை மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை கமிஷனருக்கு வழங்கும் என்று இந்த மன்றத்தில் நான் எடுத்துக் கூறினேன். அதைத்தான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் இங்கே நினைவுபடுத்தினார்கள். அதுபோலவே கமிஷனருக்கு இந்த அரசு உத்தரவிட்டு இருக்கிறது. அப்படி விலை நிர்ணயம் செய்யும்போது அவர்களோடு ஒத்துழைப்பதற்காக நிதித்துறையிலே இருந்து ஒரு அதிகாரியும், ஆயத் தீர்வைத் துறை துணைக் கமிஷனரும் மற்றும் ஒரு அதிகாரியும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த மூன்று அதிகாரிகளும் சேர்ந்து எல்லா மதுபானத் தொழிற்சாலைகளிடமிருந்தும் விவரங்களைக் கேட்டறிந்து விலை நிர்ணயம் செய்தார்கள். அப்படி நிர்ணயிக்கப்பட்ட விலைகள் ஏற்கெனவே நடைமுறையில் இருந்துவரும் விலையை விடக் குறைந்தது. உதாரணமாக மதுபானத் தொழிற்சாலை கடந்த ஆண்டு 1987—88 ஆம் ஆண்டு வெளியிட்ட 'பேலன்ஸ் ஷீட்' அதாவது தனியாருடைய மதுபானத் தொழிற்சாலையினுடைய 'பேலன்ஸ் ஷீட்டில்'—இதை எல்லாம் அவர்கள் காட்ட மாட்டார்கள்.—அவர்கள் செய்த மொத்த வியாபாரம்—எவ்வளவு அநியாயம் நடக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன்—மொத்த வியாபாரம் ஒரு கம்பெனியில். 23.49 கோடி ரூபாய். இதிலே வேரியபிள் காஸ்ட் என்று சொல்லக்கூடிய செலவினங்களைக் கழிக்கிறார்கள். எவ்வளவு? 14.03 கோடி ரூபாயைக் கழிக்கிறார்கள். அந்த 14.03 கோடி ரூபாய் என்பது சரியா இல்லையா என்பது வேறு விவகாரம். அதைக் கழித்த பிறகு மீதம் உள்ளது 9.46 கோடி ரூபாய். அந்த 9.46 கோடி ரூபாயிலே 'ஓவர் ஹெட்' என்ற செலவினங்களை மீண்டும் கழிக்கிறார்கள். அது 5.08 கோடி ரூபாய். அதற்குப் பிறகு நிகர இலாபம் 4.38 கோடி ரூபாய் என்று காட்டுகிறார்கள். அவசரப்பட்டு அப்பாடா என்று பெருமூச்சு விடக் கூடாது. 23 கோடி ரூபாய் டர்ன் ஓவர். அதிலே நிகர இலாபம் என்று காட்டுவது 4.38 கோடி ரூபாய். அத்தோடு நிறுத்தவில்லை அவர்கள். நிகர இலாபத்தில் சேல்ஸ் ப்ரோமோஷனுக்காகச் செலவிட்டது 4.6 கோடி ரூபாய். பாவம் அவர்களுக்கு நஷ்டம் வருகிறது. சேல்ஸ் ப்ரோமோஷனுக்காகச் செலவிட்டதாகக் கணக்கு 4.6 கோடி ரூபாய். சேல்ஸ் ப்ரோமோஷன் எதற்காக? விளம்பரம் செய்வதற்கு. நீங்கள் மறந்து விடக்கூடாது. உற்பத்தியாளர்கள் தனிக் கம்பெனி. அவர்கள் உற்பத்தி செய்து மொத்தமாக டாஸ்மாக் நிறுவனத்திற்கு விற்கிறார்கள். டாஸ்மாக்குக்கு விளம்பரம் செய்து, எங்கள் சரக்குகளை வாங்குங்கள் என்று விளம்பரம் செய்து, 4 கோடி ரூபாய் செலவு செய்து விளம்பரம் செய்து விற்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனாலும் விளம்பரச் செலவு என்று 4. 6 கோடி ரூபாய்;

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 ஏப்ரல் 28

எங்களுக்குக் கையைப் பிடிக்கிறது என்று சொல்கிறார்கள். 23 கோடி ரூபாய் டர்ன் ஓவரில் அவர்களாகக் காட்டிய நிகர இலாபம் 4 கோடியே 38 இலட்சத்தில் 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் விளம்பரச் செலவு என்று கணக்கெழுதி காட்டி முடித்து விடுகிறார்கள்.

இதிலே இன்னொரு வேதனை என்னவென்றால் மதுவிலக்கு தமிழ்நாட்டில்—நம்முடைய அருமை நண்பர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலேயே இப்படி ஒரு புதுவிதமான மது விலக்கு—அமல்படுத்தப்பட்டபோது இதற்காக விளம்பரங்கள் செய்யக் கூடாது என்று சட்டமே இருக்கிறது. விளம்பரம் செய் வது சட்டப்படி தவறு என்று இருக்கிறது. ஆனாலும் விளம்பரச் செல்வு 4.60 கோடி என்று எழுதப்பட்டு எங்களுக்கு மிச்சமே இல்லை என்று அந்தக் கம்பெனி கணக்குக் காட்டுகிறது. அதைப் போல இன்னொரு கம்பெனி அவர்களுடைய மொத்த முதலீடு அவர்களுடைய கணக்குப்படி 3 கோடி ரூபாய்தான். அவர் களுடைய சென்ற ஆண்டு டர்ன் ஓவர் 17 கோடி ரூபாய்.

அதிலே மொத்த செலவினம் என்று அவர்கள் கணக்குக் காட்டுவது 11.5 கோடி ரூபாய். அவர்களுடைய மொத்த லாபம், அவர்களுடைய பேலன்ஷீட்படி, 5.5 கோடி ரூபாய் நிகர லாபம். அவர்களுடைய கடைசி, பூர்த்தி கணக்கு என்ன தெரியுமா, இந்த முழு லாபத்தையும் சேல்ஸ் புரோமோஷனுக்காக செல வழித்து விட்டோம், விளம்பரத்திற்காகச் செலவழித்து விட் டோம் என்று அவர்கள் கணக்குக் காட்டுகிறார்கள். நான் இங்கே இருக்கின்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்குச் சொல்கிறேன். அவர்கள் ஏமாற்றுவது எங்களை மாத்திரமல்ல, மத்தியிலே உள்ளவர்களையும் வருமான வரி இலாகாவையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதற்கு. எவ்வளவு பெரிய கொள்ளை நடைபெற்றிருக்கிறது என்பதற்கு, இதைவிட எடுத் துக்காட்டுகள் தேவையில்லை. இந்த இரண்டு உதாரணங்களே போதும் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அது மாத்திரமல்ல. இன்னும் சில விவரங்கள். இந்த அரசால் விலை நிர்ணயம் செய்வதற்காக அமைக்கப்பட்ட குழு இந்த விளம்பரச் செலவுகளை ஏற்க மறுத்து விட்டது. அவர்கள் காட் டிய விளம்பரச் செலவுகளையெல்லாம் ஏற்க மறுத்துவிட்டது. அதையெல்லாம் மறுத்துத்தான் நாங்கள் உங்களுக்கு விலை நிர்ணயம் செய்வோம் என்று கூறிவிட்டது. அதாவது புதிய விலைகளை நிர்ணயிக்கும்போது, விளம்பரச் செலவுகள் இல்லை என்ற அடிப்படையிலேதான் இப்போது விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

அடுத்தது ராயல்ட்டி. ராயல்ட்டி என்றால் மதுபானம் தயாரிப்பவர்கள் பலர் பிரதானமான கம்பெனிகளுடைய டிரேட் மார்க்கை உபயோகிக்கின்றார்கள். தயாரிப்பாளர்கள் உரிய வியாபார ரகசியத்தை இவர்களுக்குச் சொல்லித் தருகிறார்கள். இதற்குத் தயாரிப்பாளர்கள் ராயல்ட்டி கொடுக் கிறார்கள். மதுபானத் தொழிலில் ஈடுபட்டுள்ள 5 நிறுவனங்



1989 ஏப்ரல் 28] [டாக்டர் மு. கருணாநிதி]

களில் 3 நிறுவனங்கள் இந்த ராயல்ட்டி கணக்கை எழுதியிருக்
கின்றார்கள். இந்த ராயல்ட்டி தொகை மதுபானங்களுடைய
அடிப்படை உற்பத்தி விலையை விட அதிகமாக இருக்கின்றது
அவர்கள் காட்டிய கணக்கின்படி. உற்பத்தி விலை ஒரு கேஸ்-க்கு
120 ரூபாய் என்றால், ராயல்ட்டி மாத்திரம் 125 ரூபாயாக
இருக்கிறது. இதை நாம் எப்படி ஒத்துக் கொள்ள இயலும்?
இந்த ராயல்ட்டி முறைக்கு ஏதாவது விளக்கம் இருக்கிறதா என்
றால் இல்லை. இது ஏதோ பரம ரகசியமோ அல்லது பிரம்ம
ரகசியமோ என்பது போல அதை மறைத்து வைத்துக்கொண்டு
நாங்கள் அதைச் சொல்ல மாட்டோம் என்கின்றார்கள். இப்படி
யிருந்த 125 ரூபாயை இப்போது விலை நிர்ணயிக்கின்ற
கமிஷனரும் அந்தக் குழுவினரும் 25 ரூபாய் என்று
நிர்ணயித்திருக்கிறார்கள். இதை எப்படி நிர்ணயித்தார்கள்
என்ற விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். 'ஸ்பிரிட்' அவர்கள்
கோரியது ஒரு கேஸ்-க்கு 96.88 ரூபாய். அதிலே ஆட்சேபணை
யில்லை. சரி என்று விலை நிர்ணயிக்கின்ற நம்முடைய குழு
ஒத்துக் கொண்டு விட்டது. பாட்டிலுக்கு ஒரு கேஸ்-க்கு 42.57
ரூபாய் கேட்டார்கள். நம்முடைய குழு ஒத்துக் கொள்ளவில்லை.
21.29 ரூபாய் தான் தரமுடியும் என்று சொல்லிவிட்டார்கள்.
அதிலே குறைக்கப்பட்டது 21 ரூபாய். மூடி 7.06 ரூபாய் கேட்
டார்கள். அதை மறுத்துவிட்டோம். 3.17 தான் அதற்குச்
சரியான மதிப்பீடு என்று சொல்லியாகி விட்டது. லேபிள் ஐந்து
ரூபாய் என்றார்கள். ஒரு பாட்டிலுக்கு ஒரு லேபிள்
ஒட்ட 5 ரூபாய் என்று கணக்குக் காட்டினார்கள். அது மறுக்கப்
பட்டு 80 காசு தான் தரமுடியும் என்று கூறப்பட்டாகிவிட்டது.
ராயல்ட்டி 125 ரூபாய் கேட்டார்கள். முடியாது என்று மறுக்கப்
பட்டு 25 ரூபாய் தான் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.
அதிலே 100 ரூபாய் மிச்சப்படுகிறது. பெட்டிகள் 6.54 காசு
கேட்டார்கள். அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. எக்சைஸ்
லேபிள் 84 காசு. அது ஏற்கப்பட்டிருக்கிறது. வெண்ட் ஃபீ
18 ரூபாய். அது ஏற்கப்பட்டிருக்கிறது. மொத்த வேரியபிள்
காஸ்ட் 302 ரூபாய் என்று சொன்னால், அது 172 ரூபாயாகக்
குறைக்கப்பட்டிருக்கிறது. நிர்ணய விலை மற்றும் லாபம் 47
ரூபாய் 83 காசு என்று கேட்டார்கள். அந்த நிர்ணய விலையும்
லாபமும் 47.83-க்கு சம்மதிக்க இயலாது என்று கூறி 25.78 என்
கின்ற அளவுக்குக் குறைக்கப்பட்டு, முன்பு 350 ரூபாயாக ஒரு
கேஸ்-க்கு இருந்த விலை இப்போது 198 ரூபாயாகக் குறைக்கப்
பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது
போலவே, நான் சொன்னது, ஜானக் ஷா பிராந்தி 750 எம்.எல்.
அதனுடைய ஒரு கேஸ்-னுடைய விலை விவரம். பாலாஜி டிஸ்ட்
டில்லர்ஸ். மெக்டோவல் விஸ்கி 750 எம்.எல். அது ஒரு கேஸ்க்கு
விலை ஏற்கெனவே 398 ரூபாயாக இருந்தது. நான் சொன்னது
போல, ஒவ்வொரு ஐட்டமும் குறைக்கப்பட்டு இப்போது 248
ரூபாய் என்கின்ற அளவுக்கு இந்த விலை நிர்ணயிக்கப்பட்டு

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 ஏப்ரல் 28

இருக்கிறது. இப்போதுதான் முதன் முதலாக
உற்பத்திச் செலவுக் கணக்கை அரசுக்குக் காட்டியிருக்கிறார்கள்
என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 7 ஆண்டுக்
காலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 300 கோடியிலிருந்து
500 கோடி ரூபாய் வரை அவர்கள் மதுபானம் தயாரித்து
அரசுக்கு விற்பனை செய்திருக்கிறார்கள். அடிப்படை
விலை நிர்ணயிக்கப்படாமலேயே, உற்பத்திச் செலவுக் கணக்கு
என்ன என்பதை அரசாங்கத்திற்குச் சொல்லாமலேயே இருந்த
நிலையை மாற்றி உற்பத்திச் செலவு என்பதை முதன் முதலாக
அவர்களைக் கேட்டு அவர்கள் வாயிலாகவே விவரங்களைத்
தெரிந்துகொண்டு இப்போது அவர்கள் தயாரித்த பொருட்களுக்கு
அரசாங்கம் விலை நிர்ணயம் செய்திருப்பது இந்த அரசின் பெரிய
சாதனை என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். (மேசையை தட்டும் ஒலி.)

(பிற்பகல் 1–10).

இதை நான் இந்த மன்றத்திலே முன்பு சொன்னபோது கூட
யாரையும் குறை சொல்ல வேண்டும், யாரையும் பழி சொல்ல
வேண்டும் என்ற எண்ணத்தில் சொல்லவில்லை. அரசுக்குக்
கிடைக்க வேண்டிய வருமானம் ஒரு சிலரால் கொள்ளையடிக்கப்
படுகிறது. அது தடுத்து நிறுத்தப்பட்டு அது அரசினுடைய
கஜானாவிற்கு வந்தாக வேண்டுமென்ற கருத்தில்தான் சொல்லப்
பட்டது. ஆனால் சிலர்—நான் யார் பெயரையோ சொன்னேன்
என்று சொல்லாத ஒன்றைச் சொன்னதாக வைத்துக் கொண்டு—
அவர்கள் சொன்னதற்கு அதுதான் பொருள்—அப்படி எல்லாம்
வைத்துக் கொண்டு விளம்பரப்படுத்தினார்களேயல்லாமல் நான்
யாரையும் குறை சொல்லுவதற்காகச் சொல்லவில்லை. ஆண்டு
ஒன்றுக்கும் கிட்டத்தட்ட 130 கோடி ரூபாய் அல்லது 150 கோடி
ரூபாய் அளவுக்கு அதிகமாக வருமானம் பெறக்கூடிய சூழ்நிலையை
ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நாங்கள் இந்த அரசின் கஜானாவில்
சேர்க்கின்ற அந்தப் பொறுப்பிலிருந்து எப்படி விலக முடியும்
என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

அவர்கள் இப்போது அதிகமாக சப்ளை செய்வதில்லை என்று
நேற்றைக்குக்கூட இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். குறிப்
பாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு
அவர்கள் கூட இங்கே குறிப்பிட்டார்கள். அதிலே ஓரளவு
உண்மையிருக்கிறது. 1988 ஆம் ஆண்டு பிப்ரவரியில் 3 இலட்
சத்து 76 ஆயிரத்து 485 கேஸ்கள் 'டாஸ்மாக்'க்கு வழங்கப்
பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பிப்ரவரியில் 1 இலட்சத்து 49
ஆயிரத்து 430 கேஸ்கள்தான் வழங்கப்பட்டன. ஏனென்றால்
ஆத்திரத்தின் காரணத்தால், கோபத்தின் காரணமாக முறைத்துக்
கொண்டால் பயந்து விடுவோம் என்ற மிரட்டலின் காரணமாக



1989 ஏப்ரல் 28] [டாக்டர் மு. கருணாநிதி]

அவர்கள் வழங்கவில்லை. மார்ச் மாதம், 1988 ஆம் வருடம்
2 இலட்சத்து 97 ஆயிரத்து 255 கேஸ்கள் வழங்கியிருக்கிறார்கள்.
ஆனால் 1989 மார்ச்சில் 1 இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து
550 கேஸ்கள்தான் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு ஏப்ர
லில் 3 இலட்சத்து 22 ஆயிரத்து 640 கேஸ்கள் வழங்கினார்கள்.
இப்போது நாம் பயந்து போக தயாராக இல்லையென்று தெரிந்த
பிறகு ஏப்ரல் மாதத்திற்கு இதுவரையில் 2 லட்சத்து 56 ஆயிரம்
கேஸ்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 99 ஆயிரத்தையும்
வழங்குவதாக உறுதியளித்திருக்கிறார்கள். எனவே 3 லட்சத்து
56 ஆயிரம் கேஸ்கள் இந்த மாதம் நிச்சயமாக வரும் என்பதை
யும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, ஒத்துழைக்க மறுத்து, உற்பத்தியைக் குறைத்து,
அரசுக்குச் சங்கடத்தை உண்டாக்கி, அரசை அவதிக்கு ஆளாக்கு
வோம் என்று கருதுவார்களேயானால் நான் அவர்களுக்கும் தெரி
வித்துக் கொள்வேன், இதை வைத்து ஆகா, ஓகோ என்று சொல்லு
கிறவர்களுக்கும் தெரிவித்துக் கொள்வேன். இது ஒன்றும் அரிசி
அல்ல, இது இல்லாவிட்டால் (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள்
பட்டினிக் கிடப்பார்களே என்று கருதுவதற்கு. இப்படி மிரட்டி
னால் பூரண மதுவிலக்கு வருகிறது என்று திரு. குமரி
அனந்தன் கேட்டுக் கொண்டது போல ''சொல்லி விடலாம்''
(மேசையைத் தட்டும் ஒலி) அவ்வளவுதான். கவர்னர் ஆட்சியில்
அவர்கள் மிரட்டினார்கள்.

Mr. SPEAKER : 'May' implies 'may not' also.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கவர்னர் ஆட்சியில் அப்படி மிரட்டிப்
பார்த்தார்கள். அதன் காரணமாக அப்போது அவர்களுடன்
பேச்சு வார்த்தை நடத்தி ஒரு காம்பிரமைஸ் அவர்களிடத்தில்
செய்து கொண்டு அதற்குப் பிறகு அவர்கள் ஒரு வழிக்கு வந்
தார்கள். விலையைக் குறைத்தார்கள். அதன் மூலமாகக் குறைந்த
அளவுதான் அப்போதிருந்த கவர்னர் ஆட்சியிலே கிடைத்தது.
இப்போது, அதுமட்டுமல்லாமல், அவர்கள் என்றைக்காவது இப்
படிச் செய்யக்கூடும் என்று எதிர்பார்த்துதான்—இங்கே அதனை
வரவேற்று நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்
கள் கூடப் பேசினார்கள்—நாங்களே இரண்டு பேக்டரிகளைத்
தொடங்குகிற முயற்சிகளை இன்றைக்கு மேற்கொண்டிருக்
கிறோம். அதுமட்டுமல்லாமல், அப்படி அந்த பேக்டரியிலே
அந்தப் பணிகள் தொடங்குகிற காலக் கட்டத்தில் இடைவெளி
2 மாதம் அல்லது 3 மாதமானாலும் அதற்குள்ளே இடையிலே
இவர்கள் ஏதாவது செய்தாலும்கூட வெளி மாநிலங்களிலிருந்து
டெண்டர் கோரி, ரேட் கான்ட்ராக்ட் மூலம் பெறலாம் என்று
கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருந்தது. எதிர்க்
கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு இங்கே பேசும்
போது வெளிமாநிலத்திலிருந்து வரவழைத்தால் அவர்களுக்கும்

உங்களுக்கும் என்ன உறவு என்று பேசமாட்டார்களா, உள்ளூரி
லிருந்து பெறுவதை விட்டுவிட்டு ஏன் வெளியூரிலிருந்து வாங்கு
கிறீர்கள் என்றெல்லாம்—அதற்கு ஒரு மாசு வந்து சேரும் என்
பதைப் போல—அவர் மாசு கற்பிப்பார் என்று சொல்ல
மாட்டேன். (சிரிப்பு)—மாசு வந்து சேரும் என்று கவலைப்பட்டுப்
பேசினார்கள். நான் அவர்களுக்கு சொல்லிக் கொள்வேன். வெளி
மாநிலத்திலிருந்து மதுவகை வரவழைக்கப்படுவது என்பது
இன்றைக்குத்தான் நாங்கள் அறிவித்திருக்கின்ற காரியம் அல்ல.
1983–84 ஆம் ஆண்டில் அவர் அமைச்சராக இருந்த காலத்
திலேயே 4 இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து 258 கேஸ்கள்
வெளி மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு வரவழைக்கப்பட்டிருக்
கின்றன.

ஐ.எம்.எப்.எஸ். 1984–85இல் 5,60,605 கேஸ்கள் வரவழைக்
கப்பட்டிருக்கின்றன. 1985–86இல் 51,407 கேஸ்கள் வெளி
மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கின்றன. 1986–87இல்
1,34,795 கேஸ்கள் வரவழைக்கப்பட்டிருக்கின்றன. 1987–88
இல் 1,02,310 கேஸ்கள் வெளி மாநிலத்திலிருந்து வரவழைக்கப்
பட்டிருக்கின்றன. 1988–89இல் 95,709 கேஸ்கள் வெளி மாநிலத்
திலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போலவே
பீர்கூட 1983–84இல் 5,97,000 கேஸ்கள்; 1984–85இல்
6,46,000 கேஸ்கள், 1985–86இல் 9,72,000 கேஸ்கள், 1986
–87இல் 14,31,000 கேஸ்கள், 1987–88இல் 8,47,000 கேஸ்
கள், 1988–89இல் 7,18,500 கேஸ்கள் வரவழைக்கப்பட்டிருக்
கின்றன. அதனால்,, தேவைக்குத்தான் சொல்கிறோமே அல்
லாமல், வரவழைத்தே தீருவது என்றல்ல. யாரோடும் பேரம்
பேசிக்கொண்டல்ல, அதுவும் டெண்டர் விட்டுத்தான். அந்த
டெண்டர் மூலமாகத்தான் அது வரவழைக்கப்படும், தேவைப்
பட்டால்; இங்கே உள்ளவர்கள் முரண்டு பிடித்தால். அதற்குத்
தானே தவிர வேறல்ல. நம்முடைய நண்பர் திரு. உகம்சந்த்
அவர்களும் சொன்னார்கள், திரு. திருநாவுக்கரசு அவர்களும்
சொன்னார்கள். நீங்கள் ஆயத்தீர்வையை 1972ஆம் ஆண்டு 25
ரூபாயிலிருந்து 14 ரூபாயாகக் குறைக்கவில்லையா என்று. இந்த
ஆயத் தீர்வையில் 2 ரகம் இருக்கிறது. ஆயத் தீர்வை என்பது
ரெக்டிபைட் ஸ்பிரிட் உற்பத்தி ஆகி வருகின்ற அந்த இடத்திலேயே
கட்டப்படுகிற ஆயத் தீர்வை, அது 8 ரூபாய். அது
1961ஆம் ஆண்டு முதல் இருக்கிறது. ரெக்டிபைட் ஸ்பிரிட் எங்
கேயிருந்து வெளியே வந்தாலும் 8 ரூபாய் ஆயத் தீர்வை என்பது
1961ஆம் வருடத்திலே இருந்து இருக்கிறது. தி.மு.க. ஆட்சிக்கு
வருவதற்கு முன்பே இருந்தது. அந்த 8 ரூபாயைத்தான்
அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ரத்து செய்தார்கள், ரெட்
ராஸ்பக்டிவ் எபக்ட் கொடுத்து என்பது நான் சொன்ன ஒரு
தகவல். அதைக் குற்றச்சாட்டு என்றுகூட அல்ல, நான் சொன்ன
ஒரு தகவல். அதுமாத்திரமல்ல, நாங்கள் 25 ரூபாயி
லிருந்து 14 ரூபாயாகத்தான் குறைத்ததாகச் சொன்னார்கள்
1972ஆம் ஆண்டு. அப்போது ரெவின்யூ போர்ட் இருந்தது.





அரசு ரெவின்யூ போர்டில் எடுக்கின்ற முடிவுகளை அரசு ஏற்றுக்
கொள்ள வேண்டுமென்ற நிலை, அந்த அளவுக்கு சுயாட்சி
யான அமைப்பு அது. அதுமாத்திரமல்ல, அந்த ரெவின்யூ
போர்டில் சேர்மேனாக அப்போது இருந்தவர் திரு. அனந்த
பத்மநாபன் அவர்கள். அவரைப் பற்றிப் பலருக்குத் தெரியும்.
கவர்னரே சொன்னால் கூட அவர் கேட்க மாட்டார். அவர்
எடுத்த முடிவுதான். அப்போது புதுவையிலே 9.53; கேரளா
விலே 14 ரூபாய்; கர்நாடகாவிலே 17 ரூபாய் என்று இருந்த
போது இங்கே இருக்கிற 25 ரூபாயை 14 ரூபாயாகக் குறைக்க
ரெவின்யூ போர்ட் அன்றைக்கு ஒரு முடிவு எடுத்தது—அங்கே
குறைவாக இருந்த காரணத்தால், அந்த அளவுக்கு இங்கே இருக்க
வேண்டுமென்று. ஆனால், இந்த 8 ரூபாயைக் குறைத்தது அப்
படியல்ல. ஒரே ஒரு கம்பெனியினுடைய ஒரே ஒரு கடிதம்.
பைல் வைத்திருக்கிறேன். வேண்டுமானால் காட்டுகிறேன். ஒரு
கம்பெனி முதலாளி, மோகன் தொழிற்சாலை என்று கருதுகிறேன்,
அந்தக் கம்பெனி முதலாளி, அதனுடைய தொடர்புடைய ஒருவர்
அன்றைக்கு இருந்த ஆட்சிக்கு ஒரு கடிதம், 8 ரூபாயை
ரத்து செய்யுங்கள் என்று எழுதுகிறார். அந்தக் கடிதத்தை
வைத்து, உடனே ஆர்டர் போடப்படுகிறது அரசின் சார்பிலே.
இந்த வித்தியாசத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். ரெட்ராஸ்
பக்டிவ் எபக்ட் கொடுப்பதாகச் சொன்னால் அது தவறு. ரெட்
ராஸ்பக்டிவ் எபக்ட் கொடுக்கப்படவில்லை. 1961லிருந்து
இருந்து வந்த அந்த ஆயத் தீர்வை 8 ரூபாயை அப்போது ரத்து
செய்ததைத்தான் நான் குறிப்பிட்டேன். இப்போது ஏன் உயர்த்தி
னீர்கள் என்று கேட்டால், அப்போது கேரளாவிலே 14 ரூபாய்,
புதுவையிலே 9 ரூபாய், கர்நாடகாவிலே 17 ரூபாயாக இருந்த
போது 14 ரூபாயாக இங்கே குறைக்கப்பட்டது. இப்போது
"அதர் ஸ்டேட்ஸ்"—மற்ற மாநிலங்களிலே ஆந்திராவிலே 60
ரூபாய்; ஒரிசாவிலே 70 ரூபாய், மராட்டியத்திலே 52 ரூபாய்,
மேற்கு வங்கத்திலே 82 ரூபாய். அங்கேயெல்லாம் அதிகமாக
இருக்கும்போது, இங்கே 25 ரூபாயாக இருப்பானேன் என்பதற்
காகத்தான் அந்த 25-ஐ 55 ஆக உயர்த்தி இருக்கிறோம். அத
னால்தான் நமக்கு இன்றைய தினம் இவ்வளவு வருவாய் வரு
கிறது என்ற விளக்கங்களை நான் இங்கே மிகுந்த மகிழ்ச்சியோடு
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 177 கோடி ரூபாய்—166 கோடி, அத்துடன் 11
கோடி ரூபாய்—காவல் துறைக்கும் தீ அணைப்புத் துறைக்கும்
சேர்த்து 177 கோடி ரூபாய்க்கான மானியத்தை நாம் விவா
தித்துக்கொண்டிருக்கிறோம். அதிலே நம்முடைய காங்கிரஸ்
கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்
கள் பொதுவான பல கருத்துக்களை மிகச் சிறப்பாக,
காவல் துறைக்கும் பொது மக்களுக்கும் இருக்கக்கூடிய தொடர்பு
கள் எப்படி இருக்க வேண்டுமென்பது குறித்தும், பொது மக்க
ளுடைய வசதி வாய்ப்புகள் எப்படியெல்லாம் காவல் துறையினரால்

பெருக்கப்பட வேண்டுமென்றும், அதற்குத் துணை நிற்க வேண்டுமென்பது குறித்தும், நடைமுறையிலே அவர் ஆங்காங்கு காண்கிற சில நிலவரங்களை எல்லாம் வைத்து அரசுக்குப் பயன் படக்கூடிய வகையில், காவல் துறைக்குப் பயன்படக்கூடிய வகை யில் சில நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1–20)

அதைப் போலவே நம்முடைய உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர் களும், திரு. பொன் விஜயராகவன் அவர்களும், திரு. பூவராகன் அவர்களும் திரு. திருநாவுக்கரசு அவர்களும் மற்றும் பல்வேறு கட்சியைச் சார்ந்தவர்களும், காவல் துறைக்கும் பொது மக்களுக்கும் இருக்க வேண்டிய நல்ல உறவு, தொடர்பு இவைகளைப்பற்றியெல்லாம் இங்கே எடுத்துக் கூறி யிருக்கிறார்கள். நேற்றைக்குப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் ''எங்களுடைய புரட்சித் தலைவர் காலத்தில்தான் காவல் துறை நன்றாகக் கவனிக்கப்பட்டது'' என்று குறிப்பிட்டார். நான் அதை மறுக்கவில்லை. அப்போதும் கவனிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், நான் ஒன்றை இந்த அவையிலே சொல்ல விரும்பு கிறேன்.

1962ஆம் ஆண்டிற்கு முன்பே கழகத்தின் கொள்கை விளக் கப் பிரச்சாரத்திற்காக ''உதய சூரியன்'' என்ற நாடகத்தை நான் நடத்தியபோது அந்த நாடகம் அன்றைக்கிருந்த காங்கிரஸ் ஆட்சியால் தடை செய்யப்பட்டது. அவ்வாறு தடை செய்யப் பட்டதற்கு என்ன காரணம் என்று நான் பல ஆண்டுகளுக்குப் பிறகு சட்ட சபையிலே வினவக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சியின் துணைத் தலைவரான திரு. திருநாவுக்கரசு அவர்கள் அமர்ந்திருக்கிற இடத்திலேதான் நான் அமர்ந்திருந்தேன். நாவலர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர். அவர் வருவார் அங்கே அமர்ந்திருப்பார். பக்கத்திலே நான் அமர்ந்திருப்பேன். அப்போது நான் இந்த நாடகத்தை ஏன் தடை செய்தீர்கள் என்று அப்போதிருந்த முதலமைச்சர் திரு. பக்தவத்சலனார் அவர்களைக் கேட்டேன். பெரியவர் பக்தவத்ச லனார் அப்போது சொன்னார் ''நீங்கள் போலீசுக்கு வக்காலத்து வாங்கி எழுதியிருக்கிறீர்கள். போலீசுக்கும், அரசுக்கும் மோதல் ஏற்படுவதைப்போல் எழுதியிருக்கிறீர்கள் என்றெல்லாம் சொன் னார். உடனே நான் ''அங்கே தடை செய்துவிட்டீர்கள், ஆனால் இங்கே தடை செய்ய முடியாது'' என்று அன்றைக்கே காவல் துறை நண்பர்களுக்காகப் பரிந்து பேசி வாதாடி அந்த நாடகத் திலே நான் எழுதிய ஒரு தாலாட்டுப் பாடலை அப்போதே படித்துக்காட்டினேன். அதிகமில்லை—இப்போதே சில பேருக்கு தூக்கம் வருவதைப் பார்க்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி போன்றவர்களுக்கு தூக்கம் வருவதைப் பார்க்கிறேன். தாலாட்டுப் பாடினால் அதிகமாகத் தூங்கிவிடுவார்கள்! (சிரிப்பு) இருந்தாலும் அந்த நான்கு வரிகளை மாத்திரம் சொல்லு கிறேன்.



''போலீஸ் வேலைக்கென்று போகின்ற நொங்கப்பனுக்கு
புத்திரனாய் வந்துதித்த தரித்திரனே கண்வளராய்!
துப்பாக்கி தூக்கிக்கிட்டு போகின்ற நொப்பனிடம்
பழம்பாக்கி கேட்டுகிட்டு வருகின்றார் கடன்காரர்
காக்கியுடை போட்டுகிட்டு, சேப்பு தொப்பி மாட்டிகிட்டு—

அப்போது சிவப்புத் தொப்பி போடுவது வழக்கம்.

''போகின்ற நொகப்பனுக்கு உன்னைப்போல நாலு வந்து பிறந்து
விட்டால் காவியுடை வேணுமடா கமண்டலமும் தேவையடா''
என்று நான் அப்போதே காவல் துறையினருக்காகக் குரல் கொடுத்
தவன். நான் என்றால்—குரல் கொடுத்த கட்சி கழகம்—அண்ணா
வின் தம்பிமார்கள்—திருநாவுக்கரசு உட்பட! அது தடை செய்யப்
பட்டது. காவல்துறைக்காக வாதாடுகிறேன் என்ற ஒரே ஒரு
காரணத்திற்காக அது தடை செய்யப்பட்டது. அந்த நாடகத்தில்
வேறு தவறான காட்சிகள் என்ன என்று கேட்ட போது—போலீஸ்
காரர் அலுத்துப்போய் வீட்டிற்கு இரவு 12 மணிக்கு வந்து
சேருவார். என்ன இருக்கிறது என்று மனைவியைப் பார்த்துக்
கேட்பார். ஏதோ பழைய சோறு இருக்கிறது என்று மனைவி
சொல்லுவாள். தொட்டுக் கொள்ள ஒன்றுமில்லையா என்று
இவன் கேட்பான். நான் இருக்கிறேன் தொட்டுக் கொள் என்று
கூறுவாள் மனைவி. அதைச் சாப்பிட்டுவிட்டு படுக்கப் போவார்
அந்தப் போலீஸ்காரர். அப்போது கதவு தட்டப்படும். என்ன
என்று கேட்பார். ''மந்திரி வருகிறார், காவலுக்கு வா'' என்று
வந்தவர் சொல்லுவார். இப்போதுதான் வந்தேன். அதற்குள்
மந்திரி வருகிறானா என்று திட்டிக்கொண்டே அவர் போவார்.
அதற்காக அந்த நாடகம் தடை செய்யப்பட்டது. அப்படி நாட
கம் எழுதி காவல் துறை நண்பருடைய கதாபாத்திரத்தை—
அவருடைய கஷ்டங்களைப் படைத்தது மாத்திரமல்ல—தான்
பொறுப்புக்கு வந்த உடனே அன்றைக்கு எழுதியதை ஞாபகத்தில்
வைத்துக்கொண்டு அதுவரை அவர்கள் பேசிக் பே ரூ. 80 வாங்கிக்
கொண்டிருந்ததை முதல் தடவையாக ரூ. 230 ஆக அன்றைக்கு
அதிகப்படுத்திக் கொடுத்தது தி.மு.க. ஆட்சி. இன்றைக்கு
ரூ. 500, ரூ. 600 என்று வளர்ந்திருக்கலாம். ஆனால் ரூ. 80
ஆக இருந்தது ஒரே பாய்ச்சலில் ரூ. 230 ஆக ஆக்கப்பட்டது
தி.மு.க. ஆட்சியில்தான்.

அதுமாத்திரமல்ல. திரு. கோபாலசாமி ஐயங்கார்,
ஐ.சி.எஸ்., அவர்களுடைய தலைமையில் 1971ஆம் ஆண்டில்
கழக ஆட்சியில் ஒரு போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு, சிலம்புச்
செல்வர் ம.பொ.சி. போன்றவர்களெல்லாம் அந்தக் குழுவில்
இடம் பெற்று—அவர்கள் போலீசாருடைய சம்பள உயர்வைப்
பற்றி மாத்திரமல்லாமல் இங்கே திரு. பாண்டியன் அவர்கள்
எடுத்துக் காட்டியதைப் போல் எப்படி இந்தத் துறை நவீன
மயமாக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களையும், இந்தத் துறை
மேலும் நல்ல முறையில் பணியாற்ற, மக்களுடன் தொடர்பு
கொள்ள, என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்பதையும்
அந்த கமிஷன் எடுத்துரைத்தது. அவ்வாறு சொல்லப்பட்டதில் 113

பரிந்துரைகளை அன்றைக்கே தி.மு.க. அரசு நிறைவேற்றியது. நான் இப்போது அறிவிக்கிறேன் ''மீண்டும் அதைப் போல ஒரு போலீஸ் கமிஷன் இந்த அரசின் சார்ப்பில் அமைக்கப்படும்'' என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து திருட்டுக்களைக் கண்டுபிடிப்பது, பற்றிச் சொன்னாாகள் அதற்கான கணக்கைச் சொன்னால் 1976 ஆம் ஆண்டு வரையிலே காவல் துறை ஆய்வு செய்து கண்டுபிடித்த திருட்டு வழக்குகள் 70 முதல் 76 சதவீதம். 1977ஆம் ஆண்டில் அது 50 சததவிகிதமாகக் குறைந்தது. 1978–79-இல் 47 சதவிகிதமாக அது குறைந்தது. கடந்த 25 ஆண்டுகளில் திருட்டுச் சொத்துக்களை அதிகமாகத் திரும்பப் பெற்றது 1975 ஆம் ஆண்டில்தான். அதாவது 65.4 சதவிகிதம். அதற்குப் பிறகு 41லிருந்து 50 சதவிகிதம் வரையில் தான்திருட்டு சொத்துக்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளன என்ற விவரத்தையும் அவையின் முன்னால் வைக்கின்றேன். குற்றங்களின் எண்ணிக்கை குறைந்து இருக்கிறதா என்று பார்த்தால், அதுவும் இல்லை. அகில இந்திய அளவில் எடுத்துக்கொண்டால் 1976ஆம் ஆண்டு அதிகக் குற்றங்கள் நடைபெற்ற மாநிலங்களில் தமிழ்நாடு ஆறாவது இடத்திலே இருந்தது. அதிகக் குற்றங்கள் நடைபெற்ற மாநிலங்களில் இந்தியாவிலே தமிழ்நாடு ஆறாவது இடத்தில் இருந்தது. கடந்த ஆண்டு எடுத்துக்கொண்டால் இது நாலாவது இடத்திற்குப் போய் விட்டது. நாலாவது இடத்திற்குப் போய்விட்டது என்றால் அது பெருமைக்குரியது அல்ல; , ஏழாவது இடத்திற்குப் போய் இருந்தால் பெருமைக்குரியது. அதிகக் குற்றங்கள் என்ற அந்த வரிசையிலே ஆறாவதிலிருந்து நாலாவது இடத்திற்கு தமிழ்நாடு போய் விட்டது, கடந்த ஆண்டில்.

கள்ளச்சாராயத்தைப் பற்றி எல்லாம் நம்முடைய திரு. பாலசுப்பிரமணியம் இங்கே விவரங்களைக் கொடுத்தார். கள்ளச்சாராயம் காய்ச்சுவது தடுக்கப்பட வேண்டும் என்பதை, அதற்கு யார் யார் உறுதுணையாக இருக்கிறார்கள் என்பதை இந்த அரசு மிகக் கடுமையாக எடுத்துக் கூறி வருகிறது. அந்த விவரங்களை எல்லாம் நம்முடைய திரு. திருநாவுக்கரசு சொல்லிவிட்ட காரணத்தால் அந்தப் புள்ளி விவரங்களை எல்லாம் மீண்டும் இங்கே சொல்ல விரும்பவில்லை. ஆனால், நடந்து முடிந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகள் மகாநாட்டில் இதைப்பற்றி மிக விரிவாக அங்கே பேசினேன். அதை நம்முடைய திரு.குமரி அனந்தன் அவர்கள் கூட சுட்டிக்காட்டினார்கள். கடுமையாக அவர்கள் எச்சரிக்கப்பட்டு இருக்கிறார்கள். காவல் துறையிலே சில பேர், நான் எல்லோரையும் சொல்ல மாட்டேன், அல்லது பலர்—சிலர் என்பது தவறாக இருக்கலாம், பலர்; எல்லோரும் அல்ல—அந்தப் பலர் இப்போது சாராய சாம்ராஜ்ய அதிபதிகள் ஒருபுறம், போலீஸ் ஸ்டேஷன்களில் மாமூல் மன்னர்கள் ஒருபுறம் என்ற அளவுக்கு அந்த மன்னர்களுடைய தொகை பெருகிக் கொண்டிருக்கிறது. இது உள்ளபடியே புகழ்பெற்ற





காவல் துறைக்குத் தலைக்குனிவை ஏற்படுத்தக்கூடியது; எனவே திருத்திக்கொள்ள வேண்டும். அடிமட்டத்தில் இருக்கின்ற காவல் துறை நண்பர்களிலிருந்து மேல் மட்டத்தில் இருக்கிற காவல் துறை நண்பர்கள் மாவட்ட அளவிலே இருந்தாலும், வேறு அளவிலே இருந்தாலும் அவர்கள் எல்லாம் திருத்திக்கொள்ள வேண்டும் என்று நான் குறிப்பிட்டேன். நேற்றைக்கு திரு. பாலசுப்பிரமணியம் பேசும்பொழுது சொன்னார்கள், பூரண மதுவிலக்குக்கொண்டு வந்தால் இந்தக் கள்ளச்சாராயம் காய்ச்சுவதே இருக்காது என்றெல்லாம் சொன்னார்கள். அது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாக இல்லை. ஏனென்றால் பூரண மதுவிலக்கு இருந்த அந்தக் காலத்திலேயே 1969 அல்லது 1968 அல்லது 1967-க்கு முன்பே கூட ஒரு இலட்சத்து 90 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சாராய வழக்கிலே சிக்கி சிறைச்சாலையில் இருந்திருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. எனவே, எந்தக் காலத்திலும் இந்தச் சட்டத்தை மீறுகிற சாராய சாம்ராஜ்யத்தை கள்ளச்சாராய முறையிலே நடத்திக் கொண்டிருக்கிற ஒரு கூட்டம் தமிழ்நாட்டிலே இருந்துகொண்டு தான் இருக்கிறது. அந்தக் கூட்டத்தை ஒழிப்பதற்கு ஆங்காங்கு மக்கள் தான் முனைய வேண்டும். யார் அதிலே ஈடுபட்டாலும் அவர்கள் காட்டிக் கொடுக்கப்பட வேண்டும். நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன், இதிலே கட்சி சார்பில்லாத முறையிலே கூட வேறு அரசியல் கூட்டணிகள் எவ்வளவு இருந்தாலும் அந்த அரசியல் கூட்டணிகளிலே வேறுபாடு இருந்தாலும், இந்தக் கூட்டணியிலே வேறுபாடு இல்லாமல் ஆங்காங்கு இந்தக் கூட்டணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; கட்சி சார்பற்ற முறையிலே, அதுவும் எனக்குத் தெரியும். எனவே, அந்தந்தக் கட்சிகளின் தலைவர்களும் கூட இதிலே முனைப்பான நடவடிக்கை எடுத்து இந்த அரசுக்கு உதவ வேண்டும். அப்படி எடுக்கும்போது அந்தத் தலைவர்களுக்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே ஒரு திட்டம் நம்முடைய காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் கூட குறிப்பிட்டார், மக்கள் குழுக்களை ஆங்காங்கே அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு திட்டம் என்கிற ஒரு திட்டம் கடந்த ஆட்சிக் காலத்தில் 1975 ஆம் ஆண்டு வாக்கிலே ஆரம்பிக்கப்பட்டு மிக வெற்றிகரமாக நடைபெற்றது. யாராவது மரம் ஏறி கள் இறக்கினால், யாராவது சாராயம் காய்ச்ச முற்பட்டால் அவர்களை மக்களே பிடித்து இழுத்து வந்து, பஞ்சாயத்திலே வைத்து அவர்களே தண்டித்து, அந்தத் தண்டனையை அவர்களே ஏற்றுக்கொண்டு, பிறகு தவறு செய்வது இல்லை என்று சத்தியம் செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்த ஒரத்தநாடு திட்டம் நல்ல முறையிலே நடைபெற்றது. அதற்குப் பிறகு ஏதோ தொய்வு ஏற்பட்டு, திட்டமே இப்பொழுது அழிந்து ஒழிந்து விட்டது. அதைப்

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 ஏப்ரல் 28

(பிற்பகல் 1–30)

போன்ற ஒரு திட்டத்தைத் தமிழ்நாடு முழுவதும் பரவலாகக் கொண்டு வர முடியுமா என்றும் இந்த அரசு ஆலோசித்துக் கொண் டிருக்கிறது.

நேற்றைக்குப் பேசிய நம்முடைய அ. தி. மு. க. உறுப்பினர் சின்னசாமி அவர்களும், இன்று காலையிலே பேசிய மு. க. ஸ்டாலினும், நண்பர் பொன், விஜயராகவன் அவர்களும் கூட எடுத்துச் சொன்னார்கள். மதுவிலக்கு வழக்குகளைக் கவனிப்பதற்காகத் தனியான ஒரு அமைப்பு இப்பொழுது இயங்கி வருகிறது. இந்த அமைப்பே தேவையில்லை என்று குறிப்பிட் டார்கள். நாங்களும் கூட அப்படித்தான் கருதுகிறோம். எனவே, இது குறித்து நன்கு பரிசீலித்து, விரைவிலே முடி வெடுக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

காவலர்களுடைய வசதிகளைப்பற்றி நம்முடைய திரு. பூவராகன் அவர்கள் குறிப்பிட்ட பொழுது, அவர்களுக்கு இலட்சம் இலட்ச மாகப் பணம் வருவதாகவும் சொல்கிறோம், அதே நேரத்திலே வசதிகளைப் பற்றியும் பேசுகிறோம் என்று சொன்னார்கள். அதிலே கூடச் சிலர்தான் அப்படி வசதி படைத்தவர்கள். பலர் இன்றைக்கும் வாடிக்கொண்டிருப்பவர்கள்தான். அதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

அதைப்போலவேதான், திரு. லத்தீப் அவர்கள் பேசும்பொழுதும் அந்த வசதிகளைத் செய்து தர வேண்டும், அவர்களுடைய குடியிருப்புகளையெல்லாம் ஒழுங்குபடுத்த வேண்டுமென்று சொன்னார்கள். நேற்றைக்குப் பேசிய காங்கிரஸ் நண்பர்கள் கூட காவலர்களுடைய குடியிருப்பு வாரியத்தை நாம் ஒழித்து விட் டோம் என்று ஆதங்கப்பட்டுக்கொண்டார்கள். பல வாரியங்கள் அகற்றப்பட்டு, வாரியங்களுக்கு அதிகாரப் பூர்வமற்ற தலைவர் களை அமைப்பது என்பது நிறுத்தப்பட்டு விட்டு, அந்த வரிசை யிலே இந்தக் காவலர் குடியிருப்பு வாரியமும் அகற்றப்பட்டதே தவிர; காவலர் குடியிருப்பு இருக்கிறது. அந்த வாரியம் இல்லா விட்டாலும்கூட வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக இந்தத் திட்டம் தொடர்ந்து நடத்தப்படும், இது கைவிடப்பட்டு விடவில்லை. காவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அரசு எப்பொழுதும்போல், பொதுப் பணித் துறையின் மூலம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் நிலையங்களைப்பற்றி, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் அவருக்கு ஞாபகப்படுத்துகின்றேன். அவர் ரொம்பக் குறை சொல்லும்பொழுதெல்லாம் எனக்கு ஏற்பட்ட



1989 ஏப்ரல் 28] [டாக்டர் மு. கருணாநிதி]

ஆச்சரியம், நாம் வந்து மூன்று மாதங்கள்தான் ஆகின்றன. அங் கிருந்தபொழுது சொல்ல முடியாதவைகளையெல்லாம் இன்றைக் குச் சொலலி, தன்னுடைய வேதனையைத் தீர்த்துக் கொள்கிறார் என்றுதான் நான் கருதினேன்.

இதெல்லாம் 1987–8819-இல் நடைபெற்ற நிகழ்ச்சிகள். 1987–88ல் 38 இடங்களில் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்று அன்றைக்கு அறிவிக்கப்பட்டது. 38 இடங்கள். ஆனால் 19 இடங்களிலே மாத்திரம்தான் காவல் நிலையங்கள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மீதம் 19 இடங்களும் விடப் பட்டு விட்டன. மீதமுள்ள 19 இடங்களுக்கு இப்பொழுது இந்த நிதி ஒதுக்கீட்டிலே பணம் ஒதுக்காவிட்டாலும்கூட, துணை மானி யத்திலே அது ஒதுக்கப்படும் என்கின்ற அறிவிப்பை நான் இங்கே உங்களுக்குத் தந்து, அந்த 19-இல் எங்களால் முடிந்த அளவிற்கு இப்பொழுது ஒரு பத்து புதிய காவல் நிலையங்களைக் கீழ்க்கண்ட இடங்களிலே ஏற்படுத்த முடிவு செய்திருக்கிறோம்.

சிதம்பரனார் மாவட்டத்தில் தட்டார் மடம், குமரி மாவட்டத்தில் குருந்தங்கோடு. நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் கூடங்குளம். காமராஜர் மாவட்டத்தில் கம்மா பட்டி, சிப்காட் காம்ப்ளெக்ஸ், மானாமதுரை. வடார்க்காடு மாவட்டத்தில் அம்பலூர். திருச்சி மாவட்டத்தில் சிந்தாமணிப் பட்டி. செங்கை-அண்ணா மாவட்டத்தில் காரணங்கரை கிராமம். தஞ்சை மாவட்டத்தில் திருவையாறுக்கு அருகிலே உள்ள மருவூர். சேலம் மாவட்டத்தில் முலசி கிராமம்.

மேலும் செங்கை-அண்ணா மாவட்டத்திலே பெரியகுப்பம், குடந்தை பட்டீஸ்வரம் ஆகிய இரண்டு இடங்களில் புறக் காவல் நிலையங்களை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

உத்தரகோசமங்கை, ஆசாரிப்பள்ளம் ஆகிய இரண்டு இடங் களில் உள்ள புறக் காவல் நிலையங்களை முழுக் காவல நிலையங் களாக உயர்ந்த அரசு முடிவு செய்துள்ளது.

அதோடு, சென்னையைச் சுற்றி புறநகர்ப் பகுதியிலே உள்ள — வில்லிவாக்கம், ராஜமங்கலம், விருகம்பாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, பரங்கிமலை, மீனம்பாக்கம், கருணாநிதிநகர், ஆதம்பாக்கம் ஆகிய 9 காவல் நிலையங்களை செங்கை—அண்ணா மேற்கு மாவட்ட எல்லையிலேயிருந்து பிரித்து சென்னைப் பெருநகரக் காவல சரகத்தோடு சேர்ப் பது என அரசு முடிவு எடுத்து உள்ளது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 ஏப்ரல் 28

கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் தொகுதியில் குலசேகரத்திலே சர்க்கிள் அலுவலகம். அங்கே காவல் பகுதியிலே மக்கள் தொகை அதிகமாக இருப்பதாலும், மலையோரப் பகுதியாக இருபபதாலும், சட்டம்—ஒழுங்கு பாதிக்கப்படுகிறது என்றும், ஆகவே அந்தக் காவல் நிலையத்தை ஒரு சர்க்கிள் காவல் நிலையமாக மாற்றி, வண்டி வசதி, கூடுதல் காவலர்கள் நியமிப்பது குறித்து திரு. நடேசன் ஒரு வெட்டுப் பிரேரணை கொடுத்திருந்தார். அது இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டு, குலசேகரம் காவல் நிலையம் ஒரு சர்க்கிள் காவல் நிலையமாக ஆக்கப்படும் என்பதையும் இந்த அரசு ஆய்ந்து, நட்பாண்டில் கதம்பக்கோடு என்ற இடத்திலே காவல் நிலையம் அமைக்கப்படும் என்பதையும், தெரிவித்துக்கொள்கிறேன். தீயணைப்பு நிலையங்கள் பற்றியும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் விரிவாக இங்கே பேசியிருக்கிறார்கள். ஒன்றை அவருடைய நினைவிற்கு கொண்டு வருகிறேன். 22—7—1986 அன்று கடந்த கால ஆட்சி 21 இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்று அரசாணை பிறப்பித்தது. பிறகு 12—1—1987 அனறு மேலும் எட்டு இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்படும என்று அரசு இன்னொரு ஆணை பிறப்பித்தது. பிறகு 28—10—1987 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணையில் மேலும் 16 இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆகவே, 45 இடங்கள் அறிவிக்கப்பட்டது இந்த மூன்றாண்டுகளில். ஆனால் மூன்று இடங்களிலேதான் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டது. ஆகவே மீதமுள்ள—நான் ஒன்றும் குறை சொல்லவில்லை—45 இடங்களிலிருந்து 10 இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கே தீயணைப்பு நிலையங்கள் இந்த ஆண்டு ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர். தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு, தென்னாற்காடு மாவட்டத்தில் சங்கராபுரம், தஞ்சை மாவட்டத்தில் குடவாசல், தரங்கம்பாடி, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் நிலக்கோட்டை, திருச்சி மாவட்டத்தில் புகளூர், நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில வள்ளியூர், கோவை மாவட்டத்தில் பல்லடம், சேலம் மாவட்டத்தில் கொல்லிமலை.

அதன்னியில் சென்னை மாநகரத்தில்—கேள்வி ஒன்றுக்கு நான் பதில் அளிக்கும்போது சொன்னதையொட்டி—சென்னை மாநகரத்தைப் போல மதுரையிலே, கோவையிலே கமிஷனர்கள் அமைக்கப்படுவார்கள். உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதைப் போல இரண்டு துணைக் கமிஷனர்களும் நியமிக்கப்படுவார்கள். மதுரை, கோவை ஆகிய இடங்களில் நியமிக்கப்படவிருக்கிற கமிஷனர்கள் ஐ.ஜி. அந்தஸ்தில் இருப்பார்கள். இந்த நிதியாண்டில் அது நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



1989 ஏப்ரல் 28] [டாக்டர் மு. கருணாநிதி]

அண்ணா பிறந்த நாளில் தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் கழக ஆட்சியில் 1969ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்து 1975-ஆம் ஆண்டு வரையில் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்தில் இந்த விழா நடைபெற்றது. ஆனால் 1976-ம் ஆண்டில் 'எமர்ஜென்சி' வந்ததால் இந்த விருது அளிக்கப்படவில்லை. அணிவகுப்பும் நடைபெறவில்லை. 1977-ம் ஆண்டிலிருந்து 1983-ம் ஆண்டு வரையில் ஏழு ஆண்டுகள் தொடர்ந்து இந்த விருதுகள் சென்னை மாநகரில் வழங்கப்பட்டன. 1984—85-ல் மதுரையிலும், 1986-ல் கோவையிலும் இந்த விருது வழங்கப்பட்டது. 1987-ல் விருதுகள் அறிவிக்கப்பட்டும் அணிவகுப்பு நடைபெறவில்லை. 1988-ல் குடியரசுத் தலைவர் ஆட்சியில் இந்த விருது வழங்கப்படவில்லை. எனவே இந்த 1989 ஆம் ஆண்டு செப்டம்பரில் நடக்கவிருக்கும் அண்ணா பிறந்தநாளில் தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் விருதுகள் வழங்கும் விழா ஒரு மாவட்டத் தலைநகரில் மீண்டும் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள மொத்தக் காவல் நிலையங்கள் 1,034. 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தரப்பட்ட அறிக்கையின்படி 756 காவல் நிலையங்களில் தொலைபேசி வசதி செய்து தரப்பட்டது. எனவே 1977-ம் ஆண்டிற்கு பிறகு இந்த 12 ஆண்டுகளில் 210 காவல் நிலையங்களுக்குத் தான் புதிய தொலைபேசி வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. இன்னும் தொலைபேசி வசதி செய்து தரப்படாமல் உள்ள காவல் நிலையங்கள் 68, புறநகர்க் காவல் நிலையங்கள் 20. எனவே இந்த 88 காவல் நிலையங்களுக்கும் இந்த ஆண்டிலே தொலைபேசி வசதி செய்துதரப்பட்டு, தொலைபேசி வசதி இல்லாத காவல் நிலையங்களே தமிழ் நாட்டிலே இல்லையென்ற நிலை ஏற்படுத்தப்படும் என்று அறிவித்துக் கொள்கிறேன். இதற்கு தொடரா செலவினமாக ரூபாய் இரண்டு லட்சத்து ஏழு ஆயிரத்து ஆறுநூற்று என்பதும் தொடர் செலவினமாக 11 லட்சத்து 61 ஆயிரத்து 600-ம் ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை கிழக்கு மாவட்டர் காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம் தற்போது நாகப்பட்டினத்தில் வாடகைக் கட்டடத்தில் உள்ளது. நேற்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் இராஜேந்திரன் அவர்கள் பேசுகிறபோது எஸ்.பி.யே அங்கே இல்லை என்றார். எஸ். பி. பதவிக்காக அங்கே ஒருவர் நியமிக்கப்பட்டு அவருடைய துணைவியார் உடல் நலமின்றி இருக்கிற காரணத்தால் சில நாட்கள் லீவில் இருக்கிறார். விரைவில் அங்கே வந்து பொறுப்பேற்க இருக்கிறார். அந்த மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம் தற்போது நாகப்பட்டினத்தில் வாடகைக் கட்டடத்தில் உள்ளது. இந்த கண்காணிப்பாளர்

அலுவலகம் கட்ட ஆகும் செலவு 53 லட்சம் ரூபாய் என்று 1987-ல் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. இப்போதுள்ள விலை விகிதப்படி 68 லட்சம் ரூபாய் ஆகுமென்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலே, இதை கட்டி முடிக்க நிதியாதாரம் இல்லை என்றாலும், இதை எங்கே கட்டுவது என்ற பிரச்சினை எழுந்த போது, நாகப்பட்டினம் என்றால் அந்தப் பகுதியில் ஒரு ஓரத் திற்கு அது போய் விடுகிறது. எனவே நடுப்பகுதியாக இருக்கிற திருவாரூரில் கட்டலாமா என்கிற ஒரு யோசனை இருக்கிறது. எனவே நாகையா, திருவாரூரா என்பது விரைவிலே முடிவு எடுத்து அறிவிக்கப்படும். ஆகவே இரண்டு ஊரிலே ஒரு ஊரில் நிச்சயமாக கட்டப்படும்.

(முற்பகல் 1-40)

அடுத்தது, மிக முக்கியமான பல்லாண்டுகால கோரிக்கை, தங்களுடைய கோரிக்கைகளுக்காக திரு. ரமணி அவர்கள் கூட சொன்னார்கள்—தங்களுடைய கோரிக்கைகளுக்காகப் போராட்டத் திலே ஈடுபட்ட போலீஸ்காரர்கள், அதிகாரிகள் கடந்த கால ஆட்சியிலே நடவடிக்கைக்கு உள்ளானார்கள். இதன்காரணமாக வழக்கு மன்றத்திற்கும் சென்று இருக்கிறார்கள். கடந்த கால அரசு அவர்கள் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் அனைத்தும் ரத்து செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே அவர்கள் வழக்கைத் திரும்பப் பெற்று, பணிகளிலே சேரலாம் என்று அழைப்பு விடுக்கிறேன்.

இன்னொன்று இந்த ஒலி பெருக்கி, பெட்டி ஒலிபெருக்கி தான் வைக்கவேண்டும் என்று ஒலி பெருக்கிச் சங்கத்தார்—பல ருக்கு பல தொல்லைகளைத் தருகிற அளவிலே சட்டம் இருக் கிறது—பலர் எனக்கு மனுக்களை அனுப்பினார்கள். அவர்களின் சார்பாக திரு. கோவை ராமநாதன் அவர்கள் கூட நேற்று என்னிடத்திலே விண்ணப்பித்துக் கொண்டார்கள். எனவே அதைப்பற்றி இந்த அரசு ஆலோசித்து, கூம்பு வடிவம் உள்ள ஹாரன்களைப் பொதுக்கூட்டங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும், மண்டபங்களிலே நடைபெறும் நிகழ்ச்சி கள், திருமண விழாக்கள் போன்றவைகளுக்கு மாத்திரம் அந்தத் தடை இருக்கலாம், அங்கே பெட்டி ஹாரன்தான் வைக்கவேண்டும் என்றும் இப்போது முடிவு எடுக்கப்பட்டு, பொதுக்கூட்டங் களிலே இந்தக் கூம்பு வடிவ ஹாரன்களை உபயோகிக்கின்ற தடை ரத்து செய்யப்படுகிறது என்று அறிவிக்கிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி).

இன்னொன்று, இந்த அவை முழுவதுமே எழுப்பிய கோரிக்கை ஹெல்மெட்டைப் பற்றியது. ஸ்கூட்டரிலே பயணம் செய்வோர் கட்டாயமாக ஹெல்மெட்டை அணியவேண்டும் என்று தடை





இருக்கிறது. இந்த உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்று நாளுக்குநாள் ஏராளமாக முறையீடுகள் இந்த அரசுக்கு வந்து கொண்டு இருக்கின்றன. அந்த அடிப்படையிலே கூட மாண்பு மிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரேமுகமாக இந்தக் கருத்தை எடுத்துக்கூறியிருக்கிறார்கள். இதற்கென அமைக்கப்பட்டுள்ள குழுவிலே உள்ள டாக்டர் ராமமூர்த்தி டாக்டர் மோசஸ், டாக்டர் வேணுகோபால் அவர்களோடு காலையிலே நான் தொடர்பு கொண்டு, அவர்களோடு பேசி, அவர்களுடைய அனு மதியைப் பெற்று இதனை அறிவிக்கிறேன். இனிமேல் ஹெல் மெட்டை அணியாதவர்கள் மீது போலிசார் எந்த நடவடிக்கை யும் எடுக்கமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி)

**திரு ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, நேற்றைய தினத்திலேயிருந்து இதற்கு என்று போராட்டம் இருந்தது, இங்கே, மாண்புமிகு முதலமைச் சருக்கு எல்லோரும் சேர்ந்து யுனானிமஸ்—ஆக நன்றியைத் தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஆனால் இதிலே தலைவராக இருக்கிற டாக்டர் ராமமூர்த்தி சொன்னார்; ஒன்று சொல்லி விடுங்கள், உயிர்ப் பாதுகாப்பு வேண்டுமானால், ஹெல்மெட் அணியவேண்டும். அதைப்பற்றிக் கவலையில்லை என்றால் அதை அவர்கள் அணியாமல் இருக்கலாம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையும் கவனத்திலே வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் ஹெல்மெட் அணிய விரும்பாதவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எனவே அந்தத் தடை நீக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

இன்னொன்று பல ஆண்டுக்காலமாகக் காவலர்கள் சந்தேக கேஸ்கள் போடுவது என்பது தொடர்ந்து நடந்து கொண்டிருக் கிறது. அதனால் பல நிரபராதிகள் அவதிக்கு ஆளாவது இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததின் பேரில், இனி சந்தேக கேஸ்கள் போடுவது என்பது அடியோடு ரத்து செய்யப்படுகிறது. என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகம் எங்கும் இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள், தலைமைக்காவலர்கள் காவலர்கள் ஆகியவர்களுடைய இல்லங்கள் 27,469 இல்லங்கள் இருக்கின்றன. அவர்களுடைய இல்லங் களிலே மின் விசிறி இதுவரையில் தரப்படவில்லை. நாங்களும்

கட்டிக் கொடுத்தோம். அவர்களும் கட்டிக் கொடுத்தார்
கள். இருந்தாலும் கூட அந்த 27,469 இல்லங்களில் ஒரு
ஃபேன், மின் விசிறி கூட இல்லாமல் இருக்கின்றது. இதை ஒரு
இரண்டு ஆண்டுத் திட்டமாக எடுத்துக்கொண்டு, இந்த ஆண்டிலே
ஒரு பகுதியும், அடுத்த ஆண்டிலே ஒரு பகுதியுமாக இந்த
27,469 இல்லங்களுக்கும் மின் விசிறிகள் அமைத்துக் தரப்படும்
என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன் (மேசை
யைத் தட்டும் ஒலி).

ஜீப்புகள் வழங்குவதைப் பற்றிச் சொன்னார்கள். தமிழ்
நாட்டிலே மொத்தம் உள்ள காவல் கோட்டங்கள் 108. ஒரு
காவல் கோட்டத்திற்கு ஒரு ஜீப் அளிக்கவேண்டும் என்பது அரசின்
விருப்பம். இதுவரையில் ஜீப் அளிக்கப்பட்ட கோட்டங்கள் 95.
இன்னும் ஜீப் வழங்கப்படவேண்டிய கோட்டங்கள் 13 தான்.
ஒரு ஜீப்பின் விலை 1 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய், 13 காவல்
கோட்டங்களுக்கு ஜீப் வழங்க மொத்தச் செலவு 18 லட்சம்
ரூபாய். இதுவரையில் ஜீப் வழங்கப்படாத காவல் கோட்டங்கள்
வேலூர், சேலம் புறநகர், ஈரோடு டவுன், ஊட்டி, நாகப்பட்டி
னம், திருச்சி, கோவை ஊரகம், இருப்புப்பாதைக் காவல்,
திருச்சி, அடையாறு, மைலாப்பூர், தியாகராய நகர், அண்ணா
நகர், டிராபிக் இன்வெஸ்டிகேஷன், சென்னை, இவற்றில்
சென்னையிலே உள்ள அடையாறு, மைலாப்பூர் தியாகராய நகர்
அண்ணா நகர், டிராபிக் இன்வெஸ்டிகேஷன் ஆகிய 5 இடங்கள்
தவிர, மற்ற 8 இடங்களுக்கும் இந்த ஆண்டே ஒரு கோட்டத்திற்கு
ஒரு ஜீப் வீதம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்
டால் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படை
யிலே இளநிலை உதவியாளராகவோ, அலுவலக உதவியாள
ராகவோ நியமனம் செய்யலாம் என்ற அரசு ஆணை 15-2-1972-ல்
கழக ஆட்சியில் வெளியிடப்பட்டது.

ஆனால் காவல்துறையில் போதுமான இளநிலை உதவி
யாளர்கள் அல்லது அலுவலக உதவியாளர்கள் பணி இடங்கள்
காலி இல்லாததால் கிட்டத்தட்ட 200 பேர் கருணையின் அடிப்
படையில் வேலை பெறக் காத்திருப்போர் பட்டியலில் இருக்கிறார்
கள். இப்போது இருக்கக்கூடிய அரசு ஆணையின்படி கல்வித்
தகுதி மற்ற உடல் தகுதி பெற்றிருந்தால்கூட, அவர்களைக் காவ
லர் பணிக்கோ அல்லது உதவி ஆய்வாளர் பணிக்கோ அமர்த்த
இயலாத நிலை உள்ளது. இந்த நிலையைக் கருத்தில்
கொண்டு, கல்வித் தகுதி மற்றும் உடல் தகுதி உள்ளோருக்குகாவல்
துறையில் அவர்களுடைய தகுதிக்கேற்ப காவலர்களாகவோ
அல்லது உதவி ஆய்வாளர்களாகவோ, கருணை அடிப்படையில்
பணியில் நியமிக்கலாம் என்று இந்த அரசு ஆணை வழங்க
இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





காவல் துறையினருடைய உணவுப்படி மற்றும் மற்ற சம்பளங்
கள் குறித்தும் திரு. ரமணி அவர்கள் நேற்றையதினம் இங்கே
விரிவாகப் பேசினார்கள். விரைவிலே வர இருக்கின்ற ஊதியக்
குழுவினுடைய பரிந்துரைக்குப் பிறகு இதுபற்றி யோசிக்கப்படும்
என்று நான் அவர்களுக்கு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்னரசு அவர்கள் பேசும்போது தமிழ்நாடு சிறப்புக்காவல்
அணி ஒன்றை உளுந்தூர்பேட்டையில் வைக்கவேண்டுமென்று
கேட்டுக்கொண்டார்கள். இப்போது இப்படிப்பட்ட சிறப்புக்
காவல் அணி தமிழகத்திலே 9 இடங்களிலே அமைக்கப்பட
உள்ளது. அதிலே ஒரு சிறப்புக் காவல் அணியை உளுந்தூர்
பேட்டையில் அமைக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் டி.ஐ.ஜி. அலுவலகத்தை மாவட்டத்தின்
மத்தியப் பகுதிக்கு மாற்றவேண்டுமென்று தென்னரசு அவர்கள்
கேட்டுக்கொண்டார்கள். அதை விருதுநகரில் அமைக்கவேண்டு
மென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பெ.
சீனிவாசன் மற்றும் திரு. சொக்கர் அவர்களும் கேட்டுக்கொண்
டார்கள். மெஜாரிட்டியாக அவர்கள் இருக்கின்ற காரணத்தால்
விருதுநகரில் டி.ஐ.ஜி. அலுவலகம் அமைக்கப்படும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து வரதட்சிணை தடைச் சட்டத்தைப் பற்றி நேற்றைய
தினம் திரு. ரமணி அவர்கள் மிக உருக்கத்தோடு பேசி, அதன்
காரணமாக எத்தனை பெண்கள் இறந்திருக்கிறார்கள் என்ற
கணக்கையும் சொன்னார்கள். என்னிடத்திலுள்ள அந்தக்
கணக்கின்படி பார்த்தால்கூட, 1986-ல் 63 வழக்குகள். வர
தட்சிணைக் கொடுமையால் இறந்துபோனவர்களுடைய வழக்கு
1986லே பதிவு செய்யப்பட்டது 63 வழக்குகள். தண்டனை
அளிக்கப்பட்டவை 12. விடுதலை செய்யப்பட்டவை 19. நீதி
மன்றத்தில் நிலுவையில் உள்ளவை. 28. இப்படி மொத்தமாகப்
பார்த்தால் 1986, 87, 88 ஆகிய மூன்று வருடங்களில் மொத்தம்
பதிவு செய்யப்பட்டவை 234 வழக்குகள். தண்டனை அளிக்கப்
பட்டவை மொத்தம் 17 தான். விடுதலை செய்யப்பட்டவை 32.
நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பவை 116. புலன் ஆய்வு
விசாரணையில் இருப்பவை 58 உண்மைக்கு புறம்பானவை
என்று முடிவு எடுக்கப்பட்டது 6 விரைவிலே இந்த வழக்கு
களை எல்லாம் முடிக்கவேண்டுமென்று காவல்துறையினர்
கேட்டுக்கொள்ளப் படுவார்கள் என்ற உறுதியை நான் தெரி
வித்துக்கொள்கிறேன்..

அதுமாத்திரமல்ல. இந்த வரதட்சிணைக் கொடுமையை ஒரு
நீண்டகாலத் திட்டமாக ஒழிப்பதற்குத்தான் பெண்களுக்குச்
சொத்துரிமை வேண்டும் என்கின்ற ஒரு சட்டத்தை இந்தக் கூட்டத்

தொடரிலே இந்த அவையிலே கொண்டுவர இருக்கின்
றோம். எனவே ஒரு நீண்டகாலத் திட்டமாக அந்தச் சட்டம்
இங்கே நிறைவேற இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்
கள் மிக நன்றாகவே அறிவார்கள்.

மேலும் பல விவரங்களை எல்லாம், எத்தனை பெண்கள்
என்று, அவர்களின் பெயர்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்
கள். மீரா, திரிபுரசுந்தரி, கோவை நகரிலே ஷோபா,
திருவொற்றியூரிலே கிருஷ்ணவேணி ஜலஜா என்று
பெயர்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதேபோன்று
பாப்பாஉமாநாத் அவர்களும் திருவொற்றியூரிலே ராணியம்மாள்
மகள் ஷோபா, திருச்சி சீனிவாச நகரில் மா. முத்து என்பவரு
டைய மகள் பானுமதி, இவர்கள் எல்லாம் வரதட்சிணைக்
கொடுமையால் இறந்திருப்பதைப்பற்றி எல்லாம் சொல்லியிருக்
கிறார்கள். அதுபற்றியெல்லாம் கவனிக்கப்படும் என்ற உறுதியைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று பேசும்போது சொன்
னார்கள். சென்னை நகரத்திலே பல சீட்டுக் கம்பெனிகள் பொது
மக்களிடமிருந்து பணம் வசூல் செய்து சீட்டு நடத்தி, காலக்
கெடு முடிந்தவுடன் உரியவர்களுக்குப் பணத்தைத் திரும்பச்
செலுத்தாமல் ஏமாற்றுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி
பெற்ற பணத்தை திரும்பச் செலுத்தாமல் ஏமாற்றுபவர்கள்
யாராக இருந்தாலும் சரி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்
படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே
ஓரியண்டல் ஃபைனான்ஸ், சென்னை,6 ரூ. 92 லட்சம் கையாடல்
செய்திருக்கிறார்கள், ஜயசக்தி ஃபைனான்ஸ், சென்னை-17
ரூ. 22 லட்சம் கையாடல் செய்திருக்கிறார்கள். தனலட்சுமி
ஃபைனான்ஸ்" அரும்பாக்கம் ரூ. 5 லட்சம் கையாடல் செய்
திருக்கிறார்கள். சுவாதி சிட் ஃபண்ட்ஸ், சென்னை 34, ரூ. 4
2 4லட்சம் கையாடல்; சக்தி பாரத் ஃபைனான்ஸ், சென்னை.
லட்சம் கையாடல்; தமிழ்நாடு ஃபைனான்ஸ், சென்னை 2,
ரூ.8 லட்சம் கையாடல்ரூ.2 இப்படி ரூ. 128 லட்சம் கையாடல்
செய்யப்பட்டிருக்கிறது.

இன்னொரு பட்டியலில் சுகேசன் ஃபைனான்ஸ், சென்னை-1
ரூ. 18 லட்சம் கையாடல்; சமாரியா ஃபைனான்ஸ், சென்னை-4,
ரூ. 13 லட்சம் கையாட்ல்; சூர்யோதயா ஃபைனான்ஸ், சென்னை
35 ரூ. 1 லட்சம் கையாடல்;

திரு. பாலசுப்பிரமணியம், நேற்று இன்னொரு நபரைப்
பற்றிச் சொன்னார்கள். பெயரைச் சொல்லவில்லை. (குறுக்கீடு)
சுதர்சன் என்கின்ற ஒரு நபருடைய பெயரைக் குறிப்பிட்டு,
விவரம் தந்திருக்கிறார்கள். இதுகுறித்து நடவடிக்கைகளை
நிச்சயமாக இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்
கொண்டு, இந்தக் காவல் துறை மானியத்தின்மீதும் ஆயத்தீர்



வைத்துறை மானியத்தின் மீதும் மற்றும் தீயணைப்புத் துறை
மானியத்தின்மீதும் நல்ல கருத்துக்களை எடுத்துரைத்த அனை
வருக்கும் நன்றியினைத் தெரிவித்து, தந்துள்ள வெட்டுத் தீர்
மானங்களைத் திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு,
அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 1—50)

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, நமது முதல்வர்
அவர்கள் பல நல்ல அறிவிப்புகளை எல்லாம் கொடுத்திருக்கிறார்
கள். ஒரு விஷயம் நான் அறிந்து கொள்ள விரும்புவது.
போராட்ட காலத்தில் பழி வாங்கும் வகையில் பல போலீசாரும்
அதிகாரிகளும் நீக்கப்பட்டிருப்பவர்கள் திரும்ப வேலைக்கு எடுத்
துக் கொள்ளப்படுவார்கள் என்று அரசு அவர்களுக்கு அழைப்புக்
கொடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். அவர்களுக்குப் போலீ
சாருடைய அசோசியேஷன் ஏற்படுத்தி நடத்துவதற்கு அரசு
என்ன நிலையை எடுத்துக் கொள்ள இருக்கிறது என்பதை அறிந்
தால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
நான் அப்போதே சொன்னேன். போலீசாருக்காக முதல் குரல்
கொடுத்தவன் என்று. நானே சங்கத்தின் தலைவனாக இருந்து
அதை நடத்திக் கொண்டிருப்பேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிற
நேரத்தில் இங்கே சந்தேக கேஸ்களிலே வழக்குகளே போடப்
படாது என்று சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கத் தக்கது.
ஏற்கெனவே நிலுவையில் உள்ள அந்த வழக்குகளை வாபஸ் பெற
அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதற்கும் ரெட்ராஸ்
பெக்டிவ் எபெக்ட் உண்டு. (சிரிப்பு).

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே,
காவல் துறைப் போராட்டத்திலே, அகில இந்திய அண்ணா
தி.மு.க. ஆட்சியில் ஈடுபட்டபோது அவர்களுடைய வழக்குகள்
வாபஸ் பெறப்பட்டு திரும்பவும் அவர்களை வேலைக்கு இந்த
அரசு அனுமதிக்கும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கி
றார்கள். அதைப்போலவே அகில இந்திய அண்ணா தி. மு. க.
ஆட்சியின்போது தி.மு. கழகத்தினர் மீது அரசியல் நோக்கத்
தோடும் பழி வாங்கும் நோக்கத்தோடும் பல பொய் வழக்குகள்
போடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்

[திரு. அ. இரகுமான்கான்] [1989 ஏப்ரல் 28

தென்னரசு அவர்கள் நேற்று பேசும்போது அவைகளைக் கோடிட்டுக் காட்டினார்கள். ஆகவே உங்கள் மூலம் முதல்வர் அவர்கள் அந்த வழக்குகளையும் வாபஸ் பெறுவாரா என்ற என் வேண்டுகோளை அன்போடுவைத்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:: பல அரசியல் தன்மை வாய்ந்த வழக்குகள் எல்லாம் திரும்பப் பெறப்பட்டுள்ளன. ஏதாவது புதிய வழக்குகள் இன்னும் இருக்குமேயானால் அவைகள் பற்றி ஆராயப்படும்.

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகரில் டி.ஐ.ஜி. ரேஞ்ச் அமைப்பதாக அறிவித்தமைக்கு மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என்னோடு இணைந்து அந்தக் கோரிக்கையை மெஜாரிட்டி கோரிக்கையாக்கிய சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் ஸ்ரீனிவாசன் அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆயத் தீர்வையைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே புள்ளி விவரங்கள் அல்லாமல் எனக்கு இருக்கக் கூடிய ஆர்வத்தின் காரணமாக நான் சேகரித்து இருக்கக்கூடிய விவரங்களைத் தங்களுடைய மேலானபார்வைக்கும் நேரிடையான கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். நீங்கள் அதைச்சரி பார்த்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து அதை நேரில் கொடுத்தால் ஆற அமரச் சரிபார்த்து உங்களுக்குத் தக்க விடை தரப்படும்.

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980—81 ஆம் ஆண்டுகளில் இரண்டாம் நிலைக்காவலர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் செலவிலே 'கிட்' எல்லாம் தயார் செய்யப்பட்டு டிரெய்னிங்கிற்கு அனுப்ப வேண்டிய கட்டத்தில் அவர்களுக்கு வேலை கொடுக்கப்படாமல், மீண்டும் 1983 ஆம் ஆண்டு வேறு ஆட்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் அது சம்பந்தமாக வழக்கும் நீதிமன்றத்தில் இருக்கிறது. அப்போது தேர்விலே ஈடுபட்ட அவர்களுக்கு இப்போது வயதும் ஆகிவிட்டது. எனவே அப்படி 500, 600 பேர்கள் தான் இருப்பார்கள், மொத்தத்தில். அவர்களை வேலையில் சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த முறையீட்டை நேற்றைய தினமே மாண்புமிகு உறுப்பினர் கணபதி அவர்கள் என்னிடமே கொடுத்திருக்கிறார்கள். அது ஆராயப்பட்டு வருகிறது.



1989 ஏப்ரல் 28]

திரு. எஸ். எஸ். தென்னரசு: பேரவைத் தலைவர் அவர்களே, டி.ஐ.ஜி. அலுவலகத்தையே எப்படியாவது ராமநாதபுரத்திலேயிருந்து மாற்ற வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். அதை நிறைவேற்றித்தந்தமைக்கு முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறி நியமிக்க இருக்கிற போலீஸ் கமிஷன், போலீஸ் இலாகாவிலே பணியாற்றக் கூடிய மினிஸ்டிரியல் சர்வீஸிலே இருக்கக் கூடிய ஊழியர்களுக்கும் ஏதாவது நல்லுதவி செய்வதுபற்றிப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 புதிய காவல் நிலையங்களும், 10 புதிய தீயணைப்பு நிலையங்களும் துவங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் நான் தெரிந்து கொண்டதில்—தந்தை பெரியார் பிறந்த மண் பெரியார் மாவட்டம், அவர்கள் வளர்ந்தது ஈரோடு. அவருடைய கொள்கையையும் இலட்சியங்களையும் ஏற்றுக் கொண்டிருப்பவர் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள். அவர் பிறந்த மண்ணிலேயிருந்து ஏதாவது பரிந்துரைகள் வந்ததா, வரவில்லையா? ஏன் ஒன்று கூட எங்கள் மாவட்டத்திலே ஆரம்பிக்கவில்லை. அதற்கு முயற்சி செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கடந்த கால அரசில் அறிவிக்கப்பட்ட எஞ்சியிருந்த 19 காவல் நிலையங்களில் 10 இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. மீதம் உள்ளவை பிறகு ஏற்றுக்கொள்ளப்படும்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததில் வரதட்சிணைக் கொடுமை பற்றி உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்வதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் போலீசாருக்கு உதவக் கூடிய முறையில் ஒரு ஆலோசனைக்குழு அக்கறை உள்ளவர்களுடைய அமைப்புகளைக் கொண்டு அமைக்க வேண்டுமென்று 3 ஆண்டுகளாக இருந்தும் அமைக்கப்படவில்லை. அதை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அதோடு கூட இந்த தர்ணா போராட்டங்கள் நடத்துவதற்கெல்லாம் கடற்கரையைக் காட்டி பாரதி சிலையை நோக்கி நடத்திக்கொண்டிருக்கிறார்களே அது அந்தந்த ஏரியாவில் மக்கள் கூடக்கூடிய இடத்தில் அனுமதித்தால் தான் முன்பு போல் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்து அதில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
குழுக்களைப்பற்றி உடனடியாக எதுவும் சொல்ல இயலாது.
நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். பெரிய குழுவாக
போலீஸ் கமிஷனே ஒன்று அமைக்கப்பட இருக்கிறது. அத
னுடைய பரிந்துரைகளின்படி அம்மையார் அவர்கள் கேட்ட
அந்த முறையீடுபற்றி யோசிக்கப்படும். நேற்றைக்கே திரு.ரமணி
அவர்கள் சொன்னார்கள். இப்போது அம்மையார் அவர்களும்
சொன்னார்கள். ஆர்ப்பாட்டங்கள், தர்ணா போன்ற தங்க
ளுடைய எண்ணங்களை வெளியிடுகின்ற அமைதி வழிப்போராட்
டங்களை நடத்த இடங்கள் ஒதுக்கப்படுவதிலே இருக்கின்ற
சிக்கலைப் பற்றிச்சொன்னார்கள். அதுகுறித்து அதிகாரிகளோடு
கலந்து பேசி நீங்கள் அனைவரும் மகிழத்தக்க வகையிலே
முடிவு எடுக்கப்படும்.

திரு. டி. கே. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நமது தமிழக முதல்வர் அருமை கலைஞர்
அவர்கள் செங்கை—அண்ணா மாவட்டத்தில் காவாங்கரை
கிராமத்தில் போலீஸ் நிலையம் அமைப்பதாக அறிவித்தார்கள்.
அதற்கு நன்றி. அதே போல திருவொற்றியூர் தொகுதியில்
அடங்கிய கொடுங்கையூரில் இருக்கக்கூடிய போலீஸ் நிலையம்
சென்னை மாநகரத்தோடு இணைக்கப்படுமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
இப்போது அறிவித்துள்ள போலீஸ் நிலையங்கள் தான் சென்னை
மாநகரத்தோடு இணைக்கப்படும்.

திரு. கோ. பூவராகன் : பேரவைத் தலைவர் அவர்களே,
இந்த விஜிலன்ஸ் கமிஷன் அறிக்கை வந்திருக்கிறது. அந்த
அறிக்கையிலே நிறைய சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.
கடந்த ஆளுநர் ஆட்சியின் போது 23 ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ்.
அதிகாரிகள் இது மாதிரி குற்றங்களுக்கு ஆட்பட்டுப்பரிசீலனையில்
இருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்களை எல்லாம்,
இப்போது நம்முடைய முதல்வர் அவர்கள் மறப்போம்.
மன்னிப்போம் என்று விட்டுவிட்டார்களா இன்னும் பரிசீலனை
யில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
இன்னும் விஜிலன்ஸ் கமிஷனிலிருந்து நமக்கு இறுதியான தகவல்
கள் எதுவும் வரவில்லை.

திரு. சி. கோவிந்தராஜன்: தலைவர் அவர்களே, பல்வேறு
வழக்குகள், அரசியல் வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுவிட்டன
என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். 1988-ஆம்
ஆண்டு மார்ச் மாதம் 15-ம் தேதி அகில இந்திய அளவிலே



நடத்தப்பட்ட பந்தில் தமிழகத்திலும் கூட இன்றைக்கு
ஆளும் கட்சியாக இருக்கக்கூடிய கட்சியும் சேர்ந்து—நடத்தப்
பட்ட அந்த பந்த் தொடர்பான அந்த வழக்கை வாபஸ் பெறு
வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? அத்துடன் இந்தி எதிர்ப்புக்
கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள மாணவர்கள்மீது இன்றைக்கும் வழக்கு
தொடர்ந்து கொண்டிருக்கிறது. அது சம்பந்தமாக ஒரு விண்ணப்
பத்தை முதலமைச்சர் அவர்களிடத்திலே—கடலூர் ஆர்ட்ஸ்
காலேஜ் மாணவர்களுடைய விண்ணப்பத்தை—கொடுத்திருக்
கிறேன். அந்த வழக்கும் வாபஸ் பெறப்படுமா என்றும்
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
முழு அடைப்பின்போது போடப்பட்ட எல்லாவழக்குகளும் வாபஸ்
பெறப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.
அதற்கான உத்தரவுகள் வெளிவரும். மாணவர்கள் மீது உள்ள
வழக்குகளும் அப்படித்தான் வாபஸ் பெறப்படும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே,
1971-லே இரண்டாம் நிலைக் காவலர்களாக நியமனம் பெற்று
அவர்களிலே பலர் இதுவரையில் முதல் நிலைக் காவலர்களாக
அல்லது பதவி உயர்வு பெறாதவர்களாக இருந்து கொண்டு
இருக்கிறார்கள். அது குறித்து நான் எடுத்துச் சொன்னேன்.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதுகுறித்து ஒன்றுமே
சொல்லவில்லை. அதைப்போலவே வட ஆற்காடு மாவட்டம்
தண்டராம்பட்டில் ஏற்கனவே தீயணைப்பு நிலையம் ஏற்படுத்து
வதற்கு அரசுக் குறிப்பே இருக்கிறது. அது இணைக்கப்பட
வில்லை. கீழக்கரையிலும் அப்படி ஒரு நிலை இருக்கிறது.
அதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல
வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
உங்கள் உறுப்பினர் சித்திக் அவர்கள் கேட்டவாறு தரங்கம்
பாடிக்குத் தரப்பட்டிருக்கிறது. நேற்றுக் கேட்டார். கேட்கும்
போது நீங்கள் இல்லை. தரங்கம்பாடிக்குத் தரப்பட்டு இருக்
கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றப் பிரச்சனை
கள் குறித்து அரசு ஆலோசனை செய்து வருகிறது.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு
சிறப்புக் காவல் படையில் ஜெனரல் பிரிவு, ஸ்பெஷலிஸ்ட்
பிரிவு என்று இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஸ்பெஷலிஸ்ட்
பிரிவுகளை, ஜெனரல் பிரிவுகளோடு சேர்த்து சில பேர்களுக்கு
பதவி உயர்வு கொடுத்தார்கள். உயர்நீதி மன்றம் அந்த
உயர்வை ரத்து செய்திருக்கிறது. இதனால் 30 முதல் 40
ஆண்டுக்காலம் பதவி உயர்வு பெறாமல் பதவியில் இருக்கக்
கூடியவர்களுக்கு குறைவாக 10 ஆண்டுக்காலம் சீனியாரிட்டி
உள்ளவர்கள் அவர்களுக்கு மேலாக வந்துவிடுகிறார்கள்.

ஆகவே, அந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் உடனே நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 2—00)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறீர்கள். உரிய கவனம் செலுத்தப்படும்.

திரு. மு. க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்மாயில் கமிஷனுடைய அறிக்கை பற்றி நம்முடைய முதல்வர் அவர்கள் எதையும் எடுத்துச் சொல்லாதது மிகவும் ஏமாற்றமாக இருக்கிறது. எனவே, அது குறித்து என்ன நடவடிக்கையை எடுக்க இந்த அரசு முன்வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அண்மையிலே இஸ்மாயில் கமிஷன் சம்பந்தமாக எந்த விசாரணையும் நடத்தி, நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று சம்பந்தப்பட்டவர் கோர்ட்டிலே சென்று ஒரு ஸ்டே வாங்கியிருக்கிறார். அதனால்தான் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஸ்டேயை வெக்கேட் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, ஸ்டே வெக்கேட்டான பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 2. மாநில ஆயத் தீர்வைத் துறை.

திருவாளர்கள் செ. நூர்முகமது, ஆர். சிங்காரம், பொன். விஜயராகவன், எஸ். டி. உகம்சந்த் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவை முன்னுள்ள கேள்வி; ''மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர் வைத் துறை—என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,35,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



கோரிக்கை எண். 15. காவல் துறை.

திருமதி பாப்பா உமாநாத், மற்றும் திருவாளர்கள் பொன். விஜயராகவன், பி. வி. இராஜேந்திரன், எஸ். டி. உகம்சந்த் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை—என்ற தலைப்பின் கீழ், ரூ. 1,64,93,96,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 16. இயணைப்புப் பணிகள்.

திருவாளர்கள் ஜி. பழனிச்சாமி, கே. ரமணி, பொன். விஜயராகவன், ஆர். ஈஸ்வரன், எஸ். டி. உகம்சந்த் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண். 16—இயணைப்புப் பணிகள்—என்ற தலைப்பின் கீழ், ரூ. 11,02,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் (29—4—1989) காலை 9—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—03 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

102. கன்னியாகுமரி, ஈத்தாமொழி முறைப்படுத்தப்பட்ட அங்காடியின் முகவரி மாற்றம் குறித்து வேளாண்மைத் துறையின் 15–3–1988ஆம் நாளிட்ட 425-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

103. 1962-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 24–3–1988-ஆம் நாளிட்ட 467-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

104. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் 1986–87-ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

105. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 1987–88-ஆம் ஆண்டிற்கான முப்பதாவது ஆண்டறிக்கை[1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்குச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

106. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1987–88 ஆம் ஆண்டிற்கான முப்பத்தொன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

107. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1988–89-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1987–88ம் ஆண்டிற்



கான துணை நிதிநிலை அறிக்கை (1948 ஆம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61(1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

138. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் 1985–86-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை.

139. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் 1986–87-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை.

144829
V 211,31'N89
N89.12.3

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras 4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrafts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamamn Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B. B. Gandhi Street, Calcutta-17.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.